# கருத்துக் கண்காட்சி



சுந்தர சண்முகனார்

# கருத்துக் கண்காட்சி

ஆசிரியர்:
புதுப்படைப்புக் கலைஞர், ஆராய்ச்சி அறிஞர்
முனைவர் சுந்தர சண்முகனார்
தமிழ்-அகராதித்துறைப் பேராசிரியர் (ஓய்வு)
புதுச்சேரி-11

கிடைக்கும் இடம்:
**புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்**
38, வேங்கட நகர்,
புதுச்சேரி-11

முதல் பதிப்பு: மே, 1988.

உரிமை: ஆசிரியர்க்கே.

**குறள்கள்**

*“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.”*

*“யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.”*

*“தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.”*

**விலை ரூ. 20-00**

அச்சகம்:

கே.பி.டி. இண்டஸ்ட்ரீஸ்,

அண்ணாமலை நகர், 608 002.

# ஆசிரியர் முன்னுரை

என் உள்ளத்தினின்றும் பல்வேறு நேரங்களில் எழுந்த எண்ண எழுச்சிகளை இருபத்தொரு தலைப்புகளில் ஆய்வுப் படைப்பாக இந்நூலில் வெளியிட்டுள்ளேன்.

உலகில் ஊனக் கண்ணால் காணும் காட்சிகளே மிகுதி; மனக் கண்ணால் பல்வேறு ஆய்வுக் கருத்துகளைக் காணும் காட்சி மிகவும் குறைவு. மனக் கண்ணால் கருத்துக் காட்சிகளைக் காணும் பயிற்சி இளைஞர்களிடையே ஏற்பட இந்தப் படைப்பு உதவலாம். எனவேதான், இந்நூலுக்குக் 'கருத்துக் கண்காட்சி' என்னும் பெயர் வழங்கப் பெற்றுள்ளது.

நூலுள் ஒரே கருத்து குறிப்பிட்ட பயன் கருதி இரு கட்டுரைகளில் இடம்பெற்றிருப்பதைப் பொறுத்தருள்க.

இந்நூலை வெளியிட ஓரளவு பொருள் உதவி புரிந்துள்ள புதுச்சேரி மாநில அரசுக்குத் தலைதாழ்த்தி நன்றி செலுத்துகிறேன்.

நன்முறையில் இந்நூலை அச்சிட்டு உதவிய அண்ணாமலை நகர், கே.பி.டி. அச்சகத்தார்க்கு எனது நன்றி உரியது. வணக்கம்.

3-5-1988 சுந்தர சண்முகன்

# வழி காட்டி

வருக வருக! வணக்கம். கருத்துக் கண் காட்சி பார்க்க வேண்டுமா? சரி. இதோ நான் ஒரு வழி காட்டி (Guide) இருக்கிறேன்-வாருங்கள். நான் ஒவ்வொரு பகுதியாகக் காண்பிப்பேன். இந்தக் கண்காட்சி ஊனக் கண்ணால் பார்க்கும் காட்சியன்று; மனக் கண்ணால்-கருத்துக் கண்ணால் பார்க்கும் காட்சியாகும். இந்தக் கண் காட்சியில் இருபத்தொரு பகுதிகள் (Stalls) உள்ளன. நாம் ஒவ்வொன்றாகக் காணலாம்:

இதுதான் முதல் பகுதி (Stall). இஃது ஓர் இயற்கைக் காட்சிப் பகுதியாகும். இதில், ஒரு தாமரைத் தடாகத்தில் சேவல் அன்னமும் பெடை அன்னமும் அளவளாவுவதை அறிந்து மகிழலாம்.

இது இரண்டாம் பகுதி. இது ஒரு கலைக் கூடப் பகுதி. இதில் மற்போர்ப் பயிற்சி, படைப் பயிற்சி, கல்விப் பயிற்சி முதலிய பயிற்சிகளைக் காணலாம்.

அடுத்தது மூன்றாம் பகுதி; இது மேடைப் பேச்சுப் பகுதி. மேடைப் பேச்சாளர் பலரை இங்கே பார்க்கலாம்.

புலவர் பகுதியாகிய இந்த நாலாம் பகுதியைப் பாருங்கள். இங்கே முதுபெரும் புலவர்-மகா வித்துவான் ஒருவர் உள்ளார். அவரைப் பற்றிய விவரங்களை ஈண்டு அறியலாம்.

இதுவா? இது மாதிரி நீதிமன்றப் பகுதி. ஒரு குழந்தையை ஈன்ற தாய் யாரென்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. இன்னார்தான் தாய் என்று ஒரு சிலரும், வேறொருவர் தாய் என்று வேறு சிலரும் வாதிடுகின்றனர். இந்தச்

சிக்கல் தீர நீதியந் தலைவர் கூறும் தீர்ப்பை அறிந்து கொள்ளலாம். இது ஐந்தாம் பகுதியாகும்.

அடுத்து ஆறாம் பகுதிக்குச் செல்வோம்-வாருங்கள். எழுத்தாளர் பகுதியாகிய இங்கே ஓர் எழுத்தாளர் உள்ளார். அவர் உரை நடை எழுதுவதிலே மிகவும் வல்லவர். அவரது உரை நடையின் சிறப்பை இங்கே படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இது ஏழாம் பகுதி-அச்சுப் பதிப்புப் பகுதி. ஓலைச் சுவடிகளில் உள்ளவற்றை அச்சில் பதிப்பிக்கும் ஓர் அறிஞரை இங்கே காணலாம். என்னென்ன நூல்களெல்லாம் பதிப்பித்திருக்கிறார் என்பதை இங்கே அறியலாம்.

இதோ எட்டாம் பகுதியாகிய தன் வரலாற்றுப் பகுதிக்கு (Autobiography) வந்து விட்டோம். இங்கே ஒருவர் தன் வரலாற்றிலிருந்து ஒரு சிறு பகுதியை நமக்கு அறிவிக்கிறார்.

அடுத்து, ஒன்பதாவதாகிய இந்த வரலாற்றுப் பகுதியில், வரலாறு பற்றியும் அதை அறிந்து கொள்ள உதவும் துணைக் கருவிகள் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

இதுதான் பத்தாம் பகுதி-உலகப் பொது அறிஞர் பகுதி. இங்கே, பேரறிஞர்கள் இருவர், உலக உயிர்கள் நன்முறையில் வாழ்வதற்கு உரிய பொதுவான புரட்சிக் கருத்துகளைக் கூறுவதை அறியலாம். அவ்விருவரும் ஒத்த கருத்து உடையவர்கள் என்பதும் புலப்படும்.

இதோ நகைச் சுவைப் பகுதி பதினொன்றாவதாக உள்ளது. இவ்வளவு நேரம் பார்த்து வருவதால் உண்டான அலுப்பு தீர, இங்கே பலவகைப் பைத்தியங்கள் உளறுவதை அறிந்து நகைத்து மகிழலாம்.

அடுத்து உள்ளது தமிழ்ச் சங்கப் பகுதி. ஆமாம், பன்னிரண்டாவது இது. உதிரியாகக் கிடந்த பாடல்கள் பலவற்றை நூலாகத் தொகுக்கும் பணி தமிழ்ச் சங்கத்தி னுடையது என்பதை இங்கே தெரிந்துகொள்ளலாம்.

பதின் மூன்றாவதாகிய இது இலக்கிய வரலாற்றுப் பகுதி யாகும். புரட்சிப் பாவலர் ஒருவரின் இலக்கிய நூல் களின் வரலாறு குறித்து அதாவது விவரம் பற்றி இங்கே அறியலாம். மற்றும் அவருடைய இலக்கிய நூல்களால் உலக வரலாற்றின் சிறு சிறு பகுதிகளும் தெரியவரும்.

அடுத்த பதினான்காம் பகுதி ஏறக்குறைய முன்போன் றதே. ஆனால், வரலாற்று இலக்கியப் பகுதியாகிய இதில், ஒரே ஒருவரின் வரலாறு பற்றிய ஒரே ஒரு இலக்கிய நூல் பற்றி மாதிரிக்காக அறியலாம்.

மேற் கொண்டு, பொருளியல் பகுதியான பதினைந் தாவது பகுதி இதுதான். ஒரு வகையில் கோடீசுவரராக ஆகக் கூடிய வழிபற்றிய பரிந்துரையை இங்கே தெரிந்து கொள்ளலாம்.

மருத்துவப் பகுதி இல்லாத கண்காட்சி உண்டா என்ன! அடுத்ததான பதினாறாம் பகுதி இதுதான், உறுப்பு களுள் மிகவும் இன்றியமையாததான கண்ணின் நலத் திற்குப் பரிந்துரைக்கும் ஒருவகை மருத்துவத்தை இந்தப் பகுதியால் அறியலாம்.

கண் காட்சியில் மர இனமாகிய தாவரஇயல் (Botany) பகுதி இருக்குந்தானே? அதுதான் இந்தப் பதினேழாம் பகுதி. இதில் ஒருவகைச் செடிகளின் இயல்பு பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

பதினெட்டாவது கலைகளின் தாய்ப் பகுதி. இங்கே, பல கலைகளின் தாயாக இருக்கிற ஒரு கலையின் சிறப்பைப் புரிந்து கொள்ளலாம்.

இன்னும் மூன்று பகுதிகளே உள்ளன. அடுத்த பத்தொன்பதாம் பகுதி கூத்துப் பகுதியாக உள்ளது. கூத்து என்றால் தெருக் கூத்து அன்று. தில்லைக் கூத்தனது நடனக் கலையை-நாட்டியக் கலையை இங்கே காணலாம்.

அடுத்தது சிறு கதைப் பகுதி. இவ்வளவு நேரம் என்னென்னவோ பார்த்தறிந்து வந்தவர்கட்குக் களைப்பு தீர, சுவையான ஒரு சிறு கதை சொல்லப்படின் மகிழ்ச்சியாக இருக்கும் அல்லவா? அந்த வாய்ப்பு இந்த இருபதாவது பகுதியில் உண்டு.

இன்னும் எஞ்சியிருப்பது ஒரே ஒரு பகுதிதான். போட்டி விளையாட்டுப் பகுதிதான் இருபத்தோராம் பகுதி. போட்டி விளையாட்டைக் காண எவருக்கும் ஆர்வம் இருக்கும்தானே! இந்தப் பகுதியில், சுவையான ஒருவகை விளையாட்டுப் போட்டியைக் கண்டறிந்து மகிழலாம். இதோடு கண்காட்சி நிறைவுறுகிறது.

தமிழ் ஆர்வம் நிரம்பிய தக்கோர்களே! கருத்துக் கண்ணால் கண்டறியக் கூடிய இந்த இருபத்தொரு பகுதிக் காட்சிகளையும் நீங்கள் கண்டறிவதற்குத் துணைபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது பற்றிப் பெரிதும் மகிழ்கிறேன்-பெருமைப் படுகிறேன். நன்றி. வணக்கம்.

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மணிமேகலையில் ஒரு மாலைக் காட்சி | ... | 9 |
| 2. | கம்பன் கழகம் | ... | 16 |
| 3. | மக்கள் மனப் பாங்கில் மேடைத் தமிழ் | ... | 27 |
| 4. | புதுவை பு. அ. பெரிய சாமி பிள்ளை | ... | 34 |
| 5. | நாலடியார் ஆசிரியர் நக்கீரரா? | ... | 45 |
| 6. | திரு.வி.க. வின் உரைநடை அழகு | ... | 50 |
| 7. | ஈழம் தந்த தாமோதரனார் | ... | 61 |
| 8. | கம்பன் அறிமுக வரலாறு | ... | 73 |
| 9. | இலக்கியத்தில் வரலாற்றுக் குறிப்புகள் | ... | 81 |
| 10. | வள்ளுவரும் வள்ளலாரும் கண்ட சமூக ஒருமைபாடு | ... | 91 |
| 11. | பழமைப் பைத்தியங்களைப் பார்ப்போமே! | ... | 99 |
| 12. | நெடுந் தொகை-தொகுப்புக் கலை | ... | 111 |
| 13. | பாரதி இலக்கிய வரலாறு | ... | 123 |
| 14. | முதல் கலம்பகம் | ... | 141 |
| 15. | கோடீசுவரர் ஆகவேண்டுமா? | ... | 153 |
| 16. | பகலில் விண்மீன் | ... | 158 |
| 17. | இயற்கை மணி காட்டிகள் | ... | 161 |
| 18. | தமிழில் ஒப்புமைக் கலை | ... | 167 |
| 19. | மன்றம் | ... | 181 |
| 20. | தேடக் கிடைக்காத செல்வம் | ... | 188 |
| 21. | கம்பர் காட்டும் கயிறு இழுப்புப் போட்டி | ... | 200 |

இயற்கைக் காட்சிப் பகுதி

# 1. மணிமேகலையில் ஒரு மாலைக் காட்சி

"மாலை நேரம்- மஞ்சள் வெயில் சாயும் வேளை. 'காதலர் பூங்கா' வில் காதலனும் காதலியும் களிப்புடன் அளவளாவத் தொடங்கினர். அந்த நேரம் பார்த்து, 'சிவபூசனையில் கரடி விட்டாற் போல்', மழை 'பிசுபிசு' என்று பெய்யத் தொடங்கியது"-இப்படிப் போல எத்தனையோ மாலைக் காட்சிகளைக் கதைகளில் படித்திருக்கலாம். இதோ ஒரு புதிய காட்சி:

**காவியக் காட்சி**

ஓர் அன்னச் சேவலும் அதன் பெடையும் ஒரு தாமரைப் பொய்கையில் வாழ்ந்து வந்தன. இரண்டும் இணை பிரியாது ஆடியும் ஓடியும் நீந்தியும் பறந்தும் களிப்பது வழக்கம். ஒருநாள் பொழுது சாயும் வேளை-பெடையானது, விரிந்திருந்த ஒரு பெரிய தாமரை மலரில் விளையாடிக்கொண் டிருந்தது. அப்போது மாலை நேர மாதலின், தாமரைமலர் தன்மேல் விளையாடிக் கொண்டிருந்த அன்னப் பெடையையும் சேர்த்து மூடிக் கொண்டது. மாலையில் தாமரை மலர் கூம்பிக் குவிவது இயற்கைதானே!

பெடைக்கோ ஒன்றும் ஓடவில்லை. எங்கிருக்கிறோம்-எப்படி இந்த இருட்டறையில் அகப்பட்டுக் கொண்டோம்-

சேவல் எங்கே இருக்கிறது-அதை எப்படி எப்போது அடைவது-என்றெல்லாம் பல எண்ணியது; செய்வதறியாது திகைத்துத் திக்குமுக் காடியது.

அந்நேரம் எங்கேயோ கவனமா யிருந்த சேவலன்னம் திடீரெனத் திரும்பிப் பார்த்தது-பெடையைக் காணவில்லை; எங்கே சென்றதோ—அதற்கு என்ன நேர்ந்ததோ என்று ஏங்கிக் கவன்றது. எப்படியாவது உயிர்க் காதலியைத் தேடிக் கண்டுபிடித் தாகவேண்டுமே! என்ன செய்வது! குறிப்பாகப் பெடை விளையாடிக் கொண்டிருந்த தாமரை மலர்ப் பக்கம் கண்பார்வையை ஆராயவிட்டது. குவிந்திருந்த அந்த மலர் இயற்கைக்கு மாறாகப் பெரிதா யிருந்தமையாலும், ஆடி யசைந்து அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்ததாலும், உள்ளிருந்து எழுந்த ஒலிக்குறிப்பாலும், அம் மலராகிய சிறைக்குள்ளேதான் தன் பெட்டை அடைக்கப்பட் டிருக்கிறது என்று துணிந்து மலர்களின் இதழ்களைக் கிழித்துப் பெடையை விடுதலை செய்தது; உடனே அதனை அழைத்துக் கொண்டு அருகி லிருந்த ஓர் உயர்ந்த தென்னை மரத்தின் மடலில் ஏறிக்கொண்டு மகிழ்ச்சி யடைந்தது. இந்த அன்னப் பறவைகளின் அன்பு வாழ்க்கை எத்துணை இனியது பாருங்கள்! இந்த இன்ப அன்புக் காட்சியினை, மணிமேகலை என்னும் காவியத்தில் உள்ள

"அன்னச் சேவல் அயர்ந்து விளையாடிய
தன்னுறு பெடையைத் தாமரை அடக்கப்
பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்டு
ஓங்கிருந் தெங்கின் உயர்மடல் ஏற"-

என்னும் பாடல் பகுதியில் (மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை, 123-126) காணலாம். இந்நிகழ்ச்சியை எடுத்துக்காட்டியதில் காவியப் புலவர் சாத்தனாரின்

கற்பனையும் கலந்திருந்தாலும், நாம் நயந்து மகிழத்தக்க நயங்களும் இப்பகுதியில் மிகவும் உண்டு. மனைவியைப் பேணிக் காக்கவேண்டும் என்பதில் ஆண் அன்னத்திற்கு இருக்கும் அக்கறையும் ஆர்வமும் விரைவும் நமக்குப் புலப் படுமே!

**அயர்ந்து விளையாடிய:**

இப்பாடல் பகுதியி லுள்ள 'அயர்ந்து விளையாடிய' என்னும் தொடரை நோக்குக. 'அயர்ந்து' என்றால். 'மெய்ம் மறந்து-தன்னை மறந்து' என்று பொருளன்றோ? தன்னை மறந்த அயர்ச்சியால் பெடை தாமரை மலர்க்குள் அகப் பட்டுக் கொண்டது-பெடை அயர்ந்திருந்த நேரம் பார்த்துத் தாமரை அதை அடக்கிக்கொண்டது-என்னும் கருத்து நயம் 'அயர்ந்து' என்னும் சொல்லாட்சியிலிருந்து கிடைக்கின்றது. 'அசர்ந்திருந்த நேரம் பார்த்து அடித்துச் கொண்டு போய் விட்டான்' என்னும் உலக வழக்கு ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது. மற்றும், விளையாட்டுத் தனமாய் இருந்தால் 'வினை' நேர்ந்து போகும் என்னும் கருத்தை 'விளையாடிய' என்னும் சொல் அறிவித்துக்கொண்டிருப் பது சுவைத்தற்கு இன்பமா யுள்ளது.

**தன்னுறு பெடை:**

அடுத்து, 'தன்னுறு பெடை' என்னும் தொடரை நோக்குவாம்: 'தனக்கு உற்ற மனைவி' என்பது அதற்குப் பொருளன்றோ? 'உற்ற மனைவி' என்பதில், மனையா ளுக்கு இருக்க வேண்டிய பேரிலக்கணங்கள் அத்தனையும் அடங்கிவிட வில்லையா? மக்களுக்குள் ஒருவர்க்கு உற்றவர் ஒருவரே-பலரல்லர் என்னும் கற்புடைமை போல அன்னங்களுக்குக் குள்ளும், ஒன்றுக்கு உற்றது ஒன்றே- தனக்குத் தனக்குஉரிய ஆணையோஅல்லது பெண்ணையோ

தவிர, வேறொன்றை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்னும் ஒழுங்கு நெறிக் கட்டுப்பாடு உண்டு என்பதை இந்தத் தன்னுறு பெடை' என்னும் தொடர் அறிவிக்கின்றது.

**அடக்க:**

தொடர்ந்து, 'தாமரை அடக்க' என்பதிலுள்ள அடக்க' என்னும் சொல்லைக் காண்க. 'ஒருவனுக்கு உரியதை இன்னொருவன் அகப்படுத்தி அடக்கிக் கொண்டான்' என்னும் உலக வழக்குப் பேச்சு ஈண்டு நினைவுக்கு வருகின்றது. சேவலுக்கு உரிய பெடையைத் தாமரை தனக்கு உரியதாக அடக்கிக் கொண்டது என்பது போன்ற குறிப்பு ஈண்டு நயமாயுள்ளது.

**சிதையக் கிழித்து:**

உடனே சேவல் என்ன செய்தது? இங்கே, 'பூம் பொதி சிதையக் கிழித்து' என்னும் தொடர் பொருள் பொதிந்தது. ஒருவன் மனைவியை இன்னொருவன் அகப்படுத்திக் கொண்டு ஒரு கூரைக்குள்ளே-ஒரு கூடாரத்திற்குள்ளே பூட்டி அடைத்துவிடின், கணவன், பூட்டைத் திறப்பது எப்படி யென்று பொறுமையாகக் காத்துக் கொண்டா இருப்பான்? கூரையை-கூடாரத்தைக் கண்டபடி விரைந்து பிய்த்து இழுத்து எறிந்துவிட்டு மனைவியை மீட்கவே முயல்வா னன்றோ? அவ்வாறே, அன்னச் சேவலும், குவிந்து மூடிய தாமரை மலரின் ஒவ்வோர் இதழையும் பொறுமையாகத் திறந்துவிட்டுக்கொண் டிராமல், அம் மலர் கண்டபடி சிதைந்து அழியும் படியாக விரைந்து கிழித்துப் பிய்த் தெறிந்து விட்டுப் பெடையை மீட்டது-என்னும் பொருள் பொதிந்த அந்தத்தொடர் மிகவும் நயத்தற் குரியது.

**பெடை கொண்டு:**

அடுத்து, 'பெடை கொண்டு' என்னும் தொடரை நோக்க வேண்டும், ஏதோ மூட்டை முடிச்சையோ -அல்லது சிறு குழந்தையையோ எடுத்துக் கொண்டு -தூக்கிக் கொண்டு செல்வதைப் போல, சேவலன்னம் பெடையன்னத்தைக் கொண்டு சென்றது என்னும் குறிப்புப் பொருள் இத்தொடரில் புலப்படுகின்றதன்றோ? உண்மையில் அப்படியா நடந்திருக்க முடியும்? பெண் அன்னமும் பறந்துதான் சென்றிருக்கும். ஆயினும், நெடுநேரம்வரை இதழ்களுக்குள் அடைபட்டுக்கிடந்து பெடை நொந்துபோயிற்று என்னும் பரிவால்-பற்றுணர் வால் அதனை ஏந்தி எடுத்துக்கொண்டு செல்வதுபோல் சேவலன்னம் நெருங்கித் தாங்கினாற்போல் சென்றுள்ளது என்னும் நயத்தைப் 'பெடைகொண்டு' என்னும் தொடர் நல்குகின்றது.

**உயிர்களின் இயற்கை:**

அடுத்தபடியாக, 'ஓங்கிருந் தெங்கின் உயர் மடல் ஏற' என்னும் நயஞ் செறிந்த தொடரை நன்கு நோக்க வேண்டும். தண்ணீரிலே-தாமரையிலே பொழுதுபோக்கிக் கொண்டிருந்த அன்னங்கள் தாமரை மலரால் ஏற்பட விருந்த உயிரிழப்பினின்றும் தப்பிப் பிழைத்தபிறகு யாது செய்தன? நாம் என்ன செய்வோம்? அஞ்சத்தக்க இடர்ப் பாடான இடத்தில் சிக்கித் தவித்து உயிருக்குப் போராடிய எந்த உயிரினமும் அவ்விடத்தை விட்டு நெடுந் தொலை விற்கு அப்பால் அகல முயல்வது இயற்கைதானே! அவ்வாறே இந்த அன்னங்களும், தங்களைத் தவிக்கச் செய்த தாமரையை விட்டு-அந்தத் தாமரை இருக்கும் தண்ணீரில் நீந்தியும் மிதந்தும் வாழ்வதையும் விட்டு, அத் தண்ணீரின் அருகிலுள்ள தரையையும் விட்டு, அத்

தரை மட்டத்தில் தாழ்ந்து குறுகியுள்ள சிறுவகை மரஞ் செடி கொடிகளையும் விட்டு, ஓங்கி வளர்ந்துள்ள பெரிய தென்னை மரத்தின் உயரமான மடலில் ஏறிக்கொண்டனவாம். உண்மை தானே! இப்பகுதி சுவைப்பதற்கு. மிகவும் இனியது. சுவைப்பாம்:

**ஓங்கு இருந் தெங்கு:**

தாமரை மலரின் தகாத செயலால் தவித்துப் போன அந்த அன்னங்கள், தாமரைத் தடாகத்தை விட்டு உயரமான ஓரிடத்தில் ஏறிக்கொண்டன. ஈண்டு காவியப் புலவர் சாத்தனார், அன்னங்கள் ஏறிக்கொண்ட மரத்தின் உயரத்தை மிகுதிப் படுத்திக் கூறல் என்னும் அளவு கருவியின் வாயிலாக, பறவைகள் தாமரைத் தடாகத்தின் மேல் கொண்டிருந்த அச்சத்தின் மிகுதியை நமக்கு அளந்து காட்டியுள்ளார். தெங்கு (தென்னை) என்று சொன்னாலே போதும்-அது மிகவும் உயரமான பொருள் என்பது எல்லாருக்கும் தெரியும். உலக வழக்கில் கூட, மிகவும் உயரமாயிருப்பவனைப் பார்த்து, 'தென்னைமரம்போல் வளர்ந்து விட்டான்' என்று சொல்கின்றனரல்லவா? சாத்தனாரே, (ஓங்கு தெங்கு-இரும் தெங்கு) 'ஓங்கு இரும் தெங்கு' என இரண்டு அடைமொழிகளின் வாயிலாக அம்மரத்தின் உயரத்தை மேலும் மிகுதிப் படுத்திக் காட்டுகிறார். அதாவது, இயற்கையிலேயே உயரமாயிருக்கிற தென்னை மரங்களுக்குள்ளேயே அந்த மரம் ஓங்கிய மரமாம்- இரும் (பெரிய) மரமாம். 'இரும்' என்றால் 'பெரிய' என்று பொருளாம். இங்கே 'பெரியது' என்பதும் உயரத்தைக் கொண்டுதானே! எனவே, மிகவும் உயர்ந்த மரம் என்பது போதரும்.

**உயர் மடல் ஏற:**

அப்படியே என்றாலும், தெங்கில் ஏறிக் கொண்டன என்று கூறுவதோடு புலவர் விட்டாரா? இல்லை யில்லை! தெங்கின் உயர் மடல் ஏறியதாகக் கூறியுள்ளார். தென்னை மரத்தில் அன்னங்கள் ஏறிக் கொண்டன என்றால், அதன் மடலில் (மட்டையில்) ஏறிக் கொள்வதைத்தான் குறிக்கும். தென்னையின் மட்டைகளுக்குள் மிகவும் நாள்பட்ட மட்டைகள் பழுத்துக் கீழ் நோக்கித் தொங்கிக் கொண்டிருக்கும். எனவே, தொங்கும் மட்டையில் அன்னங்கள் அமர முடியாது. நடுத்தரமான மட்டைகளோ பக்கவாட்டத்தில் நீட்டிக்கொண்டிருக்கும். அத்தகு மட்டைகளிலும் அன்னங்கள் அமர விரும்பவில்லை. ஆனால், புதிய பச்சிளங் குருத்து மட்டைகளோ, மேல் புறமாக விண்ணை நோக்கி நெட்ட நெடுந் தோற்றத்திலே நீண்டு நிமிர்ந்திருக்கும். தென்னை மரத்தின் பகுதிகளுக்குள் இப்பகுதி தான் மிகவும் உயரத்தில் உள்ளதாகும். இந்த மிக மிக உயரமான பகுதியில்தான் அன்னங்கள் தங்கின என்று குறிக்கவே, தெங்கின் 'உயர்மடல்' என்றார் ஆசிரியர். அஃதன்றி, ஓங்கிருந் தெங்கின் உயர் மடல் 'அமர' என்று பாடாமல், உயர் மடல் 'ஏற' என்று பாடியிருப்பதிலுள்ள நயத்தையும் நாம் சுவைக்கவேண்டும். 'அமர' என்று சொல்லி விட்டால், உயரத்தின் எல்லையை வரையறுத்து முடித்ததாய்விடும். ஆனால் 'ஏற' என்று சொல்லியிருப்பதின் வாயிலாக, அன்னங்கள் இன்னும் உயரத்தில் ஏறு முகத்திலேயே இருக்கின்றன—அதற்குமேல் இன்னும் உயரமான பொருள் ஏதேனும் இருக்குமானாலும் ஏறிப்போகும்—என உயரத்தின் ஏற்றத்திற்குக் கூர் சீவி விட்டிருக்கிறார் மாபெரும் புலவர் சாத்தனார். எத்தனை சொல் நயம்! எத்துணை பொருள் செறிவு!

கலைக்கூடப் பகுதி

# 2. கம்பன் கழகம்

கம்பன் கழகம் இனியது-இன்றியமையாதது. கம்பன் கழகத்துள் புகின், கலைச் செல்வங்களை நிரம்பவும் பெற்று மகிழலாம். ஆங்குப் பல கலைகள் பயிலப்படும்-ஆராயப்படும்-அறியப்பெறும்-இத்தகு கழகம் உள்ள நாடு பெருமைக்குரியது; நகரம் சிறப்பிற் குரியது. எனவே கம்பன் கழகம் இனியது-இன்றியமையாதது.

ஆனால், திருவள்ளுவர் தெரிவித்துள்ளார்: 'கழகத்துள் புகக்கூடாது; புகின், பழகிய செல்வமும் பண்பும் கெடும். ஏழமை - மிகும்' இது வள்ளுவர் கூறும் கருத்து. ஆயின், கம்பர் அறிமுகப்படுத்தும் கழகம் இனியது. ஏற்றது-இன்றியமையாதது.

**மயாறிந்த புலவரிலே:**

இஃதென்ன முரண்பாடு! ''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல்இளங்கோவைப் போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை உண்மை வெறும் புகழ்ச்சியில்லை'' எனச் சுப்பிரமணிய பாரதியாரால் பாராட்டப்பெற்றுள்ள பெரும்புலவர் மூவருள், கம்பர், கழகத்தைச் சிறப்பித்துக் கூறுகிறார்; திருவள்ளுவரோ கழகத்துள் புகுதலைக் கண்டிக்கிறார்.

ஆம்! கம்பர் தமது இராமாயண நூலில் பால காண்டத்தில் நாட்டுப் படலத்தில் கோசல நாட்டின் சிறப்பைக் கூறி வருங்கால்

''பந்தினை இளையவர் பயிலிடம் மயிலூர்
கந்தனை யனையவர் கலைதெரி கழகம்
சந்தன வனமல சண்பக வனமாம்
நந்தன வனமல நறைவிரி புறவம்''

என்னும் (48) பாடலில் கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'மயிலை ஊர்தியாகக் கொண்ட முருகக் கடவுளைப் போன்ற இளைஞர்கள் கலை பயில்கின்ற கழகம் அந்நாட்டில் உள்ளதாகக் கம்பர் கூறுகிறார். கலை பயிலும் இடம்-கலை ஆராயும் இடம் 'கழகம்' என்பது கம்பர் கருத்தாகத் தெரிகிறது. திருவள்ளுவரோ, 'சூது ஆடும் இடம்' கழகம் எனக் கூறியுள்ளார். திருக்குறளில் 'சூது' என்னும் பகுதியில்,

'கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.' (935)

'பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.' (937)

என்னும் இரண்டு குறள்கள் உள்ளன. 'கழகமும் கையும் சூதாடு கருவியுமாக இருப்பவர் ஒன்றும் இல்லாத ஏழையராவர்; கழகத்தில் புகுந்தவர் பழகிய செல்வமும் பண்பும் கெடுவர்'-என்பன மேலுள்ள குறட் கருத்துக்கள்.

கலை பயிலும் இடம் கழகம் எனக் கம்பர் கருத்துத் தெரிவித்திருக்க, அவருக்கும் பல நூற்றாண்டுகள் முற்பட்டவராகிய திருவள்ளுவர் சூதாடும் இடம் கழகம் எனச் சொல்லியிருப்பதிலுள்ள உண்மை யாது? அஃது ஆராய்தற்குரியது:

**சங்க இலக்கிய ஆட்சி**

திருக்குறளைப் போலவே சங்க காலத்தைச் சார்ந்த இலக்கியங்களில் கழகம் என்னும் சொல் 'சூதாடு களம்'

என்னும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டுக்கள் சில வருமாறு, கலித்தொகையில்,

"தவலில் தண் கழகத்துத் தவிராது வட்டிப்பக்
கவறுற்றவடுவேய்க்கும் காமர்பூங் கடற்சேர்ப்ப"(136)

எனவும், திரி கடுகத்தில்,

"கழகத்தால் வந்த பொருள்கா முறாமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல்-ஒழுகல்
உழவின்கண் காமுற்று வாழ்தல் இம்மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு" (42)

எனவும், ஆசாரக் கோவையில்,

"சூதர் கழகம் அரவம் அறாக்களம்
பேதைகள் அல்லார் புகாஅர் புகுவரேல்
ஏதம் பலவும் தரும்" (98)

எனவும், கழகம் என்னும் சொல் திருக்குறளில் உள்ளாங்கு ஆளப்பட்டி ருப்பதைக் காணலாம்.

**திருக்குறளின் வழி**

திருக்குறளுக்குப் பின் தோன்றிய சங்க இலக்கியங்களும் இடைக்கால இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும் திருக்குறளின் வழியைப் பின்பற்றிப் பல கருத்துக்களை வெளியிட்டிருக்கும் உண்மையைத் தமிழ் இலக்கியப் பயிற்சியாளர் அறிவர். இந்த அடிப்படையில் சங்க இலக்கியங்களே யன்றி, இடைக்கால-பிற்கால இலக்கியங்கள் சிலவும், திருக்குறளைப் போலவே 'கழகம்' என்னும் சொல்லைச் 'சூதாடுகளம்' என்னும் பொருளில் கையாண்டிருப்பதையும் ஈண்டு மறப்பதற்கில்லை. எடுத்துக் காட்டிற்காக இடைக்கால இலக்கியம் ஒன்றையும் பிற்

கால இலக்கியம் ஒன்றையும் காண்பாம்,: ஒன்பதாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் திருத்தக்க தேவர் இயற்றிய சீவக சிந்தாமணியில் கனகமாலையார் கலம் பகத்தில் உள்ள

"ஆகந் தானோர் மணிப்பலகையாகமுலைகணாயாகப்
போகச் சேற்ற புனை பவழ வல்குல் கழகமாக
ஏக வின்பக் காமக் கவறாட லிவைவ தன்றேல்
ஆக நோற்றிட் டடங்க லாண்மைக் கழகென்பவே"

என்னும் (101) பாடலிலும், பதினாறாம் நூற்றாண்டின ரான அதிவீரராம பாண்டியனார் இயற்றிய நைடதம்-சூதாடு படலத்தில் உள்ள

"கள்ளுண விரும்புதல் கழகம் சேர்தல் மால்
உள்ளுறப் பிறர்மனை நயத்தல் ஒன்னலர்க்கு
எள்ளரு ஞாட்பினுள் இரியல் செய்திடல்
வள்ளியோய் அறநெறி வழுக்கும் என்பவே"

என்னும் (20) பாடலிலும் கழகம் என்பது சூதாடு களத்தைக் குறிப்பது காணலாம்.

**உயரிய பொருளில்:**

இதே நேரத்தில், கழகம் என்னும் சொல், இடைக் கால இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும், கம்ப ராமாயணத்தில் உள்ளாங்கு உயரிய பொருளில் கையாளப் பட்டிருப்பதையும் ஈண்டு மறப்பதற்கில்லை. இடைக்கால இலக்கியம் ஒன்றிலிருந்தும் பிற்கால இலக்கியம் ஒன்றிலிருந்தும் இதற்குச் சான்று காண்பாம்:

எட்டாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் நம்மாழ்வார் அருளியுள்ள திருவாய் மொழியில் உள்ள

"குழகி எங்கள் குழமணன் கொண்டு கோயின்மை
செய்து கன்மம் ஒன்றில்லை
பழகியாம் இருப்போம் பரமே இத்திருவருள்கள்
அழகியார் இவ்வுலகம் மூன்றுக்கும் தேவிமை
தகுவார் பலருளர்
கழகம் ஏறேல் நம்பீ உனக்கும் இளைதே கன்மமே"

என்னும் (6-2-6) பாடலில் கழகம் என்னும் சொல் 'திருவோலக்கம்' என்னும் உயரிய பொருளில் அமைந்திருப்பதை அறியலாம். அடுத்து, பதினாறாம் நூற்றாண்டினரான பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணம் -திருநாட்டுப் படலத்தில்,

''கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்ததா எண்ணவும் படுமோ''

என்னும் (57) பாடலில், பழைய மதுரைத் தமிழ்ச் சங்கத்தைக் கழகம் என்னும் பெயரால் சுட்டியிருப்பது ஈண்டு மிகவும் குறிப்பிடத்தக்கது. கடவுளே கழகத்தில் அமர்ந்து தமிழ் ஆராய்ந்ததாக இப்பாடல் கூறுகிறது. இடைக்காலத் தவராகிய கம்பரும் கலைக் கூடங்களைத் தானே கழகம் எனக் கூறியுள்ளார். கம்பர் ஒன்பதாம் நூற்றாண்டினர் எனச்சிலரும், பன்னிரண்டாம் நூற்றாண்டினர் எனச் சிலரும் கூறுகின்றனர். ஆகக்கூடியும், கம்பர் இடைக்காலத்தவர் என்பது உறுதி. இடைக்காலமும் பிற்காலமும் இருக்கட்டும்! பிற்காலத்திற்கும் பிற்காலமாகிய இக்காலத்தில், கல்லூரிக்கும் மேற்பட்ட பெரிய கல்வி நிலையத்தைப் 'பல்கலைக்கழகம்' என நாம் அழைக்கிறோம். கழகம் என்னும் இந்த இனிய பெயரை, பல

துறைகளில் பலர் கூடிப் பணியாற்றும் பலவகை நிறுவனங் களும் இன்று பெற்றுள்ளன.

அங்ஙனமெனில், சங்ககால நூல்களிலும் இடைக்கால- பிற்கால இலக்கியங்களிலும், 'கழகம்' என்னும் சொல், இரு துருவங்கள் போல் மிகவும் மாறுபட்ட இருவேறு பொருள் களில் ஆளப்பட்டிருப்பதி லுள்ள உண்மை யாது? இதனை நாம் கண்டு பிடிக்கக் கழகம் என்னும் சொல் குறித்து ஒரு சிறிது ஆராய வேண்டும்:-

**கழக வரலாற்று ஆராய்ச்சி**

கழகம் என்னும் சொல்லை எழுத்து எழுத்தாக அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து 'அறுவை மருத்துவம்' செய்து ஆராய்ச்சி செய்பவரும் உண்டு. இதற்காக இவ் வளவு மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டிய தில்லை. இது மிகவும் எளிதில் அவிழ்க்கக் கூடிய சிக்கலே யாகும். எட்டாம் நூற்றாண்டில் எழுந்த 'சேந்தன் திவா கரம்' என்னும் நிகண்டு நூல் இதற்குத் துணை புரியும். கழகம் என்னும் சொல்லுக்குத் திவாகர நிகண்டில் கிடைக் கும் பொருள் விளக்கம் வருமாறு:-

"செல்லல் தீய்க்கும் பல்புகழ்ச் சேந்தனில்
வல்லுநர் நாவலர் வாய்ந்த இடமும்
மல்லும், சூதும், படையும், மற்றும்
கல்வி பயில் களமும், கழகம் ஆகும்"

சேந்தன் திவாகரம்-இடப்பெயர்த் தொகுதி-160

'சேந்தனைப் போல் கல்வியறிவிற் சிறந்த நாவலர்கள் கூடும் இடமும், மற்போர் பயிலும் இடமும், சூது ஆடும் இடமும், படைப் பயிற்சி பெறும் இடமும், கல்வி கற்கும் இடமும், கழகம் எனப் பெயர் பெறும்' என்பது மேலுள்ள

திவாகர நூற்பாவின் கருத்தாகும். 'பலர் கூடும் இடம்' என்னும் பொது அடிப்படையிலேயே, மேற்கூறப் பட்டுள்ள இடங்கட்கும் கழகம் என்னும் பெயர் வைக்கப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. திவாகரத்தில், கழகம் என்னும் பெயர்க்கு உரியனவாக ஐந்து இடங்கள் குறிக்கப்பட்டுள் ளன. அவற்றுள் முதலும் ஐந்தாவதுமே, 'வல்லுநர் நாவலர் வாய்ந்த இடமும்', 'கல்விபயில் களமும் கழகம் ஆகும்' என முழு முழு அடியில் கூறப்பட்டு முக்கியம் பெற்றுள்ளன; ஏனைய மூன்றுமோ வெனில்; 'அதுவும் இதுவும் உதுவும்' என்ற 'ஏனோ தானோ' முறையில் மல் லும் சூதும் படையும் என ஒற்றை வரியில் ஒட்டிக்காட்டப் பட்டுள்ளன. ஒவ்வொன்றன் தகுதி பற்றித் திவாகர ஆசிரி யரின் உள்ளத்தில் இருந்த மதிப்பீடுகள் பாட்டாக வெளி வரும் போது அதற்குரிய உருவம் பெற்று விட்டன. இலக்கி யத் திறனாய்வுக் கலைஞர்களும் உளநூல் வல்லுநர்களும் இதனை எளிதில் உணர்வர். இதிலிருந்து நாம் உணர வேண்டியதாவது:

அறிஞர்கள் பலர் கூடும் சங்கங்களும் கல்விக் கூடங் களுமே கழகம் என்னும் பெயரை முன்னர்ப் பெற்றிருந் தன. பின்னரே மற்போர்ப் பயிற்சிக் களமும் படைக் கலப் பயிற்சிக் களமும், சூதாடு களமும் கழகம் என்னும் பெயர் பெற்றிருக்க வேண்டும். இதற்கு மாறாக, சூதாடும் இடந்தான் முன்னர்க் கழகம் என அழைக்கப்பட்டது; அந்தப் பெயரே பின்னர் அறிவியல் மன்றங்கட்கும் கடன் வாங்கப்பட்டது - என்று யாரும் சொல்ல முடியாது, ஏனெனில், அன்று தொட்டே அறிஞர்கள் சூதாட்டத்தை இழித்துப் பேசி வருகின்றனர். எனவே அந்த இழிசெயல் நடக்கும் இடத்திற்குக் கழகம் என்னும் பெயர் முதலில் இருந்திருக்குமானால் அந்த இழிந்த பெயரையா அறிஞர் கள் கூடும் ஆராய்ச்சி மன்றங்களுக்குப்பின்னர் பெயராகச்

கூட்டியிருக்க முடியும்? ஒருகாலும் முடியாது. ஆகவே, அறிவுமன்றங்களும். கல்விக் கூடங்களுமே கழகம் என்னும் பெயர்க்கு உரியனவாம். இக்காலத்தில் உடற் பயிற்சியும் படைப்பயிற்சியும் கல்வித்திட்டத்தில் சேர்ந்திருப்பதைப் போல, அக்காலத்திலும் மற்போர்ப் பயிற்சியும் படைக் கலப் பயிற்சியும் இன்றியமையாதனவாய்க் கருதப்பட்ட தால், அவை நடைபெற்ற இடங்களும் கழகம் என அழைக் கப்பட்டதில் வியப்பில்லை. ஆனால் சூதாடு களத்திற்கு இந்தப் பெயர் வந்த வரலாறு யாதாக இருக்கலாம்? இதற்கும் பதில் இதோ கிடைத்து விட்டது:

**நிலை தடுமாற்றம்:**

அறிவியல் கலை மன்றங்களில் ஓய்வு நேரங்களில் பொழுது போக்கிற்காகச் சூதாட்டம் நடந்திருக்கலாம். முதலில் பந்தயம் இன்றி ஆடியிருக்கலாம். பின்னர்ப் பணம் வைத்துப் பந்தயம் கட்டி ஆடியிருப்பர். இப்படியாகச் சில இடங்களில் நாளடைவில் அறிவியல் ஈடுபாட்டினைக் காட்டி லும் சூதாட்டமே முதல் இடம் பெற்றுவிட்டிருக்கலாம். போகப் போகச் சில அறிவியல் மன்றங்கள் கலைந்து போக அல்லது கலைக்கப்பட, அந்த இடங்கள் முழுக்க முழுக்கச் சூதாடுங் களங்களாகவே மாறிவிட்டிருக்கலாம் (இன்றைய உலகிலும் இத்தகைய நிலையைச் சில இடங்களில் காணக் கூடும்). ஆனால் நிலைமை மாறியும், கழகம் என்னும் அந்தப் பழைய பெயர் மட்டும் அப்படியே ஆணி அடித்துக் கொண்டு-வேர் பாய்ந்து நிலைத்துவிட்டிருக்கலாம். அதனால்தான் திருவள்ளுவரின் திருக்குறளிலும் சூதாடும் இடம் கழகம் எனச் சுட்டப்பட்டுள்ளது. இந்தத் திருக்குறள் ஆட்சியைக் கொண்டு, கழகம் என்னும் சொல், சூதாடும் இடத்தை மட்டுந்தான் பண்டைக் காலத்தில் குறித்து வந்தது என்று முற்றுப்புள்ளி வைத்துவிடக்கூடாது. திருக்

குறள் காலத்திற்கு முன்பு, இன்று போலவே கலைக்கூடங்களையே கழகம் என்னும் பெயர் குறித்திருக்கவேண்டும். பின்னர் நிலைமை மாறிவிட்டிருக்கிறது.

மற்றும், ஓர் இலக்கியக் கழகத்தைப் பற்றிப் பேசும் போது, கழகம்-கழகம் என்றால் அஃது அந்த இலக்கியக் கழகத்தைக் குறிக்கும்; ஓர் அரசியல் கட்சிக் கழகத்தைப் பற்றிப் பேசும் போது, கழகம்-கழகம் என்றால், அஃது அந்த அரசியல் கட்சியைக் குறிக்கும்; இஃது இக்கால உலகியல். இது போலவே, திருவள்ளுவர் திருக்குறளில் 'சூது' என்பதைப் பற்றிப் பேசும் போது, கழகம்-கழகம் என்றால், அது சூதாடும் இடத்தைக் குறிப்பதில் வியப்பென்ன இருக்கமுடியும்?

திருக்குறளில் கழகம் என்னும் சொல் 'சூதாடு களம்' என்னும் பொருளில் ஆளப்பட்டிருப்பதைக் கண்ட புலவர்கள், தம் நூல்களிலும் அவ்வாறே ஆளத் தொடங்கினர். ஆனால், நாளடைவில், சூதாடும் கழகங்கள் திருவள்ளுவர் போன்ற அறிஞர் பெருமக்களால் இழித்துக் கண்டிக்கப் பட்டமையாலும், அதனால் சூது பெரும்பாலான பொது மக்களால் புறக்கணிக்கப் பட்டமையாலும், சூதாடும் இடங்களைக் கழகம் என அழைக்கும் சொல்லாட்சி இன்று அறவே மறைந்து விட்டது. அறிஞர்கள் கூடும் சங்கங்களும் கல்வி பரப்பும் நிலையங்களும் திருக்குறள் காலத்திற்கு முன் போலவே இன்று கழகம் என அழைக்கப்படுகின்றன. இது தான் 'கழகம்' என்னும் பெயரின் வரலாறாக இருக்கக் கூடும். இவ்வளவு அரிய கருத்துக்களையும் அறிவதற்குத் துணைபுரியும் திவாகரப் பாடலுக்கு நாம் மிகவும் நன்றி செலுத்த வேண்டும்.

மற்றும், இந்தக் காலத்தில் 'கிளப்' (CLUB) என்னும் ஆங்கிலச் சொல் பல்வேறு வகை இடங்களையும் சுட்டி

நிற்பதைப் போல, அந்தக் காலத்தில் கழகம் என்னும் சொல் பல இடங்களையும் சுட்டி நின்றது என்பதையும் ஈண்டு சுட்டாமல் விடமுடியவில்லை.

**கலைக்கழகம்**

இந்த அடிப்படையுடன் கம்பராமாயணத்திற்கு வருவோமேயானால், கம்பன் கழகம் அதாவது கம்பன் கண்ட கழகம், ஒருவகை விளையாட்டரங்கம் (SPORTS CLUB) போலவும் தெரிகிறது; அதுமட்டுமா படைக்கலப் பயிற்சிபெறும் ஒருசார் மறக்கலைக்கூடமாகவும் (இராணுவக் கல்லூரியாகவும்) தோன்றுகிறது. அம்மட்டுமா? பல்வேறு கல்விக் கலைகளை ஆராய்ந்து கற்கும் கல்விக் கூடமாக (University) எண்ணவும் இடம் அளிக்கிறது.

கம்பன் கண்ட கழகத்தில் கலை தெரிபவர்கள், மயிலை ஊர்தியாகக் கொண்ட முருகன் போன்றவர்களாம். அங்ஙன மெனில், அவர்கள் இளைஞர்கள்-அழகு மிக்கவர்கள்-ஆற்றல் உடையவர்கள்-அன்பு மணம் கமழ்பவர்கள் அல்லவா? அவர்தம் பயிற்சி சிறந்ததாகவே இருக்கும்-அவர்கள் பயிலும் இடம் உயர்ந்ததாகவே இருக்கும். அந்தக் கழகம், தெய்வ முருகனது திருக்கோயில் போன்று போற்றுதலுக்கு உரிய உயரிட மாகும்.

**இலை மறை காய்**

இங்கே, கலைக்கழகம் உடையதாகக் கம்பர் கூறும் கோசல நாட்டிற்குள் இலைமறை காயாகத் தமிழ் நாடு மறைந்திருக்கிறது என்பது நினைவுகூரத் தக்கது. கம்பன் தான் கண்ட தமிழ் நாட்டையே கோசல நாடாக மாற்றிக் காட்டியுள்ளான் என்னும் பேருண்மையைக் கம்பராமாயணத்தை ஆழ்ந்து கற்றவர் அறிவர். மற்றும் வைணவ இராம காதையில் சைவ முருகன் இடம் பெற்

றிருப்பது சமயச் சார்பற்ற - சமய வெறியற்ற கம்பனது உயரிய பண்பை உலகறிய உணர்த்துவதும் எண்ணத்தக்கது.

கோசல நாட்டை அறிமுகப்படுத்தும் வாயிலாகத் தம் காலத்துத் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டியுள்ள கம்பன் கழகம் பற்றிய பாடல் தரும் படிப்பினையாவது: இந்தக் காலத்து இளந்தலைமுறையினர் திரைப்படக் கொட்டகைகளைச் சுற்றிக்கொண் டிருப்பதில் பெரும் பொழுதை-பெறுதற் கரிய நற் பொழுதைக் கொன்னே கழித்துவிடக் கூடாது; முன்னியது முடிக்கும் முருகனே போலமுயற்சி உடையவராய்-என்றும் இளைஞராய்-எழில் மிக்கவராய்-ஏற்றம் பெற்றவராய்த் திகழ வேண்டும்; உயரிய கழகங்கள் கண்டு உயர்ந்தோருடன் பழக வேண் டும்; உடலோம்ப உடற்பயிற்சி செய்ய வேண்டும்; நாடு காக்கப் படைப் பயிற்சியும் பெறவேண்டும்; பயனுள்ள பல் வேறு கலைக் கல்விகளையும் ஆராய்ந்து கற்று ஆக்கப் பணிகள் புரிய வேண்டும்; சமய வெறியின்றிச் சான்றாண் மையுடன் வாழவேண்டும் - என்னும் படிப்பினையாகும்.

ஆம்! இத்தகைய அறிவுரையை அளிப்பதுதான் கம்பன் கழகம்-கம்பன் கண்ட கலைக்கழகம். எனவே. கம்பன் கழகம் இனியது-இன்றியமையாதது. கம்பன் கழகம் வாழ்க!

மேடைப் பேச்சுப் பகுதி

# 3. மக்கள் மனப்பாங்கில் மேடைத் தமிழ்

தமிழை இயல் தமிழ், இசைத் தமிழ், கூத்துத் தமிழ், என மூவகையாக்கி 'முத்தமிழ்' எனக் கூறல்மரபு. மேலும் இன் தமிழ், மென் தமிழ், தீந்தமிழ், தேன் தமிழ், செந்தமிழ், பைந்தமிழ், ஒண்டமிழ், வண்டமிழ், நற்றமிழ், கன்னித் தமிழ், தெய்வத் தமிழ், முதலிய பல்வேறு அடைமொழிகளுடன் தமிழை வழங்கி மகிழ்வதும் உண்டு. இம்மட்டுமா; கொடுந்தமிழ், கொச்சைத் தமிழ், கலப்புத் தமிழ் என்பனவும் உண்டு. இவற்றிடையே 'மேடைத் தமிழ்' என்பது ஒன்றும் இப்போது இடம் பெற்றுள்ளது.

பேச்சுத் தமிழ், இலக்கியத் தமிழ் என்னும் பெயர்களை இங்கே மறந்து விட்டோமே! பேச்சுத் தமிழில் மேடைத் தமிழ் அடங்கும்; 'மேடைப் பேச்சு' என்றே கூறுவார்களே! எழுத்துத் தமிழை இலக்கியத் தமிழில் அடக்கலாம். பேச்சுத் தமிழிலும் பல மாதிரிகள் உண்டு! எழுத்துத் தமிழிலும் பல விதங்கள் உண்டு. பேசுவது போலவே எழுத வேண்டும்-அதாவது-கொச்சையாகப் பேசுவது போலவே எழுதவும் வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்பவர்களையும் இங்கே மறப்பதற் கில்லை. நன்றாக எழுதுவது போலவே நன்றாகப் பேசவும் வேண்டும் என்பவர்கள் இவர்களைக் கவனித்துக் கொள்வார்கள்.

சிறப்பாகப் பேச்சுத் தமிழை எடுத்துக் கொள்ளின், ஒருவரே இடத்திற்கு ஏற்பப் பலவிதமாகப் பேசுவதைக்

கேட்கலாம். வீட்டில் பேசுவது ஒரு நடை; வெளியில் பேசுவது வேறொரு நடை; வகுப்பில் பாடம் கற்பிக்கும் போது பேசுவது மற்றொரு நடை; மேடையில் சொற் பொழிவாற்றும்போது பேசுவது பிறிதொரு நடை; இவ் வாறு ஒருவரே பலவகையாகப் பேசுவது உண்டு; இத்தனை இடங்களிலும் ஒரே நடையில்-அதாவது-ஒரு சிறிது கொச்சை நடையில் பேசுபவரும் உளர்.

பேச்சுத் தமிழில் சிறந்தது மேடைத்தமிழ் ஆகும். பேச்சுத் தமிழ் விளைக்கும் பயன் அளப்பரியது. அது மக்கள் மனப்பாங்கில் ஆழ இடம் பெற்றுப் பயன் விளைக் கிறது.

> "விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
> சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்பது வள்ளுவர் வாய்மொழி. ஞாலமே (உலகமே) விரைந்து செயலாற்றும்படிப் பேசுவது என்றால், பெருங் கூட்டத்திடையே-பெரிய மேடையில் பேசுவது தானே! சோராமல் சொல் வன்மையுடன் மேடையில் பேசுபவனை எதிர்க்கத் துணியாமையும் மக்கள் மனப்பாங்காகும்.

> "சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
> இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்பது வள்ளுவம். மேடைத் தமிழ் கவர்ச்சியாய் இருக்க வேண்டும் என்பது மக்கள் மனப்பான்மை; யாவரும் விரும் பிக் கேட்கும்படி மேடைத் தமிழ் அமைய வேண்டும் என் பதும் மக்கள் மனப்பான்மை. இதைத்தான்;

> "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
> வேட்ப மொழிவதாம் சொல்"

என்னும் குறளால் குறித்துப் போந்தார் வள்ளுவனார்.

மேடைத் தமிழும் மக்கள் மனப்பாங்கும் பற்றிச் சிறப்பாக ஒன்றும் அறுதியிட்டுக் கூற இயலாது. மேடைப் பேச்சாளர் பலரும் பல விதமான தமிழ் நடையில் பேசுகின்றனர். கேட்கும் மக்களின் மனப் பாங்கோ ஒரு விதமாயில்லை. ஒருவர்க்கு ஒரு வகை நடையும் மற்றொருவர்க்கு மற்றொரு வகை நடையும் வேறொருவர்க்கு வேறொரு வகை நடையுமே பிடித்தமா யிருப்பதைக் காண்கிறோம், அனைவருக்கும் பிடித்தமான முறையில் நடுத்தரமான நடையில் பேசுபவர் விரல் விட்டு எண்ணத்தக்க அளவு மிகச் சிலரே யாவர்.

மற்றும், கால் நூற்றாண்டுக்கு முன் பேசப்பட்ட மேடைத் தமிழ் வேறு; இப்போது பேசப்படும் மேடைத் தமிழ் வேறு. அப்பொழுது கேட்டவரின் மனப் பாங்கு வேறு; இப்போது சேட்பவரின் மனப்பாங்கு வேறு. இப்போது பேசப்படும் இலக்கிய மேடைத்தமிழ் வேறு; கதா காலட்சேப மேடைத் தமிழ் வேறு; அரசியல் மேடைத் தமிழ் வேறு; நாடக மேடைத் தமிழோ இன்னும் வேறாகும்.

ஒருவகை மேடைத் தமிழைக் கேட்டுச் சுவைப்பவர்கள், பிறவகை மேடைத் தமிழை 'போர்' அடிப்பதாகக் குறை கூறுகின்றனர். எல்லா வகை மேடைத் தமிழையும் கேட்டுச் சுவைக்கும் 'அப்பாவிகள்'-'ஐயோ பாவங்கள்' ஒரு சிலரே.

இந்தக் காலத்தில் அரசியல் மேடைத்தமிழைக் கேட்டுச் சுவைக்கும் மனப்பாங்கே பெரும் பாலான மக்களிடத்தில் இருப்பதாகத் தெரிகிறது. இப்பெரும்பாலருள்ளும் இளைஞரும் நடுத்தர வயதினருமே பெரும்பாலராவா, கதா காலட்சேபத் தமிழுக்குக் காது கொடுப்பவர்கள்

பெரும்பாலும் பெண்களும் ஆண்களுள் முதியோர்களு மாவர். இலக்கிய மேடைத் தமிழைக் கேட்க வரு பவரின் எண்ணிக்கை விரல் விட்டு எண்ணும் அளவு இன்று மிகவும் சுருங்கிவிட்டது; ஆனால், மேடையில் உரக்கக் கத்திப் பேசி ஆடிப்பாடி ஆர்ப்பாட்டம் செய்யும் இலக்கியப் பேச்சாளர் சிலருக்குக் கூட்டம் சேர்கிறது. இது வேடிக்கை பார்க்கும் கூட்டமாகும்.

காலம் சென்றவர்களாகிய திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகளார், சோம சுந்தர பாரதியார், மறை மலை அடிகளார், திரு.வி. கலியாண சுந்தரனார், ந.மு வேங்கட சாமி நாட்டார், பண்டித மணி மு.கதிரேசச் செட்டியார் போன்றோர் பேசிய மேடைத் தமிழ் அன்று பலராலும் மிகவும் சுவைக்கப்பட்டது. இவர்களைப் போல இலக்கியத் தமிழ் பேசுபவர்கள் இன்று மிகவும் குறைவு. கூட்டம் சேரவேண்டும் எனின், திரையோவியத் (சினிமா) தொடர்புடையவர்களை அழைக்க வேண்டும்.

ஏறக் குறைய இற்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன்பு மேடைத் தமிழ் வானிலே ஒரு புதிய விண்மீன் முளைத்தது. ஐம்பதாண்டு காலம் அது புத்தொளி வீசிப் பொலிந்தது. அறிஞர் சி. என். அண்ணாதுரை யவர்களைத்தான் குறிப் பிடுகிறேன். எதுகை மோனையுடன் கூடிய அடுக்கு மொழித் தமிழில் கவர்ச்சியான கருத்துகளை அமைத்து அணிபெறச் சுவையுடன் சொற்பொழிவாற்றி வந்தார் அவர். அந்தச் சொற் பெருக்கு மழையில் பலதரத்தவரும் அகமகிழ்ந்து குளித்து நனைந்து குளிர்ச்சி எய்தினர். அவர் களுள் இளையோரே பெரும்பாலராவர்.

மேடைத் தமிழ் சார்பான மக்கள் மனப்பாங்கை உரைத்துப் பார்க்க, அறிஞர் அண்ணா துரையவர்கள் பேசி வந்த மேடைத்தமிழை உரைகல்லாகக் கொள்ளலாம்

அவரைப் போலவே அரசியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் பலர் மேடையில் பேசி வந்தனர். ஆனால், அண்ணா துரையவர்களின் பேச்சுக்குப் பெருங்கூட்டம் கூடிற்று. ஐம்பது கல் தொலைவிற்கு அப்பாலிருந்தெல்லாம் மக்கள் திரள் திரளாக வந்து குழுமினர். அண்ணாதுரை யவர்கள் பேசும் வரையும் பெருங் கூட்டம் காத்திருக்கும். அவர் பேசி முடித்ததும் ஏறக் குறைய முக்கால் பங்கினர் எழுந்து போய் விடுவது வழக்கம். அதனால், அவரை, மற்றவர் எல்லாரும் பேசிய பின் இறுதியில் பேசச் செய்து வந்தனர். மேடைத் தமிழ் பற்றிய மக்களின் மனப்பாங் குக்கு இதனை ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

கொள்கையில் இரு வேறு துருவங்களான பெரியார் ஈ.வே. இராமசாமி யவர்கள், திருமுருக. கிருபானந்த வாரியார் அவர்கள் ஆகியோரின் பேச்சுக்கும் பெருங் கூட்டம் கூடும். இருவரது பேச்சுத் தமிழிலும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. இருப்பினும் இருவருக்கும் இரு வேறு வகையான பெருங் கூட்டம் உண்டு. இச்செய்தி மேடைத் தமிழ் பற்றிய மக்களின் மனப்பாங்கு மாறுதல் உடையது என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

ஒவ்வொரு வகையான பேச்சு நடையை ஒவ்வொரு வகையினர் விரும்புகின்றனர் என்பது உண்மைதான் எனினும், பொதுவில், தரங் குறைந்த பேச்சு நடையையே பெரும் பாலார்இன்று விரும்புவதாகத் தெரிகிறது. இதற் குக் காரணம் மக்கள் அல்லர். தரங் குறைந்த நடையில் பேசிப் பேசி அதையே விரும்பிக் கேட்க மக்களைப் பழக்கிவிட்ட பேச்சாளர் சிலரே காரணமாவர்.

தரம் மிக்க தமிழ் நடையில் பேசுவதை விரும்பிக் கேட்க மக்களைத் தூண்டுவதைக் காட்டிலும், தரங்

குறைந்த தமிழ் நடையில் பேசுவதை மக்கள் மிகவும் விரும்பிக் கேட்குமாறு செய்வது மிகவும் எளிது. ஏறுவது கடினம்-இறங்குவது ஒரு வகையில் எளிதல்லவா? பேச்சாளர் சிலர், எப்படியாவது மக்களைச் சிரிக்கச் செய்து வயப்படுத்தித் தம் பிழைப்பை நடத்திக் கொண்டு போவதற்காக, பாமர மக்களின் அளவுக்குத் தாம் கீழ் இறங்கிச் சென்று தாழ்ந்த நடையில் பேசி வருகின்றனர். தம் செயலே சரி என்பதற்கு அன்னார் கூறும் காரணமாவது:- "இன்னும் மக்கள் நம் அளவுக்கு உயரவில்லை; எனவே, நம் நடையையே நாம் பின்பற்றின் நம்மை மக்கள் பின்பற்ற மாட்டார்கள்; ஆதலின் மக்கள் அளவுக்கு இறங்கிச் சென்று நாம் பேசினால்தான், அவர்கட்குப் புரியும்" என்பது அவர்கள் கூறும் காரண் மாகும். சரி, தாழ்ந்து கிடக்கும் மக்கள் உயர்வது தான் எப்போது? அவர்களை யார் எப்போது எப்படி உயர்த்துவது? படிப்படியாகத் தாழ்ந்து கொண்டே போக வேண்டியது தானா? அங்ஙன மெனில் தமிழின் தரம் என்னாவது?-இது எதிர் தரப்பினரின் கேள்வியாகும். இந்தச் சிக்கலுக்குத் தீர்வுதான் யாது?

மேடைத் தமிழ் என்பது, தனியே அமர்ந்து எழுதும் எழுத்தாளனது எழுத்துத் தமிழ் போன்றதன்று. வீட்டிலோ -வெளியிலோ ஒரு சிலரோடு மட்டும் உரையாடும் சுருங்கிய வட்டப் பேச்சும் அன்று. அல்லது, மக்களையே பார்க்காமல், தனி அறையில் அமர்ந்து பேசும் வானொலிப் பேச்சும் அன்று. மாறாக, மக்கள் பன்னூற்றுவரை அல்லது பல்லாயிரவரை எதிரும் விழியுமாக வைத்துக் கொண்டு பேசும் உயிர்ப்புள்ள-உணர்ச்சி மிக்கபேச்சே மேடைத் தமிழ் எனப்படுவது. எழுத்துத் தமிழினும் பேச்சுத் தமிழே உயிர்ப்பு உடையது என்பதை வலியுறுத்த வேண்டியதில்லை. எழுத்துத் தமிழினும்பேச்சுத்தமிழ் விரைந்து மாறக் கூடியது

-புதிய முறையில் வளரக் கூடியது என்பதை அறிஞர்கள் ஒப்புக் கொள்வர். பேச்சுத் தமிழ் ஒருவரை நேரில் பார்ப் பது போன்றது. எழுத்துத் தமிழோ, அவரை அவரது புகைப்படத்தில் காண்பது போன்றது. எனவே, எழுத்துத் தமிழைப் படிக்கும்போது உள்ள மனப் பாங்கிற்கும், பேச்சுத் தமிழைக் கேட்கும் போது உள்ள மனப் பாங் கிற்கும் வேற்றுமை இருப்பது இயல்பு. ஒரே அறிஞரது எழுத்தைப் படிக்கும்போது இருக்கும் மனப் பாங்கினும், அவரது பேச்சைக் கேட்கும்போது இருக்கும் மனப்பாங்கு வேறுபடலாம்.

எனவே, எழுத்துத் தமிழுக்கு-இலக்கியத்தமிழுக்குக் கடைப் பிடிக்கும் அத்தனையளவு இலக்கண விதிமுறை களைப் பேச்சுத் தமிழுக்கும்-அதிலும் மேடைப் பேச்சுத் தமிழுக்கும் பின் பற்றுவதை மக்கள் மனப்பாங்கு அவ்வள வாக விரும்புவதில்லை. மாறாக, வெறுக்கும் மனங்களும்-கசக்கும் உள்ளங்களும் கூட உண்டு. அதனால், மேடைத் தமிழைக் கண்டபடி கொச்சையாக-தரக் குறைவாகப் பேசலாம் என்பது பொருள் இல்லை. உரையாடும் தமிழின் எளிமைக்கும் இலக்கியத் தமிழின் அருமைக்கும் இடைப் பட்டதான ஒரு வகை நடுத்தர நடையை மேடைத் தமி ழில் பின்பற்றுவது வரவேற்கத் தக்கதாகும். இலக்கியத் தமிழ்ச் சுவைஞர்க்கும் இது பிடிக்கலாம்; எளிய தமிழ்நடைச் சுவைஞர்க்கும் இது பிடிக்கலாம். இயற்கையாகப் பிடிக்க வில்லையாயினும், நடுத்தர நடையில் அனைவரது மேடைப் பேச்சும் அமையுமாயின், அனைத்து மக்களும் அந்தத் தமிழ் நடையினைக் கேட்டுச் சுவைக்க நாளடைவில் பழகி விடுவர்.

எனவே, பலதரப்பட்ட மக்கள் நிறைந்த கூட்டத் திலே பேசும் மேடைத் தமிழ், பல்வேறு வகை மனப்பாங்

கிற்கும் இடைப்பட்டதான ஒரு நடுத்தர நடையில் அமைவதே பொருத்த முடைய தாகும் எனவே, மேடைத் தமிழ்ப் பேச்சாளர்கள், பாமர மக்களின் மனப்பாங்கிற்கு ஏற்ப மிகவும் இறங்கி விடாமலும், படிப்பிற் சிறந்தோரின் உயரிய மனப் பாங்கிற்கு ஏற்ப மிகவும் உயர்ந்து விடாமலும் இடைப்பட்ட ஒரு நிலையை மேற்கொள்வாராயின், அது எல்லாவகை மனப்பாங்குகளையும் இணைக்கக் கூடிய ஒருவகைப் பாலம் ஆகும்.

---

புலவர் பகுதி

# 4. புதுவை பு.அ.பெரியசாமிப் பிள்ளை

**பெரியசாமி:**

"புதுச்சேரி என்றால் என்னவோ என்று எண்ணிவிட வேண்டா; இங்கே ஒரு சாமி இருக்கிறது; சாமி என்றால் சாமியிலும் சாமி பெரிய சாமி"-

இந்தப் புகழுரை, 'புதுவை மகா வித்துவான்' எனப் படும் பெரும்புலவர் பு.அ.பெரிய சாமிப் பிள்ளை யவர் களைப்பற்றி, அன்று மாபெருங்கல்விக் கடலாய் விளங்கிய திருப் பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகளார் புதுவைக்கு எழுந்தருளியபோது மொழிந்தது.

**புதுவைக்குப் பெருமை**

'சான்றோர் பலர் யான் வாழும் ஊரே' என்று புலவர் பிசிராந்தையாரும், 'எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்று ஔவையாரும் மொழிந்துள்ளபடி, இடத்தினால் மக்களுக்குப் பெருமை யில்லை. பிறந்து வாழும் உயர்ந்த மக்களாலேயே இடத்திற் குப் பெருமை ஏற்படும். இந்தப் பொது உண்மைக்குப் புதுச் சேரியும் உட்பட்டதே.

புதுச்சேரிக்கு நிலையான பெருமையளித்தவர்களுள் தலையானவர்கள் பத்தொன்பது-இருபதாம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த புலவர்கள் ஆவர். புதிய புதுவை உருவான பத்தொன்பதாம் நூற்றாண்டளவில், புதுவை வளர்த்த புலவர்களுள், காலத்தாலும் தகுதியாலும் ஒருசேர முதன்மையானவர் பு.அ.பெரியசாமிப் பிள்ளையே. பெரிய புரட்சிக்காரர்களான சுப்பிரமணிய பாரதியார், வ.வெ.சு. ஐயர் முதலானவர்கள், பெரியசாமிப்பிள்ளை தலைமை தாங்கி நடத்திய கலைமகள் கழகத்தின் உறுப் பினர்கள். பாவேந்தர் பாரதிதாசனோ பெரியசாமிப்பிள்ளை யின் மாணாக்கர். இன்ன பிற செய்திகளைக் கொண்டு பெரியசாமிப் பிள்ளையை நம் உள்ளத்திரையில் ஓவியப் படுத்திக் கொள்ளலாம்.

**தோற்றம்:**

பெரியசாமிப் பிள்ளை புதுவை நகருக்கு மேற்கே ஒரு கல் தொலைவிலுள்ள குயப்பாளையம் என்னும் ஊரில் கி.பி. 1843 ஆம் ஆண்டு சனவரி 14 ஆம் நாள் பிறந்தார். தந்தையார் அப்பாசாமிப்பிள்ளை; தாயார் பூரணி அம்மா.

**கல்வி:**

இவர் இளமையில், புதுவை அம்பலத்தாடையார் மடத் தின் தலைவராய்ச் சின்னாள் விளங்கிய நாகலிங்க அடிகளாரிடம் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை நன்கு தெளிவுறக்கற்றார். தம் ஓயாத உறுதியான சொந்த

உழைப்பினால் மேன்மேலும் தமிழ்ப் புலமையை வளர்த்து வளமுடைய தாக்கிக் கொண்டார். இருபது வயதிலேயே எப்பொருள் பற்றியும் எடுத்த எடுப்பில் செய்யுள் இயற்றும் திறன் பெற்றார். நாளடைவில் சிறந்த நூற்கள் பல இயற்றிப் பீடும் பெருமையும் உற்றார். இவரது பெரும் புலமைத் திறமறிந்த பெரியோர் பலர் இவரது நட்பை நாடிப் பெற்றுப் பலபடப் பாராட்டலாயினர்.

**அவைக்களப் புலவர்:**

அந்த நாளில் புதுவையில் 'ஹூாய் ஞானப்பிரகாச முதலியார்' என்னும் மாபெருஞ் செல்வர், அருங்கலை ஆர்வலராயும் வரையாது வழங்கும் வள்ளலாயும் திகழ்ந்தார் அவர்தம் அவைக்களப் புலவராய்ப் பிள்ளையவர்கள் வீற்றிருந்து பெருமை செய்தார். முதலியாரும் அவரிடம் வரும் அன்பர்களும் புலவரின் நாநலமும் பாநலமும் பெற்றுத் துய்த்து மகிழ்ந்தனர்.

**மாணாக்கர்கள்:**

பெரும்புலவர் பிள்ளையவர்களிடம் கல்வி பயின்றோர் கணக்கிலர். அவர்களுள். பங்காரு பத்தர், இராமாநுசச் செட்டியார், துரைசாமி முதலியார், வேங்கடாசல நாய்க்கர் கனக. சுப்புரத்தினம் என்னும் பாரதிதாசன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பிள்ளையவர்களின் மாணாக்கர் ஒவ்வொருவரும் பெரும் புலவராய்த் திகழ்ந்து பாக்கள் பலவும் நூல்கள் பலவும் இயற்றியும், இதழ்கள் நடத்தியும், கழகங்கள் கண்டும் சிறந்திருந்தமையைப் பலரும் அறிவர். 'தாய் பத்தடி தாண்டினால், குட்டி பதினாறடி தாண்டும்' என்னும் பழமொழியின் உண்மையைப் பாரதிதாசன் மெய்ப்பித்த வரலாறு நாடறிந்த செய்தி.

**கற்பிக்கும் கலை மன்னர்:**

புலவர் பெரியசாமி கற்பிக்கும் கலையில் பெருமன்னராய்த் திகழ்ந்ததாகப் பாராட்டப்படுகிறார். வாய்திறந்து ஒருசில சொற்கள் சொல்வதற்கே பணம் எதிர்பார்க்கும் இவ்வுலகில், இவர் பணமின்றியே பல மணி நேரம் அன்புடனும் இன்முகத்துடனும் பாடம் கற்பித்தாராம். மாணாக்கராக இளைத்துக் களைத்தால்தான் பாடம் நிற்குமே தவிர, புலவர் தம் களைப்பினிமித்தம் பாடத்தை நிறுத்துவ தில்லையாம். வைகறை நான்கு மணிக்கேகூடச் சிலருக்குப் பாடம் சொல்லிய துண்டாம். மாணாக்கர்கள் திண்ணையில் அமர்ந்து பாடம் கேட்க, தாம் எள் துழவிக் கொண்டும்-நெல் துழவிக் கொண்டுங்கூடப் பாடம் சொல்லு வாராம். எள்ளும் நெல்லும் துழவும் போதும் பாடத்தை நிறுத்தாத ஆர்வத்தை - அக்கறையை என்னென்று புகழ்வது!

**பாராட்டு:**

புலவர் அவர்கள் பாடங் 'கற்பித்த சிறப்பினைப் பற்றித் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகளார் பின் வருமாறு பாராட்டினார்களாம்:

"இந்நல்லாசிரியர் தம்மையடுத்து வாசிக்க வருபவர் பால் பொருள் ஒரு காசும் பெறுவதில்லை; அவர்கள் தம்மைப்போல் படித்துச் சிறந்த புலவர்களாகவேண்டும் என்ற அவ்வொரு விருப்பமே பொருளாகக் கொண்டதாலேயே இங்குப் பலர் பாட்டெழுதும் பாவலராகக் காணப் படுகின்றனர்" -இது ஞானியாரின் பாராட்டு.

**புலமைப் பரப்பு:**

ஞானியார் அடிகளின் பாராட்டேயன்றி, பல்வேறு வெளியூர்களில் வாழ்ந்த இருபதின்மருக்கும் மேற்பட்ட

புலவர்கள் பலர், பிள்ளையவர்களின் பெரும் புலமையைப் பாராட்டிப் பாடல்கள் பல இயற்றியுள்ளனர். உள்ளூர்ப் புலவர் பெருமக்களின் பாராட்டுப் பாடல்களுக்கோ அளவேயில்லை. இதைக் கொண்டு, பெரியசாமிப் பிள்ளையின் பெரும்புலமையின் ஆழமும் அகலமும் உயரமும் புலப்படும். மகா வித்துவான் பெரியசாமிப்பிள்ளையின் மாணாக்கருள் ஒருவர்' எனத் தம் பெயருக்கு முன்னால் பொறித்துக் கொள்வதை அன்று பலர் பெருமையாகக் கருதினார்கள் எனில், பிள்ளையவர்தம் பெரும் புலமையின் பரப்பளவு நன்கு புலனாகுமே!

**புலமைப் பேராண்மை:**

பெரியசாமி யவர்கள் 'புலமைப் பேராண்மை' உடையவராக விளங்கினார். பிற ,புலவர்களின் பாடல்களில்-படைப்புக்களில் குற்றங் கண்டவழி கடிந்துரைத்தார். தம்முடன் மோதியவருக்குத் தக்க பதிலடி தந்தார். ஒருமுறை இவர் சென்னை சென்றிருந்த போது, அங்கே ஒரு குறும்பர், 'இவர்தான் மகா வித்துவானா? இவருக்கு இலக்கணத்தில் ஒரு மாத்திரையின் அளவு தெரியுமா? என்று கிண்டல் செய்தாராம். அதற்குப் பிள்ளையவர்கள், 'ஒரு மாத்திரை மட்டுமன்று; கால் மாத்திரை, அரை மாத்திரை, முக்கால் மாத்திரை ஆகியவாற்றின் அளவும் தெரியும்' எனக் கூறி அவற்றை நன்கு விளக்கி அவரை வாயடைக்கச் செய்தாராம்.

**பேராண்மையிடையே ஊராண்மை:**

புலமைப் பேராண்மையுடைய பிள்ளையவர்கள், பிற புலவர்கள் தளர்ச்சியுற்றக்கால் அவர்கட்கு ஊராண்மை புரியும் அதாவது உதவி செய்யும் பேரிரக்கமும் உடையவராக விளங்கினார். ஒருகால், புதுவைக் காசுக்கடைப்

பகுதியில் வெளியூர்ப் புலவர் ஒருவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அதுகாலை, அவர் பிழைபடக் கூறிய ஒரு கருத்தைப் பெரியசாமிப் பிள்ளையின் மாணாக்கப் புலவர் ஒருவர் மறுத்தார். புலவர் இருவர்க்குமிடையே பெரிய சொற்போர் மூண்டது. உள்ளூர்ப் புலவர் வெளியூர்ப் புலவர்மேல் 'அணுகுண்டுகளை' அள்ளி அள்ளி வீசினார். வெளியூர்ப் புலவர் தாக்குப் பிடிக்கமுடியாமல் திக்குமுக் காடினார். அவ்வேளை, பிள்ளையவர்கள் வந்து, 'வெளியூராரை நாம் மதித்துப் போற்றவேண்டும்' என்று தம் மாணாக்கரிடம் கூறி அமரவைத்து, வெளியூர்ப் புலவர் தொடர்ந்து சொற்பொழி வாற்ற வழிசெய்து, 'இறுதிவரை உடன் இருந்து இனிதே கூட்டத்தை முடித்துக் கொடுத்து விட்டுச் சென்றார்களாம்.

''பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு''

என்பது வள்ளுவர் வாய்மொழியாயிற்றே!

**அகமும் முகமும்:**

கீழ்ப்பாய்ச்சும், நெடுஞ்சட்டையும், வலப்புறத்தோளுக்கும் இடப்புற இடுப்புக்குமாகக் குறுக்குக் கச்சைபோல் போடப்பட்ட மேலாடையும், அழகிய தலைப்பாகையும் பெரிய மீசையும் மாநிறமும் நடுத்தரமான உயரமும் பருமனும் கொண்டிருந்த பிள்ளையவர்கள், அன்பும் அமைதியும்-கனிவும் பணிவும் கொண்ட தம் அகத்தோற்றத்தை முகத்தோற்றத்தில் வெளிப்படுத்தினார்.

**நூல்கள்**

இவ்வாறு பெறலரு நற்பண்புகளுடன் பெருந்தமிழ்ப் புலமை ஓச்சிய புலவர் ஏறாகிய பெரியசாமியவர்கள்

இயற்றிய நூல்கள் பல; அவை: கந்தர் நிரோட்டக அந்தாதி, சிவ சன்னிதான முறையீடு, சித்தி விநாயகர் பதிகம், சுப்பிரமணியர் நிரோட்டக யமகவெண்பா, புதுவைக் கலம்பகம், புதுவை வெண்பா, யமக மயிலத் தந்தாதி, மயிலக் கலம்பகம், மயிலைச் சிலேடை வெண்பா, இராமாயணச் சங்கிரகம், அப்பூதி நாயனார் சரித்திரப்பா, புரூரவச் சக்கரவர்த்தி வாசகப்பா, சூரபத்மன் சரித்திரப்பா, ஞானப்பிரகாசர் புகழ்ப் பாமாலை, இயற்றமிழ்ப் பாமாலை, நலங்குப்பாடல்கள், திருமணப்பாடல்கள் முதலியனவாகும். உதடு குவித்து ஒலிக்கும் உ,ஊ,ஒ,ஓ முதலிய எழுத்துக்கள் வராமல் பாடுவது நிரோட்டகமாகும். நிரோட்டகம், யமகம், சிலேடை முதலியன எழுதுதல் மிகவும் அருமையாகும். இவையே யன்றித் தனிப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

**முத்தமிழ்ப் பாவலர்:**

பிள்ளையவர்கள் இயற்றமிழேயன்றி, இசைத்தமிழ்-நாடகத் தமிழிலும் வல்லுநராய்க் காணப்படுகிறார். இராமாயணச் சங்கிரகப் பாடலை ஆரபிஇராகம்-ஆதிதாளம் அமைத்துப் பாட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். அப்பூதி நாயனார் சரித்திரப்பா, சூரபத்மன் சரித்திரப்பா, புரூரவச் சக்கரவர்த்தி வாசகப்பா ஆகியவை இசையுடன் பாடி நடித்தற்குரிய இசை நாடகங்களாகும். புதுவையில் இவை அன்று நடிக்கப்பட்டன. சூரபத்மன் சரித்திரப்பா, சாரம் முருகன் கோயிலில் கந்தர்சட்டி விழாவின்போது இன்றும் நடிக்கப்படுகிறது. அச்சாகியுள்ள புரூரவச் சக்கரவர்த்தி வாசகப்பாவின் முன்னுரையில், அந்நாடக நூல் நடிப்புடன் அரங்கேற்றப்பட்டதாக ஆசிரியரே தெரிவித்துள்ளார். அப்பூதி நாயனார் சரித்திரப்பா, உரையாடலும் பல்வேறு வண்ணப் பாக்களும் கொண்டது. புரூரவச் சக்கர

வர்த்தி வாசகப்பாவோ, (வசன) உரையாடலே இன்றி, முற்றிலும் இசைப்பாடல்கள் மட்டுமே கொண்ட இசை நாடகம் ஆகும். இந்நூல், சிறியனவும் பெரியனவுமாக 1172 இசைப்பாடல்கள் கொண்டதொரு பெரிய நூலாகும்.. இசை நாடகம் அன்று 'வாசகப்பா' என அழைக்கப் பட்டது போலும்.

**ஒரு சோறு பதம்**

பெரியசாமிப்புலவரின் இலக்கியநயத்தின் மாதிரிக்காக மயிலக் கலம்பகம் என்னும் நூலிலிருந்து 'மறம்' என்னும் தலைப்புடைய ஒரு பாடல் சோற்றைப் பதம் பார்ப் போமே. மறவர் குலத்தில் பெண் கேட்டுவர அரசன் அனுப்பிய தூதனிடம், அரசனுக்குப் பெண் கொடுக்க முடியாதென மறவர்கள் மறுத்துரைப்பதாக உள்ள பாடலே 'மறம்' என்பது. இனிப் பாடல் வருமாறு:

"மட்டில்லா மகிமையுடன் நாளும் ஓங்கு
மயிலவரை வரைவாழும் மறவர் நாங்கள்
சட்டியிலே கொக்கவித்த மறவனாம்வேள்
தனக்கெங்கள் குலத்துதித்த மின்னை ஈயாது
இட்டமுடன் வளர்த்த பொன்னைக் கொடுப்பதற்கே
எவ்வளவோ போர்செய்தோம் இறைவன் தூதா
வெட்டிமிளிர் பூவரசை வேலால் வைப்போம்
விளம்பு பெண்ணை வினவியஉன் வேந்தனுக்கே".

அதாவது, 'சட்டியிலே கொக்கு அவித்த மறவனாகிய முருகனுக்கேகூட, நாங்கள் பெற்ற பெண்ணைக் கொடா மல், வளர்ப்புப் பெண்ணாகிய வள்ளியையே, அதிலும் பெரிய போராட்டத்திற்கிடையே கொடுத்தோம். எனவே, எங்கள் பெண்ணைக் கேட்டால், நாடாளும் அரசரை வேலால் வெட்டி வீழ்த்துவோம்'-என்பது பாடலின்

கருத்து. இப்பாடலில் பொருள் நயத்துடன், இருபொருள் தரும் சொல் நயங்களும் உள்ளன. புலவர் முருகனைச் 'சட்டியிலே கொக்கு அவித்த மறவன்' எனக் குறிப்பிட்டுள்ளார். 'சட்டி' என்றால் கந்தர் சஷ்டி நாள்; 'கொக்கு' என்றால் மாமரம். சூரபத்மன் மாமரமாய்க் கடலுள் மறைந்துநின்றான். அவனை முருகன் சஷ்டியன்று கொன்றார். இதனையே 'சட்டியிலே கொக்கு அவித்த மறவன்' என நயப்படுத்திக் கூறியுள்ளார் புலவர். மேலும் இதில், 'சட்டியிலே கொக்கு ஆக்கி உண்ணும் வேடன்' என்னும் குறிப்பும் படுகிறது. மற்றும், பாடலின் இறுதியில் உள்ள

'வெட்டிமிளிர் பூவரசை வேலால் வைப்போம்
விளம்பு பெண்ணை வினவியஉன் வேந்தனுக்கே''.

என்னும் தொடரில் பொதிந்துள்ள நயம் சுவைத்துப் பாராட்டத்தக்கது. பெண்ணை என்றால் பனைமரம்- 'பெண்ணைக் கேட்டால், அரசை வேலால் வெட்டி வீழ்த்துவோம்' என்னும் வெளிப்படைப் பொருள் இருக்க, மற்றொரு மறை பொருளும் உள்ளே பொதிந்து கிடக்கிறது. அதாவது, வெட்டிவேர், பூவரசுமரம், வேலமரம், ஆலமரம், பனைமரம் ஆகியவற்றின் பெயர்கள் மறைந்துள்ளன. பெண்ணை அதாவது பனைமரம் கேட்டவர்க்கு வெட்டிவேர், பூவரசுமரம், வேலமரம், ஆலமரம் ஆகியவற்றை முன்வைப்போம் என்னும் உட்பொருள் மறைந்து நின்று மகிழ்வுறுத்துகிறது.

**பனிக்காலக் காட்சி:**

புலவர் மற்றொரு பாடலில் பின்வருமாறு பனிக்காலத்தைச் சுவைபெறப் புனைந்துரைத்துள்ளார். பாடல்இதோ-

''வம்புவிடு மாம்பூக்கள் கருகுங் காலம்
வரகுமுதல் புன்பயிர்கள் வளருங் காலம்

கம்பளத்தை வாலிபரும் களிக்குங் காலம்
கனல் கலத்தை விருத்தரெலாம் கைக்கொள் காலம்
தம்பதிதோள் மின்னார்கள் தழுவுங் காலம்
தழல்புகைபோல் மூடும் இந்தப் பனித்தண்காலம்
நம்பினருக்கு அருள் முருகர் மயில வெற்பில்
நாயகரை நான் விடுத்து நலியுங் காலம்''

இந்தப் பனிக்காலக் காட்சிப் பாடல் மிக்க சுவையின்பம் ஈந்து, புலவரின் சிறப்பிற்குச் சான்று பகர்கிறது.

**மறைவு:**

இவ்வாறு தனிப்பெருஞ்சிறப்புடன் புதுவையில் புலமை ஆட்சி நடத்திய பெரியசாமிப் பிள்ளை, 1920 ஆம் ஆண்டு சனவரி 24 ஆம் நாள் இறுதி யெய்தினார். அவரது பிரி வாற்றாது மாணவர் குழாமும் அறிஞர் குழாமும் பாடிய இரங்கற்பாக்கள் கணக்கில. அப்பாக்கள் ஒரு நூல் வடிவில் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றுள், பிள்ளையவர்களின் மாணாக்கராய பாவேந்தர் பாரதிதாசனாரது ஒரு பாட லைக் காணலாம்.

(பதினான்கு சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)
பூமியை மறந்துவிட் டீரே எமக்கிங்கோர்
போக்கிலா தாக்கினீரெம்
புன்மதி விளக்குமதி காரத்தை நீரிங்குப்
பொற்கதிர்க் கீந்தி ரேனும்
யாமதைப் புதுமையாய்க் கொள்வதுண் டோதினம்
எங்கள்பாற் காட்டு மன்பை
ஈன்றதாய்க் கீந்துசென் றீரெனினு மன்னதால்
இதயத்துள் அமுத முறுமோ
தாமதமி லாதுகவி பாடிடுந் தன்மையைச்
சமுத்திரற் கீந்தி ரதுதான்

சாற்றுவது மற்றொர்முறை சாற்றுமோ கீர்த்தியைச்
சாரிமய மலையில் வைத்துச்
சாமியும் பொறுமையைப் பூமிக்க ளித்தின்சொல்
சந்தக் குயிற்க ணிட்டுச்
சகக்கடை வரைப்பெரிய சாமியாம் பெயர்நிறுவித்
தாணுவடி வெய்தி னீரே".

இப்பாடல், அன்று மிகவும் இளைஞராயிருந்த பாரதிதாசனது புலமையின் கற்பனை வளத்தை அறிவிப்பதோடு, பெரியசாமிப் பிள்ளையின் மாபெரும் புலமைச் சிறப்பையும் உயர்பண்பையும் ஒருசேர அறிவிக்கிறது. 'விளையும் பயிர் முளையிலேயே தெரியுமே!

**கம்பன் வீட்டுக் கட்டுத்தறி:**

பெரியசாமிப் பிள்ளையோடு அவர் குடும்பத்தில் புலமையின் ஊற்று அடைபட்டுவிடவில்லை. அவர்தம் ஒரே மைந்தராகிய வைத்தியலிங்கம் பிள்ளையும் சிறந்த புலவராய் விளங்கினார். இவர் பல பதிகங்களும் தனிப் பாக்களும் பாடியுள்ளார். 'கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடுமாமே!'

**தமிழ்மணம்**

யான் எழுதியுள்ள 'தமிழ் அகராதிக்கலை' என்னும் நூலுக்கு வேண்டிய குறிப்புகளைத் திரட்டிக் கொண்டிருந்தபோது, உரிச் சொல் நிகண்டு என்னும் நூலின் புதுவைப் பதிப்பு எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. இறுதியில் எதிர்பாரா வகையில் பெரியசாமிப் பிள்ளையின் பேரர் வீட்டிலிருந்து அது கிடைத்தது. பிள்ளைக்கு ஒரு வகையில் பேரன் முறையுள்ள திரு சோமசுந்தர ஆசிரியர் அதைத் தேடித் தந்தார். அக்குடும்பத்தில் இன்னும் தமிழ் மணம் வீசிக்கொண்டிருக்கிறது.

நீதிமன்றப் பகுதி

# 5. நாலடியார் ஆசிரியர் நக்கீரரா?

## பெயர்க் காரணம்

நான்கு அடிகள் கொண்ட வெண்பாக்களால் ஆன நூல் ஆதலின், இந்நூல் 'நாலடியார்' எனப்பட்டது. இதில் நானூறு பாக்கள் உள்ளதால், இதனை நாலடி நானூறு' என்றும் வழங்குவர். தமிழரின் மறைநூல் என்ற பொருளில் இது 'வேளாண் வேதம்' என்றும் வழங்கப்படுகிறது. 'பதினெண் கீழ்க்கணக்கு' எனப்படும் சங்க காலம் சார்ந்த பதினெட்டு நூல்களுள் பெரும்பாலானவை நாலடி வெண் பாக்களால் ஆனவையாயிருப்பினும், இந்நூல் மட்டும் நாலடியார் என வழங்கப்படுவதிலிருந்து இதன் தொன்மை புலப்படுகிறது. இந்நூலுக்கு முதலில் நாலடியார் என்னும் பெயர் வைத்து விட்டதால், பின்வந்த நாலடிப் பாடல் நூல்கட்கு இப்பெயர் வைக்க முடியாமற் போயிற்று.

## நூல் தொகுப்பு வரலாறு

மதுரையில் எண்ணாயிரம் சமண முனிவர்கள் ஆளுக்கு ஒரு பாடலாக எழுதி வைத்துவிட்டுப்போன எண்ணாயிரம் பனையோலைச் சுவடிகளை, என்னவோ குப்பை என்று எண்ணிப் பாண்டிய மன்னன் வைகையாற்றில் எறியச் செய்ய, அவற்றுள் நானூறு பாடல்கள் மட்டும் எதிர்த்து நீந்திக் கரையேறி வந்ததாகவும், அவற்றின் அருமை யுணர்ந்து அவற்றைத் தொகுத்து 'நாலடியார்' என்னும் பெயருடைய நூலாக்கியதாகவும் கதை கூறப்படுகிறது. ஆமாம்-கதையேதான் இது.

இந்தக் கதையிலிருந்து நாம் அறியக்கூடிய கருத்தா வது:- 'திருக்குறள் திருவள்ளுவர் என்னும் ஒருவராலே இயற்றப்பட்டது போல், நாலடியார் ஒருவராலேயே இயற்றப்படவில்லை; பலர் இயற்றிய பாடல்களின் தொகுப்பே நாலடியார்' என்பதாகும். நாலடியார், பதும னார் என்னும் புலவரால் தொகுக்கப்பட்டதாகச் சொல் லப் படுகிறது. எனவே, நாலடியார் ஒரு தொகைநூல் என்பது போதரும்.

**புதுக் கொள்கை:**

பலர் பாடல்களின் தொகுப்பு நாலடியார் என்னும் கருத்து இதுகாறும் கூறப்பட்டு வந்தது. இப்போது ஒரு புதுக் கருத்து புகலப்படுகிறது. அதாவது,-நர்லடியார் பலர் பாடல்களின் தொகுப்பு அன்று; நக்கீரர் என்னும் ஒரே புலவரால் இயற்றப்பெற்ற நூலே நாலடியர்;இந்த உண்மை யாப்பருங்கல விருத்தி உரையிலிருந்து அறியப் பட்டுள்ளது-என்பதே அந்தப் புதுக்கருத்தாகும்.

யாப்பருங்கல விருத்தியுரையால் கிடைக்கும் குறிப்பு தவறாகவும் இருக்கலாம். பொதுவாக நாலடியாரின் அமைப்பினை நோக்குங்கால், நானூறு பாடல்களும் ஒரு வராலேயே பாடப்பட்டவையாகத் தோன்ற வில்லை. சில கருத்துகள் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளன. சில கருத்துகள் ஒன்றுக்கொன்று முரணாயுள்ளன. திருக்குற ளில் ஒவ்வொரு தலைப்பையும் சேர்ந்த பத்துப் பத்துப் பாடல்களும் அந்தந்தத் தலைப்போடு, பொருந்தியுள்ளன. ஆனால், நாலடியார் முழுவதையும் கூர்ந்து நோக்கின், சில பாடல்கள் தலைப்போடு பொருந்தாதிருப்பதை அறிய லாம். இதிலிருந்து தெரிதலாவது;-நானூறு உதிரிப் பாடல்களைப் பத்துப் பத்துப் பாடல்கள் வீதம் எப்படி

யாவது நாற்பது தலைப்புகளில் அடக்கிவிட வேண்டும் என ஒருவர் திட்டமிட்டுச் செய்து தொகுத்தமைத்துள்ளார்-என்பதுதான். அறிஞர்கள் மிகவும் ஆராய வேண்டிய செய்தி இது.

ஏன், யாப்பருங்கல விருத்தியுரைப் பகுதியையே சிறிது ஆராய்ந்து பார்ப்போமே! யாப்பருங்கல விருத்தியுரையின் பவானந்தம் பிள்ளை பதிப்பில், செய்யுளியலிலுள்ள 'செப்பல் இசையன வெண்பா' என்னும் (4ஆம்) நூற்பாவின் உரையிடையே, சில வெண்பாக்கள் எடுத்துக் காட்டுகளாகத் தரப்பட்டுள்ளன. இறுதி வெண்பா 'அரக் காம்பல் நாறும் வாய்' என்னும் நாலடியார்ப் (396) பாடலாகும். இதன் கீழே பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:-

'இன்னவை பிறவும் நக்கீரர் நாலடி நானூற்றில் வண்ணத்தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச் செப்பலோசை, பிறவும் அன்ன'-

இந்தப் பகுதியில், 'நக்கீரர் நாலடி நானூறு' என்றிருப்பதைக் கொண்டு, நானூறு பாடல் கொண்ட நாலடியாரை நக்கீரர் இயற்றினார் என்று ஒருசாரார் கூறுகின்றனர். இந்த உரைப் பகுதியை ஊன்றி நோக்கவேண்டும். 'இன்னவை பிறவும்' என்னும் தொடர் மேலே உள்ள நாலடியார்ப் பாடல் முதலியவற்றைக் குறிக்கிறதெனவும்' 'நக்கீரர் நாலடி நானூற்றில் வண்ணத்தால் வருவனவும், என்னும் தொடர், மேலேயுள்ள நாலடியார்ப் பாடல் முதலியவற்றைக் குறிக்காமல், வேறு ஏதோ ஒரு நூற் பாடலைக் குறிக்கிறதெனவும் உய்த்துணரலாம்.

இந்த உரைப் பகுதியே கூட, தமிழக அரசின் கீழைக் கலை ஓலைச் சுவடி நூலக நிறுவனத்தால் (Government

Orient Manuscripts Library, Madras) 1960 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள பதிப்பில், 'நக்கீரர்' என்னும் பெயர் இன்றி,

"இன்னவை பிறவும் நாலடி நானூற்றில் வண்ணத் தால் வருவனவும் எல்லாம் தூங்கிசைச் செப்பலோசை; பிறவும் அன்ன"-

என்றே உள்ளது. எனவே, சுவடிக்குச் சுவடி பாட வேறு பாடு உள்ளமை புலப்படலாம். யாப்பிலக்கணம் பற்றி வெண்பாவால் இயற்றப்பெற்ற 'நக்கீரர் நாலடி நாற் பது' என்னும் நூல் ஒன்று யாப்பருங்கல விருத்தி யுரையால் நன்கு அறியப்பட்டுள்ளது. அந்த நினைவை வைத்துக் கொண்டு, சுவடி பெயர்த்து எழுதியவர், நாலடி நானூறு என்பதையும் 'நக்கீரர் நாலடி நானூறு' என எழுதிவிட்டிருப்பாரா? ஒருவேளை, சமணமுனிவர் எழுதிய நாலடியாரினும்வேறானதாய் நக்கீரரால் 'நாலடி நானூறு' என்னும் பெயரில் வேறொரு நூல் எழுதப்பட்டிருக்கக் கூடுமா? சிலர் இவ்வாறு கூறியும் உள்ளனர். அதாவது-நானூறு வெண்பாக்களால் நக்கீரர் யாப்பிலக்கண நூல் ஒன்று இயற்றியுள்ளார்-என்பதாகக் கூறுகின்றனர். இது உண்மையாயிருக்க முடியுமா? 'நாலடி நாற்பது' என்னும் பெயரில் நாற்பது வெண்பாக்களால் நக்கீரர் இயற்றி யுள்ள யாப்பிலக்கண நூலை, 'நாலடி நானூறு' எனத்திரி பாக உணர்ந்து கொண்டு இவ்வாறு கூறுகின்றனரா? மேலும், 'நக்கீரர் அடிநூல்' என்னும் பெயரில் யாப்பிலக் கண நூல் ஒன்று இருப்பதாகத் தொல்காப்பிய உரை களிலிருந்து அறியப்படுகிறது; இந்நூலைச் சேர்ந்த 'ஐஞ்சீ ரடுக்கலும்' என்னும் நூற்பா தொல்காப்பிய உரைகளில் எடுத்தாளப்பட்டுள்ளது-என்னும் செய்தியும் ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது.

மற்றும், நக்கீரர் ஒருவரா-பலரா என்ற சிக்கலும் ஈண்டு எழுகிறது. எட்டுத்தொகை-பத்துப்பாட்டில் பாடல்கள் எழுதியுள்ள நக்கீரரும் நாலடியார் இயற்றிய தாகக் கூறப்படும் நக்கீரரும் நாலடி நாற்பது என்னும் யாப்பிலக்கணநூல் எழுதியதாகக் கூறப்படும் நக்கீரரும், நாலடி நானூறு என்னும் யாப்பிலக்கணநூல் எழுதியதாகச் சொல்லப்படும் நக்கீரரும், நக்கீரர் அடிநூல் என்னும் யாப் பிலக்கணம் எழுதிய நக்கீரரும் ஒருவரா-அல்லது- வெவ்வே றானவரா?

மற்றும், நாலடியாரை நக்கீரர் இயற்றியதாகக் கூறு பவர்கள், 'இந்த நக்கீரர் பத்துப் பாட்டுள் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படையை இயற்றிய நக்கீரர் அல்லர்; இவர் ஒரு சமண முனிவர் என்று கூறுகின்றனர். நாலடியார் இயற்றிய நக்கீரர் ஒரு சமண முனிவர் ஆதலின் நாலடியாரைச் சமண முனிவர் இயற்றியதாகக் கூறி வந் தனர்; பின்னர்ச் சமணமுனிவர்கள் இயற்றியதாகக் கூறத் தொடங்கிவிட்டனர்-என்பதாக இக்கொள்கையினர் கருது கின்றனர்.

எது சரி? எது தவறு? ஒரே குழப்பமாயுள்ளது. இங்கே இன்னொரு கருத்தும் கூறுதற்கு இடம் உண்டு. யாப்பருங்கலம்-உறுப்பியலில் உள்ள, 'இரண்டாம் எழுத்து ஒன்றுவதே எதுகை' என்னும் (4ஆம்) நூற்பாவின் விருத்தி யுரையிடையே,

(இன்னிசை வெண்பா)

"ஊசி யறுகை யுறுமுத்தம் கோப்பனபோல்
மாசி யுகுபனிநீர் வந்துறைப்ப-மூசும்
முலைக் கோடு புல்லுதற்கொன் றில்லாதான் காண்மோ
விறக்கோடு கொண்டெரிக்கின் றேன்"-

இந் நற்கீரர் வாக்கினுள் கடையிரண்டையும் மூன்றாம் எழுத்து ஒன்றி வந்தவாறு கண்டு கொள்க''-

என்னும் உரைப் பகுதி உள்ளது. மேலே உள்ள பாட்டு 'நக்கீரர் வாக்கு' எனக் கூறப்பட்டுள்ளது. இந்தவெண்பா அகப்பொருள் பற்றியதாகும். இவ்வாறு நக்கீரர் நானூறு வெண்பாக்கள் பாடி 'நாலடி நானூறு' என்னும் பெயரில் ஒருநூல் படைத்திருக்கலாம். இந்த நக்கீரர் நாலடி நானூறு என்னும் நூலை யாப்பருங்கல விருத்தியுரை சுட்டியிருக்கலாம்' அங்ஙனமாயின், இந்த நாலடி நானூறு வேறு என்பதும் உய்த்துணரப்படலாம்.

நடுநிலையுடன் பல கோணங்களிலும் நின்றுஆராய்ந்து நோக்குங்கால், நாலடியார் பலர் பாடிய பாடல்களின் தொகுப்புநூல் என்றே தோன்றுகிறது. இது நீதியான தீர்ப்பு.

**எழுத்தாளர் பகுதி**

# 6. திரு.வி.க.வின் உரைநடை அழகு

அழகு என்பது பார்த்து மகிழக் கூடியது என்றே பலரும் கருதுவர். மக்களின் நடையழகைப் பார்த்து மகிழ் வதுண்டு. பெண்டிரின் நடையை 'அன்ன நடை' என்றும் அவர்தம் நடையின் சாயலை 'மயிலின் சாயல்' என்றும் புலவர்கள் புனைந்து கூறுவர். ஆடவரின் பெருமித நடையை 'ஏறுபோல் பீடு நடை' என்று வள்ளுவனார் குறிப்பிட்டுள்ளார். அதாவது, சிங்க நடை போன்ற பெரு

மித நடையாம். இந்நிலையில், உரைநடை அழகு என்றால் என்ன? உரைநடைக்கு அழகு அளிப்பது எது? என்பதற்குத் தீர்வு காணவேண்டும்.

உரைநடை அழகு கண்ணால் கண்டு மகிழக் கூடியது அன்று. ஒலி யுறுப்புகளால் வாய்விட்டுப் படித்துச் சுவைக்கக் கூடியது; காதால் கேட்டுச் சுவைக்கக் கூடியது. ஒலி எழுப்பாமல் வாய்க்குள் படித்தும் நுணுக்கமாக மனக்கண்ணால் கண்டும் சுவைக்கலாம். இவ்வாறு உரைநடையைச் சுவைக்க உதவும் கூறுகள் யாவை?

**அழகுக் கூறுகள்:**

உரைநடையில் உணர்த்தப்படும் கருத்தும் சிறந்ததாய் இருக்க வேண்டும்; உரைநடையில் அமைந்துள்ள சொற்களும் சொற்றொடர்களும் 'இழும்' என்னும் விழுமிய ஒலியுடையனவாய்ச் செவிக்கு இனிமை பயக்கவேண்டும். அதாவது, உரைநடையைப் படித்தால் ஒலிநயம்-ரிதம்-(Rhythm) இருக்க வேண்டும். செய்யுளில் ஒலி நயம் இருப்பது போலவே, சிறந்த ஆசிரியர்களின் உரைநடையிலும் ஒலிநயம் இருக்கும். எடுத்துக்காட்டாக, இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தின் இடையிடையே உள்ள உரைநடைப் பகுதியைக் குறிப்பிடலாம். ஒலி நயம் உடைய உரைநடைப் பகுதி 'உரைநடைப் பாட்டு' என்று கூறப்படுவதும் உண்டு.

**தமிழ் உரைநடையின் தொன்மை:**

தொல்காப்பியக் காலத்துக்கு முன்பே தமிழில் உரைநடை நூல்கள் இருந்தன. தொல்காப்பியத்தில் நான்கு வகையான உரைநடை நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நாளடைவில் செய்யுள் நடையின் சிறப்பு பெருகப்

பெருக, உரைநடை நூல்கள் அருகத் தொடங்கின. உரையாசிரியர்களின் உரையளவில் உரைநடை கண்ணை மூஞ்சைக் காட்டிக் கொண்டிருந்தது.பிற்காலத்தில், வீரமா முனிவர், ஆறுமுகநாவலர், முதலியோர் தமிழில் உரை நடை நூல்கள் எழுதத் தொடங்கினர். பின்னர், மீண்டும் தமிழில் உரைநடை நூல்கள் பெருகத் தொடங்கின. இப்போது உரைநடைநூல்களும் இலக்கியமாகக் கருதக்கூடிய அளவில் தமிழில் உரைநடை பெரிதும் அழகுபெற்றுள்ளது.

தமிழில் (திரு.வி.க.) திரு.வி.கலியாணசுந்தரனார், மறைமலை அடிகளார், சோமசுந்தர பாரதியார்,ந.மு. வேங்கடசாமி நாட்டார், மு. வரதராசனார் முதலியோரின் உரைநடை நூல்கள் மிகவும் சிறந்தனவர்கும். ஒவ்வொருவருடைய உரைநடையிலும் ஒவ்வொரு வித அழகைக் காணலாம். உலகில் கோடிக் கணக்கான மக்கள் உளர். ஒவ்வொருவரது முகமும் ஒவ்வொரு விதமாய் இருக்கும். ஒவ்வொருவருடைய குரலும் ஒவ்வாரு மாதிரியாயிருக்கும். ஆளைப் பார்க்காமல் குரலைக்கொண்டே இன்னாரென்று கூறி விடலாம். வானொலியில் நடைபெறும் இசை நிகழ்ச்சிகளைத் திடீரெனக் கேட்கத் தொடங்கிய வல்லுநர் சிலர், பாடுபவர் இன்னார்-மிருதங்கம் அடிப்பவர் இன்னார் -பிடில் வாசிப்பவர் இன்னார்-கடம் அடிப்பவர் இன்னார் -என்று கூறுவது உண்டு. வானொலியில் முதலில் பெயர் அறிவிக்கும்போது கேளாமல், இடையில் நாதசுரம் கேட்ட அளவிலேயே இது காரு குறிச்சி அருணாசலத்தின் வாசிப்பு என்று கூறும் திறமையாளர்கள் உண்டு. இதை மட்டும் என்னாலும் கூற முடியும்.

இது போலவே, பெயர் கூறாமல் படித்துக் காட்டினாலேயே, இது திரு.வி.க. வின் உரைநடை, இது மறைமலையடிகளின் உரைநடை என்று கூற முடியும். இப்பெரியார்

களின் உரைநடைகள் இத்தகைய சிறப்பு முத்திரை பெற்றனவாகும். இனி, திரு.வி.க. அவர்களின் உரைநடையைச் சிறப்பாக நோக்குவோம்:-

அண்மைக் காலத்தில் அறிஞர் அண்ணாதுரையின் சொற்பொழிவைக் கேட்கப் பெருங் கூட்டம் கூடுவதைப் பார்த்திருக்கிறோம். அறிஞர் அண்ணாதுரை தலையெடுப்பதற்கு முன், திரு.வி.க.வின் பேச்சைக் கேட்கப் பெருங் கூட்டம் கூடுவதுண்டு. திரு.வி.க. வின் பேச்சு தனிச்சிறப்பு வாய்ந்தது. அதுபோலவே அவரது எழுத்தும் தனிப் பெருமை உடையது.'அழகான எழுத்துநடை என்பது, ஒழுங்கானபேச்சுநடையின் விளைவே'என்று 'கிரீனிங்'(Greening) என்ற அறிஞர் கூறியுள்ளார். இதைத்தான் 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்' என்று ஔவையார் குறிப்பிட்டுள்ளார். எனவே, சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த திரு.வி.க. அவர்கள், சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியதில் வியப்பில்லை. திரு.வி.க. வின் உரைநடைக்கு அழகு அளிப்பனவாகப்பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

புதிய கருத்துகள்-புரட்சிக் கருத்துகள்-பழமையிலும் புதுமை காணும் கருத்துகள்-வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகள்-உடனடியாக நேர்ப்பயன் அளிக்கும் கருத்துகள்-ஆகியவை அடங்கியிருப்பது, அவரது உரைநடைக்கு ஒரு வகையில் அழகு தருகின்றது. மற்றும், முற்றுப்புள்ளியிட்ட சிறுசிறு வாக்கியங்களும் அரைப் புள்ளியிட்ட தொடர்வாக்கியங்களும் அமைந்திருப்பது-ஒருசொல்லையே திரும்பத் திரும்ப இருமுறை மும்முறை கூறும் அழுத்தம் உடைமை-பலர்க்குக் கைவராத சிறந்த மிகவும் இனிய சொற்களும் சொற்றொடர்களும் வலிந்து தேடாமல் இயற்கையாக முன்வந்தமைவது-ஆகியனவும் இன்ன பிறவும்

அவரது உரைநடைக்கு அழகு தருவனவாம். அவருடைய நீண்ட வாக்கியங்களிலும் இனிமை ததும்பித் தவழும்.

இத்தகைய அழகுகள் பொருந்தத் திரு.வி.க. பல துறை நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் சில வருமாறு:- தமிழ்ச்சோலை, தமிழ்த்தென்றல், இளமைவிருந்து, முடியா -காதலா-சீர் திருத்தமா?, இந்தியாவும் விடுதலையும் முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, வாழ்க்கைவழி, உள்ளொளி, இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், சைவத்தின் சமரசம், சைவத் திறவு, சன்மார்க்க போதமும் திறவும், சமரச் சன்மார்க்கத் திறவு, தமிழ்நாடும் நம்மாழ்வாரும், இமய மலை அல்லது தியானம், கடவுள் காட்சியும் தாயுமானாரும், சித்த மார்க்கம், தமிழ் நூல்களில் பௌத்தம், நினைப்பவர் மனம், சைவ சமய சாரம், இருமையும் ஒருமையும்,அருகன் அருகே,மார்க்சியமும் காந்தியமும், இருளில் ஒளி,செத்துப் பிறத்தல், முதுமை உளறல்,வளர்ச்சியும் வாழ்வும்-முதலியன திரு.வி.க.வின் உரைநடை நூல்களாகும்.

இந்நூல்களேயன்றிப் பெரிய புராணத்திற்கும் காரைக்கால் அம்மையார் திருமுறைக்கும் குறிப்புரை எழுதியுள்ளார். திருக்குறளின் முதல் பத்து அதிகாரங்கட்கு விரிவுரை எழுதியுள்ளார். இவையே யன்றி, 'தேச பக்தன்' என்னும் செய்தித்தாளும், 'நவசக்தி' என்னும் வார இதழும் நடத்தியுள்ளார். திரு.வி.க. எழுதியுள்ள தனிக் கட்டுரைகட்கு அளவேயில்லை. செய்யுள் நூல்கள் சிலவும் இவர் இயற்றியுள்ளார்.

திரைப்பட நடிகர்களுள் சிலரது நடிப்பில் சிலர் மிகவும் ஈடுபாடு கொள்வதுண்டு. அதேபோன்று எழுத்தாளர்

களுள் சிலருடைய நூல்களைச் சிலர் விரும்பிப் படிப்ப துண்டு. திரு.க.வின் நூல்களை மிகவும் விரும்பிப் படித்தவர் களுள் ஒருவரைச் சிறப்பாக இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். புதுச்சேரிப் பெத்தி செமினர் உயர்நிலைப் பள்ளி யில் பல்லாண்டுகள் தலைமையாசிரியராகப் பணியாற்றிய சுவாமிக்கண்ணு என்னும் அடிகளார், திரு.வி.க. வின் நூல் களில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். இருவரும் மதத் தாலும்வேறு சிலவற்றாலும்வேறுபட்டவர்கள். இருப்பினும், சுவாமிக்கண்ணு அடிகளார், திரு.வி.க.வின் நூல்களைத் தேடிக்கொண்டுவந்து தரும்படிஎன்னைக் கேட்டு வாங்கிச் சுவைத்துப் படிப்பார்; அவரது நடையழகின் இனிமையை அடிக்கடி என்னிடம் எடுத்துச் சொல்லுவார்; சில பகுதி களைப் படித்தும் காட்டுவார். பின்னர், திரு.வி.க.வின் நூல்கள் சிலவற்றை விலைக்கு வாங்கிக் கொண்டு படித்து இனிமை கண்டார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திரு.வி.க.வின் உரைநடை அழகுக்குச் சில எடுத்துக்காட்டுகள் தரவேண்டும் அல்லவா? ஒவ்வொரு நூல் வாரியாகத் தருவது என்பது இயலாத செயல்-இடம் போதாது. எனவே, பொதுவாக அவர் நூல்களிலிருந்து சில பகுதிகள் வருமாறு:-

திரு.வி.க.வின் வாழ்நாளிலே, திருப்பாதிரிப் புலியூரில் 'ஞானியார் சுவாமிகள்' என்பவர், திருக்கோவலூர்-திருப் பாதிரிப் புலியூர் ஆதீனத்து ஐந்தாம் பட்டத்து அடிகளா ராய் வீற்றிருந்தார். அவர் பெரிய கல்விக்கடல். வேறு எவர் காலிலும் விழாத திரு.வி.க. உட்படப் பலர் அவர் காலில் விழுந்து வணங்குவர். அப்பெரியாரைப் புகழ்ந்து திரு.வி.க. எழுதியுள்ள உரைநடை அழகுக்குச் சான்றாக ஒரு சிறு பகுதி வருமாறு:

“முருகன் சேவடி வருடி உருகும் ஈரநெஞ்சும், அவன் புகழ் பேசி இனிக்கும் நன்னாவும், தண்மை பொழியும் செவ்விய நோக்கும், வெண்ணீறு துதையும் நெற்றியும், மாணிக்கக் குழை பிறங்கும் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருமைக் கதிர் விரிக்கும் திரு மேனியும், சண்முகா-சண்முகா என்று கூறி நீறளிக்கும் நீண்ட கையும் கொண்ட அடிகளின் திருவோலக்கப் பொலிவு என் உள்ளத்தில் ஓவியம் எனப் படிந்து நிற்கிறது ......அடிகளாரின் பேச்சுத் திறனை எதற்கு ஒப்பிடுவது? கடல் மடைத் திறப்புக்கா? வெண்கலக் கோட்டைக்குள் அரசுவா (பட்டத்து யானை) புகுதலுக்கா? பெரும் புயலுக்கா? ஓயா மழைக்கா? எதற்கு-எதற்கு ஒப்பிடுவது?......”

“அடிகள் கருமை பூத்த ஒரு பொறுமை மலை. அம் மலையின் உச்சியில் - அதாவது மூளையில் -கலை மேகங்கள் பொழிந்த அறிவு மழைநீர், தேங்கித் தேங்கிப் புரண்டு திரண்டு பன்முகங் கொண்டெழுந்து முட்டி முடுகி, வாயின் வழியே முழங்கி விரைந்து இடையீடு இல்லாச் சொற்றொடர் அருவியாக இழிந்து, பலதிறச் சுவை நுட்பப் பொருள்கள் மிதந்து சுழல, அன்பு வெள்ளப் பெருக்காய்ப் பரவிப் பரந்து அருள் அலை கொழித்துக் கொழித்து ஓடும்”......

திரு.வி.க.வின் சொல்நயம் பொருள் நயம் பொதிந்த உரை நடை அழகுக்கு இது போதாதா?இன்னும் சுவைக்க வேண்டுமா? சரி-இதோ தருகிறேன். திரு.வி.க.வின் இயற்கைப் புனைவு ஒன்றினைக் காண்போம். அவர் ஒரு சமயம் இலங்கையில் புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தபோது வழியில் கண்ட இயற்கைக் காட்சிகளைப் புனைவு செய்து எழுதியுள்ளார். ஒரு சிறு பகுதி வருமாறு:

“வழி நெடுகப் பசுமை உமிழும் மலைகளின் செறிவும் சூழலும் நிரையும் அணியும் உள்ளத்தைக் கவர்கின்றன. முகிற் குழாங்கள் கொண்டல் கொண்டலாக அசைந்தும் ஆடியும் ஓடியும் மலைமுகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகைபோல் பொலியும் காட்சியும் அம்மலைகளின் உடல் புலனாகாதவாறு பசும்பட்டுப் போர்த்தாலெனப் பொழில்கள் துதைந்துள்ள அழகும் புலன்களை ஒன்றச் செய்கின்றன ...... புகைவண்டியின் விரைவில், இடையிடையே ஓடும் சிற்றருவிகளின் தோற்றம், பசிய வானில் மின்னொளி தோன்றி மறைவது போலப் புலப்படுகின்றது”.

இது நிற்க, சோழநாட்டின் இயற்கை வளத்தைப் பின்வருமாறு புனைவு செய்துள்ளார்:

“வான் ய்பாய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி, பாட்டடனப் பரந்து, கிளை கிளையாய்ப் பிரிந்து, கால் காலாய் விரிந்து' சோழ நாட்டை அணி செய்கிறது. காவிரிப் பயனைச் சோழ நாடு நுகருதலால், அது புனல் நாடாய்ச் சோறுடைத் தாயது போலும்”.

இந்தப் பகுதிகள் தமிழ்ச் சோலை முதலிய நூல்களில் காணக் கிடக்கின்றன. ‘முருகன் அல்லது அழகு’ என்னும் நூலில் அவர் இயற்கையைப் புனைவு செய்துள்ள உரைநடை அழகு ஒன்றினைக் காண்பாம்:

“செம்பொன்னை உருக்கி வைத்தா லெனக் காட்சியளிக்கும் அந்தி வான் செக்கர் அழகும், கொண்டல் கொண்டலாக ஓடும் புயலின் அழகும், அது பொழியும் மழையின் அழகும், அத் தண் புனல் மணற் கற்களை அரித்தோடும் அருவியின் அழகும், பச்சைப் பசேலெனப் பெருங் காட்சியளிக்கும் பொழில்களின் அழகும் அவற்றில்

பச்சைப் பாம்பெனப் பின்னிக் கிடக்கும் பசுங் கொடிகளின் அழகும் அவற்றினின்றும் அரும்பியுள்ள நகைமலரின் அழகும் மக்கள் உள்ளத்து உள்ள இன்ப ஊற்றைத் திறப்பன அல்லவோ? மயிலாடும் அழகும் மான் நடக்கும் அழகும் நந்தூரும் அழகும் புலவருக்கு விருந்தல்லவா?''

திரு.வி.க. பழமையில் புதுமையும் புதுமையில் பழமையும் காணும் இயல்பினர் என்பதை விளக்கும் உரை நடைப் பகுதி ஒன்றின் அழகினைக் காண்பாம்:

''ஆராய்ச்சித் துறை நண்ணாது, ஒன்றைப் பழைமை என்றதும் அதனைப் போற்றவோ தூற்றவோ புகுவதும் அவ்வாறே ஒன்றைப் புதுமை என்றதும் அதனைத் தூற்றவோ போற்றவோ புகுவதும் பகுத்தறிவுச் செயல்கள் ஆகா. பழைமையில் நல்லனவும் இருக்கலாம்; தீயனவும் இருக்கலாம். அங்ஙனமே புதுமையிலும் தீயனவும், இருக்கலாம்; நல்லனவும் இருக்கலாம். பழைமை புதுமை என்னும் அளவின் நின்று, ஒன்றைக் கொள்ளல் அல்லது தள்ளல் அறிவுடைமை ஆகாது. அதன் அதன் தன்மைகளை நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்னரே தள்ளல் -கொள்ளல் விதிப்பது அறிவுடைமை''.

அடுத்து, 'நவ சக்தி' என்னும் வார இதழில் 'கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்' என்னும் தலைப்பில் அவர் எழுதியுள்ள ஒரு பகுதி வருமாறு:-

''ஏட்டுக் கல்வியை ஓரளவு நிறுத்திக் கொண்டு, அதன் பொருளாயுள்ள இயற்கைக் கல்வியில் கருத்திருத்தப் பயில வேண்டும். இயற்கை பெரிய பல்கலைக்கழகம். அக் கழகத்திற் பயிலப் பயில அஃது இறைக் கல்வி யாகிய இன்பம் ஊட்டும். இறைக் கல்வி அழியாதது; அருளுடையது; அறியாமையைக் கல்லும் ஆற்றல் அதற்கே உண்டு.

'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' என்னும் திருவாக்கில் போந்துள்ள 'கல்லார்' என்பது, இயற்கை இறைக் கல்வி பெறாதாரைக் குறிப்பதென்க. 'கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்' என்னும் மெய்ம் மொழி, ஏட்டுக்கல்வி பயின்று தகாத செயல் செய்வோரை நோக்கி எழுந்ததென்க''.

இனி, தமிழ்த் தென்றல் முதலிய நூல்களிலிருந்து சில பகுதிகளைக் காணலாம். தமிழைப் பற்றிக் கூறியிருப்பதாவது:-

''நம் மக்கள் வாழ்வே தமிழ் வாழ்வு-அவர்கள் கண்டது தமிழ்; கேட்டது தமிழ்; உண்டது தமிழ்; உயிர்த்தது தமிழ்; உற்றது தமிழ்; அத்தமிழ் அமிழ்தம் கொண்டது இந்நாடு''.

அடுத்துத் தொழில் துறையைப் பற்றிக் கூறியிருப்பதாவது: ''ஆண்டவனே தொழிலாளி யாயின், பின்னை எவன்தான் தொழிலாளியா யிருக்கமாட்டான்? தோட்டியும் தொழிலாளியே; தொண்டைமானும் தொழிலாளியே; நியாயாதிபதியும் தொழிலாளியே; வாயில் காப்போனும் தொழிலாளியே; உலகில் உள்ள அனைவரும் தொழிலாளரேயாவர்''.

பெண்ணுரிமை பற்றிய ஒரு பகுதி வருமாறு, ''பெண்ணுக்கு உரிமை அருளிய என்னருமைத் தமிழ் நாடே! இது போழ்து யாண்டுளாய்-யாண்டுளாய் என்று அலமருகிறேன். அவ்வுரிமை நாட்டை மீண்டுங் காண எவர் முயலல் வேண்டும்? பெண் ஒரு பாதி; ஆண் மற்றொரு பாதி; இரண்டும் சேர்ந்த ஒன்றே முழு மனிதத் தன்மை. அங்ஙனமாக, வாழ்வின் ஒரு பாதி உரிமை கடிவது எத்தகை அறியாமை:''

காந்தியடிகள் பற்றிச் சில சொற்கள்: "... ... இந்த சனநாயக உணர்வைக் கிளப்பியவர் யாவர்? மகாத்மா காந்தி என்று மண்ணும் சொல்லும்; மரமும் சொல்லும்."

விடுதலை உரிமை பற்றிச் சில தொடர்கள்: "பிறப்புரிமை இன்பத்திற்கு மனைவி இன்பம் ஈடாகுமோ? மக்களின்பம் ஈடாகுமோ? அரச இன்பம் ஈடாகுமோ? உலகிலுள்ள எவ்வின்பம்தான் அதற்கு ஈடாகும்?"

இளைஞர்க்கு ஓர் அறிவுரை:

"... ... கிளர் ஈரலும் தடைபடாக் குருதியோட்டமும் எஃகு நரம்பும் ஏக்கழுத்தும் பீடு நடையும் உடையவர்களாக நீங்கள் திகழ்தல் வேண்டும்."

செல்வர்கட்குக் கூறியிருப்பதாவது:- "தமிழ்நாட்டுச் செல்வர்களே! நீங்கள் பிறந்த நாடு திருவள்ளுவர் பிறந்த நாடு. அப்பெரியார் நூல் உங்கள் கையில் விளங்குகிறது. அதுவே உங்களுக்கு உரிமை கொடுக்கும் கருவி. அதை ஓதுங்கள். அதன்படி ஒழுகுங்கள் ... ..."

திருக்குறள் பற்றிய கருத்தோடு திரு.வி.க. வின் உரைநடையை நிறுத்துவோம். மேலே திரு.வி.க. வின் உரைநடைப் பகுதிகள் பல தரப்பெற்றுள்ளன. உரை நடை அழகு சொற்களால் விளக்கக் கூடியது அன்று; ஒவ்வொருவரும் படித்தும் கேட்டும் உணர்ந்து சுவைக்க வேண்டிய ஒன்றாகும் அது.

இங்கே, திரு.வி.க.வின் உரைநடை அழகோடு பல தரப்பட்ட சிறந்த செய்திகளையும் தெரிந்து கொண்டோம் அல்லவா?

அச்சுப் பதிப்புப் பகுதி

# 7. ஈழம் ஈந்த தாமோதரனார்

'பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கவேண்டும்' என்னும் ஒரு தொடரை நாம் அடிக்கடிப் பலர் வாயிலாகக் கேட்டு வருகின்றோம். பெற்ற பிள்ளையினையும் நன்கு பேணிக் காக்கவேண்டும். இந்தக் கருத்து இலக்கியத் துறைக்கு மட்டும் விதிவிலக்கா என்ன?

உலகத்தின் மூத்த மொழிகளுள் ஒன்றாகிய தமிழ் மொழியில் இப்போது பல நூல்கள் இருப்பதை நாம் அறிவோம். இதற்குமுன் இருந்து அழிந்துபோன மிகப் பலவான நூல்களை நோக்க, இப்போது இருக்கும் பல நூல்கள் எனப்படுபவை, சில நூல்கள் என்று சொல்லத் தக்க அளவில் சிறுபான்மையினவேயாகும். தமிழ் நூல்களுள் சென்றன போக நின்றன சிலவே. சென்றனவே பல. இந்த இமாலயப் பேருண்மையை, தமிழ்நாட்டு வரலாறும் தமிழ்மொழி-இலக்கிய வரலாறும் அறிந்தவர்கள் நன்கு உணர்வர்-ஒத்துக்கொள்வர்.

பிறந்த இலக்கியம், இலக்கணம், இன்னும் மற்ற மற்ற கலை நூல்களையெல்லாம் பேணிக் காக்காமையினாலன்றோ பெரும்பாலன அழிந்து போயின. இந்நிலையில், பிறந்த இலக்கிய இலக்கண நூல்களுள் சிலவற்றையாயினும் பேணிக் காத்து நமக்குக் கிடைக்குமாறு செய்த பெருமக்களைப் பற்றி எவ்வளவு போற்றிப் புகழினும் தகுமே! இலக்கிய இலக்கணக் கலைநூல்களையெல்லாம் இயற்றிய பேரறிஞர்களைப் போலவே, அவற்றை இறவாமல் பேணிக் காத்து நம் கையில் கிடைக்கச் செய்த பெருமக்கள் மிகவும்

இன்றியமையாதவர்கள் அல்லவா? அத்தகைய மாபெருஞ் சான்றோர்களின் வரிசையில் முன்னணியில் குறிப்பிடத் தக்கவர் ஈழம் ஈன்ற தமிழ்ப் பேரறிஞர் சி.வை. தாமோ தரம் பிள்ளையவர்களாவார்.

தமிழகத்தில் தமிழ் ஓரளவு ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் திகழ்கின்ற இந்தக் காலத்திலுங் கூட, அச்சிட்ட உயரிய பழம்பெருந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை விரும்பிப் படிக்கும் தமிழர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். இந்நூல்கள் அச்சிடப் படாமல் பனையோலைச் சுவடிகளிலேயே இருக்குமாயின், படிக்க முன்வருபவர் யாவர்? எத்துணையர்? இந்த இரங்கத் தக்க எளிய நிலையில் ஒருசிலராயினும் படிக்க உதவும் வகையில், பொருளைப் பொருட்படுத்தாது துணிந்து, பழம்பெருந்தமிழ் நூல்கள் பலவற்றைப் பனையோலை யிலிருந்து தாளில் அச்சிட்டுத் தந்த முதல் பெருமை நம் மதிப்பிற்கு உரிய சி.வை. தாமோதரனா ருடையதாகும்.

தமிழில் தொல்காப்பியம், தொல்காப்பிய உரைகள், இறையனார் களவியல், வீரசோழியம், இலக்கண விளக்கம், கலித்தொகை, சூளாமணி, தணிகைப் புராணம், நீதிநெறி விளக்கம் முதலியவை மிக்க உயர்தரமுடைய இன்றி யமையாத நூல்கள் என்பதை நாம் அறிவோம். இந் நூல்களை முதல் முதலாக ஓலைச் சுவடியிலிருந்து அச்சில் பதிப்பித்தவர் நம் தாமோதரம் பிள்ளையவர்களே. இவர் கி.பி. 1881ஆம் ஆண்டு வீரசோழியமும், 1883-இல் தணிகைப் புராணமும், 1885-இல் தொல்காப்பியமும், 1887-இல் கலித்தொகையும், 1889-இல் இலக்கண விளக்கமும் சூளாமணியும் அச்சில் பதிப்பித்தார். தொல் காப்பியத்தின் மூன்று பகுதிகளும் இவரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இது விலை மதிக்கவொண்ணாத தமிழ்த் தொண்டாகும்.

இங்கே, 'தமிழ்த் தாத்தா' எனத் தமிழ் மக்களால் செல்லமாக அழைக்கப் பெறும் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் பதிப்பிலே உள்ள சிறப்பு என்ன? அவர்களின் ஆராய்ச்சிப் பதிப்புரையும், ஆராய்ச்சி முன்னுரையும், அடிக்குறிப்புகளுமே அவர்தம் பதிப்பிற்குச்சிறப்பு அளிப்பன வாகும். இத்தகைய சிறப்பு, இந்தத் துறையில் முன்னோடி யாக விளங்கிய தாமோதரம் பிள்ளையவர்களின் பதிப்பு களில் முன்னமேயே இடம் பெற்றிருந்தது. நூல்கட்கு முன்னால் பிள்ளையவர்கள் எழுதியுள்ள ஆராய்ச்சி உரைகள், படிப்போர்க்கு நூல்களை நன்கு அறி முகம் செய்து அந்நூல்களைப் படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்டின. மற்றும் இந்த ஆராய்ச்சிக் குறிப்புகள், தமிழ்மொழி இலக்கிய - இலக்கண ஆராய்ச்சியாளருக்கும் பெருந்துணை புரிவன வாகும். இவர்தம் ஆராய்ச்சி உரைகள் மிகவும் வன்மையும் நுண்மையும் வாய்ந்தவை; படிப்போரை இனிய நகைச் சுவை நடையாலும் இன்புறுத்துபவை.

தாமோதரனார் நூல்களை ஓலைச் சுவடிகளிலிருந்து அச்சில் பதிப்பிக்கும் பணியில் அரும்பாடு பட்டுள்ளார். ஒரே நூலின் பல ஓலைச் சுவடிப் படிகளை ஒத்திட்டு நோக்கிப் படித்துப் பார்ப்பார்; பெரும்பான்மையான சுவடிகளில் ஒரே மாதிரியாயிருக்கும் பாடத்தையே உண்மை யான பாடமாக எடுத்துக்கொள்வார். சிறுபான்மையான சுவடிகளில் உள்ள வேறுபாட்டைப் 'பாட வேறுபாடு'- அதாவது, பாடபேதம்-பிரதிபேதம் என்னும் பெயரில் அடியில் குறிப்பிடுவார். இவரது பதிப்பின் அடிக்குறிப்பு கள் (Foot Notes) ஆராய்ச்சியாளர்க்குப் பேருதவி புரிவன வாகும். உரையிடையே காணப்படும் மேற்கோள் செய்யுள் 'இன்ன நூலில் உள்ள இத்தனையாவது செய்யுளாகும்'

என்று தெரிவிக்கும் விவரம், அருஞ்சொல் உரை விளக்கம் முதலியனவும் இவரது அடிக்குறிப்பில் காணப்படும்.

தாமோதரனார் பழம்பெரும் புலவர்களின் நூல்களைப் பதிப்பித்து இலக்கிய-இலக்கணம் காத்தவர் என்னும் பெருமைக்கு உரியவரானதன்றி, தாமும் பல நூல்கள் இயற்றித் தமிழை வளப்படுத்தியுள்ளார். இவர் இயற்றிய நூல்களுள் கட்டளைக் கலித்துறை, ஆதி ஆகம கீர்த்தனம், நட்சத்திர மாலை, சூளாமணி வசனம், சைவ மகத்துவம், ஆறாம்-ஏழாம் வகுப்புகட்கு உரிய வாசகப் பாடநூல்கள் முதலிய படைப்புகள் சிறப்பாகக் குறிப்பிடற்பாலன. இவரது நூல் நடையில் உவமை, உருவகம் முதலிய அணிகளின் சிறப்புகளைக் கண்டு களிக்கலாம்.

இவர் முழு நூல்கள் பல இயற்றியதன்றி, பல பொருள்கள் பற்றித் தனிப்பாடல்கள் பலவும் பாடியுள்ளார். தமிழ்ப்பேரறிஞர்களின் மேல் பாடல் பாடுவதில் இவருக்குப் பெரு மகிழ்ச்சி உண்டு. தம் தமிழாசிரியர் சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயர் மேல் இவர் பல பாடல்கள் பாடியுள்ளார். தாம் அச்சில் பதிப்பித்த ஒவ்வொரு நூலின் முன்னுரையிலும் தம் தமிழாசிரியர் மீது நன்றி வணக்கப்பாடல்கள் பாடிச் சேர்த்துள்ளார். கம்பர் தமக்குப் பொருளுதவி புரிந்து ஆதரித்த சடையப்ப வள்ளலைத் தம் இராமாயண நூலிலும், வில்லி புத்தூரார் தம்மை ஆதரித்த வரபதியாட் கொண்டானைத் தம்பாரத நூலிலும் நடு நடுவே பாடி நன்றிக் காணிக்கை செலுத்தியிருப்பதை நாமறிவோம். மற்றும், பல்வேறு புலவர்கள் தம்மைப் பொருளுதவியால் புரந்த புரவலர்கள்-வள்ளல்கள் -குறுநிலமன்னர்கள்-முடியுடைப் பேரரசர்கள் முதலானோரைப் பாடி நன்றிக்கடன் செலுத்தியிருக்கும் வரலாறு நாடறிந்ததே. ஆனால், தமக்குத் தமிழ் கற்பித்த

தமிழாசிரியரைப் பற்றி ஒவ்வொரு நூலிலும் பாடியுள்ள புதுமையாளரை - புரட்சியாளரை நாம் தாமோதரம் பிள்ளையின் வடிவத்தில் முதல் முதலாகக் கண்டு பெரு வியப்பு எய்துகிறோம். ஐரோப்பியக் கல்வி முறை வந்து விட்டமையால், தமிழின மாணாக்கர்களே தமிழாசிரியர் களை எள்ளி நகையாடிப் புறக்கணிக்கத் தொடங்கிய காலத்தில், ஆங்கிலம் கற்று B.A,. B.L., பட்டம் பெற்ற தாமோதரம் பிள்ளையவர்களால் இந்தப் புதுமைப் புரட்சி நடந்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. அவ்வளவு ஏன்? பிள்ளையவர்கள் தம் தமிழாசிரியரை வணங்கிப் பாடியுள்ள ஒரு பாடலை நேருக்கு நேர் பார்த்துத்தான் விடுவோமே:

"எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்னா
கத்துயர் மரபினோன் முத்துக் குமார
வித்தகன் அடிதலை வைத்து வாழ்த் துவனே"

இப்பாடல் வீர சோழிய நூற் பதிப்புரையின் முகப்பில் உள்ளது.

தாமோதரனார் பிற பேரறிஞர்களைப் பாராட்டிப் பாடியிருப்பது போலவே, இவரையும் பிற பேரறிஞர்கள் சிலர் பாராட்டிப் பாடியுள்ளனர். பிள்ளையவர்களின் அச்சுப் பதிப்பின் சிறப்பினை, குமாரசாமி புலவர் என்பார் பின்வருமாறு புகழ்ந்து பாடியுள்ளார்:

"ஏட்டில் இருந்த அருந்தமிழ் நூல்கள் எனைப்பலவும்
திட்டி வழுக்களைந்து அச்சினில் ஆக்குபு செந்தமிழ் சேர்
நாட்டில் அளித்துயர் தாமோ தரேந்திரன் நண்ணு புகழ்
பாட்டில் அடங்கும் தகைத்தோ புலவர்கள் பாடு தற்கே'

குமாரசாமி புலவரேயன்றி, பரிதி மாற் கலைஞர் என அழைக்கப் பெறும் வி.கோ. சூரிய நாராயண சாத்திரி யார்,

''காமோதி வண்டர் கடிமலர்த்தேன் கூட்டுதல்போல்
நாமோது செந்தமிழின் நன்னூல் பல தொகுத்த
தாமோ தரம்பிள்ளை சால்பெடுத்துச் சாற்றளவர்
தாமோ தரமுடையார் தண்டமிழ்ச் செந் நாப்புலவீர்'

என இருபொருள் படப் பாடி, தாமோதரம் பிள்ளை என்னும் பெயரை வைத்து விளையாடியுள்ளார். தஞ்சா வூர் சதாவதானச் சுப்பிரமணிய ஐயர் என்பவரோ, மிக நயமாகப் பாடியுள்ளார்:

''சொல்துளைத்த நாவலர்கள் எழுதிவைத்த முதுவீர
சோழி யத்தைச்
செல்துளைத்த புள்ளியன்றி மெய்ப்புள்ளி விரவாத
சென்னா ளேட்டிற்
பல்துளைத்து வண்டுமணல் உழுதவரி எழுத்தெனக்
கொள் பரிசி னாய்ந்து
கல்துளைத்த எழுத்தா அச் சிட்டனன்தா மோதர
னாம் கலைவல் லோனே''

எத்துணை அழகான புகழ்ச்சி பாருங்கள்! இம்மட்டுமா! தாமோதரனாரின் அச்சுப் பதிப்பின் சிறப்பினை இன்னும் புலவர் பலர் பலவாறு பாராட்டிப் பாடியுள்ளனர். புரசை அஷ்டாவ தானம் சபாபதிப் புலவர் என்பார், இராமன் கல்லை மிதித்து [illegible] ஆக்கினாற் போல, தாமோதரர் சிறந்த ஓலைச் சுவடிகளை அழகிய அச்சு நூல்களாக ஆக்கியுள்ளார் என்று பாடியுள்ளார். கோப் பாய் வித்துவான் சபாபதி பிள்ளை என்பவரோ, தாமோ தரரால் ஓலையிலிருந்து அச்சு நூல் வெளி வந்தது,மாயை யிலிருந்து உலகம் வந்தது, போலவும்-ஒரு வகை இந்திர

சாலம் போலவும் இருக்கிறது என்று பாடியுள்ளார். திரிசிர புரம் சோடாவதானம் சுப்புராயச் செட்டியார் என்பவரோ, சுந்தரர் நீர் இல்லாத குளத்திலிருந்து நீரை யும் முதலையையும் வரவழைத்து, அம் முதலை வாயி லிருந்து, அம் முதலை முன்பு விழுங்கிய சிறுவனை மீட்டுக் கொடுத்தாற் போல, ஒடிந்தும் மக்கியும் சிதைந்து போன ஓலைச் சுவடிகளிலிருந்து உயரிய நூல்களைத் தாமோதரனார் உரிய முறையில் மீட்டுத் தந்தார் என்று பாடியுள்ளார். சொர்ண நாதபுரம் சதாவதானம் இராமசாமி செட்டியார் என்பவர், ஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கியது போல் தாமோதரர் துளை போட்ட ஓலைச் சுவடிகளை விலை போட்ட அச்சுச் சுவடிகளாக ஆக்கியுள்ளார் என்று பாடியுள்ளார். கல்லைப் பொன்னாக்கும் ஒருவகை இரசவாதம் போன் றது, தாமோதரரின் அச்சுப் பதிப்பு முயற்சி, என்று சுன்னாகம் அ.குமாரசாமி புலவர் கூறியுள்ளார்.

இவர்கள் அனைவரும் இருக்கட்டும்! தாமோதரம் பிள்ளை இறுதி எய்தியபோது, பழம் பெரும் பனை யோலைச் சுவடிப் பதிப்பின் மாமன்னராகப் போற்றப் பெறும் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் அவர்களே, 'பாம்பின கால் பாம்பறியும்' என்றபடி, தாமோதரரின் பதிப்பின் சிறப்பைப் போற்றிப் புகழ்ந்து பாடி, அவரது பிரிவினால் ஏற்பட்ட தமது ஆற்றாமையை அறிவித்துள் ளார்கள். இதோ பாடல்

''தொல்காப் பியமுதலாம் தொன்னூல் களைப்பதிப் பித்து
ஒல்காப் புகழ்மேவி உயர்ந்தபண்பின்-அல்காத
தாமோ தரச்செல்வன் சட்டக நீத் திட்டதுன்பை
யாமோ தரமியம்ப வே'

இவ்வாறாகப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களாலேயே பாராட்டப் பெற்ற தாமோதரரின் பதிப்பின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக, அவர் தொடக்கத்தில் பதிப்பித்த வீரசோழியத்தை எடுத்துக் கொள்வோம். இது, 1881 ஆம் ஆண்டு-தமிழ் விசு ஆண்டு சித்திரைத் திங்களில் பதிப்பிக்கப் பெற்றது. நூலின் முகப்பில் 'டிம்மி' தாள் அளவில் முப்பது பக்கங்கள் கொண்ட ஆராய்ச்சிப் பதிப்புரை எழுதியிருக்கிறார் தாமோதரர். இந்த ஆராய்ச்சியைக் கொண்டு தாமோதரர் எத்தகையவர் என நாம் படம் பிடித்துக் கொள்ளலாம். அவர்தம் ஆராய்ச்சியான புரட்சிக் கருத்துகளைக் கொண்டு அவரை அடையாளம் கண்டுகொள்ளலாம். பதிப்புரையின் தொடக்கத்தில் கடவுள் வணக்கம், கலைமகள் வணக்கம், தமிழாசிரியர் வணக்கம், அவையடக்கம் ஆகிய நான்கும் முறையே இடம் பெற்றுள்ளன.

பதிப்புரையைத் தொடர்ந்து, அதிகார அகராதி, படல அகராதி, செய்யுள் முதற்குறிப்பு அகராதி ஆகியன அமைத்துள்ளார். நூலின் இடையிடையே, பக்கங்களின் அடியில் தமது சொந்தக் குறிப்பு எழுதியுள்ளார். அந்த அடிக்குறிப்பில் பயனுள்ள பல்வேறு வகை விளக்கங்கள் உள்ளன. பதிப்பின் இறுதியில் பிழை திருத்தமும் அச்சிட்டுள்ளார். இந்த அச்சுப் பதிப்பிற்காக அவர் பட்ட பாட்டினைப் பற்றி அவரே எழுதியுள்ள வரிகள் வருமாறு;

'...எனக் கிடந்த ஏட்டுப் பிரதிகளோடு பட்ட பிரயாசைக்குப் பிரயாசை என்னும் சொல் போதுமா? முதலினின்று முடிவு வரைக்கும் ஒரொரு வரி ஒரொரு நொடியாகவே கொண்டுழைத்தோம் ... பிரதிகளின் ஏடுகளை ஒன்றை விட்டு ஒன்று பிரித்து எடுத்ததே பேரற்புதமாயிற்று ...'

இவ்வாறு இவரே எழுதியிருப்பதைக் கொண்டு இவரது அச்சு முயற்சியின் அருமைப் பாட்டினை அறியலாம். இவர் எழுதியுள்ள பல பகுதிகளைக் கொண்டு, இவர் பல கோணங்களில் தமிழுக்குப் பணிகள் பல புரிந்துள்ளமை புலனாகும். பெரிய வள்ளலாகவும் திகழ்ந்த இவருக்குத் தமிழ்மீது முறுகிய பற்று இருந்தது. 'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று பாவேந்தர் பாரதி தாசனார் இருபதாம் நூற்றாண்டில் பாடினார். ஆனால், தாமோதரனாரோ, இதனைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே செயலில் செய்து காட்டினார். எவரேனும் தமிழ் மொழியைத் தாழ்த்திப் பேசுவரேல், தாமோதரர் சிறிதும் பொறார். அவர்களை வன்மையாகக் கண்டித்து இடித்துரைப்பார்.

இதோ இன்னொரு தமிழ்த் தொண்டு: கல்லூரியில் அன்று தமிழ் எடுத்துப் படித்தோருக்கு-ஏன்- இவ்வாறு கூறும் போதே வியப்பாயிருக்கிறதா? ஆம்! இன்றும் தமிழர் சிலர், முதல் மொழியாக ஆங்கிலத்தையும் இரண்டாவது மொழியாகத் தமிழ் அல்லாத வேறு ஏதேனும் ஒரு மொழியையும் கற்று, தமிழ் அறியாமலேயே தப்பித்துக் கொண்டு போவதைக் காணும் போது, அன்று, பலர், கல்லூரியில் தமிழ் எடுத்துப் படிக்காததில் வியப்பு இல்லை.

இந்த நிலையில், அன்று, கல்லூரியில் தமிழ் எடுத்துப் படித்தோருக்கு, தாமோதரனார் பேச்சுப் போட்டியும் பாட்டுப் போட்டியும் கட்டுரைப் போட்டியும் வைத்துப் பரிசளித்து வந்தார். அவ்வாறு இவரிடம் பரிசு பெற்றவர்களுள் பரிதி மாற் கலைஞராம் சூரியநாராயண சாத்திரியாரும் ஒருவராவார்.

இன்னும் இவர், சுன்னாகம் குமார சாமி புல்வரைக் கொண்டு, யாழ்ப் பாணத்தில் உள்ள கீரிமலைச் சிவன் மேல் 'நகுலேசர் ஊஞ்சல்' என்னும் நூல் இயற்றச்செய்து தம் கைப்பொருள் உதவியால் வெளியிடுவித்தார். அச் சிவன்கோவிலில் ஆண்டு தோறும் விழா நடைபெற்று வர நிலையான நிதியும் எழுதிவைத் துள்ளார்.

தாமோதரனாரின் மற்றொரு தமிழ்த் தொண்டும் ஈண்டு குறிப்பிடத் தக்கது. இவர் யாழ்ப்பாணத்திலே 'ஏழாலை' என்னும் இடத்தில் ஒரு தமிழ்ப் பள்ளி நிறுவி னார். அதில் குமாரசாமி புலவர், முருகேசப் பண்டிதர் ஆகியோரை ஆசிரியர்களாய் அமர்த்திப் பலர்க்கும் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்பிக்கச் செய்து தமிழ்க் கல்வி முறையைப் பரப்பினார். அன்று இது மிகப் பெரிய தமிழ்த் தொண்டாகும்.

தாமோதரனார் பரந்த பண்பும் நண்பும் கொண்டு பழகுவதற்கு இனியவராகவும் திகழ்ந்தார். இவர்பால் தமிழால் நட்புப் பிணிப்புண்டு பழகி வந்த பெரியார்கள் மிகப் பலர். அவர்களுள் மிகவும் குறிப்பிடத் தக்கவர்கள், திருவாவடுதுறை ஆதீனத்துத் தலைவர் சுப்பிரமணிய தேசிக அடிகளார், பூண்டி-அரங்கநாத முதலியார், உ.வே. சாமிநாத ஐயர், வேதநாயகம்பிள்ளை, சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயர், பீதாம்பரப் புலவர், சேனாதி ராயர், சுன்னாகம் அ. குமாரசாமி புலவர் முதலியோ ராவர். பிள்ளையவர்கள், புலவர் பெருமக்களுடன் கலந்து உறவாடி-உரையாடி அளவளாவி,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'

என்னும் குறளுக்குச் சிறந்த இலக்கியமாகத் திகழ்ந்தார். இவரது சிறப்பிற்கு இன்னும் சான்றுகள் வேண்டுமா!

ஐயையோ! இங்கே இன்றியமையாத இன்னொரு பகுதியை மறந்துவிட்டோமே! அதுதான் தாமோதரம் பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் பகுதி. இதோ அது:-

அப்போது இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைந்திருந்த இலங்கையில், சிறுப்பிட்டி என்னும் ஊரில் வைரவநாதப்பிள்ளை என்பார்க்கு, கி.பி. 1832 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் நாள் இவர் பிறந்தார். பட்டுக்கோட்டையில் 'செமினரி' என்னும் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற தாமோதரர், சித்திரக் கவியில் வல்ல சுன்னாகம் முத்துக் குமாரக் கவிராயரிடம் தனியே இலக்கிய இலக்கணங்களை முறையாகத் திறம் பெறக் கற்றுத் தேர்ந்தார். பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழகம் 1857 ஆம் ஆண்டு முதல் முதலாக நடத்திய B.A. தேர்வில் முதல் முதலாக இவர் தேர்ச்சி பெற்றார். B.A. பட்டத்தைத் தொடர்ந்து B.L. பட்டமும் பெற்றார்.

இவர் தம் வாழ்க்கையில் பல்வேறு தொழில்கள் புரிந்துள்ளார். நூலாசிரியராகவும் உரையாசிரியராகவும் பாடலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் விளங்கிய தாமோதரனார் கல்வி பயிற்றும் ஆசிரியராகவும் பணி புரிந்தார். முதலில் இவர் 1852 ஆம் ஆண்டு கோப்பாய் என்னும் ஊரில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியர்களைப் பயிற்றும் ஆசிரியர்க்கு ஆசிரியராய்ப் பணியாற்றினார். 1857 ஆம் ஆண்டு கள்ளிக்கோட்டையில் உள்ள அரசினர் கல்லூரியின் முதல்வர் பதவி ஏற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தேர்வுக் குழுவிலும் (Board of Examiners) இடம்பெற்றிருந்தார். மற்றும் இவர் பத்திரிகை ஆசிரியர் பதவியையும் விட்டுவைக்க வில்லை. 'தினவர்த்த மானி' என்னும் தமிழ் இதழின் ஆசிரியராகவும் வேலை செய்தார்.

இம்மட்டுமா? சிறிது காலம் சென்னையில் 'அரசியல் வரவு செலவுக் கணக்கு' நிலையத்தின் தலைவராக நற்பெயருடன் தொண்டாற்றினார். B.A., B.L. 'பட்டம் பெற்ற இவர், சில்லாண்டுகள் வழக்கறிஞர் வேலை பார்க்கவும் தவறவில்லை. 1887 ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை உயர்நீதி மன்றத்தின் நீதியந் தலைவராய்ப் பொறுப்பேற்று, சமன்செய் துலாக்கோல்போல் அமைந்து, ஒருபால் கோடாது, காய்தல்-உவத்தல் அகற்றி, நடுநிலைத் தீர்ப்பு வழங்கி நற்புகழ் பெற்று விளங்கினார்.

அன்றைய அரசாங்கம் இவரது பண்பினைப் பாராட்டு முகத்தான், இவருக்கு 'இராவ் பகதூர்' என்னும் சிறப்புப் பட்டம் அளித்துச் சிறப்பு பெற்றது.

இவ்வாறாக, தாமோதரனார் ஏறக்குறைய அறுபத்தொன்பதாண்டு காலம் சிறப்புடன் வாழ்ந்து 1901 ஆம் ஆண்டு சனவரி முதல்நாள் இயற்கை எய்தினார். அந்தோ! இறக்கும் தறுவாயில் அகநானூறு பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அது முடியுமுன்பே தாம் முடிந்து விட்டார். இயற்கையை யாரால் வெல்ல முடியும்?

தன்வரலாற்றுப் பகுதி

# 8. கம்பன் அறிமுக வரலாறு

இலக்கியம் படிப்பதன் நோக்கங்களுள் சுவையுணர்வும் ஒன்று என்பது மட்டுமன்று; அது தலையாய நோக்காகும். இலக்கியத்தைச் சுவைத்து இன்புற வேண்டும். இலக்கிய இன்பம் யாதினும் இனிது, இது குறித்தே,

> "நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
> பண்புடை யாளர் தொடர்பு"

என்றார் திருவள்ளுவனார். நவிலுந் தோறும் நூல் (இலக்கியம்) நயம் பயக்குமாம்.

> "தேருந்தொறும் இனிதாம் தமிழ்போன்று இவள் செங்கனி வாய்
> ஆருந்தொறும் இனிதாய் அமிழ்தாம் என தாருயிர்க்கே"

என்று தஞ்சை வாணன் கோவையில் பொய்யாமொழிப் புலவர் கூறியிருப்பதும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

பாவேந்தர் பாரதிதாசனோ,

> "மங்கை யொருத்தி தரும் சுகமும்
> எங்கள் மாதமிழ்க்கு ஈடில்லை"

என்று பகர்ந்துள்ளார். தமிழ் இன்பம் என்பதன் பொது வான கருத்து இலக்கிய இன்பமாகும்.

இவ்வாறு இன்பம் பயக்கும் தமிழ் இலக்கியங்களுள் தலையாயதொன்றுகம்பராமாயணமாகும். நூலுள் நுழைந்து பார்த்தாலேயே உண்மை விளங்கும். இது கம்பனுக்குப் பெரும் புகழ் நல்கும் படைப்பாகும்.

தக்கவர்கள் வாயிலாகக் கம்பனது அறிமுகம் நமக்குக் கிடைக்குமாயின் நாம் கம்பனை விடமாட்டோம். எனக்குக் கம்பனது அறிமுகம் கிடைத்த வரலாற்றை மிகச் சுருக்கமாகக் கீழே தருகிறேன்.

அறிமுகம் செய்தவர்கள்:

1) யான் 1935-36-ஆம் ஆண்டு காலத்தில் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தில், புலவர் புகுமுகத் தேர்வுக்குப் (Entrance) படித்துக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு வயது பதினான்கு. கம்பராமாயணத்திலிருந்து, 'சூளாமணிப் படலம்'' பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தது. மடத்தின் ஐந்தாம் பட்டத்து அடிகளாரும் அந்தக் காலத்தில் தமிழ் உலகம் முழுவதும் பெரும் புகழ்பெற்றுத் திகழ்ந்தவருமாகிய 'சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிக சிவாசாரிய அடிகளார் எங்களுக்குச் சூளாமணிப் படலம் நடத்தினார்கள். அந்தக் கலை முழுவதையும் துய்ப்பதற்கு ஏற்ற வயது அப்போது இல்லையெனினும்,இலக்கியச் சுவையுணர்விற்கு அடிகளாரால் வித்து ஊன்றப் பெற்றது. பொதுவாகக் கம்பராமாயணத்தில்-சிறப்பாகத் தமிழ் இலக்கியத்தில் நல்ல தேர்ச்சிபெறுவதற்கு அப்போது அடிகோலப்பட்டது. எனவே. கம்பனை எனக்கு முதலில் அறிமுகம் செய்து வைத்தவர்கள், திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்) ஞானியார் மடத்து ஐந்தாம் பட்டத்து அடிகளாரேயாவார்கள்.

2) புலவர் புகுமுக வகுப்பில் தேர்ந்ததும், புலவர் (வித்துவான்) பட்டப் படிப்புக்காகத் திருவையாற்று அரசர் கல்லூரியில் போய்ச் சேர்ந்தேன். கல்வி ஆண்டு 1938-39 என்று நினைக்கிறேன். பெரியார் புருடோத்தம நாயுடு அவர்களால், கம்பராமாயணத்தில் புலவர் வகுப்புக்குப் பாடமாக வைக்கப்பட் டிருந்த அயோத்தியா காண்டம்

நடத்தப் பெற்றது. அப்போது வயது பதினேழு. முன்னிலும் இலக்கியத்தைச் சுவைக்கும் பயிற்சி வளர்ந்திருந்தது. பேராசிரியர் புருடோத்தம நாயுடு அவர்கள் இராமயணப் படிப்பில் உருக்கம் ஊட்டினார்கள். நகர் நீங்கு படலம் நடத்திய போது, இராமன் காட்டிற்குப்போகின்றானே என்ற துயரத்தால், பேராசிரியர் அவர்கள் நடு நடுவே சிறிது தேம்பி அழுத தாக எனக்கு நினைவிருக்கின்றது. இந்தக் காலத்து மாணவர்கள் பலரைப் போல அந்தக் காலத்தில் நாங்கள் இல்லை. அடியேன் உட்பட மாணாக்கர் பலர் கண்களிலும் நீர் துளித்த நினைவு எனக்கு இருக்கிறது. இவ்வாறு புருடோத்தம நாயுடு அவர்கள், உருக்கத்துடன்-பக்திச் சுவையுடன் கம்ப இராமாயணத்தைப் படிக்கும் பான்மையில் கம்பனை அறிமுகப் படுத்தினார்கள்.

அவர்கள் பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் அமர்ந்து நாலாயிரத் திவ்வியப் பிரபந்த வியாக்கியான ஈட்டிற்கு விளக்கம் எழுதிப் பெரும்புகழ் பெற்றதைத் தமிழுலகம் நன்கு அறியும். இத்தகைய பெரியோராலும் கம்பனது அறிமுகம் எனக்குக் கிடைத்தது எனது நற்பேறே.

3) 1940 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாள் அடியேன் மயிலம் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளனாய் அமர்ந்தேன். பல ஆண்டுகள் மயிலம் கல்லூரியில் பணி புரிந்தேன். அப்போது புலவர் வகுப்புக்குக் கம்பராமாயணப் பாடம் நடத்தும் பொறுப்பு என்னிடமே விடப்பட்டது. புலவர் வகுப்பிற்குப் பாடம் நடத்த வேண்டும் என்பதனால், கம்பராமாயணத்தை ஓரளவு துருவியும் ஆழமாகவும் படிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. இவ்வாறு இயற்கையாகவும் கம்பனது அறிமுகம் எனக்குக் கிடைத்தது.

4) 1942 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் என் தாயாரும், மார்ச்சுத் திங்களில் என் தந்தையாரும் இறந்து போயினர். இரண்டு திங்கள் இடைவெளியில் பெற்றோர் இருவரையும் இழந்துவிட்ட நான் மிகவும் சோர்ந்து போனேன். எங்கட்கு மூன்று திங்கள் காலம் கோடை விடுமுறை விடப்பட்டது விடுமுறை தொடங்கிய சிலநாளில், ஆறுதலுக்காக ஊரி லிருந்து மயிலம் சென்றேன். அப்போது அங்கே முதுபெரும் புலவர் தோரமங்கலம் அ.வரதநஞ்சையப்பிள்ளை வந்திருந் தார்கள். சொற்பொழிவிற்காக அவர்கள் இதற்கு முன்பும் சிலமுறை வந்திருக்கின்றார்கள். அதனால் அவரது தொடர்பு முன்னமேயே எனக்கு உண்டு.

பெரியார் வரதநஞ்சையப் பிள்ளையவர்களைப் பற்றிச் சில சொற்கள் சொல்ல வேண்டும். அவர்கள் தமிழில் ஆழ்ந்த புலமை யுடையவர்கள். அவர்தம் தமிழ் வாழ்த்துப் பாடல்கள் மிகச் சிறந்தவை. அவர்கள் இயற்றிய 'தமிழரசுக் குறவஞ்சி' என்னும் இனிய நூல், கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவில் அரங்கேற்றப் பெற்று அவர்கட்குப் பெரும்புகழும் பேரும் பெற்றுத் தந்தது. அவர்கள் எப் போதும் நகைச்சுவையோடு பேசும் இயல்பினர். ஒருநாள் ஒருவர் சாவியைத் தொலைத்து விட்டு, 'என்சாவி எங்கே எங்கே' என்று வினவிக் கொண்டிருந்தார். புலவர் அவர் கள் அவரை நோக்கி, 'சாவி சாவி என்று உசாவிக் கொண்டு இருக்கிறீர்களே' என்று கூறி அனைவரையும் நகைப்பில் ஆழ்த்தினார்கள். ஒருநாள் ஒருவர் மோட்டார் காரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். புலவர் அவர்கள் அவரை நோக்கி "கார் வரவில்லையா? நீ சிறிது நேரம் கார் (காத்திரு); சரி இப்படி உட்கார்: நீ விரும்புகார் வராத தனால் ஒரே புகார் ஏற்பட்டிருக்கிறது" என்றெல்லாம் வேடிக்கையாகப் பேசினார்கள். இன்னும் இவ்வாறு பற்பல கூறலாம்.

இத்தகைய பெரும் புலவர் அவர்கள், இருபது வயது டைய என்னை நோக்கி, "தம்பி, இந்தப் பயணத்தில் நீ சிறிது சோர்வாகக் காணப்படுகிறாயே! காரணம் என்ன" என்று வினவினார்கள். இரண்டு திங்கள் இடைவெளியில் பெற்றோர் இருவரையும் இழந்துவிட்ட இரங்கத்தக்க எனது நிலையை யான் அவர்கட்குத் தெரிவித்தேன். உடனே புலவர் அவர்கள் எனக்குத் தக்க ஆறுதல்கூறி, "உனக்கு இப்போது விடுமுறைதானே! இந்த விடுமுறைக் காலத்தில் என்னுடனேயே இரு" என்று பணித்தார்கள். அவ்வாறே நான் அவருடனே இருந்தேன். அவர் சொற்பொழிவிற்காகச் சென்ற பல ஊர்கட்கு அவருடனே யானும் சென்றேன். அவர்தம் சொற்பொழிவின் தலைப்புகள் பெரும்பாலும் கம்பராமாயணத்திலிருந்தே கொடுக்கப் பட்டன. சொற்களைப்பொருட்சுவையுடன்நகைச்சுவையும் கலந்து பேசுவதில் அவர்கள் மிகவும் வல்லவர்கள். சொற்சுவை, பொருட்சுவை, நகைச்சுவையுடன், ஆழமான கருத்தும் கொண்ட அவர்தம் கம்பராமாயணச் சொற்பொழிவுகளைக் கேட்ட யான் கம்பனிடத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டேன். எனக்கு ஆழ்ந்த அறிமுகம்கிடைத்தது. நான் கம்பராமாயணச் செற்பொழிவு ஆற்றும் போதும், கம்பராமாயணப் பாடம் நடத்தும்போதும் இவ்வாறே சொற்சுவை பொருட்சுவைகளை எடுத்துமொழிய வேண்டும் என எனக்குள்ளே உறுதி பூண்டேன்.

5) அடுத்து, மகா மகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் சிலவற்றைக் கேட்டேன். ஒருமுறை அவர்கள் தலைமையில் 'குறிப்பினால் உணரும் கொள்கை யான்' என்னும் கம்பராமாயணப் பாடல் தொடரைத் தலைப்பாகத் தந்து சொற்பொழிவும் ஆற்றியுள்ளேன். இலக்கியத்திற்குச் சொல் நயம் பொருள் நயம் சொல்

வதில் பண்டிதமணியவர்கள் மிகவும் வல்லுநர். அவர்தம் கம்பராமாயணச் சொற்பொழிவுகள் சிலவும் கம்பனைப் பற்றிஎனக்கு மிகவும் ஆழமாக அறிமுகம் செய்து காட்டின.

எனவே, யானும் சொற்பொழிவுகட்குக் கம்பராமா யணத்திலிருந்து தலைப்பு கொடுக்கலானேன். கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி போல,யானும்சொற்சுவை பொருட்சுவை கூறலானேன். மயிலம் கல்லூரியில் கம்ப ராமாயணப் பாடம் நடத்தியபோது,சொல்நயம் பொருள் நயம் கூறி மிகவும் அலட்டிக் கொண்டேன். கம்பனை முற்ற முழுதும் சுவைக்க வேண்டும் என விரும்பினேன். 1943 ஆம் ஆண்டு, மூன்று திங்கள் காலம் கோடை விடு முறை விட்டார்கள். அபபோது கல்லூரி நூல்நிலையத் திலிருந்து கம்பராமாயணம் ஆறு காண்டங்களையும் வீட்டிற்கு எடுத்து வந்துவிட்டேன்.காலையிலிருந்து மாலை வரை வீட்டுத் திண்ணையில் அமர்ந்துகொண்டு ஆறுகாண் டங்களையும் மனநிறைவோடு படித்து முடித்தேன். நூற் றுக் கணக்கான பாடல்களை மனப்பாடம் செய்தேன்.

இதுநிற்க, கம்பனை எனக்கு அறிமுகம் செய்தவர்கள் நன்றாக அறிமுகம் செய்து காட்டியுள்ளார்கள் என்பதற் கும், யானும் ஓரளவேனும் கம்பனைக் கண்டுகொண்டுள் ளேன் என்பதற்கும் சான்று தரவேண்டுமல்லவா? இதோ ஒன்று தருகிறேன்:

தென்னார்க்கர்டு மாவட்டத்தில் சங்கராபரணி ஆற் றின் வடகரையில் கொடுக்கூர் என்னும் திருமால் திருப்பதி ஒன்றுள்ளது. ஒருமுறை அந்த ஊருக்கு யான் சொற்பொழி வாற்றச் சென்றிருந்தேன். சொற்பொழிவின் தலைப்பு 'ஒரு நாள் பழகிய உத்தமன்' என்பது- அஃதாவது குகனைப் பற்றியதாகும் அது. அவைத் தலைவர் உயர்திரு, க. இராமநாதன் செட்டியார், B.A.B.L. ஆவார். இவர்

நல்ல தமிழறிஞர்; சென்னையில் வழக்கறிஞர் தொழில் புரிந்தவர்;சென்னை சைவ சித்தாந்த மகா சமாசத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்; பொதுத் தொண்டு புரிவதில் ஆர்வம் மிக்கவர்; வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் மலேயா சென்று தங்கி, அங்குள்ள இந்தியர் சங்கத்தின் தலைவராய்ப் பணி புரிந்தவர். இப்பெரியாரது தலைமையில் யான் சொற்பொழி வாற்றி முடித்து அமர்ந்தேன். அப்போது எனக்கு வயது இருபத்தொன்று தொடங்கியிருந்தது.

யான் பேசி அமர்ந்தவுடனே, அங்கிருந்த ஐயங்கார் பெரியார் ஒருவர் எழுந்து தலைவரிடம் சென்று 'இந்தத் தம்பி பேசியதைப்பற்றி யான் சிறிது பேச வேண்டும்; ஒப்புதல் அளியுங்கள்' என்று கேட்டார். தலைவர் தயங்கினார். 'பேசியவர் சிறு பிள்ளை; ஏதோ குற்றங்குறை இருந்தாலும் பெரியவர்களாகிய நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும்; எனவே, இதோடு விட்டுவிடுங்கள்' என்று தலைவர் கேட்டுக் கொண்டார். 'நான் என்ன பேசப் போகிறேன்-எப்படி பேசப் போகிறேன் என்பதைச் சிறிது நேரம் எனக்குக் கொடுத்துப் பாருங்கள் என்று பெரியவர் வற்புறுத்தினார். பிறகு தலைவர் பெரியவர் பேச ஒப்புதல் அளித்தார். பெரியவர் பேசியதின் சாரத்தை மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறேன். 'சுந்தர சண்முகம் இளம் பிள்ளையாயிருப்பினும் இவ்வளவு சிறப்பாகச் சொற்பொழி வாற்றினாரே! நான் வசதியுடையவனாயிருந்தால் அவருக்குக் 'கனகாபிஷேகம்' செய்வேன்' என்பதுபோலத் தொடங்கி என்னை மிகவும் புகழ்ந்து பாராட்டி வாழ்த்தினார். இதுநிற்க.

1943 டிசம்பர் இறுதியில், சீர்காழியில், சைவ சித்தாந்த சமாச இளைஞர் மாநாடு நடைபெற்றது. மாநாட்டின் தலைவர் முன்பு சொன்ன க. இராமநாதன் செட்டியார்

அவர்களே. யானும் அம்மாநாட்டில் அவர் தலைமையில் சொற்பொழிவாற்றினேன். யான் பேசத் தொடங்கு முன், தலைவர் என்னைக் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்து முகத்தான், கொடுக்கூரில் ஐயங்கார் பெரியவர் எனக்குக் கனகாபிஷேகம் செய்ய வேண்டும் என்று பாராட்டிப் பேசினாரே-அந்த நிகழ்ச்சியைக் கூட்டத்தில் எடுத்துக்கூறி, அத்தகைய பாராட்டுதலுக்கு உரிய சுந்தர சண்முகம் இப்பொழுது பேசப் போகிறார் என்று என்னைக் கூட்டத்தாருக்கு அறிமுகப்படுத்தினார்.

ஐயையோ! என்னைப் பற்றி மிகுதியாகச் சொல்லி விட்டேன் போல் இருக்கிறதே! மன்னிக்க வேண்டுகிறேன். ஒரு சான்றாயினும் தந்தால்தானே, கம்பன் எனக்கு ஓரளவேனும் நன்றாக அறிமுகம் செய்துவைக்கப் பெற்றுள்ளான் என்பது மெய்யாகும்.

அடியேனுக்குக் கம்பனை அறிமுகம் செய்து வைத்த பெரியார்கள் அனைவருக்கும் நன்றி செலுத்துகிறேன். கம்பன் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க.

வரலாற்றுப் பகுதி

# 9. இலக்கியத்தில் வரலாற்றுக் குறிப்புகள்

'இலக்கியத்தில் வரலாற்றுக் குறிப்புகள்' என்னும் தலைப்பு, 'எங்கள் அப்பா குதிருக்குள் இல்லை' என்னும் கதை மொழிபோல் தோன்றுகிறது. அந்தக் கதை மொழி 'எங்கள் அப்பா குதிருக்குள் இருக்கிறார்' என்பதைக் குறிப்பாக அறிவிக்கிறது. அதுபோல, 'இலக்கியத்தில் வரலாற்றுக் குறிப்புகள்' என்னும் தலைப்பு, ஒரு காலத்தில் இலக்கியம் வரலாறாகக் கருதப்பட்டது-அல்லது-வரலாறு இலக்கியமாகக் கருதப்பட்டது-என்னும் குறிப்பினைத் தருவதுபோல் தோன்றுகிறது.

ஆம்; பன்னெடுங் காலமாக வரலாற்றை இலக்கியத்தின் ஒரு பகுதியாகவே பலர் எண்ணி வந்தனர். வரலாறு ஒரு நீதி இலக்கியம் என்பது அன்னாரது கருத்தாக இருக்கலாம். ஏன்-இன்றும் சிலர், வரலாற்றை ஓர் இலக்கியம் போல் கற்பனை கலந்து எழுதுகின்றனர். இந்தக் கற்பனை கலந்த இலக்கியத்தை, வரலாறு அல்லது சரித்திரம்-சரிதம்-சரிதை என்னும் பெயர்களாலே வழங்குகின்றனர். எடுத்துக் காட்டுகள்:- நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, தமிழ் நாவலர் சரிதை, இராம சரிதம், குமண சரிதம், புரூரவச் சக்கரவர்த்தி வரலாறு முதலியன வாகும். மேலும், முற்றிலும் கற்பனைக் கதைகளாய் உள்ளவற்றையும் சரித்திரம் என்னும் பெயரால் வழங்கக் காணலாம். வேதநாயகம் பிள்ளையவர்களின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் படைப்பு இதற்கு ஏற்ற எடுத்துக் காட்டாகும். இவ்வாறு இன்னும் பல உள.

பண்டைக் காலத்தில் உலக மொழிகள் பலவற்றிலும் இயற்றப் பெற்ற கற்பனை கலந்த-அல்லது-முற்றிலும் கற்பனையான புராண-இதிகாச-காவியங்கள் எல்லாம் வரலாறாகவே கருதப்பட்டு வந்தமை ஈண்டு நினைவு கொள்ளத் தக்கது. பண்டைக் காலத்தில் என்று என்ன? பதினெட்டு-பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் கூட, தமிழில் ஊருக்கு ஒரு புராணம் எழுதப்பட்டது. இந்தக் கற்பனைப் புராணங்கள் எல்லாம் வரலாறு போலவே தோற்ற மளிக்கின்றன. இவ்வாறாக அன்று தொட்டு இன்றுவரை, இலக்கியங்கள் வரலாறு போலவும், வரலாறுகள் இலக்கியங்கள் போலவும் தலைதடுமாறிக் காட்சி யளிக்கலாயின.

முதலில் இலக்கியத்திற்கும் வரலாற்றிற்கும் இடையே உள்ள வேறுபாட்டைச் சுட்டியறிந்து, இரண்டிற்கும் உரிய சரியான இலக்கணத்தை வரையறை செய்ய வேண்டும். இஃது ஓரளவு அரிய செயலே!

ஒரு சிறிதும் கற்பனை கலவாது-நடந்ததை நடந்தபடி-உள்ளதை உள்ளபடி-அப்படியே அளிப்பது வரலாறாகும். நடவாததை நடந்ததாகவோ, நடந்ததையேகூட இடையிடையே கற்பனை கலந்தோ தருவது இலக்கியம்; அதாவது, இது ஒருவகை இலக்கியம். வரலாற்றாசிரியன் எந்தச் சார்பும் இன்றி, விழிப்புடன் நிகழ்ச்சிகளைத் துல்லியமாகத் தரக் கடமைப்பட்டுள்ளான். அவன், நிகழ்ச்சிகட்கு ஒரு சார்பு பற்றி ஏதேனும் ஒரு சாயம் பூசத் தொடங்குவானே யாயின், அவனது எழுத்து, வரலாறு என்னும் தகுதிக்கு உரிய தாகாமல், கற்பனை இலக்கியம் எனப் பெயர் பெற்றுவிடும். இந்த அடிப்படை உண்மைக்ளையெல்லாம் கருத்தில் கொண்டு, 'இலக்கியத்தில் வரலாற்றுக் குறிப்புகள்' என்னும் தலைப்பினை ஆராய வேண்டும்.

அடுத்து, இலக்கியம்-வரலாறு என்னும் இரண்டனுள் எது பெரியது என்றும் ஆராய வேண்டும். அதாவது, இலக்கியத்தில் வரலாறு அடங்குமா-அல்லது வரலாற்றில் இலக்கியம் அடங்குமா? என்று காணவேண்டும்.

பன்னெடுங் காலமாக வரலாற்றை இலக்கியத்தின் ஒரு பகுதியாகவே பலர், எண்ணி வந்தனர் என்பதாக ஒரு கருத்து முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்தக் கருத்து வெளியீடு முற்றிலும் சரியான தாகாது, ஒருசில வரலாற்று நிகழ்ச்சிகள் ஒருசில இலக்கியங்களில் சுட்டப்பட்டிருக்க லாம்-அல்லது-விரிவாகவும் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் வரலாறு என்பது, இலக்கியம் என்பதனினும் மிகவும் பெரிய தாகும்-பரந்துபட்ட தாகும்.

உலகம் தோன்றிய நாள்தொட்டு இன்றுவரை-இந் நேரம்வரை நடைபெற்றுள்ள பல்வகை நிகழ்ச்சிகள், தோன்றியுள்ள பல்வேறு உயிர்ப் பொருள்கள், உயிரில்லாப் பொருள்கள், இடங்கள், செயற்கைப் படைப்புகள், கண்டு பிடிப்புகள், அரசியல், சமூகம், தொழில், வாணிகம், வாழ்க்கை முறை-முதலியன பற்றிக் கூறப்படும் அனைத் தும் வரலாறு எனப்படும். இத்தகைய பல்வேறு வரலாறு களுள் இலக்கியம் பற்றிய வரலாறும் ஒன்றாகும்; இஃது 'இலக்கிய வரலாறு' எனப்படும். இந்த அடிப்படையுடன் நோக்குங்கால், இலக்கியத்தினும் வரலாறு பரந்துபட்டது என்னும் உண்மை போதரும். அங்ஙன மெனில், 'இலக்கி யத்தில் வரலாற்றுக் குறிப்புகள், என்னும் தலைப்பினால் அறியக் கிடக்கும் இலக்கியம் என்பதற்கும் வரலாறு என் பதற்கும் இடையேயுள்ள தொடர்புதான் யாதோ?

வரலாறு எழுதும் ஆசிரியனுக்கு, எழுதும் செய்தி களுக்குத் தகுந்த ஆதாரங்கள் கிடைக்க வேண்டுமே! தக்க ஆதாரம் இன்றிக் கண்ணை மூடிக்கொண்டு எதையாவது

எழுதினால், அது 'அத்தை-பாட்டி கதை' என்றல்லவா அழைக்கப்படும்? எழுதுவதற்குச் சான்றாகத் தகுந்த வேர் மூலங்களை (Sources) வைத்துக் கொண்டே வரலாற்றாசிரியன் எழுதுகோல் பிடிக்க முடியும். வரலாற்று நிகழ்ச்சிகளை அறியக் கிடைத்துள்ள வேர் மூலங்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றை மூன்று வகைப் படுத்திக் கூறுவதுண்டு. அம்மூன்றையும் பார்ப்போமே!

ஒன்று: பட்டப் பகலில் நடந்த வரலாறு; இரண்டு: வைகறையில் பனி மூட்டத்தில் நடந்த வரலாறு; மூன்று: அமாவாசை நள்ளிரவில் நடந்த வரலாறு-என்பன அவை. பட்டப் பகலில் நடந்த வரலாறு எனப்படுவது, ஆண்டு -திங்கள் -நாள்- கிழமை- நேரம்-இடம் -ஆட்கள்-நடந்த நிகழ்ச்சி-முதலிய அனைத்தையும் நன்கு தெரிந்து இந்தக் காலத்தில் முறையாக எழுதிப் படிக்கும் வரலாறாகும். பட்டப்பகலில் நடப்பது நன்றாகத்தெரியும் அல்லவா? அது போன்றது இந்த முதல் வகை. அடுத்து,-வைகறையில் மூடு பனியில் நடந்த வரலாறு எனப்படுவது: முறையாகத் தெரிந்து எழுதி வைக்கப்படாமல், இலக்கியங்களில் உள்ள குறிப்புகளைக் கொண்டு ஒரு தோற்றமாக (உத்தேசமாக) நுனித்துணர்ந்து (யூகித்து)எழுதிப்படிக்கும் வரலாறாகும். 'வைகறையில் பனி மூட்டத்தில் வருபவர் போபவரோ-நடக்கும் நிகழ்ச்சிகளோ தெளிவாகத்தெரிய முடியா தல்லவா? இலக்கியத்தில் உள்ள குறிப்புகளைக் கொண்டு தெரிந்து கொள்ளும் வரலாறு இது போன்றது தான். இறுதியாக, -அமாவாசை நள்ளிரவில் நடந்த வரலாறு எனப்படுவது: புதை பொருள்கள்-அகழ்வாராய்ச்சிகள்-இடிபாடுகள் முதலிய தடயங்களைக் கொண்டு உறிஞ்சி எடுக்கப்படும் வரலாறாகும். அமாவாசை நள்ளிரவில் விளக்கு இல்லாத இடத்தில் பொருட்களைத் தடவிப் பார்த்துத்தானே தெரிந்து கொள்ள முடியும்? புதை

பொருள்-இடிபாடுகளைக் கொண்டு அறியப்படும் வரலாறு இது போன்றதேயன்றோ?

இத்தகைய ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்டே வரலாற்றாசிரியன் வரலாற்றை விழிப்புடன் கணிக்கின் றான். ஆதார வேர் மூலங்களைக் கொண்டு செய்திகள் அறியப்படும் காலம் 'வரலாற்றுக் காலம்' (Historical Period)எனப் படுகிறது. இத்தகைய ஆதாரங்களுள் யாதொன் றும் கிடைக்கப் பெறாமையால்உலகைப்பற்றி யாதொன் றும் அறியப்படாததான-மிகவும் பழைய இருட்காலம் 'வரலாற்றுக்கு முற்பட்ட காலம்' (Pre-Historical Period) எனப்படுகிறது. இவற்றிற்கு இடைப்பட்ட புதிய கற்காலம் -பழைய கற்காலம் எனப்படும் கற்காலமெல்லாம் (Stone Age) கற்பனையால் உருவாக்கப் பட்டனவேயாகும். இவற்றை 'Imaginatory Divisions') என ஆங்கிலத்தில் கூறுவர்.

இந்த அடிப்படையுடன் நோக்குங்கால், முறையாக எழுதாமல் விட்டுப்போன பழைய வரலாற்றுச் செய்திகளை அறிய உதவும் கருவிகளுள் (சாதனங்களுள்) தலைசிறந்ததாகத் திகழ்வது இலக்கியமேயாகும். எத்தனையோ வரலாற்றுச் செய்திகளை அறிந்துகொள்ள இலக்கியங்கள் பெருந்துணை புரிகின்றன.

இலக்கியங்களில் வரலாறு முறையாக-முழுமையாகச் சொல்லப்படாமல், வரலாறு தொடர்பான சிற்சில குறிப்புகளே காணப்படுவதால், 'இலக்கியத்தில் வரலாற்றுக் குறிப்புகள்' என்னும் தலைப்பு நமது கட்டுரைத் தலைப்பாக அமைந்திருப்பது பொருத்தமே.

அடுத்த கட்டமாக, பொதுவாக உலக வரலாற்றைப்பற்றிப் பேசுவதை விடுத்து, சிறப்பாகத் தமிழக வரலாற்றிற்கு வருவோமாயின், நமக்குப் பெரிய ஏமாற்றமே காத்துக்

கிடக்கிறது. தமிழ் நாட்டு வரலாறு அன்றுதொட்டு இன்று வரை தமிழர்களால் முறையாக எழுதி வைக்கப்படவில்லை என்னும் குறைபாட்டை நாம் கூசாது ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும். ஒருவேளை, ஒரு காலத்தில் எழுதிவைக் கப்பட்டிருந்த பழந்தமிழ் வரலாற்று நூல் மறைந்துபோய் விட்டதோ என்னவோ! தமிழில், இருக்கும் நூல்களை விட, இருந்து மறைந்துபோன நூல்களின் பட்டியல் மிகவும் நீளமான தன்றோ?

எது எங்ஙன மாயினும், தமிழ் நாட்டின் மிக்க பழங் கால வரலாற்றை அறிந்து கொள்ளச் சான்றாக உதவும் வேர் மூலங்கள் (Sources) சங்ககால இலக்கியங்களே யாகும், 'தமிழர் வரலாறு', 'தமிழக வரலாறு' முதலியபெயர் களில் இப்போதுநம்மிடையே உலவிவரும் வரலாற்று நூல் களெல்லாம் சங்ககால இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டுஎழுதப்பட்டனவே யாகும். சங்ககால இலக்கியங் களிலும் பழந்தமிழர் வரலாறு முறையாக அறிவிக்கப்பட்டி ருக்கவில்லை-ஆங்காங்கே சிற்சில வரலாற்றுக் குறிப்புகளே காணக்கிடக்கின்றன. இவற்றை அடிப்படையாகக்கொண்ட இக்காலத் தமிழ் வரலாற்றறிஞர்கள் தமிழக வரலாற்றை யும் வேறு சில நாடுகளின் வரலாற்றுத் துணுக்குகளையும் ஒரு தோற்றமாக (உத்தேசமாக) நுனித்துணர்ந்து (யூகித் தறிந்து) எழுதியுள்ளனர். தமிழ் நாட்டுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டிருந்த பிற நாடுகளைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் சிற்சிலவும் சங்கஇலக்கியங் களிலே ஆங்காங்கே பொதிந்து கிடக்கும் உண்மை ஈண்டு உணரத்தக்கது.

வரலாறு என்றதும், அரசர்க்கு அரசர்களின் ஆரவார வாழ்க்கையும் அவர்களின் அடி பிடி மல்லுமே சிலருக்கு நினைவு வரக் கூடும். ஆனால், சங்க இலக்கியங்களில், முடியுடைப் பேரரசர்களின் வரலாறுகளே யல்லாமல்,

சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், மல்லர்கள், புலவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் முதலிய பல தரப்பட்டவர்களின் வரலாற்றுக் குறிப்புகளும் ஆங்காங்கே பொதிந்து கிடக்கின்றன.

சங்க இலக்கியங்கள் என்றால் அவை யாவை? அவை எக்காலத்தவை.? என்று காணவேண்டு மல்லவா? தலைச் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தனவாக வரலாறு கூறுகின்றது. மூன்று சங்கங்களிலும் எண்ணற்ற நூல்கள் தோன்றின. இந்த மூன்று சங்கங்களின் காலமும், அவ்வக் காலத்திலிருந்த அரசர்கள்-புலவர்கள்-இயற்றப் பெற்ற நூல்கள் தொடர்பான விவரங்களும் 'இறையனார் அகப்பொருள்' என்னும் நூலின் உரையில் பின்வருமாறு குறிப்பிட்டுக் காட்டப் பெற்றுள்ளன. அந்த உரைப் பகுதி இதோ:-

"தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்.

அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்று எறிந்த முருகவேளும், முரிஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்து ஒன்பதின்மர் என்ப. அவர் உள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன: எத்துணையோ பரிபாடலும், முது நாரையும், முது குருகும், களரியாவிரையும் என இத்தெடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கம் இருந்தார் என்பது. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங் கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்கம் இருந்து

தமிழ் ஆராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவருக்கு நூல் அகத்தியம் என்ப.

இனி இடைச்சங்கம் இருந்தவர் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறு பாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரக்கோமானும், கீரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவர் உள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு சங்கம் இருந்தார் என்ப. அவரைச் சங்கம் இரீஇயினார் வெண்தேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங் கேறினார் ஐவர் என்ப. சங்கம் இருந்து தமிழ்ஆராய்ந்தது கபாட புரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டியன் நாட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தார், சிறு மேதாவியாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங் குன்றூர்க் கிழாரும், இளந்திருமாறனும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும், மதுரை மருதனிளநாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத்தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவர் உள்ளிட்டு நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறு நூறும் பதிற்றுப் பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும், கூத்

தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக் கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று நாற்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்தி ருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவர் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தது உத்தர மதுரை என்ப.

மேலே தந்துள்ள இறையனார் அகப்பொருள் உரை யில் குறிப்பிடப்பட்டிருக்கும் புலவர் எண்ணிக்கையை யும் ஆண்டு எண்ணிக்கையையும் அறியும் போது தலை சுற்றுகிறது. என்றாலும், நமக்கு இன்றியமையாது வேண் டப்படுகின்ற சில உண்மைகள் இப்பகுதியில் இல்லாமற் போகவில்லை. இந்த உரைக் கணக்கின்படி நோக்கின், இற்றைக்கு 3650 ஆண்டுக்கு முன் கடைச் சங்கமும், இற்றைக்கு 7350 ஆண்டுக்குமுன் இடைச் சங்கமும், இற்றைக்கு 11790 ஆண்டுக்கு முன் தலைச் சங்கமும் தோன்றியிருக்க வேண்டும். அதாவது. ஏறக்குறைய இற்றைக்குப் பன்னீராயிரம் (12,000) ஆண்டுகட்கு முன்பே சங்கம் அமைத்துத் தமிழ் ஆராயப்பட்டது என்பது புலனாகும். அங்ஙனமெனில், பன்னீராயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழில் சிறந்த நூல்கள் தோன்றியிருந்த உண்மை தானே விளங்கும். ஆனால், தலைச் சங்க இலக்கியங்களும் இடைச்சங்க இலக்கியங்களும் கிடைக்காமையால், தமிழ் நாட்டின் மிகப் பெரிய வரலாற்றை அறியும் வாய்ப்பை அந்தோ நாம் இழந்து விட்டோம். ஓரளவு நமது நற் பேறாக, கடைச் சங்க காலத்தைச் சேர்ந்த அல்லது சார்ந்த இலக்கியங்கள் சில மட்டுமே கிடைத்துள்ளன. அவை எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளா

யிரம் முதலியனவாம். வேறு சில இலக்கியங்களின் பெயர் கள் மட்டும் தெரிகின்றன-நூல்கள் கிடைக்க வில்லை.

இவற்றுள், எட்டுத் தொகைகளுள் ஒன்றாகிய புறநா னூறு முழுவதும் சேர- பாண்டிய- சோழர் என்னும் முடி யுடை மூவேந்தர்கள், சிற்றரசர்கள், குறுநிலமன்னர்கள், வள்ளல்கள், மறவர்கள், கலைஞர்கள் , புலவர்கள், பொது மக்கள் முதலியோரின் வரலாற்றுக் குறிப்புகள் பொதிந்து கிடக்கின்றன. மற்றொரு தொகை நூலாகிய பதிற்றுப் பத்து முழுவதிலும் பத்துச் சேரமன்னர்களின் வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. பத்துப் பாட்டில் பொருந ராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப் படை, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை,மலைபடு கடாம் ஆகிய நூல்களி லிருந்து. பேரரசரும் சிற்றரசரும் ஆகிய குறிப்பிட்ட சில ருடைய வரலாற்றுக் குறிப்புகளை ஓரளவு அறிகிறோம்.

அடுத்து, கீழ்க் கணக்கு நூல்கள் பதினெட்டனுள் களவழி நாற்பது என்னும் நூலில், சேரமான் கணைக்கால் இரும் பொறையைச் சோழன் செங்கணான் பொருது வென்ற வரலாற்றுக் குறிப்பு புலவர் பொய்கையாரால் தரப்பட்டுள்ளது. சிலப்பதிகாரமும் மணிமேகலையும், கோவ லன்-கண்ணகி-மாதவி-மணிமேகலை-சோழன் கிள்ளி வளவன், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டு வன் முதலியோருடைய வரலாற்றுக் குறிப்புகளை அளிப் பது அனைவரும் அறிந்த செய்தி. முத்தொள்ளாயிரத்தில், பொதுவாக முடியுடை மூவேந்தர்களின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

மேற் குறிப்பிட்டவை யல்லாத சங்க இலக்கியங்களில், ஆங்கொரு பாடலிலும் ஈங்கொரு பாடலிலுமாகச் சிற்சில வரலாற்றுக் குறிப்புகள் இறைந்து கிடக்கின்றன.

நாம் முன்பு கூறியபடி, பெரும்பாலும் இந்த இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே தமிழர் வரலாறும் தமிழ் நாட்டு வரலாறும் வரலாற்றாசிரியர்களால் கணித்து எழுதப்பட்டுள்ளன. தமிழ் நாட்டின் பழைய வரலாற்றை ஓரளவாயினும் அறிந்து கொள்வதற்கு உறுதுணையான குறிப்புகள் சிலவற்றைத் தந்துகொண்டிருக்கும் சங்க கால இலக்கியங்கள் வாழ்க. அவற்றை இயற்றியருளிய புலவர் பெருமக்கட்கு நமது நன்றி உரித்தாகுக.

குறிப்பு:-இந்தக் கட்டுரை சங்க கால இலக்கியங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ளது. சங்க காலத்திற்குப் பிற்பட்ட இலக்கியங்களை எடுத்துக் கொள்ளின் மிகவும் விரியு மாதலின் இம்மட்டோடு அமையலாம்.

உலகப் பொது அறிஞர் பகுதி

# 10. வள்ளுவரும் வள்ளலாரும் கண்ட சமூக ஒருமைப்பாடு

'மனிதன் ஒரு சமூகப் பிராணி'(Man is a Social Animal) என்பது, கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் என்பாரின் கூற்று. மாந்தர்கள் கூட்டமாகக் கூடி வாழும் உயிரிகள்--அதாவது- சமூகமாக வாழும் உயிரினத்தைச் சேர்ந்தவர்கள் -என்பது இதன் கருத்து. சமூகம் என்பதற்கு, மாந்தர் குழு- மாந்தர் குழு வாழ்க்கை என்பதாகப் பொருள் கூறலாம். இதுபற்றிய கருத்துகளையும் கொள்கைகளையும் கூறும் அறிவியல் 'சமூக இயல்,' என்னும் பெயரால் குறிக்கப்படுகிறது. இதனை ஆங்கிலத்தில் 'சோசியாலஜி'

(Socialogy) என்பர். இந்தச் சமூக இயலில் ஏறக்குறைய எல்லா இயல்களையும் அடக்கலாம்; அவ்வளவு பெரியது இது.

ஒரு காலத்தில் சமூகம் என்பது, ஐவர் அல்லது ஐம்பதின்மரைக் கொண்டது என்பதாகச் சிலருக்குத் தெரிந்திருக்கலாம். இப்போதோ சமூகம் என்பது, ஐந்நூறுகோடியினரைக் கொண்டது என்று சொல்லக் கூடிய நிலைமை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. தனிமாந்தர் கோடிக் கணக்கில் சேர்ந்ததே சமூகம், என்னும் கருத்து இப்போது அறிய வருகிறது.

இந்தக் காலத்தில் தனி மாந்தன் ஒருவன் தன் குடும்பத்தாரின் துணையால் மட்டும்-தன் ஊராரின் துணையால் மட்டும்-தன் நாட்டாரின் துணையால் மட்டும் வாழவே முடியாது. ஒவ்வொரு தனி மாந்தனும் ஒழுங்காக வாழ உலகத்தாரின் துணைவேணடும்.-அதாவது சமூகத்தின் துணை வேண்டும்.

மக்கள் ஒருவரோ டொருவர் ஒற்றுமை பூண்டு ஒருவர்க்கு ஒருவர் உதவி செய்து வாழ்வதே சமூக வாழ்க்கை. இத்தகைய சமூக வாழ்க்கையைப் பின்பற்றியதனால்தான், ஒருகாலத்தில் ஐவரைப் பற்றி மட்டும் அறிந்து கொண்டிருந்த மனிதன், இன்று ஐந்நூறு கோடியினரைத் தெரிந்து கொள்ளும் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறான். இதனால் தான், பத்தாயிரம் கல் தொலைவிற்கு அப்பாலுள்ள மக்கள் ஒருவர்க் கொருவர் பண்டங்களைப் பரிமாறிக் கொள்ள முடிகிறது. இதில் மாந்தர் இன்னும் முழு வெற்றி பெற முடியவில்லைதான். இருக்கட்டும்! இந்த ஒன்றிய சமூக வாழ்க்கையாகிய ஒரே உலகக் கொள்கை, முன்பு திருவள்ளுவராலும் பின்பு வடலூர் இராமலிங்க வள்ளலாராலும் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாந்தர் ஒன்றிய ஒரே உலகச் சமுதாயத்தினராய் வாழ வேண்டுமெனில், அவர்கட்குள் சாதிவேற்றுமை- சமயவேற்றுமை முதலியன போன்ற எத்தகைய வேறு பாடும் இருக்கவே கூடாது. ஒருவர்க்கு ஒருவர் ஒத்து உதவிசெய்து வாழ வேண்டும். சுருங்கக் கூறின், தன்னுயிர் போல் மன்னுயிரைப் போற்றல் வேண்டும். இன்னபிற நெறிகளைப் பின்பற்றின், சமுதாய ஒருமைப்பாடு நின்று நீடித்து நிலைப்பது உறுதி. இந்தக் கருத்துக்களை வள்ளுவரும் வள்ளலாரும் ஒத்துப் பல கோணங்களில் பகர்ந்து சென்றுள்ளனர்- அவற்றுள் முதலாவதாக சாதி சமய வேற்றுமை கூடாது என்னும் உயரிய கொள் கையை நோக்குவோமே.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.''(972)

''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்''(973)

''மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு''(409)

முதலிய குறள்களின் வாயிலாக, வள்ளுவர் வெளிப் படையாகவும் குறிப்பாகவும் சாதி வேற்றுமையைச் சாடு கிறார். 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது பெரிய கருத்து. எல்லாரும் பிறப்பினால் ஒரு தன்மையினரே; செயலினாலேயே வேறுபடுகின்றனர்-என்னும் உயரிய கொள்கையைக் குறள்கள் கூறுகின்றன.

இவ்வாறாகத் திருவள்ளுவர் சாதிவேற்றுமை பாராட் டாதது போலவே. சமய வேற்றுமையும் பாராட்ட வில்லை திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பகுதியைப் பார்க்கின் இந்த உண்மை புலனாகுமே. அவர் அந்தப் பகுதியிலே

எந்தக் கடவுளரையும் விதந்து-சிறப்பித்துக் கூறவில்லை. பொதுவாகத் தெய்வம்-கடவுள் என்னும் பொருளிலேயே எல்லாக் குறள்களையும் அமைத்துள்ளார். இத்தகு பொதுத் தன்மைகளால்தான் திருக்குறள் 'பொது மறை' எனப் படுகிறது.

இதே கொள்கைகளை வள்ளலாரும் ஆணித்தரமாக அறைந்துள்ளார். குறள்களின் விரிவுரையாக - விளக்க உரையாக, 'ஒன்றே குலம்-ஒருவனே தேவன்' என்ற உண்மையை வள்ளலார் வலியுறுத்தி யுள்ளார். இதோ அருட்பாப் பகுதிகள் சில:-

''சாதியும் மதமும் பொய் யென
ஆதியுணர்த்திய அருட்பெருஞ் சோதி''-

''மதமெனும் பேய்பிடியா திருக்க வேண்டும்''-

''இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்கள் ஆச்சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டு''-

''பேருற்ற உலகிலுறு சமயமத நெறியெலாம்
பேய்பிடிப் புற்ற பிச்சுப் பிள்ளை விளையாட்டெனை
உணர்ந்திடா துயிர்கள் பலபேதமுற் றங்குமிங்கும்
போருற் றிறந்து வீண்போயின''-

''எவ்வகைசார் மதங்களிலே பொய்வகைச் சாத்திரங்கள்
எடுத்துரைத்தே எமது தெய்வம் எமது தெய்வமென்று
கைவகையே கத்து கின்றீர் தெய்வம் ஒன்றென் றறிவீர்''-

''ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்றுறுமோ''-

மேற்கூறிய பாடல்களினால், வள்ளுவரைப் போலவே, வள்ளலாரும் சாதி சமயச் சழக்குகளைச் சாடி, 'ஒன்றே குலம்-ஒருவனே தேவன்' என்னும் உண்மையை நிலை நாட்டி, ஒருமை நன்னெறி இயக்கம் பரப்பி யுள்ளமையை உணரலாம்.

அடுத்து,-பலர்க்கும் பகுத்தளித்து உண்ண வேண்டும்; பிறர் பசி போக்கவேண்டும்; விருந்தோம்ப வேண்டும்; விருந்தோம்புபவர்க்குப் பசி, வறுமை போன்ற எந்தக் கெடுதியும் வராது; அவர் குடும்பம் மேன்மேலும் ஓங்கும்; அவர் நிலத்தில் விதைக்காமலேயே விளைவு பெருகலாம்; விருந்தோம்பியவரைத் தேவரும் யாவரும் போற்றுவர்- முதலிய கருத்துகளை ஒப்புரவறிதல், ஈகை, விருந்தோம்பல் முதலிய பகுதிகளில் உள்ளத்தைத் தொடும்படி மிகவும் உருக்கமாகக் கூறியுள்ளார் வள்ளுவனார்.

இத்தகைய கருத்துகளை வள்ளலாரவர்கள் பல பாடல் களிலும் உரைநடைப் பகுதிகளிலும் மிகவும் உள்ளம் நெகிழ்ந்து உரைத்துள்ளார்.

''உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்
உறுபசி உழந்துவெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திடுந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடம்பும்
எரிகின்ற தென்செய்வேன் அந்தோ
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்''-

''பசியினால் இளைத்தே வீடுதோறிரந்தும் பசியறாது
அயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்''-

என்பன வள்ளலாரின் வாய்மொழிகள். 'சீவகாருண்ய ஒழுக்கம்' என்னும் உனரநடைப் பகுதியிலே, வள்ளலார்

திருக்குறள் கருத்துகட்கு அப்படியே ஒத்த உருவம் தந்துள் ளார். இதோ அது:-

'பசித்தவர்களுக்குப் பசியாற்றுவதே விரதமாகக் கொண்ட சீவகாருண்யம் உள்ளவருக்குக் கோடையில் வெயில் வருத்தாது; மண்ணும் சூடு செய்யாது; அவர்கள் கள்ளர் களாலும் பகைவர்களாலும் கலக்கப்படார்கள்; அரசர் களாலும் தெய்வங்களாலும் அவமதிக்கப்படார்கள். சீவ காருண்யம் உள்ளவரது விளை நிலத்தில் முயற்சி இல்லா மலேயே விளைவு மேன்மேலும் உண்டாகும். எப்படிப்பட்ட துன்பமும் சத்தியமாக வராது. உயிர்களைப் பசி என்ற பிணியினின்றும் நீங்கச் செய்கின்ற உத்தமர்கள், தேவர் -முனிவர் முதலிய யாவராலும் வணங்கத் தக்க சிறப் புடையர்'-'இது வள்ளலார் அருளிய உரைநடைப் பகுதி.

வள்ளலார் பிறர் பசி நீக்குவதைப் பற்றி எழுதிய தோடு-பேசியதோடு நின்றுவிடவில்லை; செய்கையிலும் பின்பற்றி அறச்சாலை அமைத்து 'வள்ளலார்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார்.

சமூகம் என்பது=ஆறறிவு படைத்த மக்கட் கூட்டம் என்பது இக்காலத்து அறிஞர்களின் பொருள். ஆனால், 'ஓரறிவு பெற்ற மரம் செடி கொடி முதல், ஆறறிவு பெற்ற மக்களினம் வரையு முள்ள உயிர்களின் கூட்டம் முழுவதும் சமூகம்'-என்பது வள்ளலாரும் வள்ளுவனாரும் கண்ட பொருள் ஆகும். அதாவது, 'ஆன்ம நேய ஒரு மைப்பாடு' ஆகும். அது, இனி, சமூகம் என்பது நில உலகோடு நிலா உலகம், செவ்வாய் உலகம் போன்றனவும் சேர்ந்தது என்று சொல்லக் கூடிய காலம் வருமோ என்னவோ!

அடுத்து,-உயிர்க் கொலையையும் புலால் உண்ணலை யும் வள்ளுவரைப் போலவே வள்ளலாரும் வன்மையாகக்

கண்டித்துள்ளார். கடவுளின் பெயராலும் வேள்வியின் பெயராலும் கூடக் கொலை கூடாது; தன்னுயிர் போல் மன்னுயிரைக் கருத வேண்டும். பிற உயிர்கட்கு வந்த நோயைத் தனக்கு வந்த நோயாகவே எண்ணி ஆவன புரிய வேண்டும். இன்றேல் பகுத்தறிவால் பயனில்லை -என்பது அவர்களது சமூகக் கோட்பாடு.

''கொலை வினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து'' (329)

''அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று'' (259)

''அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போல் போற்றாக் கடை''-(315)

என்னும் திருக்குறள் பாடல்களும்,

''கோடாது கொல்லா விரதமது கொள்ளாரைக்
காணில் ஒரு புல்லாக எண்ணிப் புறம்பொழிக''

''உயிர்க் கொலையும் புலைப் புசிப்பும் உடையார்
கள் எல்லாம்
உறவினத்தா ரல்லர் அவர் புறவினத்தார்''

''வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின் றோரென்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடில் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்''

என்னும் திருவருட்பாப் பாடல்களும், வள்ளுவர் உள்ளத்தின் மறு பதிப்பே வள்ளலார் உள்ளம்-என்பதற்குப் போதிய சான்றுகளாம். மேற்கூறிய பண்பினை உளவியலார் (Psychologists) 'சிம்பத்தி' (Sympathy) அதாவது ஒத்துணர்வு- உணர்ச்சி ஒருமைப்பாடு என்கின்றனர். இதைத்தான் வள்ளுவர் 'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்' (214) என்னும் குறளில் குறிப்பிட்டுள்ளார்.

சுருங்கக் கூறின், வள்ளலாரும் வள்ளுவரும் கண்ட சமூகக் கோட்பாடு 'ஒரே உலக ஒருமைக் கோட்பாடே' யாகும். இப்போதுள்ள ஐ.நா. நிறுவனத்தின் ஒரே உலகக் கொள்கைப் பணியை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே திருவள்ளுவர் தொடங்கிவிட்டார். சான்றாக, வள்ளுவரின் பொது மறையிலுள்ள 'ஒப்புரவு அறிதல்' என்னும் தலைப்பு ஒன்றே போதுமே! 'ஒப்புரவு அறிதல்' என்றால். 'தம்மால் இயன்ற எல்லையளவு உலகிற்கு உதவி செய்து உலகத்தோடு ஒத்து வாழ்தலை அறிந்து நடத்தல்' என்பது பொருளாம். 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்னும் குறள் பகுதியும் ஈண்டு நினைவுகூரத் தக்கது

வள்ளுவனாரின் இந்த உயரிய சமூகக் கோட்பாட்டினை வள்ளலாரின் பாடல்களில் பரக்கக் காணலாம். இதோ சில:-

> "ஒருமையிற்கலந்தே உள்ளவாறு இந்த
> உலகெலாம் களிப்புற்று ஓங்குதல்
> என்று வந் துறுமோ—"

> "உலகத் திரளெலாம் மறுவறக் கலந்து
> வாழ்வதற்கு வாய்ந்த தருணம் இது என்றே
> வாயே பறையாய் அறைகின்றேன்-"

"இவ்வுல கெலாம் நன்றே ஒருமையுற்று வாழி"-
"ஒருமையின் உலகெலாம் ஓங்குக என்றே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்"-

இவ்வாறாக ஒரே உலகக் கோட்பாடு கண்ட வள்ளலார், 'சமரச சன்மார்க்க சங்கம்' என்னும் 'ஒருமை நன்னெறி இயக்கம்' தொடங்கிப் பணி புரிந்தமை உலகறிந்த செய்தி.

பட்டி தொட்டிகளிலெல்லாம் நிறுவனங்கள் அமைத்து மக்கள் தெய்வமாகப் போற்றி வருகிற வள்ளுவரும் வள்ளலாரும் ஒன்றிய உள்ளத்துடன் கண்ட சமூகக் கோட்பாடாகிய 'ஒரே உலக ஒருமை நன்னெறி இயக்கம்' ஓங்கி வளர்க!

நகைச் சுவைப் பகுதி

# 11. பழமைப் பைத்தியங்களைப் பார்ப்போமே!

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த சொரூபியாய்-சச்சிதானந்த ரூபியாய், அண்ட சராசரங்கள் அனைத்திலும் நீக்கமற நிறைந்து நிற்கும் எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருட் பெருக்கினாலே, இந்தச் சபையிலே சப்த சமுத்திரங்களும் திரண்டு வந்தாற்போல் பெருந்திரளாய்க் கூடியுள்ள பேரன்பர்களே! தாய்மார்களே! தந்தைமார்களே! உங்கள் பாதாரவிந்த கமலங்களுக்குப் பணிவான வணக்கம். இப்போது இந்த சத்சங்கத்திலே

சாயிபாபா அவர்களுடைய மகிமையைப் பற்றிப் பேச வந்திருக்கும் நான் இந்த ஊருக்கு வந்திருப்பது இது முதல் தடவையல்ல-ஐந்தாவது தடவையாகும். இதற்கு முன் நான்கு முறை இந்த ஊருக்கு விஜயம் செய்துள்ளேன். எப்பொழுது என்று கேட்கின்றீர்களா! இதோ விவரமாகச் சொல்லுகிறேன்:

நான் இந்த ஊருக்கு முதல் தடவை வந்தபோது எனக்கு வயதும் முப்பது-வருஷமும் ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பது. அப்போது இந்த ஊரில் பெரிய காற்று மழை அடித்து வெள்ளமும் வந்து விட்டது. நான் ஒன்றும் பிரசங்கம் செய்ய முடியாமல் தெண்டச் சோறு தின்று விட்டுச் சும்மா திரும்பிவிட்டேன்.

நான் இந்த ஊருக்கு இரண்டாவது முறையாக வந்தது, ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தாறு-மே மாதம் என்று நினைக்கிறேன். அப்போது நான் பிரசங்கம் செய்வதற்காக வரவில்லை. என் பெரிய மாமாவின் பேர்த்தி நாத்தனார் ஓரகத்தி மகளுடைய பாணிக்கிரகண விவாக சுப முகூர்த்தத்திற்காக வந்தேன். இந்த ஊராரின் விருந்தோம்பும் பண்பை அப்போது தான் தெரிந்து கொண்டேன். எவ்வளவு பலமான விருந்து தெரியுமா! வாய் சாப்பிட்டது, வயிறு வாழ்த்துகிறது. யேவ்!

இவ்வாறாகச் சொற்பொழிவாளர் திருவாளர் திருப்புளிசாமியவர்கள் பேசிக்கொண்டிருந்த பொழுது, 'ஐயா பழைய கதையே பேசிக் கொண்டிருக்கிறீர்களே! இப்போது வந்த கதையைப் பேசுங்கள்!' என்று கூட்டத்தின் நடுவிலிருந்து ஒரு குரல் எழுந்தது.

இப்படியாகச் சொற்பொழிவாளர் சிலர் கூட்டத்தில் பேசத் தொடங்கிவிடின், தொடக்கத்தில் நெடுநேரம்பழைய

கதையையே பேசிக் காலத்தைக் கழிப்பார்கள். தொடக்கத்தில் மட்டுமா? இடையிடையேயும் வேண்டாதன பேசிக் காலத்தை வீணடிப்பார்கள். உப்புமா கிண்டுவதைப் பற்றி அரைமணி நேரமும்,புளிச்ச கீரை கடைவதைப் பற்றிஅரை மணி நேரமும் பேசுபவர்களும் உளர். பழமை பேசித் திரிவோர், அந்த நேரத்தில் வேறு நல்ல கருத்துகளைச் சொன்னால் எவ்வளவு நன்மையாக இருக்கும்?.

அதோ திருவாளர் உலகளந்த பெருமாள் வருகிறார்; அவரையும் சந்தித்துப் பேசிப் பார்ப்போம்.

"காலையிலே அண்ணன் எங்கே போய் வருகிறீர்கள்?

"எங்கே என்றா கேட்கிறீர்கள்? ஓட்டலுக்குத்தான் போய் வருகிறேன்."

"ஏன், வீட்டில் அண்ணி ஒன்றும் பலகாரம் செய்ய வில்லையா?"

"அவளா? இரண்டு நாளாய்க் காலையிலே வெறுங் காப்பி சாப்பிடுகிறேனே- இன்றைக்காவது உளுந்தும் அரிசியும் ஊறப் போட்டு மாவு அரைத்து நாளைக்கு இட்டலி செய்து கொடுக்கக் கூடாதா?-என்று நேற்று அவளைக் கேட்டேன். அதற்கு அவள், 'எனக்கு உடம்பு போத வில்லை; நீங்கள் மாவு அரைப்பதா யிருந்தால் உளுந்தும் அரிசியும் ஊறப்போடுகிறேன்!என்று கண்டிப்பாய்ச்சொல்லி விட்டாள். எத்தனை நாளைக்குத்தான் நான் அரிசியும் உளுந்தும் அரைத்துப் போடுவேன்? எனவே இன்றைக்கு ஓட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டு வருகிறேன்"

"ஓகோ அப்படியா! அதுவும் ஒரு வகையில்நல்லதுதான்! வீட்டிலே என்றால் வெற்று இட்டலிதானே கிடைக்கும்? ஓட்டலிலே நாலாவிதப் பலகாரங்களும் சாப்பிட்டுப் பார்த்திருப்பீர்களே!"

"நீங்க ஒண்ணு! ஓட்டலிலே நாலாவிதப் பலகாரம் என்ன வேண்டிக் கிடக்கிறது. அந்தக் காலத்து அரை யணாத் திட்டு அளவு இட்டலி இப்போது ஐம்பது காசாம். காலனாத்திட்டு அளவு வடை எண்பது காசாம்! விலை வாசி என்ன அநியாயம் போங்கோ! அந்தக் காலத்திலே நான் சின்ன பையனாயிருந்தபோது, இதைவிடப் பெரிய இட்டலி-பெரிய வடை விற்கப்பட்டன. ஒரு ரூபாய்க்கு நூற்றுத் தொண்ணூற்றிரண்டு இட்டலி-ஒரு ரூபாய்க்கு நூற்றுத் தொண்ணூற்றிரண்டு வடை-என்ன அற்புதமா யிருக்கும் தெரியுமா?

"அப்படியா! நீங்கள் சொல்வது ஒன்றும் விளங்க வில்லையே. ரூபாய்க்கு நூற்றுத் தொண்ணூற்றிரண்டு என்றால் என்ன? புரியவில்லையே,'

"அதுவா? இப்போது ஒரு ரூபாய்க்கு நூறு காசு(பைசா). அப்போது வெள்ளைக்காரன் காலத்தில்ரூபாய்க்கு நூற்றுத் தொண்ணூற்றிரண்டு காசு. ஒரு காசுக்கு ஓர் இட்டலி-ஒரு காசுக்கு ஒரு வடை; அதைத்தான் சொன்னேன்-ரூபாய்க்கு நூற்றுத் தொண்ணூற்றிரண்டு, இட்டலி-ரூபாய்க்கு நூற்றுத்தொண்ணூற்றிரண்டு வடை என்று?"

"சரி புரியுதுங்கோ! ஆபீசுக்கு நேரமாகிறது-நான் போய் வருகிறேன்"

"போகலாம் இருங்கோ! இதை மட்டும் கேட்டுவிட்டுப் போய் விடுங்கோ! அந்தக் காலம் எவ்வளவு நயத்தகாலம் தெரியுமா? பர்மா நொய்யரிசி ஒரு ரூபாய்க்குப் பட்டணம் படியாலே இருபது படி விற்றதுங்கோ! உளுந்து ரூபாய்க்குப் பட்டணம் படியர்லே எட்டுப் படி! புளி ரூபாய்க்குப் பதினாறு தூக்கு! பிண்ணாக்கு ஐந்து தூக்கு! சீயக்காய்ப் (சிகைக்காய்ப்) பொடி விலை ரொம்ப சரசம்! விளக்கெண் ணெய் விலையோ ரொம்ப-ரொம்ப சகாயம்!''

“சரி சரி. அதையெல்லாம் இப்போது பேசிப் பெரு மூச்சு விட்டு என்ன பயன்? ஆளைவிடுங்கள்- ஆபீசுக்குப் போகவேண்டும். உங்கள் புளி-பிண்ணாக்கு விலையையும் விளக்கெண்ணெய்-சீயக்காய்ப் பொடி விலையையும் இப் போது கேட்டுக்கொண்டிருக்க நேரமில்லை. நான் வருகி றேன்”.

“இந்தாங்கோ-இந்தாங்கோ! அந்தக் காலத்து மய்யக் (மரவள்ளிக்) கிழங்கு விலையையும் மண்ணெண்ணெய் விலையையும் கேட்காமல் போகிறீர்களே! சரி, சாயந்தர மாவது வந்து கேளுங்கோ”

இப்படியாக, உயர்திருவாளர் உலகளந்த பெருமாள் அவர்கள் எங்கேயும் யாரிடமும் பழைய காலத்து விலை வாசிப் பெருமையையே விடாது பிதற்றிக்கொண்டிருப்பது வழக்கம். அது, ஒரு முடிவுக்கு வராமல் தொடர் கதை யாய் நீண்டு கொண்டே போகும். அதை இப்போது பேசிப் பேசி என்ன பயன்?

ஒருவாறு திருவாளர் உலகளந்த பெருமாளின் தொண தொணப்பைத் தொலைத்துக்கட்டி அப்பால் நழுவுவோமே யானால், உயர் திருவாளர் ஒப்பிலாமணியவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம்-இல்லையில்லை-சங்கடம் ஏற்பட்டு விடுகிறது.

ஒரு பெரிய கும்பிடு போட்ட உயர்பெருந்திரு ஒப்பிலா மணியவர்கள் நம் கையிலுள்ள செய்தித்தாளைப் பார்த்து விடுகிறார். ‘பேப்பரிலே என்ன விசேஷங்க? “என்று ஒரு போடு போடுகிறார். பேப்பரிலா விசேஷம் நடக்கிறது? எங்கெங்கோ ஏதேதோ நடக்கிறது-அதை அதைப் பேப்ப ரிலே போடுகிறார்கள்-அவ்வளவு தான். எது எப்படியிருந்த போதிலும் ஒப்பிலா மணிக்கு ஒரு செய்தியாயினும் எடுத் துச் சொல்லாவிட்டால் அவர் விட மாட்டார். எதையா

வது சொல்லி வைக்க வேண்டுமே என்பதற்காக ''அப்; போலோ' பதின்மூன்றைக் கிளப்புகிறோம்.

'பாருங்கள் ஒப்பிலாமணி! அப்போலோ பதின்மூன்றிலே பிராணவாயு டேங்கு வெடித்துங் கூட, விண்வெளி வீரர்கள் மூவரும் திறமையுடன் விண்ணிலே பறந்து மண்ணிலே வந்து சேர்ந்து விட்டார்களே? இது மிகவும் வியப்பாயில்லையா? இதைப் பற்றிய விவரம் இன்றைய செய்தித் தாளில் விரிவாகப் போடப்பட்டுள்ளது. இந்தக் காலத்து விஞ்ஞானத்தின் பெருமையை என்னவென்று பாராட்டுவது'-என்று நாம் சொல்கிறோம். இதைக் கேட்டதும், ஒப்பிலா மணி ''குதி-குதி' என்று குதிக்கிறார். இந்தக் காலத்துவிஞ்ஞான அருஞ்செயல்கள் அந்தக்காலத்திலேயே நடந்திருப்பதாக மீசையை முறுக்குகிறார். இதோ, அவர் பேசத் தொடங்கி விட்டார்.

''என்ன சார் இது! இந்தக் காலத்திலே தானா விண்ணிலே பறக்கிறார்கள்? அந்தக் காலத்திலேயே ஆகாயத்திலேபறக்கவில்லையா என்ன! இராமாயணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இராவணன் விமானத்தின் மூலம் விண்ணிலே சஞ்சரிக்க வில்லையா? அனுமார் விமானம் இல்லாமலேயே வானத்தில் 'தாவு-தாவு' என்று தாவ வில்லையா? சீவக சிந்தாமணியை எடுத்துக் கொள்வோம். மன்னன் சச்சந்தன் தன் மனைவியை மயில் பொறியில் வைத்து விண் வழியாகப் பறக்கச் செய்து வேற்றிடம் போகச் செய்ய வில்லையா? 'அப்போலோ சந்திர மண்டலத்திற்குத்தான் போகிறது. அதிலும் அப்போலோ பதின் மூன்று போக முடியாமல் திரும்பி வந்துவிட்டது. ஆனால், கணவனை இழந்த கண்ணகி விமானத்தில் ஏறி மோட்ச லோகத்தையே அடைந்து விடவில்லையா? ஏன், பெரிய புராணத்தையே எடுத்துக் கொள்வேமே! சுந்தர மூர்த்தி நாயனார் வெள்ளையானையின் மேலும் சேரமான் பெரு

மாள் நாயனார் குதிரையின் மேலும் ஏறிச் சவாரி செய்து விண் வழியாகக் கைலாசம் அடைய வில்லையா! சாதாரண் சந்திர மண்டலத்திற்குச் சென்று வருவதற்காக, அப்போலோவுக்குக் கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டி அழவேண்டியிருக்கிறதே! சுந்தரர் யானையின் மூலமாகவும் சேரமான் பொருமாள் குதிரையின் மூலமாகவும் ஒரு செலவும் இன்றி அதிலும் அந்த மிருகங்களுக்குத் தீனிச்செலவும் இன்றி மிகவும் எளிமையாகக் கைலாசத்திற்கே சென்றுவிட வில்லையா? இந்த இரு வகையில் எதுபெரிய சாதனை? நீங்கள் என்னவோ அப்போலோவைக் கட்டி அழுதுகொண்டிருக்கிறீர்களே''- என்று கூறி மேலும் தொடர்ந்துகொண்டிருந்தார் ஒப்பிலாமணி.

பழமையே பேசித் திரியும் ஒப்பிலா மணியவர்களிடம் நாம் பேசி ஒன்றும் உருப்படியாக முடியாது. மண்டை மறைகிற வரையிலும் அவரை யாரும் திருத்த முடியாது. அவரைக் கைகழுவி விட்டுவிட வேண்டியதுதான்!

அடுத்தபடியாக, இதோ, நமது பெருமதிப்பிற்கு உரிய இலக்கிய சாமியவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. அவர் என்னசொல்கிறார் என்று கேட்போமே!:

'வணக்கம் இலக்கிய சாமி'

'வணக்கம்-வணக்கம்'

'நான் மேல் நாட்டிற்குச் சென்று வந்த பிறகு இலக்கிய சாமியைச் சந்திக்கும் வாய்ப்பு இன்றுதான் கிடைத்தது-உங்களைத்தான் சொல்கிறேன்'.

'என்ன-மேல் நாட்டிற்குச் சென்று வந்தீர்களா? வெள்ளைக்காரன் நாட்டை மேல் நாடு என்றும், நமது நாட்டைக் கீழ்நாடு என்றும் சொல்வதை நான் ஒத்துக் கொள்ள முடியாது. நமது நாடுதான் மேல் நாடு'.

'மேல் நாடு என்பது மேற்கில் உள்ள நாடு என்ற பொருளில் அல்லவா வழங்கப் படுகிறது? நீங்கள் நினைக்கிறது போல அல்ல இலக்கியசாமி அது!

'எந்தப் பொருளிலாயினும் சரியே. மேல் நாடு என்று வெள்ளையன் நாட்டைக்குறிப் பிடுவதை நான் ஒரு போதும் ஒத்துக்கொள்ள முடியாது: நம் நாட்டில் பலருக்கு நாட்டுப் பற்றே கிடையாது. அயலான் நாட்டையே புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தெரியாதது வெள்ளையனுக்குத் தெரிந்து விட்டதா என்ன! அவன் இன்றைக்குத் தெரிந்து கொண்டதை நாம் அந்தக் காலத்திலேயே தெரிந்து கொண்டோமே! அவன் இன்றைக்குக் கண்டுபிடித்ததை நாம் அந்தக் காலத்திலேயே கண்டு பிடித்து விட்டோமே! உதாரணமாகப் பாருங்கள்! அவர்கள் துப்பாக்கி கண்டுபிடித்தது கொஞ்ச காலத்திற்கு முன்புதான். நம் நாட்டிலோ துப்பாக்கி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது. ஒரு திருக்குறளில் துப்பாக்கி சொல்லப்பட்டிருக்கிறது. குறளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை" (12)

இந்தக் குறளில் துப்பாக்கி சொல்லப்பட்டிருக்கிறது, பாருங்கள்! மேலும் சிலர், இந்தக் காலத்தில்தான் 'காப்பி' கண்டு பிடிக்கப்பட்டதாகச் சொல்கின்றனர். அந்தக் காலத்திலேயே காப்பி இருந்தது- அந்தக் காலத்திலேயே நம் நாட்டார் காப்பியை ஆற்றிச் சாப்பிட்டார்கள்-என்பனவற்றையெல்லாம் இவர்கள் அறியார்கள்போலும்! தொன்மைக் காலத்திலேயே காப்பி இருந்தது என்பதைத் தொல்காப்பியர் என்னும் பெயர் அறிவிக்கவில்லையா? அந்தக் காலத்திலேயே காப்பியை ஆற்றிச்சாப்பிட்டனர்

என்பதற்கு, 'காப்பியாற்றுக் காப்பியனார்' என்னும் சங்கப் புலவரே சான்றாக மாட்டாரா? நம்மவர்கள் அந்தக் காலத்திலேயே அகில உலகமும் சுற்றி வாணிகம் புரிந்து வந்தார்கள். பர்மாவின் தலைநகராகிய 'ரெங்கோன்' திருவாசகத்தின் பாயிரப் பாடலிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. இதோ பாடலைத் தருகிறேன்:-

"தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறியளிக்கும் வர்தவூ ரெங்கோன்
திருவா சகமென்னும் தேன்"-

இந்தப் பாடலிலே ரெங்கோன் சொல்லப்பட்டிருக்கிறது பாருங்கள். இப்படியாக, நம்முடைய பழைய இலக்கியங்களிலே இல்லாத செய்திகள் இல்லை-சொல்லாத பொருள்கள் இல்லை. மேலும், நமக்குத் தெரியாததை வெள்ளையன் ஒன்றும் கண்டுபிடித்து விடவில்லை. எல்லாம் அவன் வருவதற்கு முன்பே நம் நாட்டில் உண்டு. எனவே, நம் நடுதான் மேல் நாடு"

இவ்வாறாக இலக்கிய சாமியவர்கள் பெரும் போடு போடுகிறார். நாம் மணிக் கணக்கிலே பேசினாலும் அவரை மாற்ற முடியாது. குளிர்ச்சியாக அவருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு நழுவிவிட வேண்டியதுதான்.

இதோ இந்தப் பக்கம் திரும்பினால், இரண்டு சாமியார்கள் கையில் திருவோடு வைத்துக் கொண்டு உரையாடுவது கேட்கிறது. இவருள் சின்ன சாமியாரின் பெயர் 'காடு சுற்றிக் கழுவெளி ஆனந்தர்; பெரிய சாமியாரின் பெயரோ 'சர்வ ஜீரணானந்த சுவாமிகள்'. சின்ன சாமி பேச்சைத் தொடங்குகிறார்:-

'சர்வ ஜீரணானந்த சுவாமிகளே! இந்தக் காடு சுற்றிக் கழுவெளி யானந்தர், ஏதோ திருவோடு ஏந்திக் கொண்டு தெருவோடு வந்துவிட்டார் என்று மட்டமாக மதிக்கிறீர் களா? எங்கள் அப்பன்-பாட்டன் வாழ்ந்த பெருவாழ்வு தெரியுமா உங்களுக்கு? அந்தக்காலத்தில், சைகோனிலே ஒரு தெரு முழுவதும் எங்கள் தாத்தாவுக்குச் சொந்தமாக இருந்ததாம்.'

'ஓகோ! அப்படி யென்றால், அந்தத் தெரு முழுவதும் உங்கள் தாத்தா மட்டுந்தான் பிச்சை எடுக்கலாமா?'

'நான் அந்த அர்த்தத்தில் சொல்ல வில்லை சர்வ ஜீரணானந்த சுவாமிகளே! உங்களுக்குப் பிச்சை எடுக்கும் புத்தியே எப்போதும் முனைப்பா யிருக்கிறது; சைகோனிலே ஒரு தெரு முழுவதும் எங்கள் தாத்தாவுக்குச் சொந்தம் என்றால், அந்தத் தெருவில் உள்ள வீடுகள் எல்லாம் எங்கள் தாத்தாவின் சொந்த உடைமையாம். தாத்தா இருக்கட்டும்! எங்கள் அப்பாவுக்குப் பர்மாவிலே ஒரு பெரிய எஸ்டேட்டே இருந்ததாம். நான் சின்ன வயதிலே தண்ணீரே குடித்த தில்லையாம். தண்ணீருக்குப் பதில் பசும்பால்தான் எனக்குத் தருவார்களாம். சோறே எனக்குத் தெரியாதாம், பாதாம் அல்வா-பாதாம் பர்பி-பாதாம் பூரி-எல்லாம் 'பாதாம் பாதம்' தானாம் எனக்கு! என்னவோ என் தலைவிதி-இப்போது மக்கிப் போன பழையதுகூட போடமாட்டேன்-என்கிறார்கள்'-

காடு சுற்றிக் கழுவெளி யானந்தரின் இந்தப் புலம்பலை யடுத்து, சர்வ ஜீரணானந்த சுவாமிகள் தொடங்குகிறார்.

'இதைச் சொல்கிறீர்களே கழுவெளி யானந்தரே! இந்தச் சர்வ ஜீரணானந்த சுவாமிகளின் பெருமையைச் சொன்னால், அப்படியே அசந்துபோய் விடுவீர்கள்-மூச்சைக் கீழே போட்டு விடுவீர்கள். அந்தக் காலத்தில்

எங்கள் பாட்டனார் எண்பது ஊர்களுக்கு ஜமீன்தாராம். எங்கள் தகப்பனார் முதல் முதலாக முதல் மந்திரி பதவி வகித்தாராம். இளமையிலே என் கால்கள் தரையிலேயே பட்ட தில்லையாம்'.

'ஏன், கால் அடியிலே ஏதாவது புண் இருந்ததா சர்வ ஜீரணானந்த சுவாமிகளே! கால்களைத் தரையிலே வைக்கமுடியா தென்றால், உங்கள் தலை மேலேயே வைத்துக் கொண்டு இருந்திருப் பீர்களோ?'

'இல்லை சுவாமி! அவ்வளவு செல்லம் எனக்கு. என்னை யாரும் நடக்கவிட மாட்டார்களாம். ஒருவர் மாற்றி ஒருவர் தூக்கிவைத்துக் கொண்டே யிருப்பார்களாம். எங்கே செல்வதா யிருந்தாலும் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டிதானாம்! என் உடம்பு முழுதும் வைர நகைகளாம். நான் நகைகளைக் கழற்றி எறிந்து காகத்தை ஓட்டு வேனாம். இப்போது என்னடா என்றால், ஒவ்வொரு வீட்டு வாசற்படியிலும் பையன்கள் கல்லைப் போட்டு என்னை ஓட்டுகிறார்கள்-எல்லாம் என் தலைவிதி!'

இவ்வாறாக, தம் முன்னோர்களின் செல்வ வாழ்க் கையை ஒன்றுக்கு ஒன்பதாகப் பெருக்கிச் சொல்லிப் பழம் பெருமை பேசித் திரிவோர் பலர். அடுத்து, மறுபக்கம் திரும்பினால், மாடசாமியவர்கள் தம் இளமைக்காலத்து மறச் செயல்களைப் படிமரக்கால் போட்டு அளக்கிறார்:

'என்ன-இந்தக் காலத்துப் பையன்கள் புல் தடுக்கி னால் விழுந்து விடுகிறார்கள். கிழவர்கள் போல் கூன் வளைந்து-கன்னம் குழி விழுந்து பார்க்கப் பரிதாபமாக இருக்கிறார்கள். ஒரு பர்லாங்கு தூரம் கூட இவர்களால் நடக்க முடியவில்லை. அந்தக் காலத்திலே நான் சிறுவனா யிருந்தபோது எப்படி யிருந்தேன் தெரியுமா? எங்கள்

ஊரில் ஒரு தென்னைமரம் பாக்கி விடாமல் ஏறி இறங்குவேன்; ஒரு கிணறு பாக்கிவிடாமல் இறங்கி ஏறுவேன். எவ்வளவு உயரமான மதிலாயிருந்தாலும் எகிறிக் குதிப்பேன். ஏற்றக்கட்டையின் மேலே ஏறி மடுவிலே குதித்து மண் எடுத்து வருவேன். கையை ஊன்றாமல் கரணம் போட்டுக் கொண்டே போவேன். கீழே நின்றபடியே தென்னை மரத்தைப் பிடித்து உலுக்கி னேனே யானால். தேங்காய்கள் 'தொப்-தொப்' என்று கீழே விழும். நல்ல பாம்பு புற்றிலே கையை விட்டுப் பாம்பை வெளியே இழுத்துக் 'கர-கர' என்று சுற்றிக் கீழே அடிப்பேன். ஒரு குத்து விட்டேனேயானால், எப்பேர்ப்பட்ட கிங்காங் தாராசிங்கும் குட்டிக் கரணம் போட்டுக் குப்புறக் கீழே விழுவார்கள். மாடு பிடி சண்டை யாகிய சல்லிக் கட்டில், எப்பேர்ப்பட்ட முரட்டுக் காளை களையும் கொம்புகளைப் பிடித்து முறுக்கிக் கீழே அடித்து விடுவேன். இட்டலி சாப்பிடும்போது, மிளகாய்ப் பொடிக்கு மற்றவர்கள் போல் செக்கில் ஆடிய எண்ணெயை விட்டுக் கொள்ளமாட்டேன்-பச்சை எள்ளைக் கையால் பிழிந்து எண்ணெய் வழியச் செய்து விட்டுக் கொள்வேன். அந்தக் காலத்திலே அப்படியெல்லாம் செய்தவன் நான்!-

இப்படியாகத் தங்கள் இளமைக் காலத்து வீரச் செயல்களைப் பற்றியே பெருமையாகப் பேசிக்கொண் டிருப்பார்கள் சிலர். பழம் பெருமை பேசித் திரிவாருள் இன்னும் பல வகையினர் உண்டு. இப்போது ஒன்றும் தாங்கள் ஆக்க வேலை புரியாமல், வெட்டியாக முன் னோரின்-முற்காலத்தின் பழம் பெருமையை மட்டும் பேசிக் கொண்டிருப்பது பைத்தியக்காரத்தனமாகும்.

ஆனால், பழம் பெருமையை அறவே'பேசக்கூடாது என் றும் சொல்வதற்கில்லை. வரலாறு படிப்பது எதற்காக? வரலாறு படித்ததின் பயனாகப் பழைய நிகழ்ச்சிகளை

நினைவுக்குக் கொண்டு வந்து, அவற்றை அடிப்படை அனுபவ மூலதனமாகக் கொண்டு வைத்துக் கொண்டு, அவற்றால் கிடைக்கும் படிப்பினைகட்கு ஏற்ப, எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட்டு ஆக்கச் செயல்கள் புரிந்து நல்வாழ்க்கை நடத்துவதே வரலாறு படிப்பதின் நோக்க மல்லவா? எனவே, எந்தத் துறையில் நாம் பழம் பெருமை பேசுவதாயினும் அதற்கு ஓர் அளவு இருக்கவேண்டும். அவ்வாறு பேசுவதும், எதிர்கால வாழ்க்கைக்குப் பயனளிக் கத்தக்க படிப்பினையை உணர்த்துவதாக இருக்கவேண் டும். சுருங்கச் சொல்லின், பழம் பெருமை பேசுவது, உணவுக்கு உப்பு அமைவது போல் உரையாடலில் அளவாக இருக்கவேண்டும். அதோடு, ஆக்கத்திற்கு அடிகோலுவ தாகவும் அமையவேண்டும்.

**குறிப்பு**:- இந்தக் கட்டுரை நகைச் சுவைப் பகுதியா தலின், உரையாடும் பேச்சு நடையில் எழுதப்பட்டுள்ளது.

**தமிழ்ச் சங்கப் பகுதி**

# 12. நெடுந் தொகை - தொகுப்புக் கலை

**திரட்டுக்கம்:**

உதிரிகளைத் திரட்டித் தொகுத்து வைக்கும் திரட் டுக்கம் (Acquisition) குழவி முதல் கிழவி கிழவன் வரை யிலான மக்களின் இயல்பூக்கங்களுள் (Instincts) ஒன்றா கும். உலக மயக்கத்திற்கு உட்பட்டு வேண்டாத பொருள் கள் பலவற்றை விரும்பி மிகுதியாகத் தொகுத்து வைப்ப தனினும், சிறந்த செய்யுள்களைத் தொகுத்து வைப்பது

ஒரு பெரிய கலை உணர்வாகும். இத்தகைய செய்யுள் தொகுப்புக் கலையுணர்வு, மக்களினத்தின் ஒரு பிரிவின ரிடையே பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இருந்த தெனின், அந்தப் பிரிவினர் பெரிதும் பாராட்டுதலுக்கு உரியவ ராவர்.

**ஆந்தாலஜி (Anthology)**

செய்யுள் தொகுப்புக்கலை ஆங்கிலத்தில் 'ஆந்தாலஜி' (Anthology) எனவும், பிரஞ்சில் 'ஆந்தொலொழி' (Anthologie) எனவும், இலத்தீனில் 'ஆந்தொலொழியா (Anthologia) எனவும் பெயர் வழங்கப்படுகிறது. இப் பெயர்கள், 'Αvθολoyia' என்னும் கிரீக் சொல்லிலிருந்து வந்தவையாகும். இந்த கிரீக் சொல்லுக்கு (ஆந்தொ-லொழியா)மலர்த் தொகுப்பு-மலர் மாலை (Flower gathe ring) என்று பொருளாம். பாமாலை என்னும் தமிழ் வழக்காறு ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

**உலகத் தொகை நூல்கள்:-**

கிர்க் மொழியில் கி.மு. முதல் நூற்றாண்டில், மெலீகர் (Meleagar) என்னும் கிரேக்க அறிஞர் தம் பாடல்களுடன் பிறர் பாடல்களையும் தொகுத்து 'மெலீகர் மாலை'(Garland of Meleagar) என்னும் பெயரில் முதல் தொகை நூலை உருவாக்கினார். இலத்தீனில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் 'ழோன்னெஸ் ஸ்டோபேயுஸ்' (Joannes Stobaeus) என்பவரால் செய்யுளும் உரைநடையும் கலந்த ஒரு தொகைநூலும், சம்சுகிருதத்தில் பத்தாம் நூற்றாண்டில் 'கவீந்த்ர வசன சமுச்சயம்' என்னும் தொகை நூலும், பிரெஞ்சில் பதினாறாம் நூற்றாண்டில் 'துய்பெல்லா' (Joachin du Bellay) என்னும் பிரெஞ்சு அறிஞரால் 'Voeu d'un Vanneur De Ble Aux Vents'(காற்றில் கோது மையைத் தூற்றிக் கொழித்தெடுப்பவனது விருப்ப

வெளியீடு) என்னும் தொகைநூலும், ஆங்கிலத்தில் பதினாறாம் நூற்றாண்டில் 'டாட்டல்' (Tottle) என்பவரால் 'Book of Songs And Sonnets' or' Tottle's Miscellany' என்னும் தொகைநூலும் முதல் முதலாகத் தொகுத்து உருவாக்கப்பட்டன.

**தமிழ்த் தொகையின் தொன்மை:**

தமிழில் தொகை நூல்களைக் குறிக்க மாலை, கோவை முதலியனவாக ஏறக்குறைய இருபது பெயர்கள் உள்ளன. தமிழில்,இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு, முன் தலைச் சங்க காலத்தில் பரிபாடல், களரியாவிரை முதலிய தொகை நூல்களும், இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன் இடைச் சங்க காலத்தில் கலி, வெண்டாளி, வியாழமாலை முதலிய தொகை நூல்களும், இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் நெடுந்தொகை, குறுந்தொகை முதலிய தொகை நூல்களும் தொகுத்து உருவாக்கப்பட்டன. சங்ககாலத்திற்குப் பின் எண்ணற்றவை தோன்றியுள்ளன.

**எட்டுத்தொகை:**

இப்பொழுது முழுதும் கிடைத்திருக்கும் தமிழ்த் தொகை நூல்களுள் மிகவும் பழமையானவை 'எட்டுத் தொகை' எனப்படும் கடைச் சங்க நூல்கள் எட்டுமாகும். இவற்றை,

> "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
> ஒத்தபதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல்
> கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம்புறம்என்று,
> இத்திறத்த எட்டுத் தொகை"

என்னும் பழம் பாடலால் அறியலாம். எட்டு நூல்களும் இந்தப் பாடலில் வரிசைப் படுத்தப்பட்டுள்ள முறை சரியன்று. இதற்கு முன்பே இறையனார் அகப்பொருள்

உரையில் எட்டுத்தொகை நூல்கள் பின் வருமாறு பெயர் தரப் பெற்றும் வரிசைப்படுத்தப்பெற்றும் உள்ளன: "அவர் களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந் தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறு நூறும் பதிற்றுப் பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும்...... என்று இத்தொடக்கத்தன."- என்பது அந்த உரைப் பகுதி

**நெடுந்தொகை:**

மேலே, அகநானூறு என்னும் நூல் 'நெடுந்தொகை நானூறு' என்னும் பெயருடன் முதலில் நிறுத்தப்பட்டுள் ளமை காண்க. எட்டுத் தொகை நூல்களுள் நெடுந்தொ கையே முதன்மையானது. "நெடுந்தொகை முதலாகிய தொகை யெட்டும் என்றவாறு"- என்னும் பேராசிரியரின் (தொல்காப்பியம்- செய்யுளியல்-236) உரைப் பகுதியும், "அவை நெடுந்தொகை முதலிய தொகை யெட்டுமாம்"- என்னும் நச்சினார்க்கினியரின் (தொல். செய்.236) உரைப் பகுதியும் மேலும் இதற்குச் சான்று பகரும்.

இந்நூலுக்கு அகநானூறு என்னும் பெயருக்கு முன்பு, நெடுந்தொகை என்னும் பெயரே வழங்கப்பட்டமையை, இந்நூலின் பாயிரப் பாடல்களில் உள்ள, 'முன்னினர் தொகுத்த நன்னெடுந் தொகைக்கு', 'தொகையில் நெடிய தனை' என்னும் பகுதிகளாலும் அறியலாம்.

**தொகுப்பு வரலாறு:**

இந்நூல் தொகுக்கப்பட்ட வரலாற்றைஆய்வோமாயின், இந்நூலின் முதன்மையும் 'நெடுந்தொகை' என்னும் பெயர்க் காரணமும் தாமே விளங்கும். கடைச் சங்க காலத்தில் எண்ணிறந்த ஆசிரியப் பாக்கள் உதிரிகளாகச் சிதறிக் கிடந்தன. அவற்றைச் சங்கத்தார் திரட்டினர். புறப்

பொருள் பற்றிய பாடல்களினும் அகப் பொருள் பற்றிய பாடல்களே மிக்கிருந்தன. வீடு திருந்தினால்தானே நாடு திருந்தும்! அவ்வகப்பொருள் பாடல்களுள் மிகவும் சிறந்தன வற்றைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்து நூலாக்க விரும் பினர். எல்லாவற்றையும் ஒரே நூலாகத் தொகுக்கின், நூலைக் கையாள்வதற்கும் தொடர்ந்து படிப்பதற்கும் தொல்லையாயிருக்கு மாதலின் பல நூல்களாகத் தொகுக்க லாயினர். கிடைத்திருந்த பாடல்களுள், அடியளவால் நீண்ட பாடல்கள், மிகவும் குறுகிய பாடல்கள், நடுத்தர மான பாடல்கள் என மூவகை யிருக்கக் கண்டனர். அம் மூவகைப் பாடல்களையும் ஒத்த எண்ணிக்கையில் மூன்று தனி நூல்களாகத் தொகுக்க விரும்பினர். ஒவ்வொன்றை யும் நானூறு பாடல்கள் வீதம் தொகுத்தால் ஏறக்குறைய ஒத்த எண்ணிக்கை வரும்போல் தோன்றியது. எனவே, ஒவ்வொரு வகை அளவிலும் நானூறு பாடல்கள் தேறும் படியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். மூன்று தொகை நூல்கள் உருவாகின. அவற்றிற்குப் பெயர் வைக்க வேண்டுமே!

பதின் மூன்று அடிகட்குக் குறையாமல் முப்பத் தோரடிவரையு முள்ள நானூறு நெடும் பாடல்களின் தொகுப்புக்கு ‘நெடுந்தொகை நானூறு’ எனப் பெயரிட்ட னர். நான்கு அடிக்குக் குறையாமல் எட்டடிக்கு மிகாமல் உள்ள நானூறு குறுகிய சிறிய பாடல்களின் தொகுப்புக்குக் ‘குறுந் தொகை நானூறு’ எனப் பெயர் வைத்தனர். இவ் விருவகை அளவுக்கும் இடைப்பட்டனவாய் ஒன்பதடிக்குக் குறையாமலும் பன்னிரண்டடிக்கு மிகாமலும் உள்ள நானூறு பாடல்களின் தொகுப்பு (நல்+திணை=)‘நற் றிணை நானூறு’ எனப்பட்டது. ஏதாவது ஒரு பெயர் வைத்தாக வேண்டுமல்லவா? இந்த மூன்று நூல்களை யும் இப்படி அடி வரையறை செய்யாமல், பத்தடிக்குக்

குறையாதவற்றை ஒரு நூலாகவும், படித்தடிக்குமேல் இருபதடிக்குக் குறையாதவற்றை இன்னொரு நூலாகவும், இருபதடிக்கு மேற்பட்ட வற்றை மற்றொரு நூலாகவும் தொகுத்திருக்கலாமே எனின்,-இந்த அடிவரையறையின் படி செய்தால், 'நானூறு பாடல்கள் வீதம்' என்ற ஒத்த எண்ணிக்கை தேறாமற் போகும். எனவேதான் இப்போ துள்ள முறை பின்பற்றப்பட்டது. நெடுந் தொகை என்னும் பெயர்க்காரணம் இப்போது விளங்கலாம்.

தொல்காப்பியத்தில், பாக்களுள் ஆசிரியப் பாவே முதலில் கூறப்பட்டிருத்தலானும், புறத்தினும் அகமே முதலில் பேசப்பட்டிருத்தலானும், எட்டுத் தொகை நூல் களுள் ஆசிரியப்பாவால் ஆன நெடுந்தொகை, குறுந் தொகை, நற்றிணை என்னும் அகப் பொருள் நூல்கள் முதலிடம் பெற்றன. இவற்றுள்ளும் அடியளவால் நீண்டி ருத்தலின் நெடுந்தொகை முதன்மை பெற்றது.

**எண் முறை:**

நெடுந்தொகை தொகுத்த முறையில் வியத்தற் கும் நயத்திற்கும் உரிய வேறொரு கலைத்திறன் உள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்தும் அகன் ஐந்திணைகள் எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இந்த அகன் ஐந்திணைகளையும் பற்றியது நெடுந்தொகை. இந்நூலிலுள்ள நானூறு பாடல் களையும் ஐந்திணைகளுக்கும் பங்கிட்டு எண் இட்டு வரிசைப்படுத்தி யிருக்கும் முறை ஓர் அருங்கலைச் செயலாகும்.

நானூறு பாடல்களில் நாற்பது பத்துப்பாடல்கள் ($10\times40=400$) உள்ளன. ஒவ்வொரு பத்திலும் ஒற்றைப் படையாக உள்ள ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என்னும் எண்கள் கொண்ட பாடல்கள் பாலைத்திணைக்கு

அளிக்கப்பட்டுள்ளன. இரட்டைப்படை எண்களுள் இரண்டு, எட்டு என்னும் இருவகை எண் கொண்ட பாடல்கள் குறிஞ்சிக்கும், நான்கு முல்லைக்கும், ஆறு மருதத்திற்கும் பத்து நெய்தலுக்குமாகப் பங்கிடப்பட்டுள்ளன. அஃதாவது,-ஒவ்வொரு பத்துப்பாடல்களிலும் பாலைக்கு ஐந்தும் குறிஞ்சிக்கு இரண்டும் முல்லை, மருதம், நெய்தல் ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றும் இருக்கும். எனவே, நானூறு பாடல்களிலும், பாலைக்கு இருநூறும், குறிஞ்சிக்கு எண்பதும், மற்ற வற்றிற்கு நாற்பது வீதமும் இருக்கும். இந்த எண் தொகுப்பு முறை மிகவும் வேலைப்பாடு கொண்ட ஒரு வகைக் கலைச் செயலாகும்.

**இரு பெருந் திணைகள்:**

நெடுந்தொகையில் பாலைத்திணைப் பாடல்கள் மிகுதியாய்த் தொகுக்கப்பட்டிருப்பது பற்றி ஒருசிறிது ஆராய வேண்டும். ஐந்திணைகளைக் குறிஞ்சி, பாலை என்னும் இருபெருந் திணைக்குள் அடக்கிவிடலாம். மருதத்தைக் குறிஞ்சியிலும், முல்லை நெய்தல் இரண்டையும் பாலையிலும் அடக்கலாம். குறிஞ்சி என்பது புணர்தல்; மருதம் என்பது ஊடுதல்; ஊடுதலின் முடிவு கூடுதல். குறிஞ்சியிலும் மருதத்திலும் தலைவன்-தலைவியர் இணைந்தேயிருப்பர். எனவே, ஊடுதலாகிய மருதத்தைக் கூடுதலாகிய குறிஞ்சியில் அடக்கலாம். அடுத்து,-பாலை என்பது பிரிதல்; முல்லை, பிரிந்து ஆற்றியிருத்தல்; நெய்தல், பிரிந்தபோது ஆற்றாது இரங்குதல். இம்மூன்றும் பிரிவு தொடர்பானவை யாதலின், முல்லையையும் நெய்தலையும் பிரிதலாகிய பாலையுள் அடக்கலாம். ஆகவே, ஐந்திணைகள், குறிஞ்சி, பாலை என்னும் இரண்டனுள் அடங்கும். "இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்" என்னும் தொல்காப்பிய (செய்யுளியல்-208) நூற்பா இதனைக் குறிப்பாய் உணர்த்துகிறது.

**பெரும்பான்மைக் கட்சி:**

இனிக் குறிஞ்சியும் பாலையும் பற்றி ஆய்வோம்: குறிஞ்சி புணர்தல்; பாலை பிரிதல். இவையிரண்டும் ஒன்றுக் கொன்று எதிர்மாறானவை. குறிஞ்சி என்னும் கட்சித் தலைவனுக்கு மருதத்தான் ஒருவன் மட்டுமே வாக்கு (VOTE) அளித்துள்ளான். பாலை என்னும் கட்சித் தலைவனுக்கோ முல்லையான், நெய்தலான் ஆகிய இருவரின் வாக்குகள் கிடைத்துள்ளன. குறிஞ்சியினும் பாலையே பெரிய கட்சி. இந்த அடிப்படையில் நோக்கின், நெடுந் தொகையிலுள்ள நானூறு வாக்குகளுள் (பாடல்களுள்) குறிஞ்சிக் கட்சிக்கு (குறிஞ்சி 80+மருதம் 40=120) நூற்றிருபது வாக்குகளும், பாலைக்கட்சிக்கு (பாலை 200+ முல்லை 40+ நெய்தல் 40=280) இருநூற் றெண்பது வாக்குகளும் கிடைத்துள்ளமை புலனாகும். பாலை, மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட பெரும் பான்மை (Majority) வாக்குகள் பெற்று மிகப் பெரிய கட்சியாக நெடுந் தொகையில் ஆட்சி செலுத்துகிறது.

பாலை பெற்றிருக்கும் பெரும் பான்மை, பாலைக்கு உரிய பிரிதலாகிய துன்பச் சுவைப் பாடலையே பெரிதும் மக்கள் விரும்பியுள்ளனர் என்பதை அறிவிக்கிறது.

**இன்பியல்-துன்பியல்:**

நாடகக் கதையினை இன்பியல் (Comedy), துன்பியல் (Tragedy) என இருவகையாகப் பிரித்துக் கூறுவர். இன்பமாக முடிவது இன்பியல். துன்பமாக முடிவது துன்பியல். குறிஞ்சியை இன்பியல் எனவும் பாலையைத் துன்பியல் எனவும் கூறலாம். இதனை, 'இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்' என்னும் தொல்காப்பிய (செய்யுளியல்-208) நூற்பா குறிப்பாய் உணர்த்துவது போல் இல்லையா?

முதலில் இன்பியலை மிகுதியாய் விரும்பிப் படிப்பவர்கள் அதில் தெவிட்டல் ஏற்பட, பின்னர்த் துன்பியலில் சுவை காணத் தொடங்குவர். புணர்ச்சி என்பது காம வெறியாட்டத்தின் விளைவு. பிரிவின் போதுதான் காதல் உணர்வு கொழுந்து விட்டுத் தளிர்த்துக் காணப்படும். காதல் சுவையின் உயர்ந்த 'எவரெஸ்ட்' கொடுமுடி எல்லையைக் காணவேண்டுமாயின், குறிஞ்சிப் பாடல்களினும் பாலைப் பாடல்களிலேயே மிகுதியாகக் காணமுடியும். எனவே, நெடுந்தொகையில் பாலைப் பாடல்கள் மிகுதியாய்த் தொகுக்கப்பட்டிருப்பதின் காரணம் புலனாகலாம்.

**முறை வைப்பு:**

தொல்காப்பியத்தில் (அகத்திணையியல்-5,9) முல்லை குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் வரிசையில் ஐந்திணைகள் முறைப்படுத்தப்பட் டுள்ளன. இதற்கு மாறாக, பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நெடுந்தொகையில் உள்ள முறைவைப்புப் பொருந்துமா? "முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச் சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே' என்னும்(தொல்-அகம்-5) நூற்பாவின் உரையில், 'சொல்லவும் படும்' என்னும் எதிர்மறை உம்மையால் இம்முறை மாற்றியும் சொல்லலாம் என்பது பெறப்படும் என்பதாக, இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் எழுதியிருப்பது காண்க.

நெடுந் தொகையில் ஒவ்வொரு திணையும் பலரால் பாடப்பட்டிருத்தலானும், ஒத்த எண்ணிக்கையில் இன்றி, 200,80,40,40,40 என்னும் வேறுபட்ட எண்ணிக்கையில் இருத்தலானும், இந்நூல் ஐந்து திணைகளுங்கலந்துதொகுக்கப்பட்டது. நெடுந்தொகை நானூறில் பாதிப் பாடல்கள் பாலையாயிருப்பதால் ஒன்று விட்டு ஒன்றாக ஒற்றை எண்

களில் பாலையை அமைத்தும், பாலைப்பாக்களின் இடை யிடையே ஒன்று விட்டு ஒன்றாக மற்ற பாக்களை அமைத் தும் தொகுத்துள்ள முறையின் அழகே அழகு! தமிழர்தம் பாடல் தொகுப்புக் கலையின் உயர் திறனுக்குச் சான்று பகர இஃதொன்றே போதுமே!

**மூன்று பிரிவுகள்:**

நெடுந் தொகைக் குள்ளேயே வேறொரு கலையழகும் விளங்குகிறது. மாமூலனார் முதல் உலோச்சனார் ஈறாக உள்ள புலவர்கள் நூற்றுநாற்பத்தைவரால் பாடப்பட் டுள்ள இந்நூலின் நானூறு பாடல்களும் மூன்று பிரிவுகளா கத் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் நூற்றிருபது பாடல்கள் 'களிற்றி யானை நிரை' என்னும் பெயரிலும், நூற்றிரு பத்தொன்று முதல் முந்நூறு வரையுமான நூற் றெண்பது பாடல்கள் 'மணிமிடை பவளம்' என்னும் பெயரிலும், இறுதி நூறு பாடல்கள், 'நித்திலக் கோவை' என்றும் பெயரிலும் தொகுக்கப்பட்டுத் தனித்தனி நூல் கள் போல் காட்சியளிக்கின்றன. இம் மூன்றின் பெயர்க் காரணம் தெளிவு செய்யப்பட வில்லை.

ஆண்யானை வரிசையைப் போல எடுப்பான நடையும் மிடுக்கான கருத்தமைப்பும் கொண்ட பாடல்களின் தொகுப்பு களிற்றியானை நிரை என்றும், நீலமணியும் செம்பவளமும் கலந்த மாலை போல நடையாலும் அமைப் பாலும் ஒரு சிறிது வேறுபட்ட பாடல்களின் தொகுப்பு மணி மிடை பவளம் என்றும், ஓரின முத்து மாலையைப் போல நடையாலும் அமைப்பாலும் ஒத்த பாடல்களின் தொகுப்பு நித்திலக் கோவைஎன்றும் பெயர் வழங்கப்பட்ட தாக ஒருவாறு காரணம் கூறலாம்.

பிற நூல்களில் இல்லாத இந்தப் பிரிவு முறை நெடுந் தொகை நானூற்றில் இருப்பது ஒரு கலைச் சிறப்பாகும்.

நெடுந் தொகை தொகுத்தவர், முதல் நூற்றிருபது பாடல்களைச் சீர்செய்து முதல் பாகம் என்னும் வறட்டுப் பெயருக்குப் பதிலாகக் 'களிற்றியானை நிரை' எனவும், அடுத்த நூற்றெண்பது பாடல்களை ஒழுங்கு செய்து இரண்டாம் பாகம் என்னும் வெறும் பெயருக்குப் பதிலாக 'மணி மிடை பவளம்' எனவும், இறுதி நூறு பாடல்களை அணிசெய்து மூன்றாம் பாகம் என்னும் சுவையற்ற பெயருக்குப் பதிலாக 'நித்திலக் கோவை' எனவும் பெயர் வழங்கியுள்ளார். நானூறு பாடல்களையும் அலுப்பு சலிப்பின்றி இடை வெளி தந்து படிப்பதற்கும், சுவடியை எளிதாகக் கையாள்வதற்கும் இந்தப் பிரிவினை வசதி செய்கிறது. இந்த மூன்று பிரிவுகளையும் மூன்று தனித்தொகை நூல்களாகக் கருதியவர் போல, நச்சினார்க் கினியர் தொல்காப்பிய உரையில் பல இடங்களில் இம்மூன்று பெயர்களையும் விதந்து குறிப்பிட்டுள்ளார். நெடுந்தொகையை மூன்றாகப் பகுத்ததுகூடப் பெரிதில்லை; மூன்றுக்கும் களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை என்னும் எடுப்பான கவர்ச்சியான இனிய அழகிய பெயர்களை வழங்கியிருப்பது ஒரு பெரிய கலைக்கூறு ஆகும்.

**தொகுப்பாளரும் காலமும்:**

நெடுந் தொகையைப் பாண்டியர் அவையிலே சங்கப் புலவர் தொகுத்ததாக நெடுந்தொகைப் பாயிரச் செய்யுள் கூறுகிறது. அச்செய்யுளின் அடியிலுள்ள உரைநடைப் பகுதியில், 'தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி; தொகுத்தான் உருத்திர சன்மன், எனக் கூறப் பட்டுள்ளது. பேராசிரியரும் (தொல்-செய்யுளியல்-149-உரை), நச்சினார்க் கினியரும் (மலைபடு கடாம்-உரை), தொகை நூல்களைச் சங்கத்தார் தொகுத்ததாகப் பொது வாகக் கூறியுள்ளனர். இதனால் அறியப் படுவதாவது,-

சங்கத்தார் பலரும் சேர்ந்து நூல் தொகுப்பு முயற்சியில் ஈடுப்ட்டனர். இன்னின்ன நூலை இன்னின்னார் சீர் செய்ய வேண்டும் எனப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. அதன் படி, பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் மேற்பார்வை யில் உருத்திர சன்மர் நெடுந்தொகையைத் தொகுத்தார்.

பாண்டியன் உக்கிரப் பெருவழுதி புலவராகவும் திகழ்ந் தார். நெடுந் தொகையில் அவர் பாடல் (26) ஒன்று உள்ளது. எனவே, நெடுந்தொகை, கி.பி. முதல் நூற்றாண் டிற்குள் தொகுக்கப்பட் டிருக்கவேண்டும். கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த நந்த மன்னரைப் பற்றிய செய்தி நெடுந்தொகையில் (251,265) கூறப்பட்டிருத்தலால், இந் நூல் கி.மு. நான்காம் நூற்றாண்டிற்குப்பின் தொகுக்கப் பட்டதாகும். பல சான்றுகள் கொண்டு பார்க்குங்கால், நெடுந்தொகை கி.மு. முதல் நூற்றாண்டில் தொகுக்கப் பட்டது எனக் கூறலாம்.

அகப்பொருள் நூல்களுக்குள் மிகச் சிறந்ததாதலின், அகம்-அகப்பாட்டு-அகநானூறு என்றெல்லாம் இந்நூல் விதந்து குறிப்பிடப்படும். நெடுந்தொகை நூல் தொகுப் புக்கலை வரலாற்றின் சுருக்கம் இது. பல மொழித் தொகைநூல்களைப் பற்றி ஆராய்ந்துள்ள அடியேனுக்கு, நெடுந்தொகைத் தொகுப்பளவு கலை நுட்பம், வேறு எம்மொழியிலுள்ள எந்தத் தொகை நூலிலும் இருப்பதா கத்தோன்றவில்லை. தமிழ்நூல் தொகுப்புக்கலை வாழ்க!

இலக்கிய வரலாற்றுப் பகுதி

# 13. பாரதி இலக்கிய வரலாறு

**1. முக்கூறுகள்:**

பாரதி இலக்கிய வரலாறு என்னும் தொடரில் மூன்று கூறுகள் பொதிந்துள்ளன. அவை:

(1) இலக்கியங்களைப் பற்றி மாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறியுள்ள வரலாற்றுக் குறிப்புகள்.

(2) பாரதியாரின் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள உலக வரலாற்றுக் குறிப்புகள்.

(3) பாரதியின் இலக்கியமே ஒரு வரலாற்று நூலாகும்.

**2. அடிப்படை உண்மைகள்:**

பன்னெடுங் காலமாக வரலாற்றை இலக்கியத்தின் ஒரு பகுதியாகவே பலர் எண்ணி வந்தனர். வரலாறு ஒரு நீதி இலக்கியம் என்பது அன்னாரது கருத்து. ஏன் இன்றுஞ் சிலர், வரலாற்றை, ஓர் இலக்கியம் போல் கற்பனை கலந்து எழுதுகின்றனர்; இத்தகைய படைப்புகளை வரலாறு அல்லது சரித்திரம் (சரிதம்-சரிதை)என்னும் பெயராலேயே வழங்குகின்றனர். எடுத்துக்காட்டாக, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, புரூரவச் சக்கரவர்த்தி வரலாறு, இராமசரிதம், குமண சரிதம், தமிழ் நாவலர் சரிதை முதலியன காண லாம்.

இன்னுஞ் சிலர், முற்றிலும் கற்பனைக் கதைகளாய் உள்ளனவற்றையும் சரித்திரம் என்னும் பெயரால் வழங்கு வர். இதற்கு ஏற்ற காட்டு, வேத நாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் படைப்பாகும்.

உலக மொழிகள் பலவற்றிலும் எழுந்த -கற்பனை கலந்த அல்லது முற்றிலும் கற்பனையான புராண- இதிகாச-காவியங்களும் வரலாறு போலவே கருதப்பட்டன. இவ்வாறாக, இலக்கியங்கள் வரலாறு போலவும் வரலாறுகள் இலக்கியங்கள் போலவும் தலைதடுமாறிக் காட்சியளிக்கலாயின.

## 2-1. வேறுபாடு:

ஒரு சிறிதும் கற்பனை கலவாது நடந்ததை நடந்தபடி அப்படியே அளிப்பது வரலாறு. மக்களினம் இப்படி வாழ வேண்டும்என அறிவுறுத்துவதற்காக, நடவாததை நடந்ததாகவோ,நடந்ததையே கூட இடையிடையே கற்பனை கலந்தோ தருவது இலக்கியம். இரண்டிற்கும் உள்ள வேறுபாடு இது எனலாம்.

வரலாற்றாசிரியன் எந்தச் சார்பும் இன்றி விழிப்புடன் நிகழ்ச்சிகளைத் துல்லியமாகத் தரக் கடமைப் பட்டவன். அவன், நிகழ்ச்சிகட்கு ஒரு சார்பு பற்றி ஏதேனும் சாயம் பூசத் தொடங்குவானே யாயின், அவனது படைப்பு வரலாறு ஆகாமல் இலக்கியம் எனப் பெயர் பெற்றுவிடும். முன்னரும் ஒரு கட்டுரையில் கூறியுள்ள இந்த அடிப்படை உண்மைகளைக் கருத்திற் கொண்டு, 'பாரதி இலக்கிய வரலாறு' என்னும் தலைப்பினை ஆய்வு செய்யவேண்டும்.

## 3.முக் கூற்று விளக்கம்:

தொடக்கத்தில் கூறியுள்ள முக்கூறுகளுள்முதலில் முதல் கூறினை எடுத்துக் கொள்வோம்:-

**3-1. முதல் கூறு**: இலக்கியங்களைப் பற்றிப் பாரதியார் கூறியுள்ள வரலாற்றுக் குறிப்பு முதல் கூறு. இலக்கியங்களின் வரலாறு என்பதில் மொழி வரலாறும் தன்னில் தானே அடங்கும். இதனை, 'தமிழ் மொழி இலக்கிய-

வரலாறு' (History of Tamil Language and Literature) என்னும் பெயரால், தமிழ்க் கல்வியாளரும் தமிழ் ஆய் வாளரும் வழங்குவது மரபு. பாரதியாரின் பாடல்களில் தமிழ் மொழி வரலாறு பற்றிய சில குறிப்புகள்' தரப் பட்டுள்ளன. அவை:-

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்"-

"தேமதுரத் தமிழ் ஓசை"-

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா"-(பாப்பா பாட்டு-12)

**தமிழ் மொழி வாழ்த்து:**

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழிய வே!

3-1-1.

மேலே தந்துள்ள பாடல்களில், தமிழ் இனிமை (மதுரம்) வாய்ந்தது; தமிழ்ச் சொல் உயர்ந்தது; தமிழ் வானளாவிய உலக மனைத்தும் அளந்தது-அறிந்தது-என் னும் மூன்று செய்திகள் தரப்பட்டுள்ளன. தமிழ் இனிமை யான மொழிதான். தமிழ் என்னும் சொல்லுக்குத் 'தமிழ் மொழி' என்னும் பொருள் இருப்பதன்றி, 'இனிமை' என் னும் பொருளும் உண்டு. இதனை,

"தமிழ் தழீஇய சாயலவர் (சீ. சிந்தாமணி-2026)

"இனிமை தழுவிய சாயலை உடையவர்" (நச்சி
னார்க்கினியரின் உரை

"தமிழினும் இனிய மென்மையவாகி" (கூர்மபுராணம்
-வானவர்-13)

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" (பிங்கல
நிகண்டு-3610

இன்ன பிற ஆட்சிகளால் அறியலாம்.

3-1-2.

அடுத்தது, தமிழ்ச் சொல் உயர்ந்தது என்னும் கருத்து. இலங்கை ஞானப் பிரகாச அடிகளார், (Rev.S. Gnana Prakasar,O.M.I.) தமது சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழ் அகராதி' (An Etymological and Comparative lexicon of the Tamil Language) என்னும் நூலில், தமிழ்ச் சொல்லோடு ஒத்த சொல் உருவங்கள் மற்ற இந்திய மொழிகளிலும் இருப்பதை எடுத்துக் காட்டியுள்ளார். அவர் நூல் முன்னுரையில் பின்வருமாறு கருத்துக் கூறியுள்ளார்:

"தமிழ்ச் சொற்கள், முதல் முதல் மக்களினத்தில் மொழி தோன்றத் தொடங்கிய காலத்தில் எழுந்த சொல்லொலிகளை அடிப்படையாகக் கொண்டவை. தமிழ்ச் சொற்களால் உணர்த்தப்படும் கருத்துகள், மக்களினத்தின் பொதுப் பண்பைக் குறிக்கும் அடிப்படை யாகும்; எனவே, கூர்ந்து ஆராயின், தமிழ்ச் சொற்களின் வேரிலிருந்தே உலக மொழிகளின் சொற்கள் தோன்றிப் பல்வேறு வடிவம் கொண்டன என்பது புலப்படும்".

ஞானப் பிரகாசரைப் போலவே, ஆச்சுபோர்டு பேராசிரியர் டி.பர்ரோ (T.Burrow) என்பவரும் கலிபோர்னியா பேராசிரியர் எம்.பி. எமினோ (M.B. Emeneau)

என்பவரும் இணைந்து தொகுத்த,'ADravidian Etymological Dictionary' என்னும் நூலில், தமிழ்ச் சொற்களோடு ஒத்த உருவம் உடைய பிற திராவிட மொழிச் சொற்கள் இந்தோ-ஐரோப்பியக் குடும்ப மொழிச் சொற்கள் ஆகியவற்றைத் தந்துள்ளனர். 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று பாரதி கூறியிருப்பது சரிதானே! ஈண்டு "அசைவில் செந்தமிழ்வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல" என்னும் பெரிய புராணப் பாடல் (1927) பகுதி ஒப்பு நோக்கற் பாலது.

3-1-3.

மூன்றாவது கருத்து, தமிழ் அனைத்தும் அளந்தது-அறிந்தது -பரந்து பட்டது என்பதாகும். இதற்குத் துணை செய்வன, "ஞாலம் அளந்த மேன்மை தெய்வத் தமிழ்' (975), "புவி ஏத்தத் தெருள் பொழி வன் தமிழ்," (3699) என்னும் பெரிய புராண ஆட்சிகளும், 'தமிழ் எனும் அளப்பரும் சலதி'(சலதி=கடல்)என்னும் கம்ப ராமாயண ஆட்சியும் இன்ன பிறவுமாம்,

மற்றும், 'தமிழ்த் தாய்' என்னும் தலைப்பில், தமிழ் மொழியின் தோற்றம் முதற் கொண்டு அதன் வளர்ச்சி வரலாற்றைச் சுருக்கமாகப் பன்னிரண்டு பாடல்களில் பாரதியார் தந்துள்ளார். அவற்றுள் சில:-

"ஆதி சிவன் பெற்று விட்டான்......
அகத்தியன் இலக்கணம் செய்து கொடுத்தான்.(1)

மூன்று குலத் தமிழ் மன்னர்-என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார். (2)

தெள்ளு தமிழ்ப் புலவோர்கள்-பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார். (3)

சாத்திரங்கள் பல தந்தார்-இந்தத்
தாரணி எங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன். (4)

கன்னிப் பருவத்தில் அந்நாள்-என்தன்
காதில் விழுந்த திசை மொழி எல்லாம்
என்னென்ன வோபெயர் உண்டு-பின்னர்
யாவும் அழிவுற்று இறந்தன கண்டீர் (6)

தந்தை அருள்வலி யாலும்-முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கண மட்டும் காலன்-என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி இருந்தான் (7)

இந்தப் பகுதியால், தமிழின் தோற்றம், வளர்ச்சி அழிவின்மை ஆகியவை சுருங்க அறிவிக்கப்பட்டுள்ளன. பல மொழிகள் அழியவும், தமிழ் அழியவில்லை என்னும் கருத்துக்கு, "என்றும் உள தென் தமிழ்" என்னும் கம்ப ராமாயண ஆட்சியும், "ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே', என்னும் மனோன்மணிய வாழ்த்துப்பகுதியும் இன்ன பிறவும் அரண் செய்யும்.

## 3-2. தமிழ் இலக்கிய வரலாறு:

அடுத்து, தமிழ் இலக்கியங்கள் பற்றிப் பாரதியார் கோடிட்டுக் காட்டியுள்ள சுருக்கமான சில குறிப்புகள் வருமாறு:

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை
உண்மை வெறும் புகழ்ச்சி யில்லை" (தமிழ்-2)

**செந்தமிழ் நாடு:**

"கல்வி சிறந்த தமிழ் நாடு-புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு-நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்-மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு" (6)

"வள்ளுவன் தன்னை உலகி னுக்கே-தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு-நெஞ்சை
அள்ளுஞ் சிலப்பதி காரமென்றோர்-மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு" (7)

**தமிழ்ச் சாதி:**

"சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்,
எல்லையொன் றின்மை எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்பு நான் தமிழ்ச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்த தென்று
உறுதிகொண் டிருந்தேன்" (அடிகள்: 20-27)

மேற்காட்டியுள்ள பாடல் பகுதிகளால், திருக்குறள் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பல சாத்திர நூல்கள் ஆகியவற்றின் சிறப்பை அறிவித்துள்ளமை தெளிவு.

**4. இரண்டாம் கூறு:**

இனி, முக் கூறுகளுள், 'பாரதியின் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள உலக வரலாற்றுக் குறிப்புகள்' என்னும் இரண்டாங் கூறு பற்றிக் காண்பாம்: இதில், தமிழர்

வரலாறு, தமிழ் நாட்டு வரலாறு, இந்திய அறிஞர் வரலாறு-நாட்டு வரலாறு, உலக நாடுகளின் வரலாறு ஆகியவை இடம் பெறும்.

**4-1. தமிழர் வரலாறு:**

'தமிழ்ச் சாதி' என்னும் தலைப்பில், இறுதியில் கிடைக்காத பகுதி போக, கிடைத்துள்ள 123 அடிகள் கொண்ட நீளப் பாடலில் தமிழர் நிலை பாரதியாரால் சுருங்கத் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. பிற நாடுகளில் அடிமையாய் விலங்குபோல் உழைக்கும் தமிழ் மக்களின் நிலையைப் படிப்போர் இரங்கும் வண்ணம் பாரதியார் எடுத்துரைத் துள்ளார்.

**4-2. தமிழ் நாட்டு வரலாறு:**

"செந்தமிழ் நாடு" என்னும் தலைப்புள்ள "செந்தமிழ் நாடெனும் போதினிலே" என்னும் பாடலில் தமிழ் நாட்டு வரலாறு சுருங்கத் தரப் பெற்றுள்ளது. இதில், தமிழ் நாட்டுக் கல்வி, மெய்யறிவு (தத்துவம்), இயற்கை வளம், வெளி நாட்டுப் படையெடுப்பு வெற்றி, அயல் நாட்டு வாணிகம் முதலியன இடம் பெற்றுள்ளன. தமிழ் நாட்டு வரலாறு என்பதில், தமிழர் வரலாறும் தமிழ் மன்னரின் வரலாறும் அடங்கும் அன்றோ?

**4-3. இந்திய அறிஞர் வரலாறு:**

காந்தி யண்ணல், சிவாஜி, கோக்கலே சாமியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, குரு கோவிந்தர், தாதாபாய் நவுரோசி, பூபேந்திரர், திலகர், லாச பதி, குள்ளச் சாமி, யாழ்ப்பாணச் சாமி, கோவிந்த சாமி, குவளைக்கண்ணன், தாயுமானவர், நிவேதிதா, அபேதாநந்தா, இரவிவர்மா,

சுப்பராம தீட்சதர், மகா மகோ பாத்தியாய சாமி நாதர், வேங்கடேச ரெட்டப் பூபதி முதலியோர் பற்றித் தனித் தனித் தலைப்பு பலவற்றில் பாரதியார் பல செய்தி கள் தந்துள்ளார். வெள்ளைக் கார விஞ்சு துரை பற்றிய செய்தியும் வேல்சு இளவரசருக்குக் கூறிய வரவேற்புங்கூட இடம்பெற்றுள்ளன. சுய சரிதை என்னும் தலைப்பில், பாரதியார் தமது சொந்த வாழ்க்கை வரலாற்றையும் சுருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

### 4-4. இந்திய நாட்டு வரலாறு:

மா பாரத இதிகாசத்தின் கதைத் தலைவி என்று சொல்லலாம் போல் தோன்றுகிற பாஞ்சாலியின் வரலாற்றைப் "பாஞ்சாலி சபதம்" என்னும் சிறு காப்பிய மாக வடித்துத் தந்துள்ளார். இஃது இந்திய நாட்டு வரலாற்றிற்கு உட்பட்ட தாகும்.

வந்தே மாதரம், பாரத நாடு, பாரத தேசம், நாட்டு வணக்கம், பாரத நாடு, எங்கள் நாடு, , பாரத மாதா, எங்கள் தாய், வெறி கொண்ட தாய், பாரத மாதா திருப் பள்ளி யெழுச்சி, பாரத மாதா நவரத்தின மாலை, பாரத தேவியின் திருத் தசாங்கம், தாயின் மணிக்கொடி, பாரத சமுதாயம், சாதீய கீதம், சுதந்திரம் முதலிய தலைப்புகளில் இந்திய நாட்டு நிலைமை விளக்கப்பட் டுள்ளது.

### 4-5. சுதந்திரப் பள்ளு:

விடுதலை வேட்கையின் போதை உச்சந் தலைக்கு ஏறி விட்ட பாரதியார், அந்த விடுதலை வேட்கை யுணர்ச்சியை இமயத்தின் உயரிய கொடுமுடி அளவுக்கு உயர்த்தி விட்டார். அதாவது, விடுதலை பெறுவதற்கு முன்பே விடுதலை பெற்று விட்டதாக ஆடுகிறார்-பள்ளு பாடு

கிறார்; சங்கு கொண்டு வெற்றி ஊதுகிறார்-இதை உலகத்துக்கு எல்லாம் எடுத்து ஓதுகிறார். பாடல் பகுதி வருமாறு;-

"ஆடு வோமே-பள்ளுப் பாடு வோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று
ஆடு வோமே பள்ளுப் பாடு வோமே!
சங்கு கொண்டே வெற்றி ஊது வோமே-இதைத்
தரணிக் கெல்லாம் எடுத்து ஓது வோமே!"

விடுதலை கிடைப்பதற்கு முன்பே கிடைத்து விட்ட தாகப் பாடியிருக்கும் இப்பாடல் பற்றிச் சிலர் வியப்பு அடைகின்றனர்; இவ்வாறு பாடலாமா என்றுகூட எண்ணுகின்றனர். இஃது ஒரு சார் இலக்கிய மரபு.

தொல்காப்பியப் புறத்திணை யியலில், "கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்" (12) என ஒரு துறை உள்ளது. "பகைவர் நாட்டினைத் தான் கொள்வதற்கு முன்னேயும் கொண்டான் போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றி" என இதற்கு நச்சினார்க்கினியர் உரை எழுதியுள்ளார். தொடர்ந்து உரையாசிரியர், "கழிந்தது பொழிந்தென"- என்னும் புறப்பாட்டினுள், 'ஒன்னார் ஆரெயில் அவர்கட்டாகவும் நுமதெனப் பாண்கடன் இறுக் கும் வள்ளி யோய்' (203) என்பதும் அது. இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறை யும் அது" என விளக்கம் தந்துள்ளார்.

இளஞ் சேட் சென்னி என்னும் மன்னன், பகைவரது ஊரை வெல்லும் முன்பே, பாணர்க்குப் பரிசாக அளிப்பான் என்னும் செய்தி மேற் சுட்டிய புறநானூற்றுப் பாடலில் அமைந்துள்ளது. இராமன் இலங்கையை வெல்லும் முன்பே,

விபீடணனுக்கு இலங்கையைக் கொடுத்தான் என்னும் செய்தியை,

"தாழ் கடல் இலங்கைச் செல்வம் நின்னதே

தந்தேன் என்றான்" (6631) என்னும் கம்ப ராமாயணப் பாடல் பகுதியால் அறியலாம். இத்தகைய மரபை ஒட்டியே, விடுதலை கிடைப்பதற்கு முன்பே வென்று பெற்றுவிட்டதாகப் பாரதியார் ஆடியுள்ளார்-பள்ளு பாடியுள்ளார்.

**4-6. உலக நாடுகளின் வரலாறு:**

மாஃசினியின் சபதம், பெல்சியத்திற்கு வாழ்த்து, புதிய ருழ்சியா, கரும்புத் தோட்டத்திலே-என்னும் தலைப்புகளில் உலக நாடுகள் சிலவற்றின் நிலைமையைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**4-6-1. மா∴சினியின் சபதம்:**

மாஃசினி (Mazzini, Giuseppe கி.பி. 1805-72) என்பவர் இத்தாலி நாட்டு அரசுத் தலைவர்களுள் ஒருவர்; பண்டிட் சவகர் லால் நேருவுக்கு விடுதலை உணர்ச்சி தோன்றக் காரணமாயிருந்தவர்களுள் ஒருவரான கரிபால்டி என்பவைரத் தம் படையாட்சியாகக் கொண்டு செயல் பட்டவர்; சிதைந்து கிடந்த இத்தாலி நாட்டை ஒன்று படுத்தவும் அதைக் குடியரசாக்கவும் அரும்பாடு பட்டவர். அதற்காக இவர் எடுத்துக் கொண்ட ஆணையை-சபதத்தைப் பற்றிப்பாரதியார் இந்தத் தலைப்பில் பாடியுள்ளார்.

**4-6-2-பெல்சியத்திற்கு வாழ்த்து:**

பெல்சியம் மேற்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு. இது காலந்தொறும் பலருக்கு அடிமைப்பட்டுப் பின்பு விடு

தலை பெற்றது; இசுபெயின், ஆசுதிரியா, ஃபிரான்சு, ஃஆலந்து ஆகிய நாடுகளின் பிடியிலிருந்து முறையே விலகி விடுதலை பெற்றது; முதல் உலகப் பெரும்போரில் செர் மனியால் வெல்லப்பட்டுப் பிறகு விடுதலை அடைந்தது. இவ்வாறாக, அயலவர் ஆட்சியினின்றும் விடுதலை பெற்ற பெல்சியத்தை வாழ்த்திப் பாரதியார் பாடியுள்ளார். ஆங் கிலேயரிடமிருந்து இந்தியா விடுதலை பெறப் போராடிய பாரதியார், அடிமையாயிருந்த பெல்சிய நாடு விடுதலை பெற்றதை வாழ்த்தியது இயற்கையே!

### 4-6-3-புதிய ருழ்சியா:

சார் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியினின்றும் விடு தலை பெற்றுப் புதிய பொதுவுடைமைக் குடியரசாக மலர்ந்த ருழ்சிய நாடு பற்றி இத் தலைப்பில் பாரதியார் பாடியுள்ளார்.

### 4-6-4-கரும்புத் தோட்டத்திலே

இந்திய மக்களுள் சிலர் பல நாடுகட்குச் சென்று அடி மைகளாகி, தேயிலைத் தோட்டத்திலும் கரும்புத் தோட் டத்திலும் இன்ன பிறவற்றிலும் விலங்கு போல் வருந்தி உழைத்து வந்தனர். இந்த நாடுகளுள் ஃபீசித் தீவுகள் (Fizi Islands) என்பது ஒன்று. இது பசிபிக் மாகடலின் தென்மேற்குப் பகுதியில் இருக்கும் ஒரு தீவுக் கூட்டம். ஆங்கி லேயரின் குடியேற்ற நாடாக இருந்த இந்நாட்டில் ஏறத் தாழ இந்தியர்கள் பாதி எனலாம். இந்தத்தீவை. 'தெற்கு மாகடலுக்கு நடுவினிலே அங்கோர் கண்ணற்ற தீவு' என்று பாரதியார் குறிப்பிட்டுள்ளார். இங்கே இந்தியப் பெண் கள் கற்பழிக்கப்படும் கொடுமை வரைக்கும் ஆளாகிக் கண்ணீர் உகுத்த வரலாற்றைப் பாரதியார் மிகவும் உருக்க மாகப் பாடியுள்ளார். இவ்வாறாக, உலக வரலாற்றுச் செய்திகள், பாரதியார் பாடல்களில் இலை மறை காய் களாக ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

### 5.மூன்றாம் கூறு:

இனி, முக்கூறுகளுள், பாரதியின் இலக்கியமே ஒரு வரலாற்று நூலாகும் என்னும் மூன்றாம் கூறினை எடுத்துக் கொள்வோம்.

### 5.1. வேர் மூலங்கள்

வரலாற்றாசிரியன் கண்ணை மூடிக் கொண்டு மனம் போன போக்கில் ஏதாவது எழுதினால், அது அத்தை-பாட்டிக் கதையாகி விடும். எழுதுவதற்குச் சான்றாகத் தகுந்த வேர் மூலங்களை (Sources) வைத்துக் கொண்டே வரலாற்றாசிரியன் எழுதுகோல் பிடிக்க வேண்டும். வேர் மூலங்களைக் கொண்டு வரலாற்றை மூவகைப் படுத்தலாம் அவை:-

(1) பட்டப்பகலில் நடந்த வரலாறு. (2) வைகறையில் பனி மூட்டத்தில் நடந்த வரலாறு. (3)அமாவாசை நள்ளிரவில் நடந்த வரலாறு-என்பன. பட்டப் பகலில் நடந்த வரலாறு என உருவகிக்கப்படுவது, ஆண்டு-திங்கள்-நாள்-கிழமை-மணி (நேரம்)-இடம்-ஆட்கள்-நிகழ்ச்சிகள் முதலிய அனைத்தும் தந்து இந்தக் காலத்தில் எழுதப்படும் வரலாறாகும். வைகறையில், போபவர்-வருபவர் தெளிவாகத் தெரியாத பனி மூட்ட வரலாறு என்பது, இலக்கியங்களைக் கொண்டு ஒரு தோற்றமாக நுனித் துணர்ந்து அறிந்து கொள்ளும் வரலாறாகும். அமாவாசை நள்ளிரவு வரலாறு என்பது, புதைபொருள்-அகழ்வாராய்ச்சி-இடிபாடுகள் முதலிய தடயங்களைக் கொண்டு அறிந்து கொள்ளும் வரலாறாகும்.

இம் மூன்றனுள், இலக்கியங்களைக் கொண்டு அறிந்து கொள்வது இடைப்பட்டது. பாரதியாரின் இலக்கியத்தைக் கொண்டு அறிந்து கொள்ளும் வரலாறு இப்பிரிவைச் சேர்ந்

தது. வரலாறு என்னும் பெயரால்பாரதியார் கூறியிருப்பன வன்றி, பொதுவாகக் கூறியிருக்கும் மற்ற தலைப்புப் பாடல் களும் ஒரு வகையில் வரலாறாகும். இவற்றால், பாரதியார் காலத்திய மக்கள் நிலையும்நாட்டுநிலையும் உலகநிலையும் தெரியவரும். கல்வி, மொழி நிலை, மெய்யறிவு, சமயம், கடவுட்கொள்கை, சமூகம், பெண்கள் நிலை, நாகரிகம், பண் பாடு, ஆட்சி, ஆண்டான்-அடிமை நிலை, தொழில், மக்கள் வாழ்க்கை நிலை முதலியவற்றை ஓரளவேனும் அறிந்து கொள்ள வியலும். இதனால் இலக்கியமே ஒரு வரலாற்று நூல் எனப்படும்.

### 5-2. எதிர் காலப் பயன்

கடந்த கால இலக்கியமோ வரலாறோ படிப்பது எதிர் காலப் பயனுக்காகும். நேற்று என்பதே வரலாறாகி விடுகிறது. (Yesterday is History). கடந்த காலத்துக்கும் எதிர் காலத்துக்கும் உள்ள தொடர்பு, தந்தை-மைந்த னுடைய தொடர்பு போன்றதன்று: தமையன்-தம்பியின் தொடர்பு போன்றதும் அன்று, ஒரே மாந்தருடைய இளமையும் முதுமையும் போன்ற தொடர்புடையதாகும். அதனால், பாரதி தரும் இலக்கிய. வரலாற்றுப் படிப் பினையைக் கொண்டு எதிர் காலத்தைத் திட்டமிட வேண் டும்.

### 5-2-1. புரட்சிப் பொழிவு:

எதிர்காலத்தினைத் திட்டமிட்டு வாழப் பாரதியின் புரட்சிப் பொழிவுகளைப் பார்க்க வேண்டும். புரட்சிப் புயல் என்பர் சிலர். புயல் கேடு செய்யும்: பொழிவே நலம் பயக்கும். பாரதியாரின் புரட்சிகளுள் தலையாயவை, சாதி மத வேறுபாட்டைச் சாடுதல், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் கண்டித்தல், பெண்ணுரிமை, தொழிற்

புரட்சி ஆகியனவாம். இக்கொடுமைகள் நீங்கின் மக்களினம் உய்யும்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பர். "முதல் பதிவே முதன்மையான பதிவு". (First impression is the best impression). எனவே, கிழங் கட்டைகட்குச் சொல்லிப் பயனில்லை: குழந்தைப் பருவத்திலேயே சாதி வேற்றுமை உணர்வைத் தகர்க்க வேண்டும் என்று கருதிப் பாப்பாவை நோக்கி.

"சாதிகள் இல்லையடி பாப்பா-- குலத்
தாழ்ச்சி உயர்வு சொல்லல்-- பாவம்"
என்று உணர்த்தியுள்ளார்.

"தெய்வம் பலபல சொல்லிப்-பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்."

"பாருக் குள்ளே தெய்வம் ஒன்று-- இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்".

என்று மதவேற்றுமையைச் சாடியுள்ளார்.

"பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்-- பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்."

"வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்-- இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்"

"முப்பது கோடி சனங்களின் சங்கம்,
முழுமைக்கும் பொது உடைமை"

"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்,
வழக்கம் இனி யுண்டோ"

"தனி யொருவனுக் குணவிலை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்,".

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்-
-வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்."

என்றெல்லாம் பொருளியல் புரட்சியும் தொழிற் புரட்சியும் செய்துள்ளார்.

உழைக்காதவனுக்கு உயிர் வாழ உரிமையில்லை யல்லவா?

புதுமைப் பெண், பெண்கள் வாழ்க, பெண்கள் விடுதலைக் கும்மி, பெண் விடுதலை-என்னும் தலைப்புகளில் பெண் விடுதலையை-பெண் உரிமையை வற்புறுத்தியுள்ளார்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்."
"வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்".
"வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்."

என்றெல்லாம் கனல் கக்கும் பாடல்களால் பெண்ணுரிமையைப் பேணியுள்ளார்.

### 5-3. காலக் கண்ணாடி:

பாரதியின் இலக்கியம் ஒரு காலக் கண்ணாடியாகும். ஓர் எடுத்துக் காட்டு வருமாறு:-

ஔவையார் ஆத்தி சூடியில் கூறியுள்ள 'முனை முகத்து நில்லேல்' என்னும் கருத்துக்கு மாறாக, பாரதியார் 'முனையிலே முகத்து நில்' என்று தமது ஆத்திசூடியில் கூறியுள்ளார். இதைக் கொண்டு, சிலர், ஔவையைத்

தாழ்த்தியும் பாரதியை உயர்த்தியும் கூறுகின்றனர். இது சரியன்று. இருவர் கூற்றிலும் இருவேறு வரலாற்றுப் பின்னணிகள் தொக்கி நிற்கின்றன. ஔவையார் காலத்தில் ஊருக்கு ஊர் அரசர்; எப்போதும் போர், கொலை, தீவட்டிக் கொள்ளை, கற்பழிப்பு, பெண்களைச் சிறை யெடுத்துச் செல்லல், அமைதியின்மை, பிணி, வறுமை முதலியவை தலைதூக்கியிருந்தன. அதனால் ஔவையார், 'முனை முகத்து நில்லேல்; 'போர்த் தொழில் புரியேல்' என்று அறிவுறுத்தினார். ஆனால், பாரதியார் காலத்தில் நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. வெள்ளையரை வெளியேற்றக் கொடியேந்திக் கொக்கரித்துக் கொண்டு விடுதலைப் போர் முனைக்குச் செல்லுங்கள் என்று பாரதியார் மக்களைத் தட்டி எழுப்பினார். எனவே, ஔவையாருக்கும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் உண்டு; பாரதியாருக்கும் நூற்றுக்கு நூறு மதிப்பெண் உண்டு. இத்தகையன காலக் கண்ணாடிகளாகும். எனவே, இலக்கியமும் வரலாறும் காலக் கண்ணாடிகளே.

### 5-4. கற்பனை மனம்:

பாரதியார், வரலாறு என்னும் அடிப்படையில் பாடியுள்ள பகுதிகள் கற்பனை கலவாதவைகளாகும். இவற்றுள்ளும், இலக்கிய நயச் சுவை என்னும் பெயரால் கற்பனை மனம் ஆங்காங்கே ஒரு சிறிது கமழலாம். இதை ஒரு பெரிதாகப் பொருட்படுத்தலாகாது. ஆனால் குயில் பாட்டு போன்றவை கற்பனை கலந்தன; கண்ணன் பாட்டு போன்றவை கற்பனையே.

### 5-5 உரை நடை இலக்கியம்:

பாரதியார் கற்பனையாகவும் கற்பனை கலந்தும் உரைநடையில் பல கதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்

ளார். உரைநடைப் படைப்புகளும் இலக்கியங்களே. இவற்றாலும் பல படிப்பினைகள் கிடைக்கின்றன.

இதுகாறும், பாரதி இலக்கிய வரலாறு என்னும் கடலின் கரையிலுள்ள சில்வகைக் கற்களே அறிமுகம் செய்யப் பெற்றன. ஆணி முத்து எடுத்து வர ஆழத்துள் குளிப்போமாயின், கரையேறக் காலம் மிகுதியும் தேவைப் படும். வாழ்க பாரதி இலக்கிய வரலாற்றுப்படைப்பு!

## வரலாற்று இலக்கியப்பகுதி

# 14. முதல் கலம்பகம்

**கலம்பகம்:**

கலம்பக நூல்களுக்குள் முதல்கலம்பகம் நந்திக்கலம்பக மாகும்.

இந்த நந்திக் கலம்பகம் தமிழிலக்கிய வரிசையில் மிக வும் விதந்து சிறப்பித்துக் குறிப்பிடத்தக்க தொருநூல். நந்தி வர்மன் என்னும் பல்லவ மன்னன்மேல் பாடப் பெற்ற 'கலம்பகம்' என்னும் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்த சுவையான நூல் இது.

தமிழில் தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று கலம்பகம் 'கலம்ப கம்' என்னும் சொல்லுக்குக் கலவை-கலப்பு-கதம்பம்என்று ஒருவிதமான பொருள் கூறப்படுகிறது. பல்வேறு வகைப் பாடல்களின்-பல்வேறு வகைத் தலைப்புகளின் கலவை யாய் இந்நூல் காணப்படுவதால் இப்பொருள் பொருத்த முடையதாகத் தோன்றுகிறது.

கலப்பு+அகம்=கலப்பகம்—அது கலம்பகம் என்றா யிற்று என்பர் ஒரு சிலர். இலக்கண மரபுப்படி இது பொருந் தாது என்று மறுப்பர் வேறு சிலர். கலம் என்றால் பன்னி ரண்டு; பகம் என்றால் ஆறு; கலம்பகம் என்றால் பதி னெட்டு; எனவே, பதினெட்டு வகை உறுப்புகள் கொண்ட நூல் கலம்பகம் என்பர் ஒரு சாரார். சில கலம்பக நூல் களில் பதினெட்டுக்குங் குறைவாகவும் வேறு சிலவற்றில் பதினெட்டிற்கும் மிகுதியாகவும் உறுப்புகள் காணப்படுவ

தால் இப்பெயர்க் காரணமும் பொருந்தாது என்று மறுப்பர் வேறொரு சாரார். எது எப்படியிருப்பினும், பல்வேறு உறுப்புகளும் பல்வேறு வகைப் பாடல்களும் கொண்டு தெவிட்டாதபடி மாறி மாறிக் கலவிச் சுவையளிக்கும் ஒரு வகைக் கலவை இலக்கியம் கலம்பகம் என்பது உண்மையான உறுதியான கருத்து.

**நூலின் தனிப்பெருஞ் சிறப்பு:**

மூன்றாம் நந்திவர்மன் என்னும் பல்லவ மன்னன்மேல் பாடப்பட்ட கலம்பகம் ஆதலின் இது சுருக்கமாக நந்திக் கலம்பகம் என அழைக்கப்படுகிறது. இந்நூலின் சிறப்புகளுள் ஒரு மூன்றினைத் தலையாய தனிப் பெருஞ் சிறப்புகளாகக் கூறலாம். அவையாவன;

ஒன்று: நந்திக் கலம்பகம் இதுவரைகிடைத்திருக்கும் கலம்பகங்கட்குள்ளேயே காலத்தால் முற்பட்டது.

இரண்டு: அரசன்மேல் பாடப்பட்டுள்ள கலம்பகம்தமிழிலேயே இஃது ஒன்று தான். மற்றவை கடவுள் மேலும் கடவுளடியார் மேலும் பாடபட்டவையாம்.

மூன்றாவதாக, மற்ற கலம்பக நூல்கள் எல்லாம் இலக்கியச் சுவையோடு சரி. இந்த நந்திக் கலம்பகமோ இலக்கியச் சுவை நுகர்ச்சி யளிப்பதுடன் நாட்டுவரலாறும் அறிவிக்கிறது.

**காலம்:**

ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த மூன்றாம் நந்தி வர்மப் பல்லவ வேந்தன் மேல் பாடப்பட்டதாதலின், இக்கலம்பகத்தின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்பது புலனாகும். மூன்றாம்நந்திவர்ம

னின் ஆட்சிக்காலம் கி.பி. 825 முதல் 850 வரையாகும் என்று ஒரு சாராரும், 839 முதல் 860 வரை என்று மற்றொரு சாராரும், 847 முதல் 872 வரை என்று இன்னொரு சாராரும் கூறுகின்றனர். எது எப்படி யிருந்த போதிலும் நந்தி வர்மன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதி என்பது வரைக்கும் முற்ற முடிந்த உண்மையாகும்.

**மூன்றாம் நந்திவர்மன்:**

மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பல்லவ குலப் பேரரசர்கள் காஞ்சிபுரத்தைத் தலை நகராகக் கொண்டு தமிழ் நாட்டின் பெரும்பகுதியை ஆண்டு வந்தனர். பல்லவப் பேரரசின் இறுதிநூற்றாண்டாகிய ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த நந்திக் கலம்பக நாயகனாகிய மூன்றாம் நந்திவர்மன் தந்தி வர்மப் பல்லவனின் மகனாவான். இவன் மகன் நிருபதுங்கன்; பேரன் அபராசிதன். அபராசிதனோடு பல்லவப் பேரரசு வீழ்ச்சியடைந்தது.

**நூல் தோன்றிய வரலாறு:**

நந்திக் கலம்பகம் தோன்றிய வரலாறு மிகவும் சுவை யானது. அதே நேரத்தில், அந்த வரலாறு நம்பத்தக்கதா என்ற ஐயப்பாட்டிற்கும் உரியதாயுள்ளது. அவ்வரலாறு நம்பத்தக்கதுதான் எனின் அது தமிழுக்குப் பெரிய வெற்றியேயாகும். தமிழுக்கு வெற்றி-தமிழுக்குப் பெருமை என்பதற்காக, நம்பக்கூடாத நம்பமுடியாத ஒரு வரலாற்றை நம்பித்தான் தீரவேண்டும் என்பதில்லை. சரி, அந்த வரலாறு என்ன வென்று தான்பார்த்து விடுவோமே! இதோ அவ் வரலாறு-:

நந்தி வர்மனின் தம்பியர் அவனோடு பகை கொண்டிருந்தனர். நந்தியைக் கவிழ்த்துத் தாங்கள் நாடாள வேண்டு

மெனச் சூழ்ச்சி செய்தனர். அவருள் ஒருவன் தமிழறிந்த புலவனாம். அவன் நந்தியின் மாற்றாந்தாய் மகன் எனச் சிலர் கூறுகின்றனர்; நந்திவர்மனின் தந்தை தந்திவர் மனுக்கு வேசி யொருத்தியின்பாற் பிறந்தவன் அவன் என வேறு சிலர் மொழிகின்றனர். அவன் நந்தியின் மேல் 'அறம்'வைத்துக் கலம்பகம் பாடினானாம். 'அறம் வைத்துப் பாடுதல்' என்றால், ஆளே அழிந்து போகும்படிப் பாடுத லாம். பொருந்தாத எழுத்துக்களும் சொற்களும் பொருட் களும் பெய்து எழுத்துக் குற்றம்-சொற்குற்றம் - பொருட் குற்றம் அமையப் பாடினால் ஆளே அழிந்து போவது வழக்கமாம். அவ்வாறு பாடப்பட்டதே நந்திக் கலம்பகம் என்று சொல்லப்படுகிறது.

இனிக் கதைக்கு வருவோம்: நச்செழுத்தும் நச்சுப் பொருளும் அமையப் பாடப்பட்டுள்ளது நந்திக் கலம்பகம் என்பதை எப்படியோ அறிந்து கொண்ட நந்தியின் அமைச் சர்கள், அந்தக் கலம்பகத்தைக் கேட்கலாகாது என நந் திக்கு அறிவுறுத்தி வைத்திருந்தனர். இந்நிலையில் ஒருநாள் நந்தி அரியணையில் அமர்ந்திருந்தகாலை, கலம்பகம் பாடிய பங்காளிப் புலவன், வேறொருவனை விட்டு, அரியணையின் பின்னே சுவரில் இருந்த ஒரு துளையின் வழியாகக் கலம்ப கத்திலிருந்து ஒரு சுவையான பாடலைப் பாடச் செய்தான். அதனைக் கேட்டு நந்தி மிகவும் சுவைத்தான். பின்னொரு நாள் இரவு நகர் உலாச் சென்ற நந்தி ஒரு வீட்டில் நந்திக் கலம்பகப் பாடல்கள் சில பாடப்படக்கேட்டு மகிழ்ந்தான். இவன் காதில் விழும்படி அங்கே திட்டமிட்டுப் பாடப்பட் டதாகச் சொல்லப்படுகிறது. நூலின் சுவையின்பத்தில் தன் னைப் பறிகொடுத்த நந்தி, உயிர் போயினும் நூல் முழு வதையும் கேட்டே தீரவேண்டும் என்ற உறுதியான முடி வுக்கு வந்தான். தம்பிப் புலவனை அழைத்து, பாடல்களைப் பாடி நூலை அரங்கேற்றச் சொன்னான். ஒன்றன் முன்

ஒன்றாகப் பல பந்தல்கள் போடப்படவேண்டு மென்றும் பந்தலுக்கு ஒரு பாடல் வீதம் பாடி அரங்கேற்றப்பட வேண்டுமென்றும் ஏற்பாடு செய்து கொண்டான் தம்பிப் புலவன். பந்தல்கள் அரண்மனையிலிருந்து சுடுகாடு வரையும் தொடர்ந்து போடப்பட்டிருந்தன. முதல் பந் தலில் முதல் பாடல் பாடப்பெற்றது. இருந்து கேட்டு மகிழ்ந்தான் நந்தி. அடுத்த பந்தலுக்குச் சென்றதும் முதல் பந்தல் எரிந்து விட்டது. இப்படியே எல்லாப் பந்தல்களும் எரிந்து கொண்டு சென்றன. இறுதிப் பந்தலில் ஈமச் சிதையே அதாவது எரி பொருளே அடுக்கி விட்டனர். அதில் படுத்தபடியே இறுதிப் பாடலைக் கேட்டு எரிந்தே போய்விட்டானாம் நந்திவர்மன்.

இப்படியாக நந்திக்கலம்பகம் தோன்றிய வரலாறு நாட்டில் நவிலப்படுகிறது. இவ்வரலாறு உண்மையாயின் தமிழுக்குப் பெருமை தான். எங்ஙனம்? ஒருவனை ஆக்க வும் அழிக்கவும் தமிழ்ப் பாடலுக்கு ஆற்றலுண்டு என்றால் அது தமிழுக்குப் பெருமை தானே! மற்றும், ஒரு பேரரசன், தான் ஆட்சியைத் துறப்பதன்றி, தமிழ்ப் பாடலைக்கேட்டு மகிழ்-வதற்காகத் தன் உயிரையும் துறக்கத் துணிந்தான் என்பது உண்மையாயின், அது தமிழுக்கு மிக்க பெருமை யல்லவா? ஆனால் இவ்வாறு நடந்திருக்க முடியுமா?

**சான்றுகள்:**

இந்த வரலாறு உண்மையென்பதற்குப் பலரால் பல சான்றுகள் பகரப்படுகின்றன. படிக்காசுப் புலவர் தொண்டை மண்டல சதகத்தில், 'கள்ளாருஞ் செஞ்சொற் கலம்பகமே கொண்டு காயம்பட்ட தெள்ளாறை நந்தி' எனத் தெரிவித்திருப்பதும், சிவஞானமுனிவர் சோமேசர் முதுமொழி வெண்பாவில், 'நந்தி கலம்பகத்தால் மாண்ட

கதை நாடறியும்' என அறிவித்திருப்பதும் இன்ன பிறவும் சான்றாகக் காட்டப் படுகின்றன. ஆனால் இந்த வரலாறு முழுவதையும் அப்படியே ஒத்துக் கொள்வதற்கில்லை.

**கதைக்கு மறுப்பு:**

நந்தியின் தம்பிமார்கள் அவனோடு முரணியது என்னவோ உண்மையா யிருக்கலாம். இதற்கு நந்திக் கலம்பகத்திலேயே கூடச் சான்று உள்ளது. நூலின் எண்பத்தோராம் பாடலில் உள்ள

'தம்பியர் எண்ணமெல்லாம் பழுதாக வென்ற
தலைமான வீரதுவசன்'

என்னும் பகுதி ஈண்டு எண்ணி ஆராயத்தக்கது. இன்னும் சொல்லப் போனால், நந்திக் கலம்பகத்தை நந்தியின் தம்பியருள் ஒருவன் எழுதவில்லை என்பதற்கு, 'தம்பியர் எண்ணமெல்லாம் பழுதாக வென்ற தலைமான வீர துவசன்' என்னும் கலம்பகப் பாடற் பகுதியே சான்றாகப் போதும். அதாவது, 'தம்பிமார்களின் எண்ணங்கள் எல்லாம் பழுதாகும்படி வென்றவன்' எனப் பகை கொண்ட தம்பியொருவன் பாடியிருக்க முடியவே முடியாது. அங்ஙனமெனில் இதிலுள்ள உண்மை யாதாயிருக்கலாம்?

**உண்மை வரலாறு:**

நந்திக் கலம்பகத்தை நோக்குங்கால் நந்தியை அழிக்க வேண்டும் என்னும் தீய நோக்குடன் நூல் பாடப் பட்டதாகத் தெரியவில்லை. மாறாக நந்தியின் பெருமையைப் பரக்கப் பேசுகிறது இந்நூல். நந்தியின் வெற்றியினையும் பல்வேறு புகழினையும் விரிவாக விளம்புகிறது இந்நூல் இந்த நூலில் அந்தக் குற்றம் இருக்கிறது-இந்தக் குற்றம் இருக்கிறது என்றெல்லாம் சிலர் என்னென்னவோ குற்றங்

கள் கூறக்கூடும். அவர்கள் கூறும் அத்தகைய குற்றங்களைப் பெரும்பாலும் எல்லா நூல்களிலிருந்துமே எடுத்துக்காட்ட முடியும். எனவே, தீய நோக்குடன் நந்தியின் தம்பியருள் ஒருவனால் இந்நூல் பாடப்படவில்லை என்ற புதிய முடிவுக்கு-புரட்சியான முடிவுக்கு-ஏன்-உண்மையான முடிவுக்கு நாம் துணிந்து வரவேண்டும். ஆம்! மற்ற மன்னர்கள் மேல் நூல்கள் பாடியுள்ள புலவர்களைப் போலவே, எவரோ நல்ல புலவர் ஒருவர் நந்தியின்மேல் இக்கலம்பகத்தை இயற்றினார் என்பது தான் உண்மை. ஆனால்அவர் பெயர் அறியப்படவில்லை. இலக்கிய உலகில் இஃதொன் றும் புதுமையில்லை. இதுபோலவே இன்னும் எத்தனையோ நூலாசிரியர்களின் பெயர்கள் இதுவரையும் அறியப் படவேயில்லை. அவர்களின் பட்டியலில் இவரையும் சேர்த்து விடவேண்டும். உண்மை இஃதாயின், நந்திக் கலம் பகத்திற்கும் நந்தியின் சாவுக்குமாக இணைத்துப் போடப் பட்டுள்ள முடிச்சை அவிழ்த்து விடவேண்டுமே? ஆம். இதோ:-

நல்ல புலவர் ஒருவரால் நந்திக்கலம்பகம் இயற்கை யாக இயற்றப்பட்டது. அதற்கு அரங்கேற்றம் நடத்த ஆரவாரமாக ஏற்பாடு செய்யப் பெற்றது. நந்திவர்மன் தன்னை மறந்து மகிழ்ச்சி யாரவாரத்தில் ஈடுபட்டிருக்கக் கூடிய இந்த நேரத்தைப் பயன் படுத்திக் கொள்ளப் பங்காளிப் பகைவர்கள் திட்டமிட்டனர். அவர் தம் எண்ணம் ஈடேறியது. தீயிட்டு நந்தியைத் தீர்த்துக்கட்டி விட்டனர். நந்திக் கலம்பக நூலில் ஏதோ குற்றம் இருந்த தால்தான் நந்திக்கு இந்த நிலை ஏற்பட்டது என உலகம் எண்ணியது. நந்திக் கலம்பகம் இயற்றப் பட்டதும் அரங் கேற்றம் செய்யப்பட்டதுங் கூடப் பங்காளிப் பகைவர்களின் ஏற்பாடாய்த் தான் இருக்க வேண்டும் என்றும் உலகம்

எண்ணியது. ஒரு நிகழ்ச்சி காலப் போக்கில், கண்-மூக்கு வைக்கப் பட்டுப் பெரிய உருவம் பெறுவது இயற்கை தானே! இந்த அடிப்படையில் தான், நந்திக் கலம்பகத் தால் நந்தி மன்னன் மாண்ட கதை நாட்டில் பரவலா யிற்று. கலம்பக அரங்கேற்றத்தின் முடிவில் நந்தி வர்ம னும் முடிந்ததால், பின்னர் வேறு எந்தப் புலவரும் எந்த மன்னர் மேலும் கலம்பக நூல் பாடாது விட்டனர் போலும்!

**நூல் அமைப்பு:**

நந்திக் கலம்பகத்தில் எண்பத்தெட்டுப் பாடல்கள் உள்ளன. கடவுளர் மேல் பாடப்படும் கலம்பகத்தில் நூறு பாடல்களும் மன்னர்மேல் பாடப்படும் கலம்பகத்தில் தொண்ணூறு பாடல்களும் இருக்கவேண்டும் என்பது அந்த நாள் விதி. இந்நூலில் தொண்ணூறுக்கும் இரண்டு பாடல்கள் குறைகின்றன. அவை கிடைக்கவில்லை போலும். நூலின் ஒவ்வொரு பாடலும் ஒன்றோடொன்று அந்தாதித் தொடையாய் அமைந்துள்ளது. நூலுக்குப் பின்னே இருபத்தேழு தனிப்பாடல்கள் இணைக்கப்பட்டுள் ளன. இவற்றைப் பாடியவர் ஒருவரா அல்லது பலரா என்பதற்குச் சான்றொன்றும் இலது. பலர் பாடிய தனிப் பாடல்களின் தொகுப்பா யிருக்கலாம் இவை.

நந்திக் கலம்பகம், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவகை களுள் பலவற்றால் பாடப்பட்டுள்ளது. நூலில், தூது, பறை, இரங்கல், கார், புயவகுப்பு, யானைமறம், மடல், குடை மங்கலம், ஊசல், உலா, பூவைநிலை, காலம், சம் பிரதம், மதங்கியார், மறம், தலைவன்-தலைவி-தோழி-பாங்கன்-செவிலி ஆகியோர் கூற்றுக்கள் ஈதலிய பல்வேறு தலைப்புகள் இடம் பெற்றுள்ளன.

**நூற்பொருள்:**

நந்திக் கலம்பகத்தால், நந்தி வர்மனைப் பற்றியும் அவன் காலத்து நாட்டு வரலாற்றைப் பற்றியும் பல செய் திகள் தெரிந்து கொள்ளலாம்:

நந்தியின் குலம் சந்திரர் குலம்; மாலை தொண்டை மாலை; கொடையும் முத்திரையும் விடை; சமயம் சைவம்; யானையின் பெயர் ஐராவதம்; பறை கடுவாய்ப் பறை: தலைநகர் காஞ்சிபுரம்; துறைமுகங்கள் மயிலாப் பூரும் மாமல்லபுரமுமாம்.

நந்தி அறநெறி வழுவாத செங்கோல் மன்னன்-வரை யாத வள்ளல்-கல்வி கேள்விகளில் மிக்கவன்-செந்தமிழை ஆய்ந்து சுவைப்பவன்-என்னும் செய்திகட்கு நூலில் பலப் பல அகச்சான்றுகள் உள்ளன.

**ஆட்சிப் பரப்பு:**

நந்திவர்மன், கச்சி நாட்டோன், மல்லை வேந்தன், மயிலை யாளி, தொண்டைவேந்தன், தென்னவர் கோன், சோணாடன், காவிரிநாடன், உறந்தையர் கோன், குமரிக் கொண்கன், கங்கை மணாளன், வடவேங்கட நாடுடை மன்னர் பிரான், வடநாடுடை மன்னர் பிரான், அவனி நாரணன், முந்நீருங் கொண்ட வேந்தர்கோன் முதலிய பெயர்களால் நந்திக் கலம்பகத்தில் சிறப்பிக்கப் பெற்றிருப் பதிலிருந்து அவனது ஆட்சிப்பரப்பின் விரிவும் வெற்றியும் புலனாகும்.

**வெற்றிகள்:**

நந்தி வர்மன் தன் ஆட்சிக் காலத்தில் பல இடங் களில் போர் புரிந்து பகைவர்களை வென்று முறியடித்த செய்தி நந்திக்கலம் பகத்தால் தெரிகிறது. குருக்கோட்டை,

தெள்ளாறு, வெறியலூர், வெள்ளாறு, கடம்பூர், பழையாறு, தொண்டி முதலிய இடங்களில் பகைவருடன் பொருது வென்றான் பல்லவன் நந்தி. இப்போர்களுள், ஆந்திராவில் துங்கபத்திரைக் கரையிலுள்ள 'குருகோடு' என்னும் குருக் கோட்டையில் வடபுலத்தாரோடு நடத்திய போரும், காஞ்சிக்குத் தெற்கே ஐம்பது கல் தொலைவிலுள்ள தெள்ளாறு என்னும் இடத்தில் பாண்டியர், சோழர், கங்கர், இராட்டிர கூடர் முதலிய பலரோடு ஒரே நேரத்தில் நடத்திய போரும் மிகவும் குறிப்பிடத் தக்கவை தெள்ளாற்றுப் போர் வெற்றியைப் பற்றி நந்திக் கலம்பகம் பதினாறு பாடல்களில் கூறியுள்ளது. இதனால் இவன் 'தெள்ளா றெறிந்த நந்தி', 'தெள்ளாற்று நந்தி' என் றெல்லாம் அழைக்கப் படுகின்றான். 'சேர சோழரும் தென்னரும் வடபுலத்தரசரும் திறை தந்த ஈரமாமதக் கரியிவை பரியிவை' என்னும் கலம்பகப் பாடற்பகுதி ஈண்டு கருதத்தக்கது. நந்திக் கலம்பகச் செய்திகள் கல்வெட்டுக் களிலும் பட்டயங்களிலுங் கூடக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கழற் சிங்க நாயனார்:**

படைமறம் மிக்கு விளங்கிய நந்திவர்மன் சிவன்பால் ஈடுபாடு கொண்டிருந்தான்.

'பிறைதவழ் செஞ்சடைப் பிறங்கனாரணன்
அறைகழல் முடித்தவன்'.

'சிவனை முழுதும் மறவாத சிந்தையான்'

என நந்திக் கலம்பகம் கூறுகிறது. சுந்தரர் தமது திருத் தொண்டத் தொகைத் தேவாரப் பதிகத்தில்,

'கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர் கோன் கழற் சிங்கன்'

எனச் சைவ நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராகக் குறிப்பிட்டுள்ள காடவர் கோன் கழற்சிங்கன் இந்த மூன்றாம் நந்தி வர்மனாகத்தான் இருக்க வேண்டும் என்பது ஓர் ஆராய்ச்சி.

**நூல் நயம்:**

நந்திக் கலம்பகத்தில் நயமான பாடல்கள் பல உள்ளன. 'மறம்' என்னும் தலைப்பிலுள்ள பாடல் சுவைத்து மகிழத் தக்கது. நந்திவர்மனின் படை மறவன் ஒருவன்-வயதான கிழவன்; அவன் பெண்ணை மணம் பேசி வருமாறு வேற்று வேந்தன் ஒருவன் தூது அனுப்பினான். கிழமறவன் தூதனை நோக்கிக் கூறுகிறான்: "அடே தூதா! நான் கிழவன்; என் வில் ஒடிந்துள்ளது; வில்லின் நாண் அறுந் துள்ளது; கையில் இருப்பது ஒரே அம்பு; நான் தளர்ந்து விட்டேன்-என்றெல்லாம் என்னை எளிமையாக எண்ணி உன் மன்னன் பெண் கேட்டுவர உன்னை அனுப்பினானா? அப்படி யொன்றும் என்னை எளிமையாக எண்ணி விடாதீர் கள்: நந்திவர்மனது தெள்ளாற்றுப் போரிலே எதிரிகளின் மேல் அம்பு எய்து எய்து என் வில் சிதைந்தது; நாண் தளர்ந்தது; ஓர் அம்பே மிஞ்சியது. அந்தப் போரில் எங்களி டம் தோற்றுப்போன எதிரிகளுடைய யானைகளின் கொம் புகளைக் கொண்டுவந்துதான் இதோ இந்தக் குடிசைக்குக் காலாகவும்மேட்டுவளையாகவும் போட்டுக்கட்டியுள்ளேன்; வேண்டுமானால் குனிந்து பார். இன்னும் உங்களிடம் யானைகள் மிஞ்சியுள்ளனவா? என் குடிசைக்கும் இன்னும் சில கொம்புகள் தேவைப்படுகின்றன; இதோ புறப்படுகி றேன்" -என்னும் பொருள்பட மறக்கிழவன் கூறியதாக உள்ள பாடலை இதோ சுவைப்போம்:

## மறம்

"அம்பு ஒன்று, வில் ஒடிதல், நாண் அறுதல்,
நான் கிழவன், அசைந்தேன் என்றோ
வம்பொன்று குழலாளை மணம்பேசி
வரவிடுத்தார் மன்னர் தூதா!
செம்பொன்செய் மணி மாடத் தெள்ளாற்றில்
நந்திபதம் சேரார் ஆனைக்
கொம்பன்றோ நம்குடிலில் குறுங்காலும்
நெடுவளையும் குனிந்து பாரே"

அடுத்து நந்தியின் வெற்றிச் சிறப்பைக் கூறும் பாடல் ஒன்று, வெற்றி முழக்கத்திற்குரிய ஓசை மிடுக்குடன் அமைந்திருப்பதைக் கட்டாயம் பாடிச் சுவைத்தே தீர வேண்டும். பாடல் இதோ:

"திறை இடுமின் அன்றி மதில்விடுமின் நுங்கள்
செரு ஒழிய வெங்கண் முரசம்
அறை விடுமின் இந்த அவனிதனில் எங்கும்
அவனுடைய தொண்டை அரசு
நிறைவிடுமின் நந்தி கழல் புகுமின் நுங்கள்
நெடுமுடிகள் வந்துநிகளத் (து)
உறைவிடுமின் அன்றி உறைபதிய கன்று
தொழுமினல துய்த லரிதே".

இவ்வாறு பல்வேறு பயன்கள் பொதிந்த நந்திக் கலம்பகம் நன்கு ஆய்ந்து கற்கத்தக்கது. நூலின் நோக்கம் எதுவாயினும், ஒன்பதாம் நூற்றாண்டுத் தமிழக வரலாறு நாட்டிற்குக் கிடைக்கச் செய்த நந்திக் கலம்பக ஆசிரியர் நன்றிக்கு உரியவரே,

பொருளியல் பகுதி

# 15. கோடீசுவரர் ஆகவேண்டுமா?

நம் பாட்டன்- பூட்டன் காலத்தில் ஆயிரம் உரூபா பெறுமானம் உள்ள உடைமைக்கு உரியவர் பெரிய பணக்கார ராக மதிக்கப் பெற்றார். நாளடைவில்ஆயிரக்கணக்கு போய், பதினாயிரக் கணக்கில் உடையவரே பெருஞ் செல்வராகக் கருதப் பெற்றார். இந்த அளவும் மதிப்பு இழந்து போக, நம் காலத்தில் நூறாயிரக் (இலட்சக்) கணக்கில் பொருள் உடையவரே பெருஞ் செல்வராக மதிக்கப் பெறுகிறார்-அதாவது, இலட்சாதிபதி எனப் போற்றப் பெறுகிறார். இப்போது இந்த அளவும் அடிபட்டு விட்டதாகத் தெரிகிறது. கோடிக் கணக்கில் பொருள் உடையவரே இனிச் 'செல்வர்' என்னும் பெயர் பெற முடியும்.இது இன்றைய நம் நாட்டுச் சூழ்நிலை, அயல் நாடுகள் சிலவற்றில் கோடீசுவரர்கள் என்றோ பெருகி விட்டனர்.

இலட்சத்திற்கு உரியவர்கள் 'அதிபதி' அதாவது அரசர் (இலட்சாதிபதி) என்னும் பெருமைக்கு உரியவராகக் கருதப் பட்டனர். கோடிக்கு உரியவரோ, 'ஈசுவரர்' அதாவது 'கடவுளர்' (கோடி+ ஈசுவரர்=கோடீசுவரர்) என்னும் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

உலகில் தாம் கோடீசுவரர் ஆகவேண்டும் என விரும்பாதவர் எவரும் இலர் என்று அடியேன் அடித்துக் கூறுவேனே யாயின், ஒரு சிலர் என்மேல் சினம் கொள்ளக் கூடும். எனவே, தாம் கோடீசுவரர் ஆகவேண்டும் என விரும்பாதவர் ஒரு சிலரே என்றாவது கூறி அடியேன் தப்பித்துக் கொள்ளும் வழியைப் பார்க்கவேண்டும்.

அவா யாரை விட்டது; எவ்வளவு சேர்ந்தாலும் போத வில்லை; ஆம்-போதவேயில்லை, என்ன செய்வது! அத னால்தான் திரு மூலர், அவா அறுங்கள் என,-

"ஆசை அறுமின் ஆசை அறுமின்!
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்!"

என்று தம் திருமந்திர நூற்பாடல் வாயிலாக அறிவுறுத்தி யுள்ளார், திருமூலர் என்றோ எழுதி விட்டாரே! எவ ரேனும் ஆசையை விட்டார்களா? மக்களின் ஆசை வெள் ளத்தை அணைபோட்டு அடக்கிவிட முடியாது. அவர்களை எந்த வகையிலாயினும் கோடீசுவரர்களாக ஆக்கியே தீரவேண்டும். அதற்குப் பல வழிகள் உள்ளன; அவற்றுள் அரிய வழிகளும் உள்ளன- எளிய வழிகளும் உள்ளன. இப் போது நமக்குத் தேவை எளிய வழியே-கோடீசுவரர் ஆவதற்கு ஓர் எளிய வழி கண்டுபிடிப்போமே! ஆனால், அதைக் கண்டுபிடிக்கும்அரிய முயற்சியும் நமக்குத் தேவை யில்லை. திருவள்ளுவர் ஓர்எளிய வழியைக் கண்டுபிடித்துக் கூறிச் சென்றுள்ளார். இதோ அந்த வழி:

"இல்லையென மறைப்பாரிடம் அல்ல-மறைக்காது கொடுப்பவரிடத்தும், மனம் கசந்து கொடுப்பவரிடம் அல்ல-மனம் கசக்காது கொடுப்பவரிடத்தும், முன் பின் அறியாத யாரோ ஒருவரிட மல்ல-மறைக்காமல் மனம் உவந்து கொக்கக் கூடிய கண்போன்ற வள்ளல்களிடத்துங் கூட ஒன்று வேண்டும் என இரந்து கேட்காதவரே கோடீ சுவரர் ஆவார்"-என்பதுதான் வள்ளுவர் கூறியுள்ள எளிய வழி. இந்தக் கருத்து,

"கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்"-(1061)

என்னும் குறளில் பொதிந்து கிடக்கிற தல்லவா? இதி லிருந்து இன்னொரு கருத்தும் தெரிய வருகிறது.'எவ்வளவு செல்வம் பெற்றிருப்பினும், இன்னொருவரிடம் சென்று ஓர் உதவிநாடுபவர் ஏழையாகவே கருதப்படுவர்-என்பதுதான் அந்தக் கருத்து.

ஆனால், உலகச் சமுதாய வாழ்க்கையில் வாணாள் முழுதும் ஒரு முறையாயினும்- ஒருவரிடமாயினும்-ஓர் உதவியாயினும் நாடாமல் இருப்பது எவர்க்கும் இயலாத தொன்றாகும்-என்னும் இமாலயப் பேருண்மை தெரியா மல் இல்லை-புரியாமல் இல்லை. எனினும், இயன்றமட் டும் இன்னொருவரிடம் சென்றுயாதோருதவியும்வேண்டா திருப்பதே சாலச் சிறந்தது என உறுதியாக உணர்ந்து, அதற் கேற்ப முயன்று உழைத்துத் தம் சொந்தக் காலில் நிற்கப் பழகிக் கொள்ள வேண்டும். அந்த ஆற்றல் பெற்ற வர் ஒன்றும் இலராயினும் கோடீசுவரரே யாவார் என்பது வள்ளுவர் கருத்து என்றாலும், கோடியின் பெறுமான அளவை வள்ளுவர் அறியாதவர் அல்லர்.

'ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பிறபிற' (337)

'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'(377)

'அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்'-(954)

'கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்''-(1005)

முதலிய குறள்களால், வள்ளுவர் உணர்ந்துள்ள கோடியின் பெறுமான மதிப்பு நமக்குப் புரியாமற் போகவில்லை.

இருப்பினும்,கோடிக்கணக்கில் செல்வம்இருந்தும் இன்னொருவரிடம் உதவிவேண்டுபவரினும் ஒன்றும் இல்லாவிடினும் ஒருவரிடம் சென்று உதவி வேண்டாதவரே உண்மையான கோடீசுவரர் என்னும் கருத்தை உறுதியாகப் பற்றிக் கொள்ளல் வேண்டும்.

'இரவாமை கோடியுறும்' என்னும் குறள்பகுதியிலுள்ள 'கோடி' என்னும் சொல்லுக்குப் பரிதியார், காலிங்கர் ஆகிய பழைய உரையாசிரியர்களைப் போல, அடியேன், கோடி செல்வம் எனப் பொருள் கொண்டுள்ளேன். ஆனால் பரிமேலழகர் 'கோடி மடங்கு' எனப் பொருள் கொண்டுள்ளார். இது பொருந்தாது. இவர்,

'பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி யுறும்'- (816)

'நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி யுறும்'- (817)

முதலிய குறள்களில் கொண்டாற்போல் ஈண்டும் 'கோடி மடங்கு' எனப் பொருள் கொண்டிருப்பது பொருந்தாது. இந்தக் குறள்களில், 'இன்னாரது நட்பினும் இன்னாரது பகை கோடி மடங்குமேல்' என்னும் கருத்து அமைந்துள்ளது. இத்தகைய அமைப்பு.

'கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும்' (1061)

என்னும் குறளில் இல்லை என்பதை, ஆழ்ந்த இலக்கியப் பயிற்சி உடையோர் எளிதில் உணரலாம். எனவே, பரிமேலழகரின் 'பக்தர்கள்' எளியேன்மேல் பாயாமல் நடுநிலை நின்று ஆய்ந்து உண்மை காண்பாராக!

இங்கே பரிமேலழகரை மறுத்துள்ளதின் காரணம் 'இரவாதவர் கோடீசுவரர் ஆவர்' என்னும் உண்மைக் கருத்து-அதாவது, ஆசிரியர் வள்ளுவர் சொல்ல எண்ணிய கருத்து நமக்குத் தெளிவாகக் கிடைக்காது'-என்பதேயாம். வேண்டுமானால் பரிமேலழகரின் உரைப்பகுதி முழுவதை யும் இங்கே தருகிறேனே!:-

'தமக்கு உள்ளது கரவாது, இவர் வரப் பெற்றேம் என்று மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார் மாட்டும் இரவாதே ஒருவன் வறுமை கூர்தல், இரந்து செல்வம் எய்தலின் கோடி மடங்கு நன்று என்றவாறு'-

பரிமேலழகர் உரையில், வள்ளுவனார் எண்ணிய கருத்து தெளிவு படுத்தப்பட வில்லை என்பது புலனாகுமே! அவர் இரந்துசெல்வம் எய்தலின்' என்பதை வலிந்து வரவழைத்து 'எழுதியுள்ளார். வேண்டாத இந்த வலிந்த வரவழைப்பு இல்லையேல், அவரது கருத்து சரிவராது. எனவேதான், மாபெருஞ் சிறப்பிற்கு உரிய பரிமேலழகரை மறுத்து உண்மைக் கருத்தை உணர்த்த வேண்டியதாயிற்று.

உலகில் உண்மையான கோடீசுவரர்கள் உருவாவதற்கு எளிய முறையில் வழி வகுத்துத் தந்த வள்ளுவனார் புகழ் வண்தமிழுடன் வாழ்க!

மருத்துவப் பகுதி

# 16. பகலில் விண்மீன்

புதுச்சேரியில் எங்கள் வீட்டில் ஒருநாள் முற்பகல் பத்து மணியளவில், பொன்னாங் கண்ணிக் கீரை வாங்கி ஆய்ந்து கொண்டிருந்தோம். 'அப்போது நான் (சு.ச.), பொன்னாங் கண்ணிக் கீரை கண்ணுக்கு மிகவும் நல்லது என்று சொன்னேன். அதைத் தொடர்ந்து என்மனைவி கூறிய ஒரு கதை வருமாறு:-

ஆண்டுக் கணக்கில் பொன்னாங்கண்ணிக் கீரை பறித்துக் கொண்டு வந்து தெருவிலே கூவி விற்கும் கிழவி யொருத்தி, ஒரு நாள் பகலில் திடீரென வானத்தை அண்ணாந்து நோக்கியபோது, அந்தப் பகல் நேரத்திலேயே வானில் உள்ள விண்மீன்கள் (நட்சத்திரங்கள்) தெரிந்தனவாம். இது என் மனைவி சொன்ன கதை.

சரி-கீரை ஆய்ந்து முடிந்ததும், யான் திறந்த நடு வாசலில் போய் நின்று கொண்டு, 'ஓடிவாருங்கள்-ஓடி வாருங்கள்' என்று கூவினேன். உடனே என் மனைவி மக்கள், என்னவோ-ஏதோ என்று பதறிப் பதைத்துப் பரபரப்புடன் ஓடிவந்து என்ன-என்ன என்று வினவினர்.

நான் அப்போது வானத்தைச் சுட்டிக் காட்டி, 'அதோ பாருங்கள்-ஆகாயத்தில் நட்சத்திரங்கள் நன்றாகத் தெரிகின்றன' என்று கூறினேன். பொன்னாங் கண்ணிக் கீரை விற்ற கிழவிக்குப் பகலில் நட்சத்திரங்கள் தெரிந்தன என்று கூறிய கதைக்கு ஏட்டிக்குப் போட்டியாகப் பகலிலேயே உங்களுக்கு ஆகாயத்தில் நட்சத்திரங்கள் தெரிவதாகப் புளுகுகிறீர்கள் - கிண்டல் செய்கிறீர்கள்-என்று கூறிக்

கொண்டு என் மனைவி மக்கள் அப்பால் நகர்ந்தனர். நான் கூறியது உண்மையன்று-விளையாட்டே. இது நடந்த பல ஆண்டுகட்குப் பின் நேர்ந்த நிகழ்ச்சி ஒன்று வருமாறு:-

1982 ஆம் ஆண்டு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொகுப்பியல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த யான், சாம்பசிவம் பிள்ளையின் மருத்துவம்-வேதியியல்-மரவியல்-பல துறை அறிவியல் தொடர்பான தமிழ்-ஆங்கில அகர முதலியைப் பார்த்து மரவினப் பெயர்களைக் குறித்துக் கொண்டிருந்தபோது ஒரு பெருவியப்பு காத்திருந்தது. அந்நூலில், 'நட்சத்திரம் தோன்றி=பொன்னாங் கண்ணி' என்று ஒரு சொற்பொருள் விளக்கம் தரப்பட்டிருந்தது. அதாவது: 'நட்சத்திரம் தோன்றி' என்பதற்குப் 'பொன்னாங் கண்ணி' என்று பொருள் எழுதப்பட்டிருந்தது. அதாவது, பொன்னாங்கண்ணிக்கு 'நட்சத்திரம் தோன்றி' என்ற ஒரு பெயர் உண்டு என அறிவிக்கப்பட்டது.

இதைக் கண்டதும், யான் அடைந்த வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் அளவே இல்லை. பல ஆண்டுகட்குமுன் எங்கள் வீட்டில் நடந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்து மேலும் சுவை யூட்டிற்று.

இதனால் நாம் அறிவது, பொன்னாங் கண்ணிக்கீரை, தன்னை உண்பவர்க்குக் கண் பார்வையைக் கூர்மையாக்கும் என்பது. பகலிலேயே விண்மீன்கள் தோன்றித்தெரியும் என்பது. 'உயர்வுநவிற்சி'யாக இருக்கலாம்? அல்லவா ஒரு வேளை சித்தர் யாருக்காவது உண்மையாகவே தெரிந்திருக்குமோ!

இங்கே, இரண்டாம் உலகப்பெரும்போரின்போது ஏற்பட்ட நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வருகிறது: செர்மானியர்

தங்கள் போர் வானூர்தியில் இருந்தபடி இங்கிலாந்தைத் தாக்கத் தொடங்கினர். விழிப்படைந்த ஆங்கிலேய வானூர்திப் படையினர், செர்மானியரின் போர் வானூர்திகள் மிக்க தொலைவில் வரும்போதே கண்டு பிடித்துச் சுட்டுத் தாக்கிச் செர்மானியரைச் செயலறச் செய்தனர்.

இந்நிலையில், ஆங்கில வானூர்திப் படையினர் மிக்க தொலைவில் வரும் வானூர்திகளை எவ்வாறு காண முடிகிறது என்பது கேள்விக் குறியாயிற்று. ஆங்கில வானூர்திப் படையினர்க்கு 'கேரட்' (carrot) நிரம்ப உண்ணத் தருவதால், அவர்கட்குக் கண்பார்வை கூர்மை பெற்று மிக்க தொலைவில் உள்ள பொருள்களையும் கண்டுபிடிக்க முடிகிறது-என்ற செய்தி பரப்பப்பட்டது. இதை அறிந்ததும், இங்கிலாந்தில் கேரட் கிழங்கின் விலை உயர்ந்து விட்டதாம். பலரும் மிகுதியாக வாங்கி உண்ணத் தொடங்கியதே இதற்குக் காரணமாம்.

உண்மை பிறகு தெரிய வந்தது. 'ராடார்' (Rader) என்னும் 'தொலை இயக்கமானி' கண்டு பிடிக்கப்பட்டு அமைக்கப்பெற அதன் உதவியால் தொலைவிலுள்ள பொருள்களையும் காண முடிந்தது; அதனால் செர்மானியரின் வான ஊர்திகளை எளிதில் தகர்க்க முடிந்தது-என்பதே பிறகு அறியப்பட்ட உண்மை. இந்த 'ராடார் கருவி செய்யும் வேலையைப் பொன்னாங் கண்ணிக் கீரை செய்யும் போலும்!

பொன்னாங் கண்ணிக்கீரைக்கு, 'கண்ணுக்கு அணி' கண்ணுக்கு இனியான்' என்ற பெயர்கள் உண்மையும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

மர இனப் பகுதி (Botany)

# 17. இயற்கை மணி காட்டிகள்

**ஞாயிறு திரும்பி:**

ஞாயிறு (சூரியன்) செல்லும் பக்கம் வணங்கித் (சாய்ந்து) திரும்பும் சூரியகாந்திச் செடிக்கு உரியனவாக, 'ஞாயிறு திரும்பி; 'பொழுது வணங்கி' 'பொழுது திரும்பி' என்னும் பெயர்கள்' பின்வரும் நூல்களில் ஏற்றபெற்றிச் சூட்டப்பட்டுள்ளன. அந்நூல்கள் வருமாறு:-

மருத்துவ மலையகராதி, பச்சிலை மூலிகைச் சித்த மருத்துவ அகராதி, பதார்த்த குண அரும்பொருள் மருத்துவ அகராதி, ஃபாபிரியசு (Febricius) தமிழ்-ஆங்கில அகர முதலி, ஜூபிலி தமிழ்ப் பேரகராதி, வின்சுலோ (Winslow) தமிழ்-ஆங்கில அகர முதலி, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி, சென்னைப் பல்கலைக் கழக-ஆங்கிலம்-தமிழ்ச் சொற்களஞ்சிய அகராதி, சாம்ப சிவம் பிள்ளையின் மருத்துவம்-மரஇயல்-அறிவியல் பற்றிய தமிழ்-ஆங்கில அகர முதலி, முய்சே (L. Mousset)-துய்புய் (L. Dupus) என்னும் பிரெஞ்சுத் துறவியர் இருவர் தொகுத்த இலத்தீன் பிரெஞ்சு தமிழ் அகர முதலி-பிரெஞ்சு தமிழ் அகர முதலி-தமிழ் பிரெஞ்சு அகர முதலி ஆகிய அகர முதலிகள், லரூசு என்பவரின் Dictionnaire Larousse என்னும் பிரெஞ்சுக்குப் பிரெஞ்சுப் பேரகராதி, Lucien M.Giboin என்பவர் எழுதிய Eptiome De Botanique Et De Matiere Medicale De L'Inde என்னும்பிரெஞ்சு நூல், அமெரிக்க-ஆங்கிலக் கலைக் களஞ்சியம் முதலியன.

**மறுப்பு:**

இல்வளவு நூல்களில், சூரியகாந்தி ஞாயிறை நோக்கித் திரும்பும் என்னும் பொருளைக் குறிக்கும் பெயர்கள் கூறப்பட்டிருந்தும், தமிழப் பேரறிஞர் ஒருவர் இதற்கு மறுப்பு தெரிவித்தார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகச் 'செய்தி மலர்' என்னும் இதழில் யான் எழுதிய மேற் கூறிய கருத்துக்கு அந்த அறிஞர் எழுதிய மறுப்பு வருமாறு:- "சூரியகாந்தி சூரியனை நோக்கித் திரும்புவதில்லை; நெருஞ்சிப் பூதான் திரும்புகிறது; இது பலகாலும் சோதித் தறியப் பட்டது' என்பது அவரது மறுப்புக் கருத்து.

**மறுப்புக்கு மறுப்பு:**

சூரிய காந்தியில் ஏறக்குறைய அறுபது இனங்கள் உண்டு. அவற்றுள் சில, சூரியனை நோக்கித் திரும்பாமலும் இருக்கலாம். நெருஞ்சி பூ சூரியனை நோக்கித் திரும்புவது உண்டு. ஆனால், ஆங்கிலத்தில் Son Flower என்றும், மர நூலாரால் (Botanists) ஃஎலியாந்தஸ் அன்னுசஸ் (Helianthus Annuses) என்றும் கூறப்படும் இனத்தைச் சேர்ந்த சூரியகாந்திவகைகள் சூரியனை நோக்கித் திரும்புவது முற்றிலும் உண்மை.

இது சார்பாகச் சில அகர முதலிகளில் உள்ள நேர் விளக்கம் வருமாறு:-

1. சாம்ப சிவம் பிள்ளையின் தமிழ் ஆங்கில அகர முதலி:-சூரிய காந்திப் பூ —சூரியன் பக்கம் திரும்பி நிற்கும் பூ-Flower facing the Sun-Helianthus Indica.

2. Encyclopedia Americana:-Helianthus=Sun Flower....Plant With large flower heads that turn to follow the Path of the Sun.

3. Epitome De Botanique.....De L Inde-Helianthus Annus Souriakandicedy-Tournesol, Cultive: (Pondich...)

மூன்றாவது நூலில், சூரியகாந்தி புதுச்சேரி வட்டாரத்தில் பயிரிடப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சூரியகாந்திச் செடி என்பதன் பெயராக இதில் குறிப்பிடப்பட்டுள்ள Tournesol என்னும் பிரெஞ்சு மரபுத் தொடரின் பொருள், 'சூரியனை நோக்கித் திரும்புவது' என்பதாகும். Tourne=Turn=திரும்புதல்; Sol=சூரியன். பிரெஞ்சுத் துறவியர் இருவரின் பிரெஞ்சு-தமிழ் அகராதியில் உள்ள இதன் பொருள் வருமாறு:-

"Tournesol=சூரியகாந்தி=ஞாயிறுதிரும்பி=பொழுது வணங்கி என்பதாகும்"

அடுத்து, லரூசு பிரெஞ்சுக்குப் பிரெஞ்சுப் பேரகராதியில் (Dictionnaire Larousse) உள்ள இதன் பொருள் விளக்கம் வருமாறு:- Tournesol ="...Les Fleurs Se tournent vers le Soleil comme l' heliotrope et l' helianthe..." தமிழில் இதன் பொருளாவது:- 'ஹெலி யோத் ரோப்', 'ஹெலியாந்த்' என்பன போலச் சூரியனை நோக்கித் திரும்பும் மலர்கள் என்பதாம்.

கைப் பூணுக்குக் கண்ணாடி எதற்கு? சூரிய காந்திப் பூக்கள் மட்டு மல்ல-சூரியகாந்தி இலைகளும் சூரியனை நோக்கித் திரும்புவதைப் புதுச்சேரி வட்டாரத்தில் காண லாம். தம்மூர்ப் பக்கத்தில் சூரிய காந்தியைப் 'பொழுது வணங்கி' என்னும் பெயரால் பொது மக்கள் வழங்குவதுண்டு என்பதாக வேலூர் நண்பர் ஒருவர் சொல்லியிருக்கிறார். எனவே, சூரிய காந்தி ஞாயிறு நோக்கித் திரும்புவதுண்டு-பொழுது வணங்குவதுண்டு-என்று துணிந்து சொல்லலாம்

**நேரங்காட்டி:**

இக்கருத்துக்கு ஆதரவு அளிக்கும் இன்னொரு செய்தியையும் இங்கே மறப்பதற்கில்லை: சூரிய காந்தி சூரியனைநோக்கிச் சாய்ந்து திரும்புவதைக் கொண்டு நேரத்தையும் (கால மணியையும்) ஒருவாறு உய்த்துணர்ந்து வந்த நம் முன்னோர், இதற்கு 'நேரம் காட்டி' என்னும் பெயரையும் சூட்டியுள்ளனர். இப்பெயரை, பச்சிலை மூலிகைச் சித்த மருத்துவ அகராதியிலும், சாம்ப சிவம் பிள்ளையின் தமிழ்-ஆங்கில அகர முதலியிலும் இன்ன பிறவற்றிலும் காணலாம்.

எனவே, சூரிய காந்தி, ஓர் இயற்கை மணி காட்டியாகவும் பண்டு பயன்பட்டு வந்தது என்று கூறலாம் அல்லவா? இனி, சூரியகாந்தியை நோக்கிக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடியுள்ள பாடல் பகுதிகளைக் காண்பாம்:

> "காயும் கதிரவன் மேனியை நோக்கி-உன்
> கண்களும் கூசிக் கலங்காவோ?"
>
> "செங்கதிர் செல்லும் திசையது நோக்கி-உன்
> செல்வ முகமும் திரும்புவ தேன்?"
>
> "உன்பெயர் சூரிய காந்தி யென்றார்-அதன்
> உண்மையும் இன்றே அறிந்து கொண்டோம்"

(நூல்: மலரும் மாலையும்-தலைப்பு 49: சூரிய காந்தி).

**நெருஞ்சி:**

சூரியகாந்தியைப் போலவே நெருஞ்சியும் சூரியனை நோக்கித் திரும்புவதாகும். நெருஞ்சியைச் சூரிய காந்தியின் எட்டின தூரத்துப் பங்காளி என்று கூறலாம். சூரிய

காந்தி சங்க நூல்களில் இடம் பெறவில்லை; ஆனால் நெருஞ்சி சங்க நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலம்-தமிழ்ச் சொற் களஞ்சிய அகர முதலியில், Helianthus-என்னும் சொல்லுக்கு, 'சூரிய காந்தியை உட்படுத்திய நெருஞ்சிப் பேரினம்' எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. எனவே, இவை சூரியனை நோக்கித் திரும்புவதினால் ஓரினம் எனப்படுகிறது.

நெருஞ்சி ஞாயிறை நோக்கித் திரும்பும் செய்தி முற்கால இலக்கியங்களாகிய சங்க நூல்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் ஒருசில காண்பாம்:-

"ஓங்கு மலைநாடன் ஞாயிறு அனையன், தோழி!
நெருஞ்சி அனைய என்பெரும் பணைத் தோளே"-
(குறுந் தொகை-315)

"வானிடைச் சுடரொடு திரிதரு நெருஞ்சி போல
என்னொடு திரியேன் ஆயின்"-
(அகநானூறு: 336-18,19)

"பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு"-
(புறநானூறு: 155-4,5)

"நீள் சுடர் நெறியை நோக்கு
நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்"-
(சீவக சிந்தாமணி -461),

"வெஞ்சுடர் நோக்கும் நெருஞ்சியில்"
(இறையனார் அகப் பொருள்-47-உரைப்பாட்டு)

"ஏழுளைப் புரவியொ டெழுகதிர் நோக்கிய
சிற்றிலை நெருஞ்சிப் பொற்பூ என்ன
நின்முகக் கிளையினர்"
(கல்லாடம்: 65-14,15,16)

"செங்கதிர் விரும்பும் பைங்கொடி நெருஞ்சிப்
பொன்புனை மலரின் புகற்சி போல்"-
(பெருங் கதை: 2-4:14,15)

"நிரம்பு கதிர்நேர் நெருஞ்சி யெனத் தன்பால்
திரும்பு விழி ஆயமொடு சென்றாள்"-
(திரு வெங்கை உலா-354.355)

"வெஞ்சுடர் நோக்கு நெருஞ்சியில்"(பாண்டிக்கோவை)

மேற்காட்டியுள்ள அகச் சான்றுகளால், புலவர்களின் கூர்த்த நோக்கில் நெருஞ்சி ஞாயிறை நோக்கித் திரும்புவது நன்கு தென்பட்டிருக்கிறது-என்பது புலனாகும். நெருஞ்சி யைப் போல் சூரியகாந்தி பழைய இலக்கியங்களில் இடம்பெறாமையால், சூரிய காந்தி பிற்காலத்தது-வெளியி லிருந்து வந்தது-என்று எண்ணத் தோன்றுகிறது.

சூரியகாந்தி, நெருஞ்சி என்னும் இரண்டுமே ஞாயிறை நோக்கிச் சாய்ந்து வணங்கித் திரும்புவதால் ஓரளவு நேரத்தை அறிய உதவுகின்றன. எனவே, இவற்றை 'நேரம் காட்டிகள்' என்றும் 'இயற்கை மணி காட்டிகள்' என்றும் இயம்பலாம் அன்றோ?

*கலைகளின் தாய்ப் பகுதி*

# 18. தமிழில் ஒப்புமைக் கலை

(1. ஒப்புமைக்கலை; 2. தமிழில் ஒப்புமைக்கலை; 3. தொல்காப்பியத்தில் ஒப்புமைக்கலை; 4. பிற்கால நூல்களில் ஒப்புமைக்கலை; 5. ஒப்புமைக் கலையின் எதிர்காலம்)

## 1. ஒப்புமைக் கலை

**ஒப்புமை இலக்கணம்**

(1) "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"-(1)

என ஒப்புமை விளக்கத்துடன் திருவள்ளுவர் திருக்குறளைத் தொடங்கியுள்ளார். 'எல்லா எழுத்துகளும் 'அ' என்னும் எழுத்தை முதலாக உடையன; அதுபோல உலகம் இறைவனை முதலாக உடையது'-என்பது குறள் கருத்து. நன்கு தெரியாத ஒன்றை விளக்குவதற்கு 'இது போன்றது அது' என நன்கு தெரிந்த ஒன்றை மாதிரியாக எடுத்துக்காட்டுவதுதான் ஒப்புமை எனப்படுவது. இதனை உவமம், உவமை என்றும் கூறுவர். 'அகர முதல எழுத்தெல்லாம்' என்பது உவமம். அதன் வாயிலாக விளக்கப்படும் பொருள் 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பது.

**ஒப்புமை ஒரு கலை:**

(2) பேச்சிலோ எழுத்திலோ பொருள் விளக்கத்திற்குப் பொருத்தமான ஓர் உவமம் எடுத்துக்காட்டும் திறமையில் ஒப்புமைக் கலை பிறக்கிறது. ஒருவர் தாம் எடுத்துக் கொண்ட பொருளை விளக்குவதற்குக் கையாளும் ஒப்புமையின் நுட்பச்சிறப்பைக் கொண்டு உயர்ந்த எழுத்தாளராக-

சிறந்த பேச்சாளராக மதிக்கப்படுவது உண்டு. வள்ளு வரின் உவமைகள், கம்பரின் உவமைகள், காளிதாசரின் உவமைகள், சேக்சுபியரின் உவமைகள் முதலிய தலைப்பு களில்எழும் சொற்பொழிவுகளும் எழுத்துப்படைப்புகளும் ஒப்புமை காட்டும் திறனை ஒரு கலையாக்கிக் காட்டி, ஒப்புமை ஒரு கலை' என்பதற்குப் போதிய சான்றுகளாய் 'நிற்கின்றன.

**இயற்கைக் கலை:**

(3) ஒப்புமைக்கலை கற்றறிந்த அறிஞர்களின்தனியுடை மையன்று. ஒப்புமைக்கலை ஓர் இயற்கைக்கலை; விலை கொடுத்துக் கல்விகற்றுத் தெரிந்து கொள்ள வேண்டாத ஓர் எளிய கலை. கல்லாத-எழுத்தறிவேயில்லாத எளிய மக் களும் கையாளும் ஓர் உயிர்க்கலை. மக்களிடையே பேச்சுக் குப் பேச்சு-கருத்துக்குக் கருத்து நாவில் ஒப்புமைக்கலை நடமிடுவதைக் காணலாம்.

**மக்கள் கலை:**

(4)ஒரு நாள் காலை ஒரு சிற்றூரில் நாட்டு மருத்துவர் ஒருவரிடம் நான் சென்றிருந்தேன். அப்போது எளிய தோற்ற முடைய அம்மையார் ஒருவர் இரு குழந்தை களுடன் அங்கு வந்தார். அவர் மருத்துவரிடம் சிறிய குழந் தையைக் காட்டி 'இதற்கு இரவெல்லாம் ஈயச்சட்டிகாய்ந் தாற் போல் காய்ந்தது' என்றும், பெரிய குழந்தையைக் காட்டி 'இதற்குஇரவெல்லாம் பெருச்சாளிக்குஇரைத்தாற் போல் இரைத்தது' என்றும் கூறினார். எத்துணை பொருத் தமான உவமைகள் என எண்ணி யான் வியந்தேன். நாட்டு மருத்துவரிடம் காய்ச்சல் மானி (தெர்மாமீட்டர்)இல்லை. எனவே, காய்ச்சலின் அளவை நுனித்தறியக் 'காய்ந்த ஈயச்சட்டி ஒப்புமையாய் நின்று துணைபுரிகின்றது.இந்தத்

துறையில் பெருச்சாளி புரியும் பணியும் பெரியதே. இவ்வாறு மக்களின் பேச்சு வழக்கில் எடுத்ததற்கெல்லாம் ஒப்புமைச் சுவையைக் காணலாம். எந்த ஒப்புமையும் திடீரென உள்ளத்தில் தோன்ற வில்லையெனில், 'என்னமோ சொல்லுவாங்களே அது போல' என இனந் தெரியாத ஒப்புமையாவது மக்கள்கூறுவது இயல்பு. எனவே, ஒப்புமைக் கலை மக்கள் கலை என்பது போதரும்

**தாய்மைக் கலை:**

(5) ஒப்புமை ஒரு கலையாகத் திகழ்வதன்றிப் பல்வேறு கலைகளின் தாயாகவும் விளங்குகிறது. ஒப்புமைக் கலையிலிருந்து பல கலைகள் பிறந்தன என்று கூறுவதனினும், ஒப்புமைக் கலையே பல கலைகளாக மாறி உருவெடுத்துள்ளது என்றுகூடக் கூறிவிடலாம் இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகள் ஒப்புமைக் கலையின் அடிப்படையில் உருவானவையே. குறவஞ்சி குறி சொல்லுவதுபோல் இசையரங்கில் பாடுவதும்-நடன அரங்கில்ஆடுவதும்-நாடக அரங்கில்நடிப்பதும் உண்மையல்லவே-ஒப்புமையே யன்றோ? குறவஞ்சிபோல் தீட்டப்பட்ட ஓவியமும்-அவளைப் பார்த்துப் பிடித்த புகைப்படமும்-அவள் போல் செதுக்கப்பட்ட சிற்பமும்-செய்யப்பட்ட சிலையும் பொம்மையுருவமும் உண்மையல்லவே-ஒப்புமைகள் தாமே! எனவே, இசை, நடனம், நாடகம், நாட்டிய நாடகம், திரைப் படம், ஓவியம், புகைப்படம், சிற்பம், சிலை, வார்ப்பட்டம், பொம்மை, கம்மியம், ஒப்பனை (அலங்காரம்) முதலிய கலைகளின் தாய்க்கலை ஒப்புமைக்கலையே என்பது தெளிவு

(6) ஈண்டு சிறப்பாக ஓவியக்கலையை எடுத்துக் கொள்வோம். ஒவ்வுவது ஓவியம். ஒவ்வுவது என்றால் ஒத்தி

ருப்பது என்று பொருளாம். ஓவியத்திற்கு ஓவு, ஓவி, ஓவம் ஆகிய பெயர்களும் இலக்கியங்களில் உள்ளமை குறிப் பிடத்தக்கது.

(6.அ) சர்க்கரையின் இனிப்புச் சுவையைப் பல்வேறு இனிப்புப் பண்டங்களில்-பல்வேறு மாதிரிகளில் காண்பது போல, ஒப்புமைக்கலையைப் பல்வேறு கலைகளில்-பல்வேறு உருவங்களில் காண்கிறோம். 'அன்பே கடவுள்' என்பது போல 'ஒப்புமையே கலைகள்' என்று கூறிவிடலாம்போல் தோன்றுகிறது.

**கருவிக்கலை (Tool Art):**

(7) பேச்சுக்கலை, இலக்கியக்கலை, கற்பிக்குங்கலை முதலிய கலைகளின் வெற்றிக்கு ஒப்புமைக்கலை தக்க கருவியாய்ப் (ஆயுதமாய்ப்) பயன்படுகிறது. பேச்சாளரோ, எழுத்தாளரோ, இலக்கியப் புலவரோ, பாடம் பயிற்றும் ஆசிரியரோ, ஒப்புமைக்கலையின் உதவியின்றித் தம் தொழி லில் வெற்றி காணலரிது. இக்கலைஞர்கள் குறிப்பிட்ட ஒரு கருத்தை விளக்க, காலத்தோடு காலம்—இடத்தோடு இடம் —ஆளோடு ஆள்-பொருளோடு பொருள்-நிகழ்ச்சியோடு நிகழ்ச்சி ஆகியவற்றை ஒப்பிட்டுக்காட்டித் தம் தொழிலில் உயர்வு பெறுகின்றனர். எனவே தான், ஒப்புமைக்கலை ஒரு 'கருவிக்கலை' எனப்படுகிறது.

**வாழ்க்கைக் கலை:**

(8) உயிர் வாழ்க்கையே ஒப்புமைக்கலையின் அடிப் படையின் மேல்தான் நடக்கிறது. குழந்தைகள் பிறரைப் பார்த்துப் பின்பற்றி அவர்கள் செய்வதுபோல் செய்து தான் வாழ்க்கையைக் கற்றுக் கொள்கின்றனர். பெரியவர் களுங்கூட ஒருவரைப் பார்த்து ஒருவர் வாழ்கின்றனர். சூழ்

நிலையின் உணர்வைத் தாமும் கொள்ளும் 'ஒத்துணர்வு' (Sympathy), பிறர் குறிப்பறிந்து அவர் விரும்புவதுபோல் நடக்கும் 'குறிப்பறிதல்' (Suggestion), பிறர் நடப்பதைப் பார்த்து அதுபோலவே நடக்கும் 'பின்பற்றல்' (Imitaiton), பெரியவர்கள் உண்மையாகச் செய்வதைப் பார்த்துக் குழந்தைகள் தாமும் அதுபோல் கற்பனையாக விளையாடும் 'விளையாட்டு' (Play) ஆகியவற்றை உளவியலார் (Psychologists) 'உள்ளத்தின்பொதுப்போக்குகள்'(General-Tendencies) எனக் குறிப்பிடுகின்றனர். இந்தப் பொதுப் போக்குகளின்தொகுப்பே வாழ்க்கை எனலாம், உயிர்வாழ்க்கையின் அடிப்படையாகிய இந்தப் பொதுப் போக்குகட்கு அடிப்படை ஒப்புமைக்கலையே. எனவே, ஒப்புமைக்கலை வழிகாட்டும் வாழ்க்கைக் கலை யாகும்.

(9) இதுகாறுங் கூறியவற்றால், ஒப்புமைக்கலையின்றி வேறு கலைகள் இல்லை என்பது மட்டுமன்று; ஒப்புமைக் கலையின்றி உயிர்வாழ்க்கையே இல்லை-உலக நடைமுறையே இல்லை என்பதும் வெளிப்படை.

## 2. தமிழில் ஒப்புமைக்கலை

### ஒப்புமைக் கலையின் தொன்மை

(10) இன்னும் உலகில் எத்தனையோ மொழிகட்குச் சொந்த எழுத்துகூட இல்லாத நிலையில், இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்டு முன்பே, அனைத்தும் தானாக உள்ள ஒப்புமைக்கலை தமிழ் மொழியில் பெற்றுள்ள-நம்ப முடியாத-ஆனால் உண்மையான பெருவளர்ச்சியை எண்ணும் போது வியப்பினால் மெய்சிலிர்க்கிறது. இதுவரை முழு உருவில் கிடைத்துள்ள தமிழ் நூல்களுள் முதன்மையானது தொல்காப்பியர் இயற்றியதொல்காப்பியம் ஆகும்.

இஃது இற்றைக்கு மூவாயிரம்(கி.மு. 1000) ஆண்டுக்கு முற்பட்டது, இந்தப் பழம் பெரு நூலில் ஒப்புமைக்கலை சிறப்பிடம் பெற்றுள்ளது.'ஒப்புமை குறித்து முன்னோர்கள் இவ்விவ்வாறு கூறியுள்ளனர்'என்று தொல்காப்பியர் கூறியிருப்பதிலிருந்து, அவருக்கும் பல்லாயிரம்ஆண்டுகட்கு முன்பே ஒப்புமைக் கலை தமிழில் சிறந்திருந்தது என உணரலாம். எனவே, தமிழ் ஒப்புமைக்கலையின் வயது ஐயாயிரத்திற்கும் மேற்பட்டதாகும் என உய்த்துணரலாம்.

**மூன்று இலக்கணங்கள்:**

(11) தொல்காப்பியத்தின் முப்பெரும் பிரிவுகளுள் முதலாவதான எழுத்ததிகாரத்தில் எழுத்துக்களைப் பற்றிய எழுத்திலக்கணமும் இரண்டாவதான சொல்லதிகாரத்தில் சொற்களைப் பற்றிய சொல்லிலக்கணமும், மூன்றாவதான பொருளதிகாரத்தில் வாழ்க்கையைப்பற்றிய பொருளிலக்கணமும் கூறப்பட்டுள்ளன. இறுதியான பொருளதிகாரத்திலேயே ஒப்புமைக் கலை இடம்பெற்றுள்ளது.

(12) பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமஇயல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது உட்பிரிவுகள் உள்ளன. இவ்வொன்பதனுள் முதல் ஐந்து இயல்கள் அகவாழ்வு-புறவாழ்வுஆகியஅகப்பொருள்-புறப்பொருள்பற்றியன.மெய்ப்பாட்டியல்உள்ளத்துஉணர்ச்சிகளைப் பற்றியது. ஒப்புமை காட்டிக் கருத்து விளக்கம் செய்வது பற்றியது உவம இயல். செய்யுளியலோ, செய்யுள் இயற்றும் யாப்பு முறைகளைக் கூறுவது. இன்னின்ன பொருளை இப்படிப்பிப்படி அழைப்பதுதான் மரபு என்று அறிவிப்பது மரபியல். இவற்றின் தொகுப்பே பொருள் இலக்கணமாகும்.

**நான்கு இலக்கணங்கள்:**

(13) இப்படியாகத் தொல்காப்பியக்காலம் வரை-ஏன் அதற்குப்பின்னும் பல நூற்றாண்டுகள் வரை தமிழிலக்கணம் மூன்று பிரிவாகக்கொள்ளப்பட்டுவந்தது. இடையில் 'இறையனார் அகப்பொருள்' என்னும் நூலின் உரைகாரர் காலத்தில்-அதாவது சங்ககாலத்தை ஒட்டி, செய்யுளியற்றும் யாப்பு முறை, பொருளிலக்கணத்திலிருந்து பிரிந்து 'யாப்பிலக்கணம்' எனத் தனியிலக்கணப் பெயர் பெற்றிருந்தது. எனவே இலக்கணம் நான்கு பிரிவினதாயிற்று.

**ஐந்து இலக்கணங்கள்**

(14) கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப பின், தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள உவம இயலையும் மெய்ப்பாட்டியல், செய்யுளியல் ஆகியவற்றிலிருந்து சில செய்திகளையும், சொல்லதிகாரத்தில் ஆங்காங்கே யுள்ள சில செய்திகளையும் பிரித்துத் தொகுத்தாற் போன்ற ஓர் உருவத்தில் 'அணியிலக்கணம்' என ஓர் இலக்கணம் பிரிந்து எழுந்தது. இஃதுஞ் சேர இலக்கணம் ஐந்தாயிற்று.

**உவமை அணி:**

(15) அணி என்பதற்கு அழகு, நகை (ஆபரணம்), அலங்காரம் முதலிய பொருள்கள் உள்ளன. கருத்துக்களை அழகாக-சுவையாக-அலங்காரமாக வெளியிடும் முறைகளைக் கூறுவது அணியிலக்கணம். பிற்கால அணியிலக்கண நூல்களில் உவமை, உருவகம் முதலியனவாக நூறு அணிகள்வரை கூறப்பட்டுள்ளன. அணிகளுள் சிறந்தது-தலைமையானது உவமை அணி. அதனால்தான் தொல்காப்பியர் உவமையை மட்டும் தனியாகப் பிரித்து எடுத்துக்கொண்டு 'உவம இயல்' என அதற்குத் தனியே ஓர் இயலே (chapter)

செலவிட்டிருக்கிறார். மற்றும், அகத்திணையியல், பொருளியல் ஆகியவற்றிலும் உவமத்தைப் பற்றி ஓரளவு கூறியுள்ளார்.

**ஒப்புமைக் கலை நூல்கள்:**

(16) தொல்காப்பியத்திற்குப் பல நூற்றாண்டு கட்குப் பின் எழுந்த இலக்கண நூல்களுள் அணியிலக்கணமும் தனிப் பிரிவாக இடம் பெற்றுள்ளது. அணியிலக்கணத்தைப் பற்றிமட்டும் கூறும் நூல்களும் சில உள. சில நூல்கள் வடமொழி நூல்களைத். தழுவியுள்ளன. அணியிலக்கணம் கூறும் அனைத்து நூல்களும் உவமையைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளன. அந்நூல்களைப் பற்றிய விவரங்களைக் கால வாரியாகக் காண்பாம்:-

(அ) **அணியியல்**-இஃது அணியிலக்கணம் மட்டும் கூறுவது; பிற்கால நூல்களுள் முந்தியது. ஆசிரியர் பெயரும் காலமும் தெரியவில்லை. நூலும் முழுதும் கிடைக்கவில்லை.

(ஆ) **வீரசோழியம்**-இஃது ஐந்து பிரிவுகளில் ஐந்திலக்கணமும் கூறுவது. ஆசிரியர் புத்தமித்திரனார். காலம் கி.பி. பதினோராம் நூற்றாண்டு.

(இ) **தண்டியலங்காரம்**-இஃது அணியிலக்கணம் மட்டும் கூறுவது; வடமொழியிலுள்ள ‘காவிய தரிசனம்’ என்னும் நூலைத் தழுவியது. ஆசிரியர் தண்டியாசிரியர். காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு.

(ஈ) **நன்னூல்**-இஃது ஐந்திலக்கணமும் கூறுவது என்று சிலரும், எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றிலக்கணமே கூறுவது என்று சிலரும் மொழிகின்றனர். இப்போது நன்னூலின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்

என்னும் இரு பிரிவுகள் மட்டுமே கிடைத்துள்ளன. இதன் ஆசிரியர் பவணந்தி முனிவர். காலம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு.

**(உ) மாறனலங்காரம்**- இஃது அணியிலக்கணம் மட்டும் கூறுவது. ஆசிரியர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர். காலம் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு.

**(ஊ) இலக்கண விளக்கம்**-இது தொல்காப்பியம் போல் பொருளதிகாரத்தில் அணியிலக்கணம் கூறுவது. ஆசிரியர் வைத்திய நாததேசிகர்-17 ஆம் நூற்றாண்டு.

**(எ) தொன்னூல் விளக்கம்**-ஐந்து பிரிவுகளில் ஐந்திலக்கணமும் கூறுவது. ஆசிரியர் பெஸ்கி (Beschi) என்னும் வீரமா முனிவர்-18 ஆம் நூற்றாண்டு.

**(ஏ) முத்து வீரியம்**-ஐந்து பிரிவுகளில் ஐந்திலக்கணமும் கூறுவது. ஆசிரியர் முத்து வீரநாவலர்-19 ஆம் நூற்றாண்டு

**(ஐ) சந்திரா லோகம்**-அணியிலக்கணம் மட்டும் கூறுவது. வடமொழி பெயர்ப்பு. ஆசிரியர் விசாகப் பெருமாள் ஐயர் -19 ஆம் நூற்றாண்டு. இவரே 'ஐந்திலக்கண வினாவிடை' என்னும் ஐந்திலக்கண நூலும் எழுதியுள்ளார்.

**(ஒ) தண்டியலங்காரசாரம்**- அணியிலக்கணம் மட்டும் கூறுவது. ஆசிரியர் தி.ஈ. சீநிவாசராகவாசாரியார்-19-20 -ஆம் நூற்றாண்டு.

**அணிகளின் எண்ணிக்கை:**

(17) பொருள் அணிகள் என்னும் பெயரில் தண்டியலங்காரத்தில் முப்பத்தைந்து அணிகளும், மாறனலங்காரத்தில் அறுபத்து நான்கு அணிகளும், சந்திரா லோகத்தில் நூறு அணிகளும் பேசப்பட்டுள்ளன. ஆசிரியர் ஒவ்வொருவரும்

தாம் 'அழகென எண்ணியவற்றை யெல்லாம் அணிகள் எனக் கூறிவிட்டனர். 'வாழ்க வாழ்க' என வாழ்த்துவது வாழ்த்து அணியாம். இதனால்தான், 'உட்கார்ந்தால் ஓர் அணி-ஓடினால் ஓர் அணியா' என்று கேட்பவர்போல் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் அணியிலக்கணக்காரர்களைச் சாடுகிறார். பிற்காலத்தில் புற்றீசல்கள்போல் எழுந்த அணிவகைகளை அணிகள் எனக் கூறப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ஒத்துக் கொள்ளவில்லை.

**தலைமை அணி:**

(18) பிற்கால ஆசிரியர்கள் அணிகள் என்னும் பெயரில் தெரிவித்திருக்கும் பல செய்திகளைத் தொல்காப்பியர் பல விடங்களில் வேறு பல பெயர்களில் வெளியிட்டுள்ளார். மற்ற ஆசிரியர்கள் 'பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று' என்ற முறையில் பல அணிகளுள் ஒன்றாக உவமையைக் கூறியிருக்க, தொல்காப்பியர் உவமைக்குத் தனி இயல் (Section) வகுத்திருப்பது, 'அணிகளுள் தலைமையானது உவமையணியே; அதிலிருந்துதான் வேறு பல அணிகள் பிரிந்தன' என்னும் உண்மையை வலியுறுத்துகிறது. 'உவமை என்னும் நாட்டியக்காரி காவியம் என்னும் நாட்டிய அரங்கில் பல்வேறு உருவம் தாங்கி நாட்டியம் ஆடுகிறாள், என்று 'சித்திர மீமாம்சை' என்னும் நூலில் (16 ஆம்நூற்றாண்டு) அப்பைய தீட்சதர் என்னும் வடமொழி யாசிரியர் கூறியிருப்பதும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது.

## 3. தொல்காப்பியத்தில் ஒப்புமைக்கலை

**உவமை இலக்கணம்:**

(19) எந்த ஒருகலையும் பல்லாயிரம் ஆண்டு காலம்

மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து நின்ற பின்னரே எழுத்தாளர்களால் ஏட்டில் இடம்பெறும். பின்னர், அக்கலையை இப்படித்தான் கையாளவேண்டும் என்ற இலக்கண வரையறையும் ஏற்படும். அவ்வாறே ஒப்புமைக் கலைக்கும் தொல்காப்பியத்தில் இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது.

(20) நன்கு தெரியாத ஒரு பொருளை விளக்க, அப்பொருளோடு வினை(செயல்),பயன்,மெய் (வடிவஅமைப்பு), உரு (நிறம்) ஆகிய நான்கனுள் ஒன்றோ பலவோ ஒத்துள்ள நன்கு தெரிந்த வேறொரு பொருளை மாதிரியாக எடுத்துக்காட்டுவது உவமம் ஆகும். ஒப்புமை கூறுவது உவமம்-ஒவ்வுவது உவமம்.

*''வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்.''

'விரவியும் வரூஉம் மரபின என்ப.'

என்பன தொல்காப்பிய நூற்பாக்கள். வினை, பயன், மெய், உரு ஆகியவை, சொல்ல வந்த பொருளுக்கும் ஒப்புமைப் பொருளுக்கும் இடையே உள்ள பொதுத் தன்மைகளாகும் என்னும் கருத்து, மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே ஒப்புமைக் கலை பெற்றுள்ள உயர் வளர்ச்சியின் நுட்பத்தை அறிவிக்கிறது. எடுத்துக்காட்டுகள்:- புலி யெனப் பாயும் மறவன்-இது வினையுவமம்; பாய்தல் -வினை. மழைபோல் பயன்படும் கை-இது பயன் உவமம். உடுக்கை போன்ற இடுப்பு-இது மெய் உவமம். பொன் போன்ற மேனி-இது உரு (நிறம்) உவ்மம்.

---

* தொல் காப்பியம்-உவம இயல்-1,2.

**கலை நுட்பக் கருத்துக்கள்:**

(21) உவமம் பற்றி இன்னும் எத்தனையோ கலை நுட்பக் கருத்துக்கள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன; அவற்றுள் சில வருமாறு:-

உவமை கூறுவதாயின் உண்மையான ஒப்புமைப் பொருத்தம் இருத்தல் வேண்டும். சொல்லவந்த பொருளை விட ஒப்புமை உயர்ந்ததாக இருக்கவேண்டும். உலக வழக்கை யொட்டி ஒரு பொருளை உவமையின் வாயிலாக மிகவும் பெரிது படுத்தவும்-சிறிது படுத்தவும் செய்யலாம். வெளிப்படையாகக் கூறாவிடினும், ஒப்புமைப் பொருளுக்கு உரிய தன்மைகளை யெல்லாம் சொல்லவந்தபொருளுக்கும் ஏற்றிக்கொள்ளவேண்டும். தாமரை போன்ற முகம் என்று கூறும் வழக்கத்தை மாற்றி, முகம் போன்ற தாமரை என்று கூறியும் பொருளுக்குப் பெருமை யளிக்கலாம். முகத்தைத் தாமரை ஒவ்வாது-அவ்வளவு உயர்ந்த முகம் என மறுத்துக் கூறியும் வேடிக்கை செய்யலாம். பாரி பாரி என்று பாரியையே புலவர்கள் புகழ்கின்றனரே-மாரியைப் (மழையைப்) புகழவில்லையே-என மறைமுகமாகவும் பாரிக்கு மாரியைச் சுவைபெற உவமிக்கலாம்.

**உவம உருபுகள்:**

(22) 'புலி யன்ன மறவன்,'' 'பொன் போன்ற மேனி' எனஉவமையையும் பொருளையும் பாலமாக இணைக்கிற 'அன்ன', 'போன்ற' என்னும் ஒப்புமைச் சொற்களை 'உவம உருபு' என்பர். தொல்காப்பியர் இவற்றைப் போல் முப்பத்தாறு உருபுகள் கூறியுள்ளார்; இவ்வுருபுகளுள் இன்னின்னவை வினை, பயன், மெய், உரு ஆகிய உவமங்கட்குத் தனித்தனியே உரியவை எனப் பங்கும் பிரித்துள்ளார் இது, மிக மிக வளர்ச்சி பெற்ற ஒரு கலை நுட்பச் செய்தியாகும்.

**உள்ளுறை உவமம்:**

(23) தமிழ் ஒப்புமைக் கலையின் உயர் எல்லையை உல கிற்குப் பறைசாற்ற இன்னொரு சுவையானசெய்தி காத்துக் கிடக்கிறது. தொல்காப்பியர் அகத்திணையியலில் உவமத் தைப் பொதுவாக உள்ளுறை உவமம், ஏனை உவமம் என இரண்டு வகைப்படுத்தி அவற்றிற்கு இலக்கணமும் வகுத் துள்ளார். ஏனை உவமம் என்பது, உவமையையும் பொரு ளையும் வெளிப்படையாகச் சொல்லும் வெளிப்படை உவம மாகும். 'ஒருவர் மாடு இன்னொருவர் வைக்கோலை மேயும் ஊரினன் இவன்' என உவமையை மட்டும் கூறி, அதன் வாயிலாக'இவன் மாற்றார் உடைமையைக் களவாடுபவன்', என்னும் கருத்தைக் குறிப்பால் உணரவைப்பது உள்ளுறை உவமம். அதாவது, சொல்ல வந்த கருத்து உள்ளே உறை யும் உவமம் உள்ளுறை உவமமாகும். இஃதல்லாத ஏனைய (மற்றைய) உவமம் ஏனை உவமமாகும்.

(24) உள்ளுறை உவமம் அமைத்துப் பேசுவதும் எழுது வதும் இக்காலத்திலும் சுவைத்துப் பாராட்டப்படுகின்றன. காதலன், காதலி, தோழி, செவிலி ஆகியோருள் இன்னின் னார் இப்படியிப்படித்தான் உள்ளுறையுவமம் கூறவேண் டும் எனவும் தொல்காப்பியம் கூறுவதை நோக்குங்கால், ஒப்புமைக் கலையின் சல்லிவேரும் புலப்படுகிறது. உள்ளுறை யுவமத்தின் அழகினைச் சங்ககால அகப்பொருள் நூல்களில் சுவைக்க வேண்டுமே!

## 4. பிற்கால நூல்களில் ஒப்புமைக் கலை

(25) வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங் காரம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் முதலிய பிற்கால நூல்களுள் பெரும்பாலானவை தொல்

காப்பியத்தை ஒட்டியே உவம இலக்கணம் கூறியுள்ளன. சிறுபான்மை வேற்றுமையும் இருக்கலாம். தொல்காப்பியர் கூறியுள்ள வினை, பயன் என்னும் இரு பொதுத் தன்மைகளையும் எல்லா நூல்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. அவர் கூறும் மெய், உரு என்னும் இரண்டையும், தண்டியலங்காரம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய நூல்கள், 'பண்பு' என்னும் ஒன்றில் அடக்கியுள்ளன. வடிவும் நிறமும் பண்புகளே. இஃது ஒரு பெரிய வேற்றுமையாகாது. பிற்கால நூல்களில் உவமையின் வகைகள் சிறிது விரிவாகக் கூறப்பட்டுள்ளன; ஈண்டு விரிப்பிற் பெருகும்.

## 5. ஒப்புமைக் கலையின் எதிர்காலம்

(26) அனைத்தும் தானாக உள்ள ஒப்புமைக் கலைக்கு நல்ல எதிர்காலம் காத்துக்கிடக்கிறது. அதன் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தவேண்டும். ஒப்புமைக் கலை குறித்துப் புதிய முறையில் தனி நூல்கள் எழவேண்டும். பழந்தமிழ் நூல்களிலுள்ள உவமைகளையும், சிறந்த பேச்சாளர்களின்—எழுத்தாளர்களின் உவமைகளையும் ஒன்றுதிரட்டவேண்டும். தமிழ்ப் பழமொழிகளில் உள்ளுறை உவமம் அடங்கியிருப்பதை ஆராய்ந்து விளக்க வேண்டும். தமிழ் உவமைகளைப் பிற மொழிகளிலும், பிற மொழி உவமைகளைத் தமிழிலும் பெயர்த்தல் வேண்டும். பாடத்திட்டத்தில் ஒப்புமைக்கலை உரிய இடம் பெறவேண்டும். ஒப்புமைக் கலைச் சுவை அமையப் பேசவும் எழுதவும் கற்பிக்கவும் பயிற்சியளிக்க வேண்டும். இலக்கியங்களிலுள்ள உவமைகளைப் பற்றித் திறனாய்வு செய்யும் திறமையை வளர்க்க வேண்டும். பிற கலைகளில் ஒப்புமைக்கலை ஊடுருவி நிற்பதை ஆராய்ந்து உணரச் செய்யவேண்டும். பிற கலைகளின் வளர்ச்சிக்கு ஒப்புமைக் கலையைப் பயன் படுத்தும்

முறையை ஆராய்ந்து செயல் படுத்தவேண்டும். இவ்வாறு எதிர்காலத்தில் ஒப்புமைக் கலை வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகள் நிரம்ப உள்ளன. செய்வோமாக! உயர்க ஒப்புமைக் கலை!

## கூத்துப் பகுதி

# 19. மன்றம்

**முத்தமிழ்:**

முத்தமிழ் என்னும் சிறப்புப் பெயர் தமிழ் மொழிக்கு உண்டு. இயல் தமிழ், இசைத்தமிழ், கூத்துத் தமிழ் என்பன தமிழின் மூன்று பிரிவுகள். இலக்கிய-இலக்கணம் சார்பானவை இயல் தமிழ் என்றும், இசை தொடர்பானவை இசைத் தமிழ் என்றும் இயம்பப்படுகின்றன. கூத்துத் தமிழோ நாட்டியம், நாடகம் என இருவகையினதாகக் கூறப்படுகிறது.

**கூத்துத் தமிழ்:**

உள்ளத்து உணர்ச்சிகளை-கருத்துகளை உடல் உறுப்புகளால்(ஒலியுடன்) நடித்துக் காட்டுவதில் நாட்டியமும் நாடகமும் ஒப்புமை உடையன. இவற்றிடையே வேறுபாடாவது: ஒருவரே உடல் உறுப்புகளால் நடிப்பது நாட்டியம்; பலர் உரையாடலுடன் நடிப்பது நாடகம். நாட்டியத்திலும் ஒருவர்க்குமேல் சிலர் அல்லது பலர் பங்கு பெறுவதும் நடைமுறையில் உள்ளது. இது ‘நாட்டிய நாடகம்’ எனப்பெறும். எனவே, இப்போது கூத்துத்தமிழை நாட்டியம், நாடகம், நாட்டிய நாடகம் என மூவகையாகப் பிரிக்கலாம் போலும்!

இஃதிருக்க, முதலில் தோன்றியது நாட்டியமா? நாடகமா? - என்பதைத் தெளிவு செய்ய வேண்டும். சிலரை வைத்துச் சிறிய நாடகம் பழக்குவதே முதலில் இயல்பாயுள்ளது. பின்னரே, பலரை வைத்துப் பெரிய நாடகம் பயிற்றப்படுகிறது. இதிலிருந்து, முதலில் ஆள் குறைவாயிருப்பதே எளிது என்பது தெளிவாகிறது. இந்த அடிப்படை விதியுடன் பொருத்திப் பார்க்குங்கால், நாடகத்தினும் நாட்டியமே முற்பட்டது என்பது தெளிவாகும். மகிழ்ச்சியால் பலர் குதிக்கும் இடங்களிலும், முதலில் ஒருவரே குதிக்கத் தொடங்கி யிருப்பார்.-பின்னரே அவரைத் தொடர்ந்து பலரும் குதித்திருப்பர்.

**கூத்துத் தமிழ் நூல்கள்:**

நாட்டியத்தையும் நாடகத்தையும் தன்னுட்கொண்ட கூத்துத் தமிழ் தொடர்பான நூல்கள் பல தமிழில் இருந்தன. இதன் சான்றுக்கு, தமிழ் 'முத்தமிழ்' என வழங்கப்படுகின்ற ஒன்றே போதும். ஆனால் கூத்துத் தமிழ் நூல்கள் அழிந்து போயின-அழிக்கப்பட்டு விட்டன. ஆடல் கலை தொடர்பான சில செய்திகளையும் அவற்றைக் கூறும் சில நூல்களையும் பற்றிச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களாலும் அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்களின் உரைகளாலும் நாம் ஓரளவே இன்று அறிய முடிகின்றது.

**பயிலிடம்:**

'முத்தமிழ்' என்னும் பெயர் அமைப்பைக் கொண்டு இம்மூன்று கலைகளும் தமிழகத்தில் பல இடங்களிலும் பயிற்றப்பட்டன - பலராலும் பயிலப்பட்டன - என்னும் உண்மை விளங்கும். இக்காலத்தில் 'பல்கலைக் கழகம்' என்னும் பெயருடைய பல்வேறு வகை நிறுவனங்கள் பல்வேறு கலைகளைப் பயிற்றுகின்றன. இவ்வாறே அக்காலத்திலும் பல நிறுவனங்களால் பல கலைகளும்

பயிற்றப்பட்டிருக்கவேண்டும். அன்று இயல் தமிழைப் பயிற்றிய நிறுவனங்கள் பலவும், இசைத் தமிழைப் பயிற்றிய நிறுவனங்கள் பலவும், கூத்துத் தமிழைப் பயிற்றிய நிறுவனங்கள் பலவும், முத்தமிழையும் பயிற்றிய நிறுவனங்கள் சிலவும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்திருக்க வேண்டும்.

சிற்சில கலைகளைப் பயிற்றச் சிற்சில இடங்கள்-ஊர்கள் சிறப்புடையனவாக இருந்திருக்க வேண்டும். இயல் தமிழுக்குச் சில இடங்களும், இசைத்தமிழுக்குச் சில இடங்களும், கூத்துத் தமிழுக்குச் சில இடங்களும் சிறந்தனவாய்த் திகழ்ந்திருக்க வேண்டும்.

முத்தமிழுள் கூத்துத் தமிழ் பயிற்றிய இடங்களுள் சிதம்பரம் ஒன்று. ஆனால், 'பத்தோடு பதினொன்று-அத்தோடு இது ஒன்று' என்றாற்போல் சிதம்பரத்தைக் கூறி விடுவதற்கில்லை. கூத்துத் தமிழ் பயிற்றிய இடங்களுள் சிறந்தது சிதம்பரம்-தலையாயது சிதம்பரம். இதற்குச் சான்று வேண்டுமா;

**நடராசர்:**

சிவபெருமானின் தெய்வக் கூறுகளுள் தெய்வத் திருமேனிகளுள் ஒன்றாகிய நடராசர் திருவுருவத்தை அறியாதார் இலர். நடராசர் என்றால், நடனம் (நாட்டியம்) ஆடுவதில் மன்னர் என்று பொருளாம் எனவே, நாட்டியக் கலையின் தந்தை-தலைவர் நடராசர் என்பது பெற்றாம். நடராசரது நாட்டியத்தின் வாயிலாகவே ஐந்தொழில்கள் (பஞ்ச கிருத்தியங்கள்) நடைபெறுகின்றன என்பதுபோன்ற மெய்யுணர்வுக் (தத்துவக்) கருத்துகளை ஈண்டு விரிக்காமல் விடுப்போம். இந்தக் கருத்து நாட்டியக் கலையின் பெருஞ் சிறப்புக்குத் தக்க சான்றாகும் என்ற அளவோடு அமைவோம்.

**அம்பலம்:**

எல்லா ஊர்ச் சிவன் கோவில்களிலும் நடராசர் திரு மேனியிருப்பினும், ஆங்கெல்லாம் சிவலிங்க உருவமே முதன்மையுடையது. நடராசர் திரு உருவமோ, 'பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று' என்ற அளவினதேயாம். சிதம்பரத்துப் பொன்னம்பலமும் மதுரை வெள்ளியம்பலமும். திருவாலங்காட்டு இரத்தின அம்பலமும், திருநெல்வேலித் தாமர அம்பலமும், குற்றாலத்துச் சித்திர அம்பலமும் ஆகிய ஐந்தும், மற்ற ஊர்களினும் சிறப்பாக நடராசர் நடம்புரியும் இடங்களாகும் என்ற கருத்தும் அறிந்ததே. ஆயினும் இந்த ஐந்து ஊர்களுக்குள் சிதம்பரம் தவிர, மற்ற நான்கு ஊர்களிலும் சிவலிங்க உருவமே பெரும்பாலும் முதன்மை பெற்றுள்ளன. சிதம்பரத்தில் மட்டுமே, சிவலிங்க உருவம் இன்றி நடராசர் உருவம் முதன்மை பெற்றுள்ளது. சிதம்பரத்தில் முதன்மை இடமாகிய 'மூலத்தானம்' நடராசர் திருவுருவம் கொலுவீற்றிருக்கும் அம்பலமேயாகும். இதனை ஞான சபை, சிற்சபை, பொற்சபை, கனக சபை, சிற்றம்பலம், பொன்னம்பலம் என்றெல்லாம் அன்பர்கள் போற்றி மகிழ்வர் சிதம்பரம் என்னும் ஊர்ப்பெயரே, இந்த அம்பலத்தின் பெயரிலிருந்து வந்ததுதான். அம்பலத்திற்குச் சிதம்பரம் என்ற பெயரும் உண்டு; சித்+அம்பரம்=சிதம்பரம். சித்= ஞானம்=அறிவு; அம்பலம்=ஆகாசம்=வெளி. எனவே. சிதம்பரம் என்றால். ஞான ஆகாசம்=அறிவு வெளி என்பது பொருளாம்.

**மன்று:**

அம்பலம், சபை என வழங்குதல் போலவே, மன்று, மன்றம் என வழங்குதலும் இலக்கியங்களில் பெருவரவிற்றாம். நடராசர் மன்றுள் ஆடுவதால் 'மன்றாடி; 'மன்று

ளாடி' என்றெல்லாம் பெயர் வழங்கப் பெறுகிறார். இறைவன் இவ்வாறு சிதம்பரத்தில் மன்றுள் ஆடும் நடரா சராக ஆன வரலாறு யாதாக இருக்கலாம்?

புராணங்களில்-மெய்யுணர்வு நூல்களில் சிதம்பரம் பற்றியும் நடராசர் பற்றியும் எத்தனையோ கதைகள் வரலாறுகள் பேசப்பட்டுள்ளன. அவற்றை யெல்லாம் ஈண்டு நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய தில்லை. அவற்றிற் கெல்லாம் அடிப்படையாய் இருந்திருக்கக் கூடிய இயற்கை நெறி நின்றே ஆராயத் தொடங்குவோம்.

பண்டு, கூத்துத்தமிழின்-ஆடற்கலையின் தலைமையிட மாகச் (கேந்திரமாகச்) சிதம்பரம் திகழ்ந்தது. ஆடல்கலை யின் பல்கலைக்கழகம் (university)ஆகவும் இஃது இருந்திருக் கலாம். பல்வேறிடங்களிலிருந்து இங்கு வந்து கலைஞர்கள் ஆடல் பயின்றிருக்கலாம். ஆடல்கலையில் தேர்ந்தவர்கள் இங்கே வந்து அரங்கேற்றம் செய்து கொண்டிருக்கலாம். ஆடல்கலை பயிலும் இடம் 'மன்றம்' என்ற பெயரால் பண்டுவழங்கப்பட்டிருக்க வேண்டும். "இறைவன் மக்களைப் படைத்தான்-இறைவன் உருவங்களை மக்கள் படைத்தனர் என்பர். மன்றத்தில் ஆடல் பயின்ற மக்கள், இறைவனது ஓவியத்தை எழுதி முதலில் மன்றத்தில் வைத்திருப்பர், இன்றும் இறை ஓவியங்கள் மன்றங்களில் இருப்பதைக் காண்கிறோம் அல்லவா? இறைவனது ஓவியத்தை எழுதிய மக்கள் நாட்டியம் ஆடும் தோற்றத்திலேயே எழுதிவைத் திருப்பர். பின்னர் அந்த ஓவியத்தைச் சிறப்பாகச் சிலை யாக வடித்துவைத் திருப்பர். சிதம்பரத்து மன்றத்தில், தொடக்கத்தில் நடராசர் சிலை ஏற்பட்டவரலாறு இப்படி யாக இருந்திருக்கலாம்-என்பது ஒருவகை நுனித்த உய்த் துணர்வேயாகும். கருத்து வேறுபாடு உடையவர்கள் அருள் கூர்ந்து பொறுத்துக் கொள்க.

**மன்றாடுதல்:**

அழகிய நடராசர் சிலையை அமைத்து வைத்துக் கொண்டு, அதன் எதிரே ஆடல்கலை பயின்றனர்- பயிற்றினர்-வளர்த்தனர். வேறிடங்களில் ஆடல்கலை பயின்றவர்களும், இந்த அம்பலத்தில் வந்து அரங்கேற்றம் செய்து கொண்டனர். இதனை, 'அறையில் ஆடிப் பழகிய பின்னரே அம்பலத்தில் ஆடவேண்டும்' என்ற பழமொழியாலும் உய்த்துணரலாம். அரங்கேற்றத்தோடு நின்று விட்டதா? ஆடல் கலைஞர்கட்குள்ளே, மன்றத்தில் ஆடல் போட்டிகளும் நடைபெறலாம். இஃது இயற்கைதானே! சிவனுக்கும் காளிக்கும் நடனப் போட்டி நடைபெற்றதாமே. தோல்வி காளிக்குத்தானாம். மன்றில் நடைபெறும் ஆடல் போட்டி உயர் கட்டம் அடைவதுண்டு. வெற்றி-தோல்வி பற்றிய முடிவு பரபரப்புத் தருவதுண்டு. சொற்போர், விற்போர், மற்போர் என்பன போல, மன்றங்களில் ஆடல்போர்- ஆடல் போராட்டம் நடைபெற்றது. இதிலிருந்துதான் மன்றாடுதல் என்னும் தொடர், போராடுதல் என்னும் பொருளுக்கும் மாறி யிருக்கவேண்டும்.

**மன்றம்-சிதம்பரம்:**

நாளடைவில், கலை நிகழ்ச்சி நடைபெறும் இடங்களும் பலர் கூடும் பொது இடங்களும் வழக்காடும் இடங்களும் மன்றங்கள் எனப்பட்டன. இவற்றிற்கெல்லாம். அடிப்படையாக இருந்த முதலிடம், ஆடல் அரங்கு நடைபெற்ற மன்றம் என்னும் பெயருடைய இடமேயாகும். இந்த மன்றம் முதல் முதலில் சிதம்பரத்திலேயே சிறப்புற்றிருந்தது. அந்தக் காலத்தில் மன்றத்திற்குச் செல்கிறேன் என்றால், சிதம்பரம் செல்கிறேன் என்று பொருளாம். இன்று அந்த வட்டாரத்தில், பல்கலைக் கழகத்திற்குச்

செல்கிறேன் என்றால், அண்ணாமலை நகருக்குச் செல் கிறேன் என்று பொருள்படுவது போன்றதே அது.

பதினாறாம் நூற்றாண்டில், மண்டல புருடரால் இயற்றப் பெற்ற சூடாமணி நிகண்டு, சிதம்பரத்தின் வேறு பெயர்கள் புலியூர், தில்லை என்பன என்று கூறுகிறது.

"புலியூர் தில்லை கதிதரு சிதம்பரப்பேர்"

என்பது சூடாமணி நிகண்டு நூற்பா. புலிக்கால் முனிவர் (வியாக்கிர பாதர்) வழிபட்ட இடமாதலின், சிதம்பரம் புலியூர் எனப்பட்டது-என்பது புராணக்கதை. பண்டு தில்லை என்னும் மரங்கள் காடாக இருந்ததால், சிதம்பரம் தில்லை என்றும் தில்லை வனம் என்றும் வழங்கப்பட்ட தாம். இஃதிருக்க, எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற 'சேந்தன்திவாகர நிகண்டு' என்னும் நூல், சிதம்பரத்தின் பழைய பெயர் 'மன்றம்' என்று கூறுகிறது.

"கூடல் மதுரை; மன்றம் சிதம்பரம்"-

என்பது திவாகர நிகண்டு நூற்பா. திவாகர நிகண்டு காலத் தைச் சேர்ந்த பிங்கல நிகண்டும் இவ்வாறே கூறுகின்றது.

இதுகாறும் கூறியவற்றால், சிதம்பரத்தின் உண்மை யான பழம் பெரும் பெயர் மன்றம் என்பதும், அப்பெயர் ஏற்பட்ட இயற்கை வரலாறும் தெள்ளிதின் விளங்கும். மன்றம் வாழ்க!

*சிறு கதைப் பகுதி*

# 20. தேடக் கிடைக்காத செல்வம்

இப்படி நேருமென்று சேதுநாதன் எதிர் பார்க்கவே யில்லை. அவர் வந்த விரைவு என்ன! இங்கே நடந்த தென்ன!

உண்மையிலேயே அவர் புது மாப்பிள்ளையாகப் பொலிந்தார்.இடுப்பிலே உயர்ந்த சரிகைவேட்டி;உடம்பின் மேல் பளபளக்கும் பட்டுச் சட்டை; தோளிலே மடிப்புப் பட்டை அகலத்துக்கும் சரிகை கொண்ட விசிறிமடி; தலை யிலே நீண்ட நேரம் கண்ணாடியும் சீப்புமாய் ஏற்றி இறக்கி வளைத்து நெளித்து வாரி விட்ட வலம்புரிக் கிராப்பு;கழுத் திலே 'மைனர்' சங்கிலி; கைவிரல்களிலே ஒன்பான் மணி பதித்த மோதிரங்கள்; நெஞ்சத்திலே நிலை கொள்ளாத மோகம்!

சேது நாதனின் எல்லா ஒப்பனைகளும் கலாவின் கண் ணுக்குத் திரையிடத்தான். இடையிலே திரையிடுவதால் மட்டும் எல்லாக் கண்களும் ஏமாந்து விடுமா? "எக்ஸ்-ரே' வைத்துப் பார்க்கும் கண்களும் இருக்கத்தானே செய் கின்றன!

கலா ஒரு கை படாத உரோசா. பல தலை முறை களாகவே முள் இல்லாத உரோசா பரம்பரையில் வந்த அவள், இப்போது தனக்குத் தானே முள் முளைக்கச் செய்து கொண்டதோடு வேலியும் போட்டுக் கொண்டாள். கள்ளம் பொருந்திய உள்ளம் எதுவும் கை நீண்டிப் பறித்து விட முடியாது.

கலா ஒரு வயதுக் குழந்தையா யிருந்தபோதே தாயை இழந்து விட்டாள். அன்று தொடங்கி இன்றுவரை தன் பாட்டி சித்ராதேவியிடமே வளர்ந்து வந்தாள்.

சித்ராதேவி வேசியர் குலத்தைச் சேர்ந்தவள்; தன் அருமை மகள் கோதை கலாவைப் பெற்றுத் தந்து விட்டுக் காலன் கைக்குப் போனதிலிருந்து கலாவைக்கண்ணும் கருத்துமாய் வளர்த்து வருகிறாள். பேரப் பெண் என்ற 'பாச' உணர்வு ஒரு மடங்கு என்றால், செழுமையாக வளர்த்தால் 'பலி' கொடுத்துப் பயன் பெறலாம் என்ற 'மோச' உணர்வு மும்மடங்கு சித்ராதேவிக்கு உண்டு.

கலா இப்போது பதினாறு வயது நிரம்பிய பருவ மங்கை. எந்தத் தரத்தைச் சேர்ந்த ஆட வரும் அவளை ஒருமுறை பார்த்து விடின், காட்சி இன்பத்திற்காகவாவது மறுமுறையும் அவள் முகத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கொடுக்காமல் தங்கள் கண்களை ஏமாற்ற முடியாது. கண் காட்சியில் கண்ணாடி மாளிகையில் வைத்துக் கண்டு களிக்க வேண்டியவள் அவள். வேசி சித்ரா தேவியின் மகளாகிய கோதை என்னும் அழகு தேவதைக்கும் அரசபோகத்தில் மிதந்த எந்த ஆடவனுக்குமோ பிறந்த உயர்ந்த இன ஒட்டு மாங்கனி வளமாகத்தானேஇருக்கும்!அந்தக் கனியைக் கொய்து அருந்தத்தான் சேதுநாதன் வந்திருக்கிறார்.

சேது நாதன் பாண்டிய நாட்டில் பழைய பாளையப் பட்டுப் பரம்பரை ஒன்றினைச் சேர்ந்தவர். ஏராளமான செல்வத்துக்கு உடையவர். இன்னும் சில தலை முறைகளின் ஆடம்பரச் செலவிற்கும் அவரது செல்வம் தாக்குப் பிடிக்கும்.

சேது நாதனுக்குச் சென்னையிலும் ஒரு பெரிய மாளிகை உண்டு. அடிக்கடி வந்து அங்கே தங்கிப் போவார்.

நாற்பது வயதைக்கடந்தவர் என்றாலும்; அவரை இன்னும் குறைந்த வயதுக்கு மதிப்பிட வேண்டும். காட்சிக்கு இனியவராகிய அவரை விட்டு 'மைனர்' விளையாட்டு இன்னும் நீங்கவில்லை. பெண்ணின்பம் அவருக்கு ஒரு பெரும் பொழுது போக்கு.

கலாவுடனும் மற்ற பரிவாரங்களுடனும் சித்ராதேவி சென்னையிலே சில ஆண்டுகளாக 'முகாம்' இட்டுள்ளாள் கலா மலரத் தொடங்கியதும் வண்டுகளும் சுற்றி வட்டமிடத் தொடங்கின. ஆனால், சித்ராதேவியோ, கலாவின் முழு மலர்ச்சிக்கு அரங்கேற்றம் செய்யப் பெரிய பொன் வண்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்-அது இப்பொழுது கிடைத்து விட்டது. அந்தப் பொன் வண்டுதான் சேது நாதன்.

கட்டிளங்கன்னி கலாவை முதல் முதல் சுவைக்க விரும்புபவர்கள் ஐயாயிரம் உருபா அளிக்க வேண்டும் என்பது பாட்டியின் ஏற்பாடு. ஐயாயிரம் என்ன-பதினையாயிரம் வேண்டுமானாலும் தரத் தயார் சேது நாதன். தீராத விளையாட்டுப் பிள்ளையாகிய அவருக்கு, இந்தத் தொகை, மற்றவரது காஃபி செலவைப் போன்றதே! இதற்கென்றே உள்ள மாமா மூலம் கலாவின் கட்டில் அறைக்குள் நுழைந்து விட்டார் அவர். பணம் பத்தும் செய்யும்-பணம் பாதாளம் வரைக்கும் பாயும்-என்பார்களே!

சேதுநாதன் இதுவரை தமது வாழ்நாளில் காமக் காட்டிற்குள் புகுந்து எத்தனையோ மான்மறிகளை வேட்டையாடிய துண்டு. இந்தத் துறையில் அவர் மிக்க வல்லுநர்; எந்த மானாவது மருண்டாலும் வெருண்டாலும் எப்படியாவது அந்த மானை வளைத்து வலைக்குள் அகப்

படுத்திக்கொள்வார். அதற்குரிய நயப்பு எல்லாம் அவருக்குத் தண்ணீர் பட்ட பாடு. ஆனால் கலாவிடம் .........?

கலாவின் ஆரஞ்சு மேனி அழகை அள்ளி அள்ளிப் பருக வேண்டும் என்னும் ஆர்வத்தில் சேதுநாதன் மெய்ம்மறந்து காணப்பட்டார். எத்தனையோ இளைஞர்களை எண்ணி யெண்ணி ஏங்கிப் பெருமூச்சு விடச் செய்து வந்த கலாவின் காந்தள் கைகளைத் தீண்ட அவர் கைகள் விரைந்தன. ஆமைபோல் அவள் தன் கைகளை இழுத்துக்கொண்டாள். 'வெட்கப்படுகிறாயா?' என்று கேட்டுக்கொண்டே நெருங்கினார். அவள் நின்றால்தானே! கலா அவருக்குக் கானல்நீர் ஆனாள். அருகில் தெரியும் கானல்நீர், நெருங்க நெருங்க நகர்ந்துகொண்டேயிருப்பதைப் போல, அவள் நகர்ந்து நகர்ந்து அவரைக் கண்ணாம்பூச்சி சுற்றவைத்துக்கொண்டிருந்தாள்.

இந்தத் துறையில் தமது முதல் தோல்வியை ஒத்துக் கொண்டவர் போல வலிந்து வரவழைத்துக் கொண்ட அசடு வழியும் பொய்யான புன்சிரிப்புடன் சேதுநாதன் அங்கிருந்த ஒரு பஞ்சணையில் அமர்ந்தார். கலாவின் மருட்சிக்குக் காரணம் என்னவா யிருக்கலாம் என்று சிறிது சிந்தித்தார். வெட்கமா? அல்லது விளையாட்டுக்கா? இருக்க முடியாது. வேதனைதான் காரணம் என்பதை அவள் முகத்திலிருந்து வடித்தெடுத்துக் கொண்டார். எப்போதுமே பெண்களிடம் அவர் நளினமாக நடந்து கொள்வாரே தவிர முரட்டுத்தனம் செய்வதில்லை-'வெட்கப்படுகிறாயா கலா?' என்று மற்றொரு முறை அமைதியாகக் கேட்டார். 'இல்லை, வேதனைப்படுகிறேன்' என்ற பதில் கலக்கத்துடன் வந்து, அவர் காதுகளுக்குள் நாராசம் காய்ச்சி விட்டது போல் புகுந்தது.

"ஏன், நான் சற்று வயதானவன் என்பதினாலா?',

"இல்லை"

"அல்லது நான் உன்னுடன் ஒரு நாளைக்கு உறவாடி விட்டு, பிறகு கைவிட்டுவிடுவேன் என்ற காரணமோ?"

"அதுவும் இல்லை"

"பின் ஏன்?"

"என்னை எதுவும் கேட்டுத் தொந்தரவு செய்யாதீர்கள். நீங்கள் பாட்டியிடம் கொடுத்த ஐயாயிரம் ரூபாய்க்கு ஈடாக என் வைர நெக்லெசைத் தருகிறேன்? எடுத்துக் கொண்டு போய் விடுங்கள்".

"எனக்குப் பணம் தேவையில்லை; நீதான் தேவை. அதற்காக இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் தரத் தயார்."

"நீங்கள் பணத்தாலேயே என்னை முழுக்காட்டினாலும் நான் உங்களுக்குக் கிடைக்க மாட்டேன்."

"ஏன்? கை நிரம்பக் காசை அள்ளி அள்ளிக் கொடுப்பவர்க்குத் திருப்தி யளிப்பதுதானே உங்கள் குலத் தொழில்?"

"கை நிரம்ப என்ன? கூரையையே பிரித்துக் கொட்டினாலும் நான் எவர்க்கும் இசைய மாட்டேன்"

அப்படியென்றால் எனக்கு இவ்வளவு சிரமம் கொடுத்திருக்க வேண்டிய தில்லையே. இதை நீ முன் கூட்டியே உன் பாட்டி சித்ரா தேவியிடம் தெரிவித்திருக்கலாமே?"

"தெரிவிக்க இனி ஒன்று மில்லை".

"ஓ! தெரிவித்தும் அவள் உன்னை வற்புறுத்தினாளா?"

‘‘ஆம்’’

‘‘அப்படியென்றால் உனக்கு இந்தத் தொழில் பிடிக்க வில்லை-அவ்வளவுதானே?’’

‘‘ஆம், நான் நல்லவர் ஒருவரை மணந்து கொண்டு குடும்பம் செய்யவே விரும்புகிறேன். வருகிற வண்டுகளுக் கெல்லாம் ஈடு கொடுத்து வாடி வதங்க விரும்ப வில்லை. எனக்கு நிலையான வாழ்வளிப்பவரே நான் வணங்கும் தெய்வம்’’.

கலாவின் கண்டிப்பான பதில், சேது நாதனுடைய அடங்காத ஆசையின் வன்சிறகை அறுத்தெறிந்து,அவரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. அவர் எண்ணம் அவரது சொந் தக் குடும்பத்தைச் சுழன்றது.

மணமாகிப் பதினாறு ஆண்டுகளுக்கு மேலாகியும் அவருக்குக் குழந்தைப் பாக்கியம் இல்லை. தம் மனைவி மரகத வல்லிக்கு எவ்வளவோ மருத்துவம் செய்து பார்த்து விட்டார்; ஒன்றும் பயனில்லை. இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும்படிச் சில கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் அவருக்கு விருப்பந்தான்-ஆனால் மரகதவல்லி ஒத்துக் கொண்டால்தானே. இனி மேல் தனக்குக் குழந்தை பிறக்கக் கூடும் என்று சொல்லிச் சொல்லி அவள் கணவனது ஆசையை மட்டந்தட்டிக் கொண்டு வருகிறாள். போதாக் குறைக்குத் தன் தம்பி யைத் தத்து எடுத்துக் கொண்டு கல்லூரியில் படிக்க வைக்கி றாள். இந்த நிலையில் கணவன் எவ்வாறு இரண்டாம் திருமணம் செய்து கொண்டிருக்க முடியும்?

குடை சாய்ந்திருந்த சேதுநாதனது ஆசை இப்போது நிமிர்ந்து விட்டது. அழகி கலாவை இழக்க அவர் மனம்

பொறுக்கவில்லை. குழந்தை யில்லாக் குறையைச் சுட்டிக் காட்டி மரகதவல்லியை எப்படியாவதுசரிகட்டிக் கொண்டு கலாவைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டால் என்ன என்று எண்ணினார். இப்போது அவர் முகத்தில் மகிழ்ச்சிக் கோடு படர்ந்தது. கலாவின் ஒடிந்துபோன உள்ளத்திற்கு முட்டுக் கொடுக்க முயன்றார்.

''கலா! உனக்கு நிலையான வாழ்வுதானே வேண்டும்? நான் பொறுப் பேற்றுக் கொள்கிறேன். அந்த நிலையான வாழ்வுக்கு வழி செய்கிறேன் என்றார்'' சேதுநாதன்.

''உண்மையாகவா! நீங்கள் பொறுப்பேற்று என் நிலையான வாழ்வுக்கு வழிசெய்கிறீர்களா! நான் ஒன்றும் கனவு காணவில்லையே—நனவுதானே இது! அப்படியென் றால் நான் பெரும் பாக்கியசாலி''-என்றாள் கலா. அவள் முகத்தில் நம்பிக்கையின் சாயல் தெரிந்தது.

விட்ட கோட்டையைப் பிடித்து விட்ட வெற்றிக் களிப்பு சேதுநாதனது முகத்தில் தாண்டவமிட்டது. 'செண்டு' மணம் கமழும் கைக்குட்டையைப் பிரித்தபடி கலாவை நோக்கி, ''இப்பொழுதிருந்தே உன்னை நான்என் மனைவியாக ஏற்றுக் கொண்டு வாழ்நாள் முழுதும் வைத் துக் காக்கிறேன்'' என்று சொன்னார். சொன்ன மாத்திரத் திலேயே கலாவின் முகத்தில் சோகம் முத்திரையிட்டது.

''நீங்கள் என் கணவனாகப் பொறுப்பேற்றுக் கொள் வதை நான் விரும்பவில்லை''.

''பின் என்ன விரும்புகிறாய் என்னிடத்தில்?''

''நீங்கள் எனக்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்''.

''ஏற்றுக் கொண்டு......''

''ஒரு நல்ல இளைஞரைத் தேடி என்னை மணஞ்செய்து கொடுக்கவேண்டும்''.

''ஏன், என்னை மணப்பதால் உனக்கு என்ன குறை?''

''உங்கள் வயதைப் பார்த்தால், நீங்கள் இதற்கு முன்பே மணஞ் செய்துகொண்டிருக்க வேண்டுமே''.

''உண்மைதான்; ஆனால் எனக்குக் குழந்தை இல்லை. அதனால்தான் உன்னை மணக்க விரும்புகிறேன்''.

''அப்படியானால் மிகவும் நல்லதாயிற்று''.

''ஒத்துக் கொள்கிறாயா கலா?''

''இல்லை. உங்களுக்குக் குழந்தை இல்லாததனால், என்னை உங்கள் குழந்தையாக ஏற்றுக் கொள்ளலாமே, என்கிறேன்''.

''அது நடக்குமா? மனைவியாக ஆசைப்பட்டவளை மகளாக ஏற்றுக் கொள்ள முடியுமா?''

''அப்படி யென்றால், என் தாயைப் போல எனக்குத் தற்கொலையைத் தவிர வேறு வழி யில்லையா?''

''என்ன! உன் தாய் தற்கொலை செய்து கொண் டாளா? ஏன்?''

''அது ஒரு பெரிய கதை'' என்று சொல்பவள் போல் பெருமூச்சு விடுதல் என்னும் பெயரில் மூக்கிலிருந்து நெருப் பைக் கக்கினாள். கண்கள் முத்துக்களை உதிர்த்தன. உடல் முழுதும் வியர்த்து விட்டது. பனியில் நனைந்த பளிங்குச் சிலையானாள் கலா.

''ஏன் கலங்குகிறாய்? ஏதாவது சொன்னால் தானே ...., ... '' என்று உள்ளடங்கிய திரியைத் தூண்டிவிட்டார் சேதுநாதன்.

"சொல்லுகிறேன். சொன்னாலாவது உங்கள் மனம் மாறாதா? பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு என் தாய்க்கு, எனக்கு இப்போது ஏற்பட்டது போன்ற முதல் அனுபவம் ஏற்பட்டதாம். என்னைப் போலவே என் தாய்க்கும் அப்போதே இந்தத் தொழிலில் விருப்பம் இல்லையாம். பாட்டியின் வற்புறுத்தலுக்காக இசைந்தாளாம். முதல் நாள் வரும் இளைஞரை எப்படியாவது வசப்படுத்தி மணந்துகொண்டு குடும்பவாழ்க்கை தொடங்கலாம் என்ற கனவுடன் ஒத்துக்கொண்டாளாம். வந்த இளைஞரோ பெரிய பணக்காரர் வீட்டுப் பிள்ளையாம். நன்றாக எனக்கு நினைவில்லை-படிப்புக்காகவோ அல்லது வேறு எதற்காகவோ அவ்விளைஞர் வெளியூரிலிருந்து வந்து அங்கே தங்கியிருந்தாராம். வந்த இடத்தில், என் பாட்டி சித்ராதேவி விரித்த வலையில் சிக்கிக் கொண்டாராம். என் தாயோடு முதல் தொடர்பு கொள்ளுமுன்பு, அவளை மணந்துகொள்வதாக வாக்குறுதி அளித்தாராம். அதன் பின்னரே என் தாயைத் தொட முடிந்ததாம். சில நாள் உறவுகொண்டிருந்து விட்டு, பின்பு என் தாய்க்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு, தன் பெற்றோருக்கு அஞ்சிச் சொந்த ஊருக்கே ஓடிவிட்டாராம்."

"ஊம், அப்புறம்?"

"ஓடியவர் ஓடியவரே. என் தாய் ஏமாந்துபோனாள். அந்த இளைஞரின் தொடர்பால் அவள் கருவுற்றாளாம். அவரைக் காணாத ஏக்கத்தால் வருந்திப் புலம்பிக்கொண்டிருந்தாளாம். ஆனால் என் பாட்டிக்கோ, தன் மகள் வருந்துவது பெரிய பித்துக்கொளித்தனமாகப் பட்டது. இந்த வண்டு போனால் இன்னும் உயர்ந்த வண்டு வரும் என்று சொல்லித் தேற்றினாளாம். பாட்டியின் கடல் போன்ற அனுபவத்தில் இந்நிகழ்ச்சி ஒரு சிறு துளியாக

இருக்கலாம். ஆனாலும் என் தாய்க்கு ஆறுதல் ஏற்பட வில்லை. அவரைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினாளாம். பாட்டியா சொல்லுவாள்? சொன்னால், அவர் 'இருக்கும் இடத்தைத் தேடி மகள் ஓடிவிட்டாலும் ஓடிவிடலா மல்லவா? அதோடு கூட, அந்த இளைஞரின் சொந்த வரலாறு பற்றி என் பாட்டிக்கும் சரியாகத் தெரியாதாம். இந்த நிலையில் புதுப்புது ஆட்களை அவள் ஏற்பாடு செய்தாளாம். வந்தவழியே எல்லோரையும் என் தாய் அனுப்பிவிட்டாளாம். அந்த முதல் இளைஞரை மணந்து கொண்டு குடும்பவாழ்க்கை நடத்தப் போகிறேன் என்று ஒரே பிடிவாதமாக இருந்தாளாம்''.

''ஊம், பிறகு என்ன வாயிற்று?''

''இந்த ஊரிலேயே இருந்தால் என்றைக்காவது ஒரு நாள் அந்த இளைஞன் வந்தாலும் வரலாம்; அதனால் தன் மகள் அவனோடு போய்விடவுங்கூடும் என்று அஞ்சிப் பாட்டி ஊரை மாற்றிக் கொண்டாளாம். அதாவது, அந்த ஊரிலிருந்து இந்தச் சென்னைக்குக் குடியேறிவிட்டாளாம்''.

''முன்பு இருந்த ஊர் எது என்று நீ இன்னும் சொல் லவே யில்லையே!''

ஓ, அதுவா! மறந்துவிட்டேன்-பெங்களூர்''

''பெங்களூரா...'' சரி சரி, சென்னைக்கு வந்ததும் உன் தாய் என்ன ஆனாள்?''

''இந்த ஊரிலே என்னைப் பெற்று விட்டு இறந்து போனாள்.

''ஏதோ தற்கொலை செய்து கொண்டதாகச் சொன் னாயே''.

"ஆம்! நான் பிறந்த ஓராண்டுவரையும், எப்படியாவது அந்த இளைஞர் கிடைத்தாலும் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் உயிர் வாழ்ந்து பார்த்தாள்-அவர் கிடைக்கவேயில்லை. இடையிலே பாட்டியின் தொல்லை பொறுக்க முடியவில்லை. பணத்துக்காகப் பலரைத் திருப்தி செய்யும்படி வற்புறுத்திக் கொண்டேயிருந்தாள். அந்த வேதனை தாங்க மாட்டாமல், குழந்தையாகிய என்னையும் மறந்து என் தாய் தற்கொலை செய்துகொண்டாள்" என்று சொல்லித் தன் கண்களை வெந்நீர் ஊற்றாக ஆக்கிக் கொண்டாள் கலா. அவளது பட்டுத் தளிர் மேனி துயரத்தால் கன்றிவிட்டது.

"இந்தச் செய்தி யெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று சேதுநாதன் கேட்டார்.

என்னை வளர்த்துவந்த செவிலிக் கிழவி இப்படி அடிக்கடிச் சொல்லுவாள். என் தாயின் வரலாற்றைக் கேட்கக் கேட்க, எனக்கும் அவளுக் கிருந்த நல்ல உணர்வு ஏற்பட்டது. அவளை ஏமாற்றிச் சென்றுவிட்ட அந்த இளைஞர்-இல்லை-என் தந்தை எங்கு இருக்கிறாரோ? யார் அறிவார்?" என்று கலா பொருமினாள்.

"அந்த இளைஞரின் நினைவான பொருள் எதுவும் உன் தாயினிடத்தில் சிக்கவில்லையா?" என்று சேதுநாதன் வினவினார்.

"இல்லை, ஒன்றும் சிக்கவில்லை. ஆனால் அவரும் என் தாயும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம் ஒன்று உள்ளது. பெற்றோர் நினைவிற்காக நான் அதைப் பாதுகாத்து வைத்திருக்கிறேன். அதோ மாட்டியிருக்கிறது பாருங்கள்-அதுதான்"-என்று சொல்லிச் சுவரில் மாட்டியிருந்த ஒரு புகைப்படத்தைக் காட்டினாள்.

அந்தப் புகைப் படத்தை உற்றுக் கவனித்த சேது நாதன், திடீரெனக் கலாவின்மேல் பாய்ந்து, 'கண்ணே' என்று கதறிக் கொண்டே அவளைக் கட்டியணைத்துக் கொண்டார்.

''என்னை விடுங்கள்! என் உடன்பாடு இல்லாமல் ஏன் என்னைத் தொட்டீர்கள்? இந்த அறையை விட்டு உடனே போய் விடுங்கள்''-என்று கடிந்தபடியே அவரது அணைப்பி லிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாள் கலா.

''கண்ணே கலா! நான்தானம்மா உன் தந்தை. உன் அன்னையை ஏமாற்றிவிட்டு ஓடிப்போன அந்தக் கயவன் நான்தானம்மா! அதற்காகவும், இப்போது நான் உன்னிடம் நடந்து கொண்ட விலங்குச் ;செயலுக்காகவும் என்னைப் பொறுத்துக் கொள் அம்மா'' -என்று கெஞ்சியபடியே கலாவின் கால்களைக் கட்டிக் கொண்டார் சேதுநாதன்.

''என் அப்பாவா நீங்கள்! என்ன காரியம் செய்து விட்டீர்கள் அப்பா! நான் வேசித் தொழில் செய்திருப்பின், உங்கள் சொந்த மகளை அந்தத் தொழிலுக்கு அனுப்பிய தாகத் தானே பொருள்படும். வேசி வீட்டிற்குச் சென்று பிள்ளை பெறும் ஆண்மக்கள் இதை உணர வேண்டாமா?

'இனி ஒன்றும் சொல்லாதே கண்ணே! என்னால் தாங்க முடியாது. குழந்தை இல்லாத குறை இனி எனக்கு இல்லை. என் செல்வம் உனக்குத்தான். ஆனால் எனக்கோ நீதான் செல்வம். தேடக் கிடைக்காத செல்வம் - எப் படியோ கிடைத்துவிட்டாய்-என்று கூறி மகிழ்ச்சிக் கூத் தாடினார் தந்தை சேதுநாதன்.

அப்போது கலா சொரிந்த மகிழ்ச்சிக் கண்ணீரில் குளிர்ச்சி இருந்தது.

## போட்டி விளையாட்டுப் பகுதி

# 21. கம்பர் காட்டும் கயிறு இழுப்புப் போட்டி

கயிறு இழுப்புப் போட்டிகளைப் பலரும் பார்த்திருக்கலாம். காட்டாக, இருவர் பெயர்களை எடுத்துக் கொள்ளலாம். கண்ணன் ஒருவன்; கடம்பன் மற்றொருவன். கண்ணனுக்கும் கடம்பனுக்கும் கயிறு இழுப்புப் போட்டி நடப்பதாக வைத்துக் கொள்வோம்.

குறிப்பிட்ட ஒரு திடலின் தெற்குப் பக்கம் கண்ணன் நிற்கிறான்; அவன் எதிரே-வடக்குப் பக்கம் கடம்பன் நிற்கிறான். இருவரும் வன்மையான ஒரு கயிற்றின் முனைகளைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறார்கள். அதாவது, கயிற்றின் ஒரு நுனி கண்ணன் கையிலும் மற்றொரு நுனி கடம்பன் கையிலும் உள்ளன. இருவரும் வலிமை கொண்ட மட்டும் எதிர்-எதிர்ப் பக்கம் நோக்கி இழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இருவரும் ஒத்த வலிமை உடையவ ராயின் கயிறு அறுபடும்; அல்லது, கயிறு அறுபடாமல், இருவரும் இருந்த இடத்திலேயே நின்று கொண்டிருப்பார்கள்.

கண்ணன் கடம்பனைக் காட்டிலும் மிக்க வலிமை உடையவனா யிருப்பின், கடம்பனை இழுத்துத் தன் பக்கம் போட்டுக் கொள்வான். கடம்பன் கண்ணனைக் காட்டிலும் மிக்க வலிமை உடையவனாயிருப்பின், கண்ணனை இழுத்துத் தன் பக்கம் போட்டுக் கொள்வான். இவற்றுள் ஏதாவது ஒன்றுதான் நடைமுறையில் நிகழக் கூடும்.

இவ்வாறின்றி, இருவரும் வன்மையுடன் கயிற்றை எதிர்-எதிர்ப் பக்கலில் இழுக்கும்போது, கண்ணன் கடம்பன் இருக்கும் இடத்திலும் கடம்பன் கண்ணன் இருக்கும் இடத்திலும் மாறி வந்து நிற்பார்கள் என்றால், அது மிகவும் வியப்பிற்கு உரியதல்லவா? இத்தகைய வியப்பைத்தான் கம்பர் காட்டும் கயிறு இழுப்புப் போட்டியில் காணமுடிகிறது. இதன் விளக்கம் வருமாறு:-

இங்கே கயிறு இழுப்புப் போட்டி நடத்துபவர்கள் இராமனும் சீதையும் ஆவர். விசுவாமித்திரருடன் இராமன் மிதிலைத் தெரு ஒன்றில் நடந்து சென்றுகொண்டிருக்கிறான். அந்தத் தெருவில் உள்ள ஒரு மாளிகையின் மாடியில் சீதை நின்றுகொண்டிருக்கிறாள். ஒருவரையொருவர் உற்று நோக்குகின்றனர். இருவரின் கண்களும் ஒன்றை யொன்று கவ்வி உண்ணுகின்றன; உணர்வு ஒன்றிய நிலையில் அண்ணலும் அவளை நோக்கிக்கொண்டிருக்கிறான்-அவளும் அவனை நோக்கிக்கொண் டிருக்கிறாள்.

கூரிய நுனி உடைய வேல் போன்ற அவளுடைய கண் பார்வை அவனுடைய தோள்களில் ஆழ்ந்து பதிந்து விட்டன. அவனுடைய பார்வை அவளுடைய மார்பகத்தில் தைத்துக் கொண்டன. இவற்றை அறிவிக்கும் கம்பராமாயணப் பாடல்களாவன:-

“எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி,
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்.”

“நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேல்இணை
ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தன;
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே”

இவை, பால காண்டம்-மிதிலைக் காட்சிப் படலத்தில் உள்ள பாடல்கள். இனிமேல்தான் கயிறு இழுப்புப் போட்டி அறிவிக்கப்படுகிறது:-

இருவரும் பற்றி இழுக்கும் கயிறு என்பது இருவரின் நோக்குதான்-பார்வைதான்; இழுக்கும் கைகள் இருவரின் உள்ளங்களே. இராமன் தன் உள்ளமாகிய கைகளால் நோக்காகிய கயிற்றைக் கொண்டு சீதையைத் தன் பக்கம் இழுக்கிறான்; சீதையும் தன் உள்ளமாகிய கைகளால் தன் நோக்காகிய கயிற்றைக் கொண்டு இராமனைத் தன் பக்கம் இழுக்கிறாள். இருவரும் சமமான காதல் வலிமை உடையவர்கள்.

உலகத்தில் நடைபெறாத இந்த வியத்தகு கயிறு இழுப்புப் போட்டியில், இராமன் சீதையின் இதயத்திலும், சீதை இராமனது இதயத்திலுமாக இடம் மாறிப் புகுந்து அடைகின்றனர். இதை அறிவிக்கும் பாடலாவது:-

"பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து;
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்,
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர்".

மேற் கூறிய பாடல்களின் அடுத்த பாடல் இது. இப் பாடலில், பாசம் என்பது கயிறு ஆகும். ஈர்த்தல் என்பது இழுத்தல் ஆகும். நோக்கம் கயிறாகும்; உள்ளம் கைகளாகும்.

ஆங்கிலத்தில் "Tug of war" என்று கூறப்படும் கயிறு இழுப்புப் போட்டி, இவ்வாறு எங்கேயாவது இடம் மாறி அடையும்படி நடந்திருக்கிறதா?

இந்த இடமாற்றம், கம்பன் காட்டும் கயிறு இழுப்புப் போட்டியில் நடைபெற்றிருப்பது வியப்பிற்கு உரிய தன்றோ!

# சுந்தர சண்முகனாரின்

## உழைப்புகளுள் சில :

| | ரூ. | கா. |
|---|---|---|
| மலர் மணம் (புதினம்) | 15 | 00 |
| தமிழ் அகராதிக் கலை (தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது) | 35 | 00 |
| தமிழ் இலக்கிய பாலம் | 20 | 00 |
| பணக்காரர் ஆகும் வழி (இந்திய அரசின் பரிசு பெற்றது) | 5 | 00 |
| தமிழ் நூல் தொகுப்புக் கலை | 30 | 00 |
| History of Tamil Lexicography (தமிழக அரசின் பரிசு பெற்றது) | 5 | 00 |
| கெடிலக்கரை நாகரிகம் | 50 | 00 |
| அம்பிகாபதி காதல் காப்பியம் | 20 | 00 |
| கெடில வளம் | 10 | 00 |
| மர இனப் பெயர்த் தொகுதி I | 200 | 00 |
| மர இனப் பெயர்த் தொகுதி II | 200 | 00 |
| கௌதமப் புத்தர் காப்பியம் (புதுவை அரசின் ஐயாயிரம் ரூபாய் பரிசு பெற்றது) | 30 | 00 |
| உலகு உய்ய! | 30 | 00 |
| பாரதிதாசரொடு பல ஆண்டுகள் | 12 | 00 |
| இனியவை நாற்பது—இனிய உரை | 3 | 00 |
| கருத்துக் கண்காட்சி | 24 | 00 |
| உலகமும் உயிர்களும் உண்டான வரலாறு | 15 | 00 |
| இலக்கியத்தில் வேங்கட வேலவன் | 6 | 00 |